# மழைச் சாரலோ என் நெஞ்சிலே...



நிவேதா ஜெயாநந்தன்.

## அத்தியாயம் – 1



**உன் தோட்டத்தில் பூத்திருக்கும்...**
**ரோஜாக்களைக் கண்டதும்..**
**உன் முகத்தில் தோன்றும்..**
**அந்தப் புன்னகையைக் காண்பதற்காக...**
**நான் செடிகளோடு செடிகளாய்...**
**மறைந்து நின்று.. தொலைந்து போன கதையை**
**நீ அறிவாயா....??**

“**மா**ங்கல்யம் தந்துனானேனா மமஜீவன ஹேதுனா..
கன்டே பத்னாமி சுபகே சஞ்சீவ சரதசதம்...”

தெருமுனை விஷ்ணு துர்கைக் கோயிலின் அர்ச்சகர் நம்பிராஜனின் குரல் அந்த அறை முழுதும் கணீரென ஒலிக்க.. தன் கழுத்தில் பதிந்த ஆதித்யனின் கரங்கள் ஏற்படுத்திய சிலிர்ப்பை உணரக் கூடத் தோன்றாமல் நேர் வெறித்த பார்வையுடன் அசையாமல் நின்றிருந்தாள் மதுமதி. தாலி கட்டியதுடன் தன் கடமை முடிந்து விட்டதென்பதைப் போல் அவன் விறு விறுவென நடந்து சென்று விட... அவனது விலகல் ஏற்படுத்திய துயரம் நெஞ்சைக் கசக்கிப் பிழிவது போல் தோன்ற.. அந்த அறையில் கூடியிருந்தோரை.. வலி நிறைந்த விழிகளுடன் நோக்கினாள்.

மணமகள் என்பதற்கான அடையாளம் சிறிது கூட இல்லாமல்.. சாதாரண கைத்தறிச் சேலையில்... அணிகலன்களற்று.. அவன் அணிவித்துச் சென்ற தங்கத் தாலியுடனும், விழி முழுதும் நிறைந்து விட்ட கண்ணீருடனும் நின்று கொண்டிருந்தவளைக் கண்டு.. அந்தப் பெரிய வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரர்கள் அனைவரும் பரிதாபப் பார்வையை செலுத்த... அதில் மேலும் கதி கலங்கிப் போனாள்.

நேற்று வரை அவர்களுள் ஒருத்தியாக.. அந்த வீட்டின் வேலையாளாக வலம் வந்த அவள்.. இன்று எஜமானியாக மாறிப் போனதைக் கண்டு உண்மையில் அவர்கள் பெருமைப் பட்டிருக்க வேண்டும்.. ஆனால் அவளுக்கு நிகழ்ந்து

கொண்டிருக்கும் கேடு காலத்தைப் பற்றி முற்றிலும் அறிந்தவர்கள் என்பதால்.. தங்களது எஜமானியின் அன்பு முகத்திற்குக் கட்டுப்பட்டு.. அவளது அவல நிலையை பச்சாதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்புள்ள எஜமானி! ஆம்..! தன் எண்ணப் போக்கில் யோசித்துக் கொண்டு கலங்கியபடி நின்றிருந்தவளின் பார்வை வேலையாட்களையும்,அர்ச்சகரையும் கடந்து.. சக்கர நாற்காலியில்.. அமர்ந்திருந்த அரசிளங்குமரியின் மீது பதிந்தது.. பத்து நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட பக்கவாதத்தினால்.. கை,கால்கள் செயலிழந்து.. அசைய முடியாத நிலைக்கு ஆளாகி விட்டவரைக் கண்டுத் தன் கவலையையும் மீறி அவருக்காகப் பரிதாபப்பட்டது மதுமதியின் மனது.

காணக் கிடைக்காதக் காட்சியைக் கண்டு விட்டது போல்... மகனின் கைகளால் மதுமதியின் கழுத்தில் கட்டப்பட்டத் தாலியை அவர் கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருக்க... அவர் பார்வையைத் தொடர்ந்து தன் மார்பில் புரண்டு கொண்டிருந்த அந்த மஞ்சள் கயிறை நோக்கியவளுக்கு... தனது தற்போதைய நிலையும்.. ஆதித்யனின் கடுகடுத்த முகமும் நினைவிற்கு வர... தன் வாழ்வில் விதி செய்த சதியை எண்ணி... பூதாகரமாக மிரட்டிக் கொண்டிருக்கும் எதிர்காலத்தை எண்ணி.. கண்கள் இருட்ட.. மயங்கிச் சரிந்தாள்.

அவள் தரையில் விழுந்ததைக் கண்டு பதறி எழ முயன்று தோற்று.. வேலையாட்களிடம் தண்ணீர் கொண்டு வரும்படி சைகை செய்தார் அரசிளங்குமரி. வேலைக்காரப் பெண் மல்லிகா ஓடிச் சென்று தண்ணீர் எடுத்து வந்து மதுமதியின் முகத்தில் தெளிக்க.. சிரமத்துடன் கண் விழித்தவள்.. சுரத்தேயில்லாமல் அனைவரையும் நோக்க.. அவளை அவளது அறைக்கு அழைத்துச் செல்லுமாறு மல்லியிடம் பணித்தார் குமரி.

“வாங்கக்கா.. மெதுவா எழுந்து வாங்க..”என்று மல்லி.. மதுமதியின் கைப்பற்றி அழைத்துச் சென்றாள். அவளது அறை வாசலின் முன்பிருந்த பால்கனியில் சிகரெட்டைப் புகைத்தபடி.. சிவந்த கண்களுடன் நடமாடிக் கொண்டிருந்தான் ஆதித்யன். மல்லி, அவளை கைத்தாங்கலாக நடத்திச் செல்வதைக் கண்டவன்.. எதுவும் கூறாமல் அமைதியாக நிற்க.. மல்லி மெல்ல நிமிர்ந்து “அக்கா... அக்கா மயங்கி விழுந்து விட்டார்கள்.. குமரிம்மா தான் அறைக்கு அழைத்துச் செல்லச் சொன்னார்கள்...”என்று தட்டுத் தடுமாறிக் கூறி முடிக்கையில்.. மறந்தும் கூட மதுமதியின் மீது பார்வையைச் செலுத்தாதவன்.. பதிலளிக்காமல் சென்று விட..

மல்லி,மதுமதியைப் பரிதாபமாக நோக்கினாள். தன்னிரக்கம் தலைக்கேற.. மூக்கு விடைத்து இதோ வந்து விடுவேன் என்று மிரட்டியக் கண்ணீரை உதட்டைக் கடித்து அடக்கினாள். அவளது கரத்தின் அழுத்தத்தை உணர்ந்து மேலும் நின்று கொண்டிராமல்.. அவளுக்கென அன்று காலை

ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்து அவளை படுக்கையில் அமர வைத்தாள் மல்லி.

“எதையும் நினைக்காமல்.. கொஞ்ச நேரம் தூங்குங்கள் அக்கா...”என்று கூறி விட்டு அவள் வெளியேறி விட.... அறையின் ஆடம்பரமும்.. மெத்தையின் மென்மையும் அவளுக்கு மேலும் கிலி ஏற்றியது. பதினைந்து நாட்களுக்கு முன்பு வரை.. ஒரு எளிய வீட்டில்.. பாய் விரித்துத் தரையில் படுத்து நிம்மதியாக உறங்கிச் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டு மகிழ்ச்சியாக இருந்தது நினைவிற்கு வந்தது..

நொடியில் அனைத்தும் மாறி.. வாழ்க்கையே தடம் புரண்டு விட்டதே! விதி எப்படிப்பட்ட அபாயகரமான பாதையில் தன்னை வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிறது...?, அப்பா.... நீங்கள் மட்டும் உயிருடன் இருந்திருந்தால்.. என்னை இப்படி ஒரு கதிக்கு ஆளாகியிருப்பீர்களா...?, தாயை இழந்து தவித்துக் கொண்டிருந்தவளுக்குத் தானே ஒரு தாயாக மாறி.. அவளது மகிழ்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு சிரித்த முகத்துடன் வலம் வந்தவரை நினைத்துக் கண்கள் கலங்கியது மதுமதிக்கு.

அப்பா... நடந்து கொண்டிருக்கும் அனைத்தையும் காண்கிறீர்களா..?, கண்டும் அமைதியாக இருக்கிறீர்களா...?, என்னையும் உங்களோடு அழைத்துச் சென்று விடுங்கள்... நீங்கள் இல்லாத இந்த உலகில் வாழ எனக்கு இஷ்டமில்லை.. என்னால் தாங்க முடியவில்லை அப்பா.... என்று கதறியபடி.. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கீழே அமர்ந்தவள்.. தேம்பித் தேம்பி அழ... அவள் சென்றதும் மீண்டும் பால்கனியில் வந்து நின்ற ஆதித்யனுக்கு.. அவளது அழுகை ஒலி ஏதோ செய்ய... ஒரு நொடி நின்றவன் தயங்கி.. அவள் அறையைத் திரும்பிப் பார்த்தான்.

தாழிடப்படாமல்... லேசாக திறந்து கிடந்த கதவின் வழியே.. மதுமதி தரையில் அமர்ந்து அழுது கொண்டிருந்த காட்சி கண்ணில் பட.. உடல் விறைத்தது அவனுக்கு. தலை முடியை அழுந்தக் கோதி பெரிய பெரிய மூச்சுகளை வெளி விட்டவன்... உடனே கார் சாவியை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்..

அழுது அழுது சோர்ந்து போன மதுமதி.. கைகளைத் தலைக்குக் கொடுத்து உடலைக் குறுக்கி.. தரையில் படுத்துக் கொண்டாள்.. தொடர்ச்சியாக அழுததில் கண்கள் எறியத் துவங்க.. எரிச்சலைக் கட்டுப்படுத்த விழி மூடினாள்.. மூடிய விழிகளுக்குள் அவளது கடந்த காலம் படமாக விரியத் துவங்கியது...

"**அ**ப்பா...."என்றழைத்துக் கொண்டு கல்லூரிக்கு எடுத்துச் செல்லும் பையுடனும், புத்தகங்களுடனும் புன்னகை முகத்துடன் அன்பரசுவின் முன்பு வந்து நின்றாள் மதுமதி. மகளின் முகத்தைக் கண்டவருக்கும் தன்னாலே... முகம் மலர.. அவளை வாஞ்சையுடன் நோக்கினார். "காலேஜ் கிளம்பி விட்டேன் அப்பா.., உங்களுக்கு மதிய சாப்பாடும் கட்டி வைத்து விட்டேன்.. மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள்..."என்று அவள் உத்தரவிட....

"மதிம்மா.... நீ ஏன்டா இதையெல்லாம் செய்கிறாய்..?, அப்பா செய்து கொள்ள மாட்டேனா..?, படிப்பையும் பார்த்துக் கொண்டு வீட்டையும் கவனித்துக் கொள்வது கஷ்டம் டா.. நாளையிலிருந்து நானே சமைத்துக் கொள்கிறேன்.. நீ படிப்பை மட்டும் கவனி..."எனக் கூற.. அவரைச் செல்லமாக முறைத்தவள்.. "அப்பா.. இப்படி சொல்லிச் சொல்லித் தான் நான் பன்னிரெண்டாம் வகுப்பு முடிக்கும் வரை நீங்கள் என்னை சமையலறையின் பக்கம் அனுமதிக்கவேயில்லை.. இனியும் நீங்கள் எதற்காக கஷ்டப்பட வேண்டும்..?, வேலைக்குச் செல்லும் அவசரத்தில் நீங்கள் வேக வேகமாக சமையல் செய்வதை நான் தான் உடனிருந்து பார்த்திருக்கிறேனே அப்பா...?, எனக்கு படிப்பதற்கு நிறையவே நேரமிருக்கிறது.. அதனால் நீங்கள் கவலைப் பட வேண்டாம்..,"எனக் கூறிச் சிரித்தாள்.

"சரி டா.. நானும் குளித்து விட்டு வேலைக்குக் கிளம்புகிறேன்.. கல்லூரி முடிந்ததும் குமரிம்மாவைப் பார்த்து விட்டு வா.. உன்னை வரச் சொல்லி நேற்றே கூறினார்.."எனக் கூற.. அதுவரை இருந்த புன்னகை மாறி முகம் சிவந்தது மதுமதிக்கு. தன் தந்தையிடம் தன் முக மாற்றத்தைக் காண்பிக்க விரும்பாமல் தலை குனிந்த படி சரியெனத் தலையாட்டியவள்.. துள்ளலுடன் ஓடிச் சென்றாள்...

அவள் செல்வதைக் கண்ட அன்பரசுவிற்கு.. தன் மகளை நினைத்து உவகை கொண்டது மனது. மதுமதி இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கையில்.. நோய் வாய்ப்பட்டு அவளது தாய் கல்யாணி இறைவனடி சேர்ந்து விட.. அதன் பின் சர்வமும் தந்தையென ஆகிப் போனது அவளுக்கு. காலை பள்ளிக்குச் செல்கையில் தலை வாரி விடுவதிலிருந்து... இரவு உறங்கும் முன் கதை சொல்வது வரை சகலத்தையும்.. முகம் சுளிக்காமல்.. பொறுமையாக அத்தனையையும் செய்து வந்தவர் அன்பரசு.

சில சமயம் தந்தையைக் காண்கையில் வியப்பாக இருக்கும் மதுமதிக்கு. அன்னையுடன் அவர் வாழ்ந்ததென்னவோ பத்தே வருடங்கள் தான்.. தனது மகிழ்ச்சியைப் பற்றியோ.. மறுமணத்தைப் பற்றியோ சிந்திக்காமல்.. அவளுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட தந்தையைத் தன் உலகமாகவே எண்ணினாள். விவரம் புரிய ஆரம்பிக்கத் தொடங்கியதும்.. தந்தையின் வேலைகளில் பாதியைத் தானும் ஏற்றுக் கொண்டாள்..

சமையல் செய்யாதே.. வீட்டு வேலை பார்க்காதே என்று அவர் வற்புறுத்தினாலும்.. அவள் காது கொடுத்துக் கேட்கவே மாட்டாள்.. பள்ளிப் படிப்பை முடித்துக் கல்லூரியில் சேர்ந்து விட்ட பின் வீட்டுப் பொறுப்புகள் முழுதையும் தானே ஏற்றுக் கொண்டாள்.. அன்பரசு அவ்வப்போது கடிந்து கொண்டாலும்.. மகள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவள் போக்கிலேயே விட்டு விடுவார்.

நம் தமிழகத்தின் அழகான மலைப் பிரதேசங்களில் ஒன்றான.. கொடைக்கானல் இருக்கும் மன்னவனூர் கிராமத்தில் தான் இவர்கள் வசித்துக் கொண்டிருப்பது. கொடைக்கானல் கிறிஸ்டியன் கல்லூரியில் மதுமதி மூன்றாம் ஆண்டு பி.எஸ்ஸி கணிதம் படித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் வசிக்கும் ஊரிலிருக்கும் பெரும் பணக்காரர்களில் ஒருவரான கிருஷ்ண சந்திரனின் மாளிகையில் கணக்கராகப் பணியாற்றி வந்தார் அன்பரசு. அன்பரசுவின் தந்தையின் காலத்திலிருந்தே அவர்களது குடும்பம் கிருஷ்ண சந்திரனின் வீட்டில் பணியாற்றி வந்ததால்.. படிப்பு முடிந்ததும் தந்தையைப் பின்பற்றி அன்பரசுவும் அங்கேயே சேர்ந்து விட்டார். சொந்த ஊரான அந்த மலைக் கிராமத்தை விட்டு வெளியே சென்று வசிக்க அவருக்கு மனமில்லாததும் ஒரு காரணமாயிற்று.

தனது சொந்த அத்தை மகளான கல்யாணியை அவர் மணந்து கொண்டதும் கிருஷ்ண சந்திரனின் தலைமையில் தான்.. அந்தக் கிராமத்திற்கே வழி காட்டியாக.. தனது பேச்சினால்,ஆற்றலினால்,வளத்தினால்.. பற்பல நன்மைகளைப் புரிந்து ஊர் மக்களின் நற்பெயருக்கு ஆளாகியிருப்பவர் அவர்.. அந்த ஊரில் எந்தவொரு நல்ல காரியமாக இருந்தாலும், பிரச்சனை என்றாலும் அனைத்திற்கும் பொறுப்பேற்பவர் கிருஷ்ண சந்திரன் தான்.

அவர் மறைவுக்குப் பின் அவரது தர்ம பத்தினி அரசிளங்குமரி அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு அந்த ஊரின் ராணியாகவே மாறி விட்டார். அந்த மலைக் கிராமத்தைப் பற்றிய கணவரின் கனவுகளையும், ஆசைகளையும் நிறைவேற்றும் பொருட்டு பல நன்மைகளைப் புரிந்து வந்தார் குமரி. ஏழை,பணக்காரன் என்கிற பந்தோபஸ்தில்லாமல் அவர் அனைவரிடமும் சகஜமாகப் பழகுவதால் அந்த ஊரில் அனைவரும் அவரை குமரிம்மா என்றழைத்துப் பழகிப் போனார்கள்.

கிருஷ்ண சந்திரன்-அரசிளங்குமரிக்கு பத்து ஆண்டுகள் கழித்து அவர்களது வம்சம் தழைக்கப் பிறந்தவன் தான் ஆதித்யன். ஏதேதோ காரணங்களுக்காக பத்து ஆண்டுகளாக குமரி கர்ப்பம் தரிக்காமல் போனதால்.. கணவனும் மனைவியும் கோயில்,குளமாக அழைந்து திரிந்தார்கள்.. ராஜ பரம்பரையாக ஒரு ஊரையே ஆட்சி செய்து கொண்டிருக்கும் அவர்களது பரம்பரை

வாரிசற்றுப் போய் விடுமோ என்று குமரி அழுகாத நாளே இல்லையென்றானது., அப்பேர்ப்பட்ட வேளையில்.. அனைவரது முகத்திலும் மலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பத்து ஆண்டுகள் கழித்து கர்ப்பமானார் குமரி.

அதன் பின் ஆதித்யன் பிறந்து விட.. தங்களது ஒரே செல்ல மகனை பாராட்டி சீராட்டி வளர்த்தனர் இருவரும். கொடைக்கானலில் ஒரு புகழ்பெற்ற பள்ளியில் அவன் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கையில் காலமானார் கிருஷ்ணச் சந்திரன். இதைச் சற்றும் எதிர்பாராததால்.. அந்த ஊரே துக்கத்தில் ஆழ்ந்து விட்டது.. அன்பு மகனுடனும்,ஆசைக் கணவனுடனும் மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்த வாழ்க்கை திடீரென்று நெருப்பை அள்ளி வீசியதில் வாடிப் போனார் குமரி.

அவர் செயலிழந்து சாய்ந்திருந்தென்னவோ சில நாட்கள் தான். அதன் பின் கணவன் முகத்தை மனதில் நினைத்துக் கொண்டு ஊர் மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டார். இரண்டு தலைமுறையாக தன் வீட்டில் விசுவாசமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கும் அன்பரசு மீதும்,கல்யாணியின் மீதும் அவருக்கு எப்போதும் அன்பும்,அக்கறையும் அதிகம்.

கல்யாணி மதுமதியைப் பெற்றெடுத்த போது கூட வேறுபாடு காட்டாமல் உடனிருந்து உதவி புரிந்தவர் அவர். கல்யாணி இயல்பிலேயே லட்சணமான முகம் கொண்டவர். மலைவாசியாக இருந்த காரணத்தினால் நல்ல நிறமும் கொண்டவர். அவரது ரோஜா நிறத்தைத் தனதாக்கி அழகான விழிகளுடன் பிறந்தவளைக் கண்டு மகிழ்ச்சியுற்றார். ஆஸ்திக்கு ஆண் பிள்ளை இருந்தாலும்.. ஆசைக்கு ஒரு பெண் பிள்ளை வேண்டுமென்பது கிருஷ்ணச் சந்திரன் மற்றும் குமரியின் நீண்ட நாள் ஆசை.. ஆனால் ஆதித்யன் பிறந்த பின் இன்னொரு குழந்தைக்கான வாய்ப்பில்லையென்று மருத்துவர் கூறி விட்டதால் அந்த ஆசை நிராசையாகிப் போய் விட்டது.

ஆனால் மதுமதியைக் கண்ட போது.. தான் கற்பனையில் கண்ட குழந்தையைப் போல் தோன்ற அவளை வித்தியாசம் பார்க்காமல் அன்புடன் வளர்த்தார் குமரி. அடுத்த சில ஆண்டுகளில் கல்யாணியும் இறைவனடி சேர்ந்து விட.. அவளை முழு அக்கறையுடனும் பாசத்துடனும் கவனித்துக் கொண்டார். மதுமதிக்கு ஏதேனும் காரியம் ஆக வேண்டுமானால்.. தந்தையிடம் நேரடியாகத் தெரிவிப்பதை விட.. குமரியின் மூலமாகத் தான் தூது விடுவாள்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்கிற ஆசையைக் கூடக் குமரியிடம் தான் தெரிவித்தாள். அவளது ஒவ்வொரு ஆசைக்கும்

மதிப்பளித்து அதை நிறைவேற்றியும் வைப்பவர் என்பதால் குமரிம்மாவின் மீது அவளுக்கு எஜமானி என்பதைத் தாண்டிய பாசம் இருந்தது மதுமதிக்கு.

**க**ல்லூரி முடிந்ததும் தந்தை கூறியது போல்.. பேருந்தை விட்டு இறங்கியதும் குமரியின் மாளிகைக்குச் சென்றாள்.. தெரு முனையை அடைந்ததுமே மனம் படபடவென அடித்துக் கொண்டது. ஆதித்யன் இருப்பானா..?,இன்று அவனைக் காண முடியுமா...?, இரண்டு நாட்களாக அவன் வெளியூர் சென்று விட்டதாகக் கூறினாரே குமரிம்மா... வந்து விட்டானா....?, என்றெல்லாம் எண்ணிக் கொண்டு மாளிகைக்குள் நுழைந்தவளின் விழிகள்.. அவனைத் தேடி அலைந்தது.

அவன் உலா வரும் ரோஜாத் தோட்டம், அவன் டென்னிஸ் விளையாடும் இடம், அவன் எப்போதும் அமரும் பன்னீர் மரத்தடி அனைத்திலும் ஒரு நிமிடத்தில் அவளது பார்வை சுற்றி வந்து அவன் இல்லாததைக் கண்டு ஏமாற்றமும் கொண்டது. இன்னும் அவன் ஊரிலிருந்து வரவில்லை போலும்..!, இன்றும் ஏமாற்றம் தானா..?, என்றெண்ணிக் கொண்டு சோர்ந்து நடந்தவளின் மனம்.. “மதி.....”என்ற ஆதித்யனின் அழைப்பில் துள்ளி குதித்தது.

அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப்பின் பின்னிலிருந்து வெளிப்பட்டான் ஆதித்யன். சட்டெனத் திரும்பி.. தயக்கமும்,கூச்சமுமாய் அவனை ஏறிட்டாள். அவனது தரிசனத்திற்காக ஏங்கிய அவளது கண்கள்.. அவனை நிமிர்ந்து பார்க்கும் துணிவின்றி.. கவிழ்ந்து கொள்ள.. சிரமப்பட்டு... பார்வையை நிமிர்த்தி அவனது சட்டை பட்டனின் மீது செலுத்தினாள். “கல்லூரியிலிருந்து வந்து விட்டாயா மதி..?, இரண்டு நாட்களாக வீட்டுப் பக்கம் வரவில்லையென்று அம்மா புலம்பினார்களே.. உடம்பு சரியில்லையா...?”என்று அக்கறையுடன் விசாரித்தான்.

இரண்டு நாட்களாக அவனைக் காணாமல் தவித்த மனதுக்கு.. அவனது அக்கறை.. சர்க்கரையாக இனித்தது.. நீ இல்லாத வீட்டிற்குள்.. கால் பதிக்க மனமில்லை.. அதனால் தான் வரவில்லை.. என்று அவனது கேள்விக்கு முணுமுணுத்த மனதை அடக்கி... “இ..இல்லை.. பரீட்சை இருந்தது. அதனால் தான் வர முடியவில்லை.. அப்பாவிடம் சொல்லி குமரிம்மாவிடம் சொல்லச் சொல்லியிருந்தேன்..”என்று தயங்கித் தயங்கி அவள் கோர்வையாக முடிக்க..

அவள் பதில் சொல்வதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தவன்... “பரீட்சையெல்லாம் நன்றாக எழுதினாயா...?”என்று வினவினான். “ம்..”என்று தலையாட்டியவளிடம்.. “சரி, நான் டவுனுக்குச் செல்கிறேன்.. உனக்கு புத்தகம் ஏதும் வாங்கி வர வேண்டுமா..?”என்று வினவியவனிடம்.. “இ..இல்லை..”என்று அவள் கூற.. “சரி,உள்ளே செல்.. நான் சென்று வருகிறேன் மதி..”எனக் கூறி விடை பெற்றான் ஆதித்யன்.

அவன் வாசல் தாண்டிச் செல்லும் வரை பார்த்துக் கொண்டே நின்றிருந்தவளுக்கு.. உலகை வென்று விட்ட உணர்வு தோன்றியது.. இப்படியொரு உணர்வை ஆதித்யனின் வார்த்தைகள் மட்டுமே கொடுக்கின்றதே! ஏன்...?, என்று எப்போதும் போல்.. அன்றும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் அவள்.

ஆதித்யன்! மதுமதியைக் காட்டிலும் 8 ஆண்டுகள் மூத்தவன்.. அவனுக்கும் தந்தையைப் போல்.. அந்தக் கிராமத்தின் மீது பாசம் அதிகம்.. செடி,கொடிகளுடன் பழகி.. பனிப் புகையில் குளித்து.. மூலிகை வாசத்தை சுவாசித்து.. மலர்களோடு மலர்களாக வாழப் பழகியிருந்தவனுக்கு.. அந்தக் கிராமத்தை விட்டுச் செல்வதில் விருப்பமில்லை.. அதனால்.. தந்தையின் எஸ்டேட்டில் கவனம் செலுத்தத் துவங்கினான்.

தந்தை இறந்த பின்.. அன்னை தனி ஆளாக இருந்து அனைத்தையும் கவனித்துக் கொள்வதைக் கண்டவனுக்கு இதுவே சரியென்றும் பட்டது.. அதனால் அன்னைக்கு ஓய்வளித்து விட்டு.. அனைத்து நிர்வாகத்தையும் தானே ஏற்றுக் கொண்டு விட்டான்.. கடந்த 7 ஆண்டுகளாக தொழிலைச் சிறந்த முறையில் நடத்தி வருபவன் என்பதால்.. குமரிக்கு.. நிம்மதியும்,பெருமையும் ஒரு சேர எழுந்தது.

அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்து விட்டு.. வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது அவருக்கு மிகவும் சிரமமான விசயமாக இருந்தது. கணவன் காலமானப் பின் கடந்த பத்து ஆண்டுகளாக தொழிலைக் கவனித்து வந்தவருக்கு.. வீட்டில் வேலையற்று அமர்வது பிடிக்காததால்.. மதுமதியை அழைத்து.. அவளிடம் கதை அளந்து கொண்டிருப்பது அவருக்கு வாடிக்கையாகிப் போனது.. சிறு வயதிலிருந்தே அவரை ஒண்டி வளர்ந்தவள் என்பதால்.. மதுமதியும் மகிழ்ச்சியுடனே குமரியைத் தேடி வருவாள் தினமும்..

அந்த ஊரில் படித்தவர்களின் எண்ணிக்கை குறைவு தான் என்பதால்.. பள்ளியில் படித்த போது.. மிகவுமே சிரமப் படுவாள் மதுமதி.. அப்போதெல்லாம் குமரிம்மா அவளை நேராக அழைத்துச் சென்றது ஆதியிடம் தான்..

அதுவரை எஜமானியின் மகனாக ஆதித்யனை அறிந்தவள் மதுமதி! அதிகம் பேச மாட்டான்... எப்போதேனும் பார்க்க நேர்ந்தால்.. பேச நேர்ந்தால்.. அவளுடன் ஓரிரு வார்த்தைகள்.. பேசுவதோடு சரி.. அது பெரும்பாலும் “அம்மா எங்கே..?”என்கிற வார்த்தையாகத் தான் இருக்கும்.. மதுமதி பத்தாம் வகுப்பு சேர்வதற்கு முன்னால் வரை... இந்த கதை தான் நடந்தது.. அவனும் கல்லூரியின் இறுதியில் இருந்தான்..

எப்போதும்... அழுத்தமான இறுகிய முகத்துடன் தான் காட்சி தருவான்.. அன்னையிடம் பேசும் போதும்.. தெரிந்தவர்களிடம் பேசும் போதும் மட்டும் தான் புன்னகை புரிவான்.. அவன் குமரியின் அறைக்குள் நுழைந்தாளே ஏதேனும் காரணம் சொல்லி.. அறையை விட்டுச் சென்று விடுவாள் மதுமதி.

என்னவென்றே புரியாத அந்த வயதில்.. காரணமறியாத அந்தப் படபடப்பை அறிந்து கொள்ள முடியாமல்.. குழம்பியிருக்கிறாள்.. அவனைக் கண்டாலே ஏன் ஒதுங்கி விடுகிறோம்.. என்று தன்னையே கேள்வி கேட்டுக் குடைந்து கொள்வாள்.. ஆனால் அதற்கு மேல் யோசிப்பதற்கு வயது போதாததால்.. அதை அப்படியே விட்டு விட்டாள்..

ஆனால் ஆதித்யனைக் கண்டால்.. சந்தோசத்துடன் கூடிய பயம் தோன்றும்.. அவன் ஏதேனும் கேள்வி கேட்டால்.. அவன் விழிகளைச் சந்திக்காமல்.. குனிந்து கொண்டே தான் பதிலளிப்பாள்.. எப்போதேனும் நேருக்கு நேர் பார்க்க நேர்ந்து விட்டால்.. மனம் படபடவென அடித்துக் கொண்டு வியர்த்தே வழிந்து விடும் அவளுக்கு.

நேராக.. விழிகளைச் சந்தித்து.. விழிகளுக்குள்ளே சென்று விட முயல்பவன் போல் அவன் அழுத்தமாக நோக்கும் போது.. மயக்கமே வந்து விடும் அவளுக்கு.. அதனாலேயே அவன் அறைப்பக்கம் வந்தால் இவள் ஒதுங்கி விடுவாள்.. ஆனால் பால்கனியில் நின்று அவன் குரலைக் கேட்டுக் கொண்டிருப்பது மட்டும் அவளுக்கு மிகவும் பிடிக்கும்.. அவனது ஆண்மையின் கம்பீரம் தோற்றத்தில் மட்டுமில்லாது.. குரலிலும் இருப்பதைக் கண்டு பிரம்மிப்பாள்..

அதே போல் அவன் அன்பரசுவிடம் இயல்பாகப் பேசுவதைக் காண்கையில் அவளுக்கு வியப்பாகவும் இருக்கும்.. ஆதித்யன் கல்லூரி இறுதியாண்டு படிக்கையிலேயே.. தந்தையின் தொழில் மீது கவனம் செலுத்தத் தொடங்கி விட்டான்.. அதனால்.. தொழிலைப் பற்றிய விவரங்களை அறிவதற்காக அன்பரசுவைச் சந்திக்க அடிக்கடி அவளது வீட்டிற்கு வருவான்..

“சின்னைய்யா...”என்று தந்தை அழைக்கையில்.. “அங்கிள்.. நீங்கள் என்னை இப்படி அழைப்பதை நிறுத்தவே மாட்டீர்களா..?, நானும் சிறு வயதிலிருந்தே கூறி வருகிறேன்... என்னை ஆதி என்றழைக்கச் சொல்லி... வயதில் பெரியவர் நீங்கள்.. என்னை அய்யா என்பதா...?”என்று அவன் கடிந்து கொள்கையில் வியப்பின் உச்சிக்கே சென்று விடுவாள்..

இறுக்கமாக இருந்தாலும்... யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவன் அறிந்து வைத்திருக்கிறான்.. என்றெண்ணிக் கொள்வாள்.. அவன் இது போல் வீட்டிற்கு வரும் வேளையில்.. “தண்ணீர் கொண்டு வா மதிம்மா..

சின்னைய்யா வந்திருக்கிறார் பார்..”என்று தந்தை குரல் கொடுக்கையில்.. தண்ணீர் செம்புடன் வந்து அவன் முகம் பார்க்காமல்.. அவனிடம் நீட்டி விட்டு ஓடி விடுவாள்..

இது போன்று... சில மாற்றங்களை தனக்குள் கண்டு.. அவள் குழம்பித் தவித்துக் கொண்டிருந்தது விரைவிலேயே முடிவிற்கு வந்தது.. மதி பத்தாம் வகுப்பு சேர்ந்ததும்.. பாடங்கள் கடினமாக இருப்பதாகவும்.. தன்னால் ஆசிரியரின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லையென்றும் குமரிம்மாவிடம் புலம்ப... வழக்கம் போல் குமரிம்மா அவளது பிரச்சனைக்குத் தீர்வுடன் வந்தார்...



## அத்தியாயம் – 2



**என் கை பிடித்து...**
**நீ எழுதக் கற்றுக் கொடுத்த போது..**
**நான் அறிந்திருக்கவில்லை...**
**என் கையெழுத்தை மாற்றி அமைத்த நீ..**
**என் தலையெழுத்தையும் சேர்த்து**
**மாற்றிக் கொண்டிருக்கிறாய் என்பதை!**

**அ**ந்தத் தீர்வு ஆதியிடம் பாடம் கற்றுக் கொள் என்பது தான்... அவனிடமா...? என்று கதி கலங்கி... வழக்கம் போல்.. பயத்தில் வியர்த்து வழிந்து.. நின்றிருந்தவளைக் குமரி உலுக்க.. "குமரிம்மா... நான்... நான் என் தோழிகளுடன் படித்துக் கொள்கிறேனே.. சேர்ந்து படித்தால்.. கொஞ்சம் புரியும்... அ..அவரை எத்ற்கு தொந்தரவு செய்ய வேண்டும்.. வேண்டாம் குமரிம்மா..."என்று கெஞ்ச..

"யாருடன் சேர்ந்து படிப்பாய்.. உன்னுடன் சுற்றிக் கொண்டு திரியும் அந்தக் கழுதைகளோடா...?, பரீட்சையில் உன்னைப் பார்த்து தான் காப்பி அடிப்பார்களென்று நீ தானே கூறினாய்..?, அதுகளுடன் சேர்ந்து படித்து நீ நல்ல மார்க் வாங்கி விடுவாயா..?, மதி.. நான் சொல்வதைக் கேள்.. ஆதியிடமே சென்று படி.. தினமும் ஒரு மணி நேரம் சொல்லிக் கொடுப்பதால்.. அவனுக்குத் தொந்தரவாகி விடாது.. சரியா...?, நானே அவனிடம் சொல்கிறேன்... வா..."என்று அவள் கரம் பற்றி இழுத்துச் சென்றார்..

"வேண்டாம் குமரிம்மா.... வேண்டாம் ப்ளீஸ்..."என்று அவள் சண்டித்தனம் செய்ததை பொருட்படுத்தாது அவர் தரதரவென இழுத்துக் கொண்டு ஆதியின் அறைக்குள் நுழைய.. "நா.. நான் இங்கேயே நிற்கிறேன் குமரிம்மா... நீங்கள் சென்று அவரிடம் கேளுங்கள்..."என்று அவனது அறை வாசலிலேயே அவள் நின்று விட... "சரி.. எங்கேயும் ஓடி விடக் கூடாது.."என்று கூறிவிட்டு மகனின் அறைக்குள் நுழைந்தார் குமரி..

அன்னை அறைக்குள் நுழைந்ததும்.. வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து தலை நிமிர்ந்தவன்.... "என்னம்மா...?"என்று வினவினான்.. "ஆதி.. எனக்காக நீ

ஒரு உதவி செய்வாயா ராஜா..?”என்று கேட்க.. “உதவியா.... உங்களுக்கா...?”என்று விழி விரித்தவன்... “வீரபாண்டிக் கோவிலுக்கு தீச்சட்டி எடுக்க வேண்டுமா...?”என்று சிரிப்புடன் வினவ...

“ம்க்கும்..”என்று நொடித்துக் கொண்டவர்... “ஒரு முறை நான் வேண்டி வைத்து.. உன்னைத் தீச்சட்டித் தூக்க வைத்து பட்ட பாடு போதாதா ராஜா..?, இன்னொரு முறையா..?, வேண்டவே வேண்டாம்...”என்று அவர் சலித்துக் கொள்ள.. வாய் விட்டுச் சிரித்தான்....

பின் “சரிம்மா... தீச்சட்டி இல்லையென்றால்.. வேறு என்ன உதவி...?”என்று வினவ.. “நம் மதிக்கு நீ பாடம் சொல்லித் தர வேண்டும்.. அவளும் பத்தாம் வகுப்பிற்கு வந்து விட்டாள்.. இத்தனை வருடங்களாக யாருடைய உதவியுமில்லாமல் படித்தவள்.. இப்போது அவளுக்குப் பாடங்கள் கஷ்டமாக இருக்கிறதாம்.. நீ சொல்லித் தருகிறாயா ராஜா...?, தினமும் ஒரு மணி நேரம் சொல்லித் தந்தால் போதும்.. நன்றாகப் படிப்பவள்.. விரைவில் கற்றுக் கொள்வாள்..”என்று கூறினார்..

“மதி பத்தாம் வகுப்பிற்கு வந்து விட்டாளா...?”என்று வியந்தவன்... “கண்டிப்பாகக் கற்றுத் தருகிறேன்... அவளை வரச் சொல்லுங்கள்..”என்று ஒப்புக் கொள்ள.. “ரொம்ப நன்றி ராஜா..”என்று அவன் கன்னம் வழித்தவர்.. “அவள் உனக்குப் பயந்து கொண்டு வாசலிலியே நிற்கிறாள்.. சரியாகக் கற்றுக் கொள்ளவில்லையென்று திட்டி விடாதே.. பின் இந்த வீட்டுப் பக்கமே வர மாட்டாள்.. ரொம்பவும் பயந்த சுபாவம் கொண்டவள்...”எனக் கூற.. புன்னகையுடன் அவரை நோக்கியவன்.. “அம்மா... உங்கள் மதியை நான் ஒன்றும் முழுங்கி விட மாட்டேன்.. அதனால் தைரியமாக வரச் சொல்லுங்கள்..” எனக் கூறிச் சிரித்தான்..

“சரி, அவளை வரச் சொல்கிறேன்...”என்று அவனிடம் கூறி விட்டு வெளியே வந்தவரை ஆர்வத்துடன் நோக்கிய மதி.. “என்ன குமரிம்மா... எனக்கு வேலையிருக்கிறது.. அதனால் சொல்லித் தர முடியாது என்று தானே கூறினார்...?, வாருங்கள் சென்று விடலாம்.. அவரைத் தொல்லை செய்ய வேண்டாம்..”என்று அவளே ஒரு முடிவுக்கு வந்து ஓடப் பார்க்க... “மதி நில்...”என்று அவளைப் பிடித்து நிறுத்தியவர்...

“அவன் எதற்காக முடியாது என்று கூறப் போகிறான்....?, அவன் ஒப்புக் கொண்டான்.. உன்னை அழைக்கிறான்.. புத்தகமெல்லாம் கையில் வைத்திருக்கிறாயல்லவா..?, செல்..”எனக் கூறிக் கொண்டிருக்கையிலேயே.. வேலைக்காரர் நல்லன் அவரைத் தேடி யாரோ வந்திருப்பதாக அழைக்க.. “இதோ வருகிறேன்..”என்றவர் மதியிடம் “பயப்படாமல் உள்ளே செல் மதி..”எனக் கூறி விட்டு நகர்ந்தார்.

இதைச் சற்றும் எதிர்பாராத மதி.. அவன் ஒப்புக் கொண்டானா என்று திகைப்பில் ஆழ்ந்து விட்டாள்.. எப்போதும் இறுக்கத்துடனும் முசுட்டு முகத்துடன் வலம் வருபவன்.. பிறந்ததிலிருந்து இந்த வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருக்கிறாள்.. ஒரு முறை கூட அவன் அவளது முகம் பார்த்து நன்றாகப் பேசியதில்லை.. இவனாவது.. அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒப்புக் கொள்வதாவது.. நிச்சயம் ஏதேனும் காரணம் சொல்லித் தவிர்த்து விடுவான்.. என்று அவள் தன்னைத் தானே தைரியப் படுத்திக் கொண்டிருக்க.. குமரிம்மா வந்து அவன் ஒப்புக் கொண்டதாகவும், அவளை அழைப்பதாகவும் கூற.. ஆடிப் போனாள்.. அவனைக் கண்டாலே கை,கால் உதறி வியர்த்து வழிந்து விடுமே... எப்படி அவன் முன்னே போய் நிற்பது...?, என்ன செய்வதென்று புரியாமல்.. உள்ளே செல்லவும் முடியாமல்.. விழித்துக் கொண்டு நின்றாள் மதுமதி.

அவனது அறை வாசலில் நின்று கொண்டிருக்கும் மதியை அம்மா அனுப்பி வைப்பார்களென்ற எண்ணத்தில்.. படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் பார்வையைத் திருப்பினான் ஆதித்யன்.. முழுதாக இரண்டு பக்கங்கள் முடித்த பின்பும் அவள் உள்ளே வராததைக் கண்டு.. அவளைத் தேடி எழுந்து வந்தவனுக்கு அவளைக் கண்டு சிரிப்பு வந்தது.

இடையைத் தாண்டி... நீண்ட.. கருகரு கூந்தலுடன்.. பாவாடை,சட்டையுடன்.. ஒரு கையில் புத்தகங்களுடனும்.. நகம் கடித்தபடி.. பதட்டத்துடன் நின்று கொண்டிருந்தவளைக் கண்டு... “மதி.....”என்றழைத்தான்.. ஆதித்யனின் கம்பீரக் குரல் தன் பெயரை முதன் முறையாகத் தன் முன்னே உச்சரிப்பதைக் கண்டு சிலிர்த்தது அவளுக்கு.. அவன் அழைத்ததில் வேகமாகத் திரும்பியவளின் கையிலிருந்த புத்தகங்கள் அனைத்தும் கீழே விழ... என்ன நினைக்கப் போகிறானோ. என்று பதறி அவனை நோக்கியவள்.. குனிந்து நடுங்கிய கைகளால் புத்தகங்களை எடுக்க...

அவளருகே வந்து குனிந்து தானும் இரண்டு புத்தகங்களைக் கையில் எடுத்தவன்.. நிமிர்ந்து... “மதி.. என்னவாயிற்று உனக்கு...?, ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாய்...?”என்று வினவ.. மெல்ல நிமிர்ந்து ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தாள்.. “சரி உள்ளே வா...”என்றழைத்து விட்டு உள்ளே நடந்தான்.. அவன் பின்னே பலியாடு போல் நடந்து சென்றவள்.. அவன் அமர்ந்ததும் அவன் முன்னே தலை குனிந்த படி நின்று கொண்டாள்..

அவனுக்கு எதிரே இருந்த நாற்காலியைக் காட்டி அவன் “உட்கார்..” என்றதும்.. “இ..இல்லை.. நான் நிற்கிறேன்...”என்றவளிடம்.. “தினமும் 1 மணி நேரம் நின்று கொண்டே படித்தால் பாஸ் ஆகி விடலாம் என்று யாரும்

கூறினார்களா...?''என்று அவன் நக்கலுடன் வினவ.. “இல்லை..''என்று வேகத்துடன் தலையாட்டியவள்.. அவன் காட்டிய இடத்தில் அமர்ந்தாள்..

“எந்தப் பாடம் உனக்கு கஷ்டமாக உள்ளது...?''என்றுக் கேட்டுக் கொண்டே அவன் அவளது புத்தகங்களைப் பிரிக்க.. மதிக்கு.. தான் படித்துக் கொண்டிருக்கும் பாடங்கள் ஒன்று கூட நினைவிற்கே வரவில்லை... “போச்சு!, மக்கு,.. மண்டு,, என்றெல்லாம் அவன் உன்னைத் திட்டப் போகிறான் மதி... என்று மனது கூற.. ஒன்றுமே ஞாபகத்திற்கு வர மாட்டேன் என்கிறதே.. கடவுளே! என்று நினைத்தவளுக்கு அழுகை வர.. கண்ணீர் தேங்கிய விழிகளுடன் “வ.. வந்து,,. வந்து....''என்று அவள் திக்கித் திணற... அவன் அவளை நிமிர்ந்து நோக்கினான்..

அவள் அழுகையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு பதறி.. புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு.. “மதி... என்ன..?, அழுகிறாயா...?, எதற்காக அழுகிறாய்...?''என்று அவன் வினவியது தான் தாமதம், தேம்பித் தேம்பி அழத் துவங்கி விட்டாள்.. இரண்டு நிமிடத்திற்கும் மேலே அவளது அழுகைத் தொடர்வதைக் கண்டவன்.. பொறுமையுடன்.. “மதி.. இதோ பார்.. அழுகையை நிறுத்து.. காரணம் சொல்லி விட்டேனும் அழலாம் அல்லவா...?''என்று அவன் வினவ.. அவனை நிமிர்ந்து பார்க்காமல்.. “ப.. பயமாக இருக்கிறது...''என்று அவள் அழுகையுனூடே கூற...

“பயமாக இருக்கிறதா...?, ஏன்..?, பரீட்சையில் ஃபெயில் ஆகி விடுவோமே என்று பயமாக இருக்கிறதா...?''என்று அவன் வினவ.. இல்லையென்று தலையாட்டினாள்.. “பின்னே..?, பின்னே என்ன பயம்..?, சொல் மதி.. சொன்னால் தானே தெரியும் எனக்கு..?''என்று மீண்டும் வினவ.. மேலும் தலையைக் குனிந்தவள்.. கையை மட்டும் உயர்த்தி.. அவனைச் சுட்டிக் காட்ட.... “என்னைப் பார்த்து பயமா...?''என்று விழி விரித்தான் ஆதித்யன்.

அவனுக்கு ஆச்சரியம் தான்! ஏனெனில் தினமும் அன்னையின் அறையைக் கடந்துத் தன் அறைக்குள் நுழையும் போதெல்லாம் ஒலிக்கும் மதுமதியின் சிரிப்பொலியும், வீடு முழுதும் நிறைந்திருக்கும் அவளது கொலுசொலியும்.. அவளது பேச்சுச் சத்தத்தையும் கேட்டுப் பழகிப் போனதால்.. அவளுடன் அதிகம் பேசாவிடினும்... அவன் அவளை மனதுக்குள் நெருங்கிய உறவாகவே எண்ணியிருந்தான்.

அவசியமென்றால் மட்டுமே அவளுடன் பேச்சு கொடுப்பவன் என்றாலும் எப்போதும் அனைவரையும் கவனிப்பது போல் அவளையும் கவனிக்கத் தான் செய்தான். அன்னைக்கு பிடித்தமானவள் என்பதால் அவனுக்கும் அவள் மீது பாசம் இருந்தது. ஒரு நாள் அவள் வரவில்லையென்றால்.. குமரி புலம்புவதைக் கண்டு கேலி செய்தாலும்... தானும் அவள் ஏன் இன்று வரவில்லையென்று விசாரிக்கத் தான் செய்வான்.. குமரி கூறுவதைப் போல்

அந்த மாளிகையில் ஒரு பெண் பிள்ளை இல்லாத குறையை அவள் தீர்த்து வைப்பதாகவே அவனுக்கும் தோன்றியது..

அந்த வீட்டு எஜமானியின் செல்வாக்கைப் பெற்றிருந்தாலும் அன்பரசுவும் சரி, மதுமதியும் சரி.. இது வரை எந்தச் சலுகையையும் எதிர்பார்த்ததில்லை.. குமரிக்குத் தேவையான அனைத்தையும் முகம் சுளிக்காமல் செய்பவள்.. குமரி ஏதேனும் கொடுத்தால் மட்டும்... வேண்டாம் எனக் கூறி விட்டு ஓடி விடுவாள்.. தங்களுக்கென்று சலுகையாக எதையும் பெற்றுக் கொள்ளாதவர்களின் மீது அவனுக்கு மரியாதை இருந்தது.

அதனால் மதி அவனுக்கு வேற்று ஆளாகத் தோன்றியதே இல்லை.. தன்னைக் காணும் போதெல்லாம்.. தலை குனிந்தபடி பதில் கூறி விட்டு ஓடி விடுபவளிடம் அவன் எங்கே பேசுவது...?, ஆனால் அப்படி ஓடுவதற்கான காரணத்தை இன்று அவள் தெரிவித்த போது.. அவனுக்கு இரக்கமும், ஆச்சரியமும் எழுந்தது.. சிறு பெண் தானே என்றெண்ணிக் கொண்டான்.

அவள் விசும்பிக் கொண்டே அமர்ந்திருந்ததைக் கண்டவன்.. நிமிர்ந்து "மதி... நீ என்னைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.. நான் சிங்கமோ,புலியோ அல்ல.. உன்னைக் கடித்து முழுங்கி விட மாட்டேன்.. சரியா..?, உன் பாடத்தில் உனக்கு இருக்கும் சந்தேகங்களையெல்லாம் நீ கூறினாயானால் நான் கற்றுத் தருவேன்.. நீ சரியாகப் படிக்கவில்லையென்றால்.. நான் உன்னைத் திட்டவோ,அடிக்கவோ மாட்டேன்.. பயப்படாதே.. கண்ணைத் துடைத்துக் கொள்.."என்று பொறுமையுடன் கூற..

மதிக்கு ஆச்சரியமாகிப் போனது.. சேர்ந்தார்ப் போல் நான்கு வார்த்தைப் பேசுவதற்கு.. யோசிப்பவன்.. இன்று இவ்வளவு நீளமாக.. அதுவும் அன்பும்,பொறுமையும் கலந்த குரலில் வேறு பேசுவதைக் கண்டுத் திகைத்துப் போனாள்.. தன் பெரிய கண்களை மேலும் விரித்து கண்ணீரைத் துடைக்கக் கூட மறந்து அவனையே நோக்கினாள்..

அவள் தன்னை வியப்புடன் நோக்குவதைக் கண்டவன்.. சிரிப்பை மேலும் விரித்து "என்ன..?, அம்மா எங்கே என்ற கேள்வியைத் தவிர இவனுக்கு எதுவும் பேச வராதே.. இன்று இவ்வளவு நீளமாகப் பேசுகிறானே என்று ஆச்சரியப் பட்டுக் கொண்டிருக்கிறாயா...?,"என்று வினவ...

வடிவான அவனது இதழ்கள் விரிந்து வெளிக் காட்டிய வெண் பற்களுடன் கூடியப் புன்னகையைக் கண்டு மேலும் தடுமாறிப் போனாள்.. இமை தட்டி விழித்தவளை.. அவன் "மதி... ஆச்சரியப் படுவதை மிச்சம் வைத்துக் கொள்.. ஏனென்றால் தினமும் ஒரு மணி நேரம் இதே போலத் தான் பேசுவேன் உன்னிடம்.. அப்போது பஞ்சமாகி விடப் போகிறது...."என்று சிரிக்க...

அவளுக்கும் இதழ்க் கடையில் சின்ன புன்னகை உண்டானது. அவனுக்கு அதுவே போதுமானதாக இருக்க.. “சரி மதி, இனி பாடத்தைப் பார்க்கலாமா..?, இப்போது பயம் போய் விட்டதல்லவா...?”என்று வினவ.. அவள் மெல்லத் தலையாட்டிக் “கொஞ்சம்...”என்றாள்.. அதிலே திருப்தியுற்றவன்.. “மீதி பயமும் விரைவிலேயே போய் விடும்.. அந்தப் புத்தகத்தை எடு..”என்றான்.

அதன் பின் மதிக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் குரல் வெளியே வர ஆரம்பித்தது.. இன்னும் அவன் முகம் பார்த்துக் கேள்வி கேட்க.. அவளுக்குத் தைரியம் வராவிட்டாலும்.. அவ்வப்போது நிமிர்ந்து பார்த்து அவனுக்குப் பதிலளிப்பாள்.. அவளது கூச்ச சுபாவத்தை அறிந்தவன் தான் என்பதால்.. அவனும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.. இரண்டு,மூன்று மூறை “என் முகத்தை நிமிர்ந்து பார் மதி...”என்று சொல்லிப் பார்த்தான். ம்ஹ்ம்ம்.. எங்கே! கழுத்து வலியே வந்தாலும் நான் உன்னை நிமிர்ந்து பார்க்க மாட்டேனென்று பிடிவாதத்துடன் இருந்தாள் அவள்.

இதற்கு மேல் வற்புறுத்தினால்.. நிச்சயம் வகுப்பிற்கு வருவதை நிறுத்தி விடுவாள் என்பதால் அவன் அவளை எதுவும் கூறவில்லை.. ஆதித்யனின் பயிற்சியில்.. அவள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து அந்த ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்று விட.. தேர்வு முடிவுகள் வெளி வந்த அன்று மகிழ்ச்சியுடன் குமரியைத் தேடி வந்தாள்...

“குமரிம்மா நான் பாஸாகி விட்டேன்... நல்ல மதிப்பெண்கள் வந்திருக்கிறது” என்று துள்ளிக் குதிக்க.. “அப்படியா...?, பைரவியிடம் சொல்லி உனக்காக இனிப்பு சமைக்கச் சொல்கிறேன்.. அப்பாவிடம் கூறினாயா..?”என்று கேட்டவரிடம் “இல்லை குமரிம்மா.. உங்களிடம் தான் முதலில் சொல்ல வேண்டுமென்று பள்ளியிலிருந்து நேரே இங்கே வந்து விட்டேன்..”என்று புன்னைகையுடன் கூறினாள்...

“பார்த்தாயா...?, ஆதியிடம் பாடம் படிப்பதற்கு அன்று அப்படி அழுதாயே... அவனிடம் படித்ததால் தானே இன்று இவ்வளவு நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறாய்...?”என்று கூற.. புன்னகையுடன் தலை குனிந்தவள்.. “வ..வந்து.. அவர்.. இல்லையா...?”என்றுத் தயங்கி தயங்கி அவள் கேட்க.. “எவர்...?, ஓ ஆதியா..?, கீழே தோட்டத்தில் இருப்பான்..”என்று குமரிம்மா முடிப்பதற்குள்.. சிட்டாகப் பறந்து விட்டாள்..

தோட்டம் முழுதும் அவனைத் தேடி அலைந்தவள்.. கடைசியாக மல்லிகைப் பந்தலைக் கடந்து ரோஜாத் தோட்டத்தில் அவனைக் கண்டு விட.. அவனை நோக்கி ஓடினாள்...

சிறு வயதிலிருந்தே ஆதிக்கு ரோஜாப் பூக்கள் என்றால் மிகவும் பிரியம்.. செடியிலிருந்து பூவைப் பறிக்காமல்.. அதைத் தடவி.. அதன் மென்மையை அனுபவித்து முத்தமிடுபவனைக் கண்டு கிருஷ்ணச் சந்திரன் மகனுக்காக.. விதவிதமான நிறங்களில் ரோஜாத் தோட்டத்தையே வடிவமைத்தார்.. வீட்டில் மூவருக்குமே தோட்டக் கலையில் ஆர்வமிருப்பதால்.. அவர்களது பரந்து விரிந்த தோட்டம்.. பல வண்ண மலர்களாலும் கொடிகளாலும் அழகாகக் காட்சியளித்தது..

மாலையானதும்.. சூரியன் மறையும் வரையில் பூக்களிடையே வலம் வருவதை பழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.. அன்றும் அது போல்.. நடமாடிக் கொண்டிருந்தவன்.. மூச்சிரைக்க மதுமதி ஓடி வருவதைக் கண்டு நின்று திரும்பினான்.. அவனைக் கண்டு விட்ட மகிழ்ச்சியில் வேகமாக அவனை நோக்கி வந்தவள் தடுமாறி விழப் பார்க்க... “ஏய்.. மதி...”என்று அவன் அவளது கைப் பற்றி நிறுத்துவதற்குள்.. சமாளித்துக் கொண்டவள்.. அவனது கைக்கு எட்டாமல் தள்ளி நின்றாள்.

அவனும் அதைக் கண்டு கொள்ளாது... மூச்சு வாங்கத் தன் முன்னே நிற்பவளை.. “என்ன அவசரமென்று இப்படி ஓடி வருகிறாய் மதி..?,”என்று கடிந்து கொள்ள.. ஒருவாறுத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவள்.. “இ..இல்லை.. வ..வந்து.. இன்று தேர்வு முடிவுகள் வெளி வந்து விட்டது.. நா.. நான் பாஸாகி விட்டேன்..”எனக் கூறித் தன் மதிப்பெண்களையும் அவனிடம் தெரிவிக்க.. ஆதித்யனும்.. மகிழ்ச்சியுற்றான்.

“வெரி குட்.. வெரி குட் மதி.. மிக மிகச் சந்தோசமானச் செய்தி சொல்லியிருக்கிறாய்.. நான் எதிர்பார்த்ததை விட நல்ல மதிப்பெண்கள் பெற்றிருக்கிறாய்... வாழ்த்துக்கள் மதி...”என்று மலர்ச்சியுடன் கூறியவன்.. சட்டைப் பாக்கெட்டுக்குள் கை விட்டு எதையோ தேடினான்.. “பேனாவை அறையில் வைத்து விட்டேன் போலும்.. உனக்குக் கொடுப்பதற்கு எதுவும் இல்லையே..”என்றபடி சுற்றும் முற்றும் நோக்கியவன்.. சட்டெனத் தன் அருகேயிருந்த செடியிலிருந்து ஒரு சிகப்பு ரோஜாவைப் பறித்து அவளிடம் நீட்டி... “இப்போதைக்கு நீ நல்ல மதிப்பெண்கள் வாங்கியதற்கு என் பரிசாக இதை வைத்துக் கொள்.. நான் டவுனுக்குச் செல்லும் போது... உனக்கு ஏதேனும் பரிசுப் பொருள் வாங்கி வருகிறேன்..”எனக் கூற...

அவன் நீட்டிய ரோஜாவை நடுங்கிய விரல்களுடன் வாங்கிக் கொண்டவளுக்கு.. அன்று தான் ஆதித்யனைக் கண்டதும் தான் எதற்காக பயந்து ஒதுங்குகிறோம்.. மறைந்திருந்து அவனைப் பார்ப்பதையும்,அவன் குரலைக் கேட்பதையும் ஏன் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கான அர்த்தம் புரிந்தது...

அவள் ரோஜாவை வாங்கிக் கொண்டதும்.. சிரிப்புடன் அவன் விலகிச் சென்று விட.. மதுமதிக்குத் தன் மனதை முழுதாக அறிந்து கொண்ட அந்த நாளும்.. அவன் கொடுத்த ரோஜாவும்.. நினைவுப் பெட்டகத்தில் சேமித்து வைக்கப் பட வேண்டிய பொக்கிஷமாகிப் போனது..

மதுமதி ஆண்களைக் கண்டாலே ஓடி ஒதுங்கும் கட்டுப்பெட்டி அல்ல.. பள்ளியில் உடன் படிக்கும் மாணவர்களுடன் சகஜமாக இல்லாவிடினும்.. நிமிர்வுடன் பழகி வருபவள்.. பக்கத்து வீட்டில் வசிக்கும் முத்து அண்ணன், அடுத்த தெரு காமாட்சி அத்தையின் மகன் செல்வம் இவர்களைப் போலப் பலருடன் சாதாரணமாகப் பேசுபவள் தான்.. ஆனால் ஆதித்யனைக் காணும் போது மட்டும் தான் ஒதுங்கி ஒளிவது அவளுக்கே வினோதமாகப் பட்டது.. ஒரு வேளை அவன் தனது எஜமானியின் மகன் என்பதால் கூட விளைந்த பயமாக இருக்கலாம் என்று தன்னையே அவள் சமாதானப் படுத்திக் கொள்வாள்.

ஆனால் அவன் ரோஜாத் தோட்டத்தில் நடக்கும் போதெல்லாம் குமரியின் அறையிலிருந்து அவனை வேடிக்கைப் பார்ப்பது அவளுக்குப் பிடித்தமான செயலாக இருக்க.. ஏனென்று புரியாமல் குழம்பினாள்.. அவள் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது.. ஒரு முறை.. இதே போல் ரோஜா செடிகளுக்கு மத்தியில்.. ரோஜாவின் இதழ்களை வருடியபடி அமர்ந்திருந்த ஆதித்யனை அவள் நின்று பார்க்க.. ரோஜாவின் இதழில் இருக்கும் செம்மை.. அந்தக் குழந்தையின் முகத்தில் இருப்பதைக் கண்ட ஆதித்யன்.. அவளை இங்கே வா என்பது போல் செய்கையால் அழைக்க.. அவனருகே செல்லாமல் அவள் ஓடிச் சென்று விட்டாள்..

அந்தச் சம்பவம் நினைவில் இருப்பதால் தான்.. இன்றும் அவன் ரோஜாச் செடிகளுக்குள் நின்றால்.. அவனை வேடிக்கை பார்க்கிறோம் என்று நினைத்துக் கொண்டு அவன் செடிகளை விட்டு வெளியே வரும் வரை... குமரிம்மா பேசுவதற்கு உம் கொட்டிக் கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள்..

“அம்மா எங்கே...?”என்று அவன் கேட்டு விட்டால்.. அந்த நாள் முழுதும் பரவசமாக இருக்கும் அவளுக்கு.. குமரியிடம் அவன் புன்னகைப்பதைக் கண்டு விட்டாலானால்... கொடைக்கானல் மழை உச்சியில்.. பனியோடு கலந்து விட்டதைப் போல்.. குளிர்ச்சியாகி விடுவாள்.. இந்தப் பரவச உணர்விற்கு.., அவனை நிமிர்ந்து பார்க்க வெட்கப் படும் தனது இந்த நிலைக்கு என்ன தான் பெயர்...?

அந்த மாளிகையில் வேலை செய்யும் நல்லன்,பைரவி, அன்பரசு என அனைவரிடமும்.. பாகுபாடில்லாமல்.. அவன் சரி சமமாகப் பேசிப் பழகுவது... உதவி புரிவது... அவனது திறமை, அவளுக்குப் பாடம் சொல்லிக்

கொடுக்கையில் அவனுக்கிருந்த பொறுமை.. அனைத்தும் அனைத்துமே... அவளை வெகுவாக ஈர்த்தது... உலகத்தில் ஆதித்யன் மட்டுமே ஆண்மகன் என்பது போல்.. அவனை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்தவளுக்கு.. இன்று அவன் ரோஜாவைத் தன் முன்னே நீட்டியதும்...

தன்னுள்.. அவன் விளைவித்த மாற்றங்களுக்கான அர்த்தம்.. முழுமையாகப் புரிந்தது.. பருவமடைந்த வயதில் முதன்முறையாகத் தோன்றிய அந்த உணர்வுகள்.. உலகையே வென்று விட்ட உணர்வளித்தது.. அவன் சென்ற பின்னும்.. வெகு நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தவளின்.. மனதில் எழுந்த மகிழ்ச்சியை.. அங்கே மலர்ந்திருந்த ஒவ்வொரு ரோஜாப் பூவும் எடுத்துக் கூறும்... துள்ளிக் குதித்து... ரோஜாக்களை நீவி.. ஓடி ஆடினாள்..

அறைக்குச் சென்று பால்கனியில் வந்து நின்ற ஆதித்யனும் இந்தக் காட்சியைக் கண்டு... நன்றாக முறுவலித்தான்.. பரீட்சையில் தேர்ச்சி பெற்று விட்டதால் ஆனந்தக் கூத்தாடுகிறாள் என்று நினைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றான்..



# அத்தியாயம் – 3



உன் விழிகளின் வசீகரத்தில்
நான் கொண்ட மயக்கம்..
உன் புன்னகையின் ஈர்ப்பில்
நான் கொண்ட மோகம்..
உன் ஆண்மையின் கம்பீரத்தில்
நான் கொண்ட கர்வம்..
இவையனைத்தும் நொடியில்..
தவிடு பொடியாகிப் போனதே!
இப்படியொரு வலியைத் தந்து செல்ல..
எப்படி முடிந்தது உன்னால்...?

**த**ன் மனதின் எண்ணங்களை,ஆதித்யன் மீது உண்டான தனது காதலை அவனது சிறு செயலில் அறிந்து கொண்ட மதிக்கு.. அதன் பின் அந்த வீட்டில் அவனுடன் கழியும் நேரங்கள்.. தேவ வினாடிகளாகிப் போனது.. முன் போலல்லாது அவளைக் காணும் போதெல்லாம் அவன் நின்று பேசி விட்டுச் செல்வதால் மேலும் குதூகலமாகிப் போனாள்..

பருவம் வந்த பின் உண்டான முதல் உணர்வு... முதன்முதலாக அவளை ஈர்த்தவன் ஆதித்யன்! அவனது பெயரை உச்சரிக்கும் போது சிலிர்ப்பை உணர்ந்திருக்கிறாள்.. தோழிகளுக்குத் தெரியாமல்.. மணலில் ஆதித்யனின் பெயரை எழுதி வெகு நேரம் பார்த்து ரசித்திருக்கிறாள்... கண்ணனும்,ராதையும் சிறு வயதிலிருந்தே ஒருவரையொருவர் நேசித்தார்களாமே! அது போலத் தான் அவளும் ஆதியை விரும்புவதாக நினைத்துக் கொள்வாள்..

தினமும் அவனைக் கண்டு.. அவன் குரலைக் கேட்டு.. தன்னைக் கண்டதும் அவன் முகத்தில் பூக்கும் புன்னகையை ரசித்து.. ஒவ்வொரு வினாடியும் அவளுக்கு பூலோகத்தில் வசிக்கும் எண்ணமே இல்லை.. தரையில் கால் பதியாமல்.. துள்ளிக் குதித்து மனம் நிறைய மகிழ்வுடன் வலம் வந்தாள்.. பரீட்சையில் தேர்ச்சி பெற்றதால் தான் இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கிறாளென்று அன்பரசுவும்,ஆதியும் நினைத்துக் கொண்டனர்.

ஜல் ஜல் என கொலுசுச் சத்தம் ஒலிக்க.. பாவாடையை இரு கையில் பற்றிக் கொண்டு ஓடி ஓடித் திரிபவளை ஆதியே கேலி செய்தான்... ஆனால் அவனுக்குத் தெரியாது.. அவளது இந்த பெருமகிழ்ச்சிக்குக் காரணம் தான் தான் என்று!

**அ**ந்த வருடம் தன் கல்லூரிப் படிப்பை முடித்து விட்ட ஆதித்யன்.. தொழிலில் முழு நேர கவனம் செலுத்தத் துவங்கினான். அதன் பின் பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வின் போது.. பள்ளியில் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரிடமே மதி அவளது தோழிகளுடன் டியூசன் சென்றாள்.. அந்த வருடமும் அவள் நல்ல மதிப்பெண்களுடன் தனது பள்ளிப் படிப்பை முடித்து விட..

அவளது மதிப்பெண்களைக் கேட்ட ஆதித்யன்.. அவளைச் சென்னையிலிருக்கும் பொறியியல் கல்லூரியில் சேர்க்கலாமென்றும், செலவு முழுதையும் தானே பார்த்துக் கொள்வதாகவும் அன்பரசுவிடம் தெரிவித்தான்.. “அதெல்லாம் எதற்கு சின்னையா..?, அவள் வெளியூர் சென்று படிப்பதை நிச்சயம் விரும்ப மாட்டாள்.. எனக்கும் கூட அவளை வெளியே எங்கேயும் அனுப்புவதற்கு மனமில்லை.. இன்னும் 2,3 வருஷத்திற்குத் தானே என்னுடன் இருக்கப் போகிறாள்..?,கல்யாணமாகிச் சென்று விட்டால்.. பின் கணவன் வீட்டில் தானே வசிப்பாள்..?”என்று தயங்கித் தயங்கிக் கூற..

“அங்கிள்.. மதிக்கு என்ன வயதாகி விட்டதென்று கல்யாணத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்..?, நம் கிராமமும் எத்தனை நாட்களுக்கு பின் தங்கியே இருக்கும்..?, அவள் படிக்கட்டும் அங்கிள்.. வெளியூருக்குச் சென்று படித்தால் தான்.. தைரியமும்,தன்னம்பிக்கையும் பெருகும்.. மதியைப் போன்ற.. நன்றாகப் படிக்கும் பெண்ணைத் திருமணம் அது,இதுவென்று காரணம் காட்டி.. தடை போடாதீர்கள் அங்கிள்..”என்று ஆதி கடிந்து கொள்ள.. “நான் அவளிடம் பேசுகிறேன் சின்னையா..”என்று முடித்து விட்டார் அவர்.

மதியிடம் இதைத் தெரிவித்த போது.. அந்த நாள் வரைத் தினம் தினம் அனுபவித்த சந்தோசம் மாறி.. முகம் கூம்பிப் போனது மதிக்கு.... “நான் வெளியூருக்குச் சென்றெல்லாம் படிக்க மாட்டேன்..”என்று ஒற்றை வரியில் தன் மறுப்பைக் கூறி விட.. “எடுத்த எடுப்பில் ஏன் மறுக்கிறாய் மதிம்மா..?, நீ பெரிய காலேஜில் படித்து.. நல்ல வேலையில் சேர்ந்தாயானால்.. அப்பாவிற்கு மட்டுமல்ல.. ஊருக்கே பெருமை கண்ணா.. அவர் கூறியதையும் கொஞ்சம் யோசித்துப் பாரேன்..”என்று அன்பரசு கூற..

“அப்படியானால்.. என்னை வெளியூருக்கு அனுப்புவதில் உங்களுக்கு ஆட்சேபனை ஏதுமில்லை.. அப்படித் தானேப்பா..?, என்னைத் துரத்தி

விடலாமென்று தீர்மானத்திற்கு விட்டீர்கள்..?”என்று அழு குரலில் கூறி முடித்தவள்.. விறுவிறுவென்று வெளியே ஓடிச் சென்று விட்டாள்..

அடுத்த இரண்டு நாட்களும் தந்தையிடம் பேசாமலும்,சரியாக உண்ணாமலும் அவள் சத்தியாகிரகம் செய்ய.. மகளது விருப்பத்துக்கு செவி சாய்ப்பதா.. அல்லது முதலாளியின் சொல்லுக்கு மதிப்பளிப்பதா.. என்று புரியாமல் அன்பரசு தான் தவித்துப் போனார்.. அவரது தவிப்பை மேலும் வளர விடாமல் மதியிடம் பேசும் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டான் ஆதித்யன்.

அன்று அன்பரசுவுடன் சேர்ந்து வேலையில் ஈடு பட்டிருந்த ஆதித்யன், மதி கல்லூரிக்குச் செல்வதைப் பற்றி விசாரித்தான்.. “அவளுக்கு வெளியூர் செல்வதில் விருப்பமில்லை சின்னைய்யா.. நான் வற்புறுத்தியதால்.. இரண்டு நாட்களாக அவள் சரியாகச் சாப்பிடுவதுமில்லை.. என்னுடன் பேசுவதுமில்லை..” என்று வருந்த.. “சரி அவளுடன் நான் பேசுகிறேன்...”எனக் கூறி மதியைத் தேடிச் சென்றான்.

அன்னையின் அறையில் அவளைத் தேடியவன்... அவள் அங்கே இல்லாததைக் கண்டு அன்னையிடம் விசாரித்தான்.. “ஏன் ஆதி.. நீ தான் அவளை வெளியூருக்கு படிக்க அனுப்ப வேண்டுமென்று கூறினாயா..?, அவள் இரண்டு நாட்களாக அழுகை முகத்துடனே காட்சி தருகிறாள்.. காலையில் என்னிடம் அப்படி ஒரு புலம்பல்.. என்னை வெளியூருக்கெல்லாம் அனுப்பாதீர்கள் குமரிம்மா என்று.. ஏன் டா அவளை கஷ்டப் படுத்துகிறாய்...?”சலித்துக் கொள்ள..

“அம்மா.. என்ன நீங்களும் புரியாமல் பேசுகிறீர்கள்...?, அவளுக்கு இருக்கும் திறமைக்கு சென்னைக்குச் சென்று படித்தால்.. நல்ல எதிர்காலம் அமையும் என்று தானே சொல்லிக் கொண்டிருக்கிறேன்..?, அவள் எங்கேயிருக்கிறாள்.. சொல்லுங்கள்..”என்று கேட்க.. “அருவிக்குச் சென்றிருப்பாள்.. அங்கே சென்று பார்..”என்று கூறினார்.

அவளைத் தேடி அருவிக்குச் சென்றான் அவன். அருவியின் அருகேயிருந்த பாறையில் அமர்ந்து.. முழங்காலில் முகத்தைப் பதித்து.. தண்ணீர் விழுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமதி.. அவளருகே சென்று அவன்.. “மதி..”என்றழைக்க.. அவனை அங்கே எதிர்பாராததால் முதலில் தடுமாறியவள்.. பின் அவனைத் தாண்டி.. ஓடப் பார்க்க.. “ஏய்.. மதி.. நில்.. எங்கே ஓடுகிறாய்..?”என்று அவள் கைப் பற்றி நிறுத்தினான்.

முதன் முதலாக அவனது கரம் தொட்டதும்.. நாடி நரம்புகளெல்லாம்.. விழித்தெழுந்து புதுவித கூச்சத்தைக் கொடுக்க.. “கை.. கையை விடுங்கள்..”என்று அவன் முகம் பாராமல்.. தடுமாறிய படி தெரிவித்தாள்..

“விடுகிறேன்.. நான் விட்டதும்.. நீ ஓடி விடக் கூடாது..”என்று அவன் பேரம் பேச.. சரியெனத் தலையாட்டி.. தன் கைகளை அவன் கைகளிலிருந்து உறுவிக் கொண்டாள்..

“இப்போது உனக்கு என்ன பிரச்சனை மதி..?, அப்பாவிடம் இரண்டு நாட்களாகப் பேசுவதே இல்லையாம்.. சரியாக உண்பதில்லையாம்.. என்னவாகி விட்டது உனக்கு..?, அப்படியென்ன கெடுதலான விசயத்தை உனக்கு நாங்கள் செய்து விடப் போகிறோம்..?, உன் நன்மைக்காகத் தானே உன்னை வெளியூருக்குச் சென்று படி என்கிறேன்..?,எதற்காக இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய்...?”என்று அவன் வினவ...

அழுகையும்,கோபமுமாக அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. “நா.. நான் இந்த ஊரை விட்டு.. அப்பாவை விட்டெல்லாம் எங்கேயும் போக மாட்டேன்.. என்னை எதற்காக வற்புறுத்துகிறீர்கள்.., இங்கேயே நல்ல கல்லூரியில் சேர்ந்து கொள்கிறேன்.. நான் போக மாட்டேன்..”என்று பிடிவாதத்தில் அழ.. அவளை சாந்தமாக நோக்கியவன்.. “மதி.. அழாதே.. நீ மட்டும் சென்னை சென்று படித்தாயானால்.. உனக்கு பெரிய வேலை கிடைக்கும்.. உன் எதிர்காலம் மிக மிகச் சிறப்பானதாக இருக்கும்.. அப்பா உன்னை நினைத்து மிகவும் பெருமைப் படுவார்.. அவரை சந்தோசப் படுத்துவது உன் கடமை தானே..?, நீ வாங்கியிருக்கும் மதிப்பெண்களுக்கு.. சென்னையில் நம்பர் ஒன் காலேஜில் உனக்கு இடம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.. நல்ல வாய்ப்பு.. எதற்காக மறுக்கிறாய் மதி...?,ஊரை விட்டும்,அப்பாவை விட்டும் பிரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.. நினைத்த போதெல்லாம் நீ ஊருக்கு வரலாம் என்ன சொல்கிறாய்..?”என்று ஆசை காட்ட..

அவள் எதற்கும் அசராமல்.. சென்னை செல்ல மாட்டேன் என்பதில் பிடிவாதமாக இருந்தாள்.. அப்பாவிடமும்,குமரிம்மாவிடமும் தினம் தினம் வம்பு செய்து கொண்டு.. தோழிகளுடன்.. மலை ஏறிக் கொண்டு.. ஆற்றிலும்,அருவியிலும் குளித்து.. அந்த ஊரில் ஒரு சுதந்திரப் பறவையாக பறந்து திரிபவளுக்கு.. தன் ஊரை விட்டுச் செல்ல மனமேயில்லை.. கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும் சரி, வாழ்வும்,சாவும் இந்த மண்ணில் தான் என்பதில் பிடிவாதமாக இருந்தாள்.

அனைத்தையும் மீறி.. ஆதித்யனைப் பாராமல் நாள் கடத்த முடியாது என்று நிச்சயமாக நம்பினாள்.. ஒரு நாளில் ஒரு முறையேனும்.. அவன் முகத்தைக் கண்டால் தான் அவள் நிம்மதியாக நித்திரை கொள்வதே.. அவன் எப்போதேனும்.. வேலை காரணமாக வெளியூர் சென்று விட்டால்.. அவன் திரும்பி வரும் வரை.. ரோஜாத் தோட்டத்தில் அமர்ந்து பூக்களிடம் புலம்பிக் கொண்டிருப்பாள்..

அவன் திரும்பி வரும் வரை நிம்மதியில்லாமல் தவித்து... வாடிப் போய் விடுபவளை.. வெளியூர் சென்று நான்கு வருடம் படி என்றால்.. ஒப்புக் கொள்வாளா..?, ஒரேடியாகப் பிடிவாதம் பிடித்து மறுத்து விடப் பார்த்தாள்.. ஆனால் ஆதித்யனே தேடி வந்து வற்புறுத்தவும்.. அவளுக்குத் துக்கம் பொங்கியது... அவன் கூறியது அனைத்தையும் கேட்டவள்.. ஆத்திரத்தில் அவன் புறம் திரும்பி..

"நான் போக மாட்டேன்.. போக மாட்டேன்.. என்னை மீண்டும் மீண்டும் வற்புறுத்தினால்.. இந்த அருவியில் விழுந்து செத்து விடுவேன்.."என்று கூற.. திகைத்து அவளை நோக்கினான்.. அவள் பாறை நுனியில் நிற்பதே பயத்தைக் கொடுக்க.. வேகமாக அவள் கைப் பற்றி அருகிலிழுத்துத் தன் அருகே நிறுத்தியவன்.. "அப்படியே அறைந்தேன் என்றால் தெரியும்..., முட்டாள்.. என்ன பேச்சு பேசுகிறாய்..?, அறிவீனமாக நடந்து கொள்கிறாய்..?, இன்னொரு முறை இப்படியேதும் உளறிக் கொட்டினாயானால் பல்லை உடைத்து விடுவேன்.. வயதிற்கேற்றார் போல் பேசக் கற்றுக் கொள்.."என்று கோபமாகக் கூற..

அவன் குரலையும், முகத்தில் தெரிந்த கோபத்தையும் கண்டு பயந்து மதிக்கு முகம் சுருங்கி.. மேலும் அழுகை பெருகியது.. "இப்போது எதற்காக அழுகிறாய்..?,"என்று அவள் தோளைப் பற்றி உலுக்கியவன் தொடர்ந்து... "ஏதோ உனக்குக் கெடுதல் செய்யப் போவது போல்.. செத்து விடுவேன் என்று மிரட்டுகிறாய்..?, அங்கிள் மட்டும் இதைக் கேட்டிருந்தால் எப்படித் துடித்துப் போயிருப்பார்...?, மதி நீ இப்படி முட்டாள்தனமாக நடந்து கொள்வாய் என்று நான் எதிர் பார்க்கவில்லை.. உன் இஷ்டம்.. நீ எங்கே படித்தால் எனக்கென்ன..?"என்று கோபமாகக் கூறியவன்.. திரும்பி வேகமாக நடந்து செல்ல... மதிக்கு அழுகை பெருகியது...

அவளது அழுகை ஒலி அதிகரிப்பதைக் கண்டு கொள்ளாமல் அவன் நடக்க.. அவள் அழுகையுனூடே.. "நீ..நீங்கள் மட்டும்.. வெளியூரில் படிப்பதற்கும் வேலைக்குச் செல்வதற்கும் சம்மதிக்கவில்லை.. உங்களைப் போலத் தானே நானும்..?, எனக்கு மட்டும் ஊரை விட்டுச் செல்ல எப்படி மனம் வரும்..?"என்று தேம்பித் தேம்பிக் கூற..

அவள் பேச ஆரம்பித்ததும் நின்று விட்டவன்.. அவள் புறம் திரும்பாமல்.. அவள் பேசியது அனைத்தையும் கேட்டு விட்டு... கோபம் மாறி சிரிப்புடன் திரும்பினான்.. அவளை நோக்கி "இங்கே வா.."என்று கையசைக்க.. ஒரு கையால் கண்களைத் துடைத்த படி... தேம்பலுடன் அவனருகே வந்தாள்..

அவள் அருகே வந்ததும்.. கை கட்டி இரண்டு வினாடிகள் அவள் அழுவதை வேடிக்கை பார்த்தவன்.. பின் அவள் தோள் மீது கை போட்டு.. அவளை அருகிலிழுத்து... "அழாதே மதிம்மா... போதும் அழுதது.."என்றவன்.. அவள்

கண்ணீரைத் துடைத்த படி.. “உனக்கு வெளியூர் சென்று படிக்க இஷ்டமில்லை அவ்வளவு தானே..?, உனக்கு எது விருப்பமோ.. அதைச் செய்.. சாதிக்க வேண்டுமென்றால்.. எங்கேயிருந்தாலும் சாதிக்கலாம்.. இங்கேயே நல்ல கல்லூரிகள் இருக்கின்றன.. நானே விசாரித்து உன்னை சேர்த்து விடுகிறேன்.. நீ இந்த ஊரை விட்டும்.. உன் அப்பாவை விட்டும் எங்கேயும் போக வேண்டாம்.. சரியா...?, இப்போது சிரி..”என்று கூற..

அவன் பதிலைக் கேட்டு.. இரண்டு நாட்களாக தொடர்ந்து கொண்டிருந்த கவலை மாறி உடனடியாகப் புன்னகை பூத்தது அவளுக்கு.. கன்னத்தில் குழி விழ.. அழகாகப் புன்னகைத்தவளைக் கண்டுத் தானும் சிரித்தவன்.. அவள் கண்களை அழுந்தத் துடைத்து... “இனி உண்ணா விரதப் போராட்டமெல்லாம் செய்யக் கூடாது.. வீட்டுக்குச் சென்று நன்றாகச் சாப்பிட வேண்டும்.. அப்பாவிடமும் கோபப் படாமல் பேச வேண்டும்.. செய்வாயா..?”என்று அவன் வினவ..

“செய்வேன்..”என்று வேகமாகத் தலையாட்டினாள்.. “சரி வா.. உன்னை வீட்டில் விட்டு விட்டுச் செல்கிறேன்..”என்று அவன் அழைக்க.. “நான் பிறகு வருகிறேன்..”என்றாள்.. “வேண்டாம்.. வேண்டாம்.. அருவியில் விழுந்து விடுவேன் என்று நீ கூறியதிலிருந்து எனக்கு பயம் வந்து விட்டது.. உன்னை இங்கேயே விட்டுச் சென்று என்னால் நிம்மதியாக இருக்க முடியாது.. வா மதி..”என்று உடனழைத்துச் சென்றவன்..

“வாழ்க்கையில் எந்தப் பிரச்சனைக்கும் தற்கொலை ஒரு தீர்வாகாது மதி.. நீ சின்னப் பெண்.. இது போன்ற வார்த்தைகளுக்கு முழுமையான அர்த்தம் கூடத் தெரியாது உனக்கு.. முட்டாள் தனமாக இனி இப்படியெல்லாம் பேசக் கூடாது.. உனக்கு விருப்பமில்லையென்றால்.. எதிர்த்துப் பேசு.. அதை விடுத்து.. செத்து விடுவேன் என்றெல்லாம் உளறாதே.. சரியா..?”எனக் கூற.. சரியென்று தலையாட்டினாள் அவள்..

அருவியிலிருந்து வீட்டிற்குச் செல்வதற்கான குறுக்குப் பாதையை அவள் அவனுக்குத் தெரிவிக்க.. “மனப்பாடமாகச் சொல்கிறாயே.. அடிக்கடி இங்கு வருவாயா..?, என்று விசாரித்தவன் தொடர்ந்து “மிக மிக அழகான இடம்..” என்று கூற... அதில் குஷியாகி விட்டவள்.. “ஆமாம்.. நான் அடிக்கடி வந்து செல்லும் அழகான அருவி இது தான்.. இந்தப் பாதையை நானும்,சரளாவும் தான் கண்டு பிடித்தோம்.. நான் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் சரி.. துக்கமாக இருக்கும் போதும் சரி.. இங்கே தான் வருகை புரிவேன்.. அன்று நீங்கள்.. பூ கொடுத்த போது கூட இங்கே வந்தேன்..”என்று கூறியவள்.. தான் உளறிக் கொட்டி விட்டதைக் கண்டு நாக்கைக் கடிக்க... அவன் அவளைத் திரும்பி நோக்கினான்.

“அ,,அது வந்து... என் பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வந்த போது..”என அவசரமாகக் கூறினாள்.. அவள் உளறியதை அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல்.. “ஓ!”என முடித்துக் கொண்டதும் தான் அவளுக்கு மூச்சு சீரானது..

அவனோடு வழி நெடுகப் பேசியபடி வீட்டுக்கு வந்து சேர்ந்தவளுக்கு.. அன்றைய நாள்.. வாழ் நாளில் மறக்க முடியாத நாளாகிப் போனது.. அவன் அவளது தோள் பற்றியது.. கண்ணீர் துடைத்தது.. தன் அருகே நின்ற போது.. அவன் கம்பீரத்தைக் கண்டு உள்ளே உண்டான கிளர்ச்சி.. அவனது ஒவ்வொரு செயலும் அவளை இம்சித்தது.. தன்னைப் போலவே அவனுக்கும் தன் மீது அன்பும்,நேசமும் நிறைந்திருக்கிறதென்று நினைத்து நினைத்துப் பூரித்தாள்.

அவனது தேர்வின் படி கொடைக்கானல் கிறிஸ்டியன் காலேஜில் சேர்ந்து இதோ.. இரண்டு வருடங்களை வெற்றிகரமாக முடித்து விட்டாள்.. எப்போதும் போல் அவளது படிப்பிற்குத் தேவையானப் பல உதவிகளை.. பணமாக இல்லாவிடினும்.. பொருளாக அளித்து விடுவான்.. ஏனெனில் தந்தையும்,மகளும் ரோஷம் பார்ப்பவர்கள்... அவனது எண்ணங்களை மதியும் புரிந்து கொண்டிருந்ததால்.. மறுப்பு சொல்லாமல் வாங்கிக் கொள்வாள்..

**ஆ**தித்யனைப் பற்றியும்,தனது பள்ளிப் படிப்பைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டே ரோஜாத் தோட்டத்தில் அமர்ந்திருந்தவள்... குளிர் தாக்கத் தொடங்கியதும்.. நடப்பிற்கு வந்தாள்.. இருட்டி விட்டதா..?, அய்யோ! வீட்டிற்குச் சென்று சமையல் செய்ய வேண்டுமே!, அதற்கு முன் குமரிம்மாவைச் சென்று பார்த்தாக வேண்டும்.. என்றெண்ணிக் கொண்டு வேக வேகமாக வீட்டிற்குள் ஓடினாள்..

சாய்வு நாற்காலியில் அமர்ந்து.. கண்ணாடி அணிந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தவரின் அருகே சென்று.. “குமரிம்மா...”என்று சிரிப்புடன் அழைக்க.. புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பி.. “மதி.. வந்து விட்டாயா..?, நீ வெகு நேரமாக ரோஜாத் தோட்டத்தில் அமர்ந்திருந்தாயென்று மல்லி கூறினாள்.. குளிரில் அங்கே ஏன் அமர்கிறாய்..?, காய்ச்சல்,கீய்ச்சல் வந்து விட்டால் என்ன செய்வது..?,அப்படி என்ன யோசனையில் அமர்ந்து விட்டாய்...?”என்று வினவ..

இது தான் குமரிம்மா..! என்று அவரது அக்கறையையும்,பாசத்தையும் கண்டு நெழ்வுற்று... அவரது காலடியில் அம்ர்ந்தவள்.. அவர் காலை எடுத்து மடி மீது வைத்து அருகிலிருந்த தைலத்தை எடுத்துக் காலில் தடவினாள்.. “என்னை விசாரிப்பதெல்லாம் இருக்கட்டும்.. நான் சொன்ன படி மல்லி உங்கள் கால் வலிக்கு இரண்டு நாட்களாகத் தைலம் தடவி விடுகிறாளா..?”என்று விசாரித்தாள்..

“ஆமாம், தடவினாள்,தடவினாள்.. டிவியில் ஒலிபரப்பாகும் நாடகத்தைப் பார்த்துக் கொண்டு பாதி மருந்தைத் தரைக்குத் தடவினாள்..”எனக் கூற பக்கென்று சிரித்தவள்.. “சாரி குமரிம்மா.. இந்தக் கழுதை மல்லியிடம் கூறியதற்கு நானே வந்து சென்றிருப்பேன்.. பரீட்சை காரணமாகத் தான் வர முடியவில்லை குமரிம்மா.. இனி தினமும் நான் வந்தே தைலம் தடவி விடுகிறேன்.. சரியா..?”எனக் கூற.. அவளைக் கண்டு முறுவலித்தவர்..

“நீ நன்றாகப் படித்து பரீட்சையில் நல்ல மதிப்பெண்கள் எடுத்தாலே போதும்.. எனக்குத் தைலம் தடவி விட வருகிறேனென்று நீ உன் படிப்பைக் கெடுத்துக் கொள்ளாதே...”எனக் கூற.. “அப்படியானால் உங்கள் பேச்சுத் துணைக்கு ஆள் வேண்டாமா குமரிம்மா..?”என்று அவள் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்க.. “வேண்டும் தான்...”என்று அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே இழுத்தவரைக் கண்டு கலகலவென சிரித்தாள் மதி...

“போக்கிரி...”என்று செல்லமாக வைதவரிடம்.. “எனக்குத் தெரியும் குமரிம்மா.. ஒரு நாள் நான் வரவில்லையென்றால்.. உங்களுக்குப் பொழுதே போகாது என்று..”எனக் கூறிச் சிரிக்க.. தானும் உடன் சேர்ந்து நகைத்தார்.. மேலும் சிறிது நேரம் அவருடன் பேசி விட்டு.. நாளை வருவதாகக் கூறி விடை பெற்று வெளியே வந்தாள் மதி..

ஆதித்யனின் சாப்பாட்டு நேரம் வந்தாயிற்றே.. இன்னுமா அவன் வெளியே வரவில்லை..?, என்றெண்ணிய படி நடந்தவளது.. எண்ணங்களை அறிந்தவன் போன்றுத் தன் அறையிலிருந்து வெளிப் பட்டான் ஆதித்யன்.. “மதி.... “என்றழைத்து அவளை நிறுத்தியவன்.. அவளிடம் ஒரு அட்டைப் பெட்டியை நீட்டினான்.

“என்ன இது...?”என்று கேட்ட படி பெட்டியை வாங்கிப் பிரித்தவள்.. அதிலிருந்த சைன்டி·ஃபிக் கால்குலேட்டரைக் கண்டு அவனைக் கேள்வியாக நோக்கினாள்.. “என்..என்னிடம் ஏற்கனவே இந்தக் கால்குலேட்டர் இருக்கிறதே...”என்று அவள் கூற.. “ம்,பார்த்தேன்.. ஓட்டை கால்குலேட்டர்.. நான்கு முறை அழுத்தினால் தான் நம்பர் வருகிறது.. 4 நாட்களுக்கு முன் நீ அம்மா அறையில் வைத்து விட்டுச் சென்றிருந்த கால்குலேட்டரைப் பார்த்தேன்.. அதனால் தான் புதிதாக வாங்கினேன்.. நீயே என்னிடம் கேட்டிருக்கலாமல்லவா மதி..?, அதை எப்படிப் பரீட்சையில் உபயோகிப்பாய்..? உன் கால்குலேட்டருடன் போராடுவதற்கே உனக்குக் கூடுதலாக ஒரு மணி நேரம் வேண்டும் போலும்...”என்று கேலி செய்ய..

ஒன்றும் கூறாமல் தலை குனிந்தவளிடம்.. “என்னவாயிற்று மதி...?, ஓசியாக ஒன்றும் கொடுக்கவில்லையம்மா.. உன் தந்தையின் சம்பளத்தில் இதற்கான செலவைப் பிடித்துக் கொள்கிறேன்.. சரியா..?”என்று கூற.. சரியென்று

வேகமாகத் தலையாட்டினாள்.. “தலையாட்டுவதைப் பார்... 500 ரூபாய் கால்குலேட்டரால் என் சொத்து ஒன்றும் குறைந்து போகப் போவதில்லை.. போன செமஸ்டரில் நீ முதல் மார்க் வாங்கியதற்காக நான் கொடுத்த பரிசாக நினைத்துக் கொள்... என்ன..?”என்று கேட்க..

சிரிப்புடன் சரியெனத் தலையாட்டியவள்.. “தேங்ஸ்..”எனக் கூறி விட்டு அவனைக் கடந்து சென்றாள்.. “ம்,மதி.. பரீட்சை முடிந்து விட்டதென்று உன் தோழிக் கூட்டங்களுடன் சேர்ந்து மலை ஏறுவது,மரம் ஏறுவதென்று சேட்டையில் இறங்கி விடாதே.. பின்.. குரங்கு பிடிக்கும் யாரேனும்.. உன்னைப் பிடித்துக் கொண்டு போய் விடப் போகிறார்கள்..”என்று கேலி செய்ய.. அவனைச் செல்லமாக முறைத்தவள்.. கலகலவெனச் சிரித்த படி ஓடிச் சென்றாள்.. வழக்கம் போல்.. அவளது சிரிப்பொலியும்,கொலுசொலியும் இனம் புரியாத நிம்மதியை அளித்தது அவனுக்கு...

அனைத்தும்.. அனைத்துமே மகிழ்ச்சியாக.. நிம்மதியாக.. நிறைவுடன் சென்று கொண்டிருந்தது... மதுமதிக்குப் போட்டியாக.. ஆதித்யனின் வாழ்வில் அவள் நுழையும் வரை!!! அவள்-சித்ரலேகா!



# அத்தியாயம் – 4



**வார்த்தைகளால் என்னைக்**
**கொல்ல முயல்கிறாயா..?**
**வீண் முயற்சி! ஏனெனில்..**
**நீ என் மீது காட்டிய அன்பும்,பாசமும்**
**காதலினால் உண்டானதல்ல....**
**என்பதை அறிந்து கொண்ட போதே...**
**நான் பிணமாகிப் போனேன்..!**

**ம**துமதிக்கு ஆதித்யனுடன் திருமணமான.. இன்றைய நாளிலிருந்து சரியாக மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்தேறிய சம்பவங்கள் அனைத்தும் அவள் வாழ்வில் பெருத்த மாற்றங்களை உண்டாக்கியிருந்தது... துள்ளலும்,மகிழ்ச்சியுமாய் சென்று கொண்டிருந்த அவளது வாழ்வு கண்ணீரும், கம்பளையுமாய் மாறிப் போனது... அதில் அவள் கண்ட முதல் அதிர்ச்சி சித்ர லேகாவின் வருகை!

சித்ரலேகா – ஆதித்யனின் ஒன்று விட்ட அத்தை மகள்.. இப்படியொரு அத்தை மகள் இருக்கின்ற சேதி ஆதியே அறியாத ஒன்று! கிருஷ்ணச் சந்திரன் உயிரோடு இருந்த வரை வந்து சென்று கொண்டிருந்த சொந்தங்களில் ஒருவர் தான் மீனாம்பாள்.. கிருஷ்ணச் சந்திரனுக்கு சித்தி மகளான அவரும் பெரும் பணக்காரர் ஒருவரைத் தான் திருமணம் செய்திருந்தார்..

ஆனாலும் அண்ணன் மீதும்,அவரது தேயிலை எஸ்டேட்டின் மீதும் எப்போதும் கண் தான் அவருக்கு.. அவரது கணவர் திரு.யோகேந்திரனுக்கும்.. கிருஷ்ணச் சந்திரனின் எஸ்டேட்டைத் தனக்குச் சொந்தமாக்கி விட வேண்டுமென்ற ஆசை இருந்தது. எஸ்டேட்டின் ஒரு பகுதியை வாங்க விரும்புவதாகத் தங்களது விருப்பத்தை கிருஷ்ணச் சந்திரனிடம் தெரிவித்த போது அவர் ஒரேடியாக மறுத்து விட்டார்..

பின்னே..?, தனது பல நாள் உழைப்பில் படிப் படியாக வளர்ந்து... செல்வத்தை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் தன லட்சுமியை விற்க அவர் முன் வருவாரா..?. இதனால் அவர் மீது மீனாம்பாளுக்குக் கோபம் இருந்தாலும்.. அண்ணனைப் பகைத்துக் கொள்ள மனமில்லை.. ஏனெனில்.. தங்களது ஒரே

மகளான சித்ரலேகாவை, ஆதித்யனுக்குத் திருமணம் செய்து வைத்து.. தங்களது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று தீர்மானித்தனர்.

எப்படியேனும் அண்ணனைத் தாஜா செய்து இதற்குச் சம்மதிக்க வைக்க வேண்டுமென்று மீனாம்பாள் முடிவு செய்திருந்த வேளை.. திடீரென மாரடைப்பில் இறந்து போனார் கிருஷ்ணச் சந்திரன்.. அவர் இறந்த பின் அந்த எஸ்டேட்டை அபகரிக்க எவ்வளவோ முயன்றார்கள்.. ஆனால் அவர்களது திட்டமெல்லாம் தவிடுபொடியாகிப் போனது... ஏனெனில் எஸ்டேட் இருந்தது குமரியின் பெயரில்..

குமரியிடம் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் எதுவும் நிறைவேறவில்லை.. “அண்ணனும் இப்போது உயிரோடு இல்லை.. உங்களால் எப்படி அண்ணி நிர்வகிக்க முடியும்.. என் கணவரிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்..”என்று கெஞ்சிப் பார்த்தும் நடக்கவில்லை.. கிருஷ்ணச் சந்திரனின் பெயருக்காகவே.. அந்த எஸ்டேட் இத்தனை நாட்களாக லாபம் கொடுத்துக் கொண்டிருந்தது..

அவர் போய் சேர்ந்து விட்டதால் அப்படியொன்றும் பெரிய லாபத்தை இனி எதிர்பார்க்க முடியாதென்று ஒருவரையொருவர்.. இந்தப் பழம் புளிக்கும் என்பது போல் சமாதானப் படுத்திக் கொண்டு சொந்த ஊருக்குத் திரும்பி விட்டனர்.. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது போலல்லாமல்.. குமரி மிகத் திறமையாக நிர்வகித்து.. கிருஷ்ணச் சந்திரனின் காலத்தில் அவர் கண்ட லாபத்தை விட அதிகமாகே பெற்றார்.. அதன் பின்.. என் குடும்பத்தில் தானும் சளைத்தவன் இல்லை என்பது போல்.. ஆதித்யனும் தொழிலில் இறங்கி முன்னேறத் துவங்க.. அவர்களுக்கு மீண்டும் பழைய ஆசை துளிர் விடத் தொடங்கியது...

தங்களது பழைய திட்டத்தை.. அதாவது.. தங்களது மகள் சித்ரலேகாவை ஆதித்யனுக்குத் திருமணம் செய்யும் திட்டத்தைச் செயல் படுத்த எண்ணி பல நாட்களுக்குப் பிறகு.. மன்னவனூருக்கு வருகை தந்தனர் மீனாம்பாள் குடும்பத்தினர்..

அப்போது கல்லூரி செமஸ்டர் முடிந்து ஒரு மாத விடுமுறையில் இருந்தாள் மதுமதி... பகல் முழுதும் குமரிம்மாவின் வீட்டில் வேலை செய்து கொண்டும் அவருடன் பேசிக் கொண்டும் பொழுதைக் கழித்தாள்.. “கம்ப்யூடர் கோர்ஸ் ஏதேனும் படிக்கலாமில்லையா மதி..?”என்று ஆதித்யன் வினவியதற்கு.. “படித்தது போதுமென்று தானே கல்லூரியில் விடுமுறை அளிக்கிறார்கள்.. இப்போதும் படிப்பதா குமரிம்மா..?”என்று குமரியின் பின்னே மறைந்து நின்று கொண்டு சின்ன குரலில் அவள் தெரிவிக்க..

“பார்த்தீர்களா அம்மா..?, மதி பாவமடா.. அதிகம் வாய் பேசத் தெரியாதவள்.. அமைதியானவள்.. என்பீர்களே.. இந்தப் பச்சைக் குழந்தை பேசுவதைப் பாருங்கள்..”என்று சிரிக்க.. மேலும் நன்றாகக் குமரியின் பின்னே மறைந்து கொண்டாள்..

மீனாம்பாளின் குடும்பம் வந்து சேர்ந்த அன்று.... காலை கொடைக்கானல் மலையில் இருக்கும் தங்களது தேயிலை எஸ்டேட்டைப் பார்வையிட்டு விட்டு காரில் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தான் ஆதித்யன்.. வலது பக்கத் தெருவிற்குள் திரும்ப எண்ணி.. அவன் வண்டியைத் திருப்ப... சரியாக அதே நேரம்.. ஒரு ஸ்கூட்டியும் அந்தத் தெருவிற்குள் நுழைய எத்தனிக்க.. இருவரது வண்டிகளும் மோதியதில்.. அந்த ஸ்கூட்டியைச் செலுத்திய பெண்.. தடுமாறிக் கீழே விழுந்தாள்...

“ஏய்..ஏய்..”என்றபடி வண்டியை விட்டு அவசரமாகக் கீழே இறங்கிய ஆதித்யன்.. அவளை நோக்கிச் செல்வதற்குள்.. அவளே தன்னைச் சமாளித்து எழுந்து.. கை,கால்களில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிக் கொண்டிருந்தாள்.. “பார்த்து வரக் கூடாதா..?, அடி பலமாக பட்டு விட்டதா..?”என்று விசாரித்தான். நிமிர்ந்து அவனை நோக்கிய அந்தப் பெண்.. அவன் மீது தீப்பார்வையை செலுத்தி.. “பார்த்து நீங்கள் வந்திருக்க வேண்டியது தானே...?, டூவீலரில் செல்பவர்கள்.. காரில் செல்பவர்களுக்கு எப்போதும் வழி விட வேண்டுமென்று எழுதப் படாத சட்டம் ஏதுமிருக்கிறதா..?, காரில் சென்றால்.. ஏரோபிளேனில் செல்வதாக எண்ணம்!,ச்ச” என்று முணுமுணுத்த படி.. அவள் தனது வண்டியைத் தூக்க.. தவறும் செய்து விட்டு.. அவள் எதிர்த்து வேறு பேசுவதைக் கண்டு அவனுக்கும் கோபம் வந்தது....

“ஏய்.. என்ன அதிகமாகப் பேசுகிறாய்..?, நான் வளைகிறேனென்று தெரிந்தும் நீயும் நுழைய நினைத்தது தவறு.. ஆனால் நீயே தவறையும் செய்து விட்டு.. என்னையும் எதிர்த்து வேறு பேசுகிறாய்..?”எனக் கூற.. “யார்..?, நான்.. நான் தவறு செய்தேனா..?, நான் வளைய நினைத்த போது.. நீங்களும் நுழைய நினைத்தது தான் தவறு.... அதனால் தவறு உங்கள் மீது தான்.. புரிந்ததா..?”என்று வினவ...

ஆதித்யன் சற்றுத் திகைத்துப் போனான்.. அந்த ஊரில் அவனையோ.. அவனது குடும்பத்தில் எவரையுமோ.. எதிர்த்துப் பேசும் ஆட்களே கிடையாது.. அப்படி எவரும் கேள்வி கேட்கும் அளவிற்கு.. அவனோ.. அவனது குடும்பத்தாரோ நடந்து கொண்டது கிடையாது.. இவள் நிச்சயம் வெளியூர்க்காரியாகத் தான் இருக்க முடியும்.. என்று முடிவு செய்து கொண்டவன்.. அவளிடம்.. “என்ன.. வெளியூரா..?,நான் யார் என்று உனக்குத் தெரியுமா...?”என்று வினவ...

ஓ!, உள்ளூர் மைனரா இந்த ஆசாமி??, இவன் யாராயிருந்தால் எனக்கென்ன என்றெண்ணிக் கொண்டவள்.. வண்டியைத் திருப்பிக் கொண்டு செல்ல முயல.. “ஏய்... இங்கே நான் பேசிக் கொண்டிருக்கிறேன்...”என்று அவன் சொல்வதைக் கேட்காமல்.. வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றவள்.. சிறிது தூரம் சென்ற பின் திரும்பி.. “ஏய்.. மிஸ்டர்.. நீ இந்த ஊருக்கு ராஜாவாக இருந்தாலும்.. எனக்கு எந்தக் கவலையும் இல்லை.. உன்னைப் போல்.. அகங்காரத்துடன் இருப்பர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும்..”என்று கூறிக் கொண்டே.. கீழே கிடந்த கல்லை எடுத்து.. அவன் கார் கண்ணாடியின் மீது எறிந்தாள்...

“ஏய்.... என்ன செய்கிறாய் இடியட்...”என்று அவன் கத்துவதைப் பொருட்படுத்தாது.. கார் கண்ணாடி சுக்கு நூறாக உடைந்து சிதறுவதைத் திருப்தியுடன் கண்டவள்.. அவனிடம்.. “நியாயமாகப் பார்த்தால்.. அந்தக் கல் உங்கள் தலை மீது தான் பட்டிருக்க வேண்டும்.. பாவமே என்று தான்.. காரின் மீது எறிந்தேன்... ஜாக்கிரதை..”என்று மிரட்டியவள்.. வண்டியை செலுத்திக் கொண்டு சிட்டாகப் பறந்து விட்டாள்...

கோபத்தில் முகம் சிவக்க... எரிச்சலுடன் நின்றிருந்தான் ஆதித்யன். யார் இவள்..?, சரியான திமிர் பிடித்தவளாக இருக்கிறாள்.. அவன் காரில் இடித்துக் கீழே விழுந்த ஒரு காரணத்திற்காக.. கார் கண்ணாடியையே உடைத்து விட்டுச் சென்று விட்டாள்.. ராட்சசி! என்று திட்டிக் கொண்டே.. மெக்கானிக்கிற்கு ஃபோன் செய்து வீட்டிற்கு வண்டியை எடுத்துச் செல்லுமாறு கூறி விட்டு,.. வீட்டிற்கு விரைந்தான்.

அன்று வீட்டிற்கு வந்து சேர்ந்த மீனாம்பாள் குடும்பத்தின் தேவைகளைக் கவனித்த மதுமதி.. துளசிச் செடிக்கு தண்ணீர் ஊற்ற எண்ணி.. ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு.. வெளியே வந்தாள்..

வீட்டிற்கு வந்து சேர்ந்த ஆதித்யன், வண்டியை நிறுத்தி விட்டு.. விறுவிறுவென கோபமாக உள்ளே நுழைந்தான்.. அந்த நேரத்தில் சரியாக வெளியே வந்த மதுமதியின் மீது அவன் மோதப் பார்க்க.. “பார்த்து....”என்று அவன் கைப் பற்றி நிறுத்தினாள்.. அவள் கரம் பற்றியதும்.. நிமிர்ந்தவன்.. அவள் கையிலிருந்த பாத்திரத்தைக் கண்டு விட்டு.. “சாரி மதி.. ஏதோ ஞாபகத்தில் வந்து விட்டேன்.. உன்னைக் கவனிக்கவில்லை.. மோதியிருந்தால் தண்ணீர் சிந்தியிருக்குமே.. சாரி மதி..”என்று கூறினான்.

“இ..இல்லை.. அது பரவாயில்லை...”என்றவள் ஒரு நிமிடம் தயங்கி.. “கோ..கோபமாகத் தெரிகிறீர்களே.. என்னவாயிற்று..?”என்று வினவ.. எப்படித் தன் கோபத்தைக் கண்டு கொண்டாளென்று ஒரு நிமிடம் வியந்தவன்.. பின்

முகத்தை மாற்றி.. “கோபமெல்லாம் ஒன்றுமில்லை மதி..”என்றவன் அவளைக் கடந்து உள்ளே சென்றான்..

அந்தப் பெரிய ஹாலில் அமர்ந்திருந்த யோகேந்திரனையும்,மீனாம்பாளையும் கண்டு இவர்களா..? எப்போது வந்தார்கள்.?, என்று நினைத்த படி.. அவர்களை வரவேற்க.. வாய் திறந்தவன்.. உள்ளறையிலிருந்து வெளியே வந்த சித்ரலேகாவைக் கண்டு திகைத்தான்.. இவளா...?,கடைசியில் இந்தத் திமிர் பிடித்தவள் வந்திருப்பது என் வீட்டிற்குத் தானா..?, என்றெண்ணியவன் அவளை நன்றாக முறைத்துப் பார்க்க..

அவனை அங்கே எதிர்பார்க்காத அவளும் சற்றுத் திகைத்து.. பின் முகத்தை மாற்றிக் கொண்டு.. திமிருடனே அவனை நோக்கினாள்.. இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டிருப்பதை.. அவர்களிருவரும் காதல் பார்வை பார்ப்பதாகக் கற்பனை செய்து கொண்ட மீனாம்பாளும், யோகேந்திரனும் மகிழ்ச்சியாகி விட்டனர்.

தோட்டத்திலிருந்து அப்போது வீட்டிற்குள் நுழைந்த குமரி மகனைக் கண்டு விட்டு.. “என்ன ஆதி அப்படியே நின்று விட்டாய்..?,அத்தையையும், மாமாவையும் வரவேற்கவில்லையா..?”என்று வினவ.. வரவேற்பான புன்னகையை சிந்தி.. “வாருங்கள் மாமா.. அத்தை.. நன்றாக இருக்கிறீர்களா..?”என்று வினவியவன்.. யோகேந்திரனிடம்.. “தொழில் எப்படி இருக்கிறது மாமா..?”என்று சிறிது நேரம் தொழிலைப் பற்றி விசாரித்தான்..

அவன் முடித்ததும்.. குமரி அவனிடம் “ஆதி.. நீ சித்ரலேகாவைப் பார்க்கவில்லையா..?,”என்றவர் அவளிடம் “சித்ரா.. ஏன் அங்கேயே நிற்கிறாய்.. இங்கே வா..”என்றழைத்தார். அவள் அருகே வந்ததும்.. “ஆதி.. இவள் சித்ரலேகா.. உன் அத்தை மகள்..”என்று கூற.. “ஓஹோ...”என்றவன் அவளை வரவேற்காமல் முறைத்தபடியே நிற்க..

“ஆதி..”என்று அவனை உலுக்கியவர்.. “காரின் பின் கண்ணாடி ஏன் உடைந்து போயிருக்கிறது..?, எங்கேயும் இடித்துக் கொண்டாயா..?,உனக்கு ஒன்றும் ஆகவில்லையே..?”என்று வினவ.. அவளைத் திரும்பி ஒரு பார்வைப் பார்த்தவன்.. “இந்த அம்மணியிடமே கேளுங்கள்.. என்ன நடந்ததென்று.. ராங்கி!”எனக் கூறி விட்டு விலகிச் சென்றான்..

அவனது கடைசி வார்த்தையில் நிமிர்ந்தவள்.. அவன் சென்றதும்.. “அத்தை.. உங்கள் மகன்.. ரொம்பத் தான் பண்ணிக் கொள்கிறார்.. என் வண்டியை இடித்து.. என்னைக் கீழே தள்ளி விட்டு விட்டு.. ஏன் என்று எதிர்த்துக் கேட்டால்.. நான் யார் தெரியுமா என்று என்னை மிரட்டுகிறார் அத்தை.. சரியான ரௌடி போலும் உங்கள் மகன்.. அதனால் தான் கல்லை விட்டெறிந்து

அவர் கார் கண்ணாடியை உடைத்து விட்டேன்...”என்று கலகலத்துச் சிரிக்க.. தானும் சிரித்தவர்.. “சரி தான்.. அவனுக்கு ஏற்ற ஆள் தான் நீ..”என்று கூற.. மேலும் கலகலத்தாள் அவள்..

அன்று இரவு உணவின் போது... தயாரித்த உணவுகளை.. டைனிங் டேபிளில் எடுத்து வைத்தாள் மதுமதி.. அனைவரும் சாப்பிட அமர்ந்ததும்.. அவள் பரிமாறத் துவங்க.. “மதி... அந்த மீன் வறுவலை.. இன்னும் கொஞ்சம் வை சித்ராவிற்கு..”என்று கூற.. “இதோ வைக்கிறேன் மா..”என்றவள்.. சித்ராவின் தட்டில்.. மீன்களை அடுக்க.. “அய்யோ.. போதும் மதி.. ஏற்கனவே.. 4 வைத்து விட்டாய்..”என்று அவள் கூற.. “சின்ன சின்னதாகத் தானே இருக்கிறது.. நன்றாகச் சாப்பிடுங்கள்..”என்று புன்னகை முகத்துடன் கூறியவள்..

ஆதித்யனின் அருகே சென்று.. அவன் தட்டில் பரிமாறினாள்.. “போதும் மதி..” என்றவன் தொடர்ந்து “நீ சாப்பிட்டாயா..?”என்று விசாரித்தான்.. “பசியில்லை.. நான் பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன்...”என்றாள்.. ஒரு வேலைக்காரப் பெண்ணிடம் அவன் இவ்வளவு அக்கறையுடன் விசாரிப்பதைக் கண்டு மீனாம்பாளு,யோகேந்திரனும் வாயைப் பிளக்க.. சித்ரலேகா மதியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.. பின் ஆதியின் முகத்தையும் பார்க்க..

அவள் தன்னை நோக்குவதைக் கண்டவன்.. என்ன..? என்று புருவத்தைத் தூக்கிக் கேட்டான்.. அவனை மேலும் ஆழ நோக்கியவள்.. “அந்த உப்புக் கிண்ணத்தை கொஞ்சம் நகர்த்த முடியுமா..?”என்று வினவ.. அவனோ அவளை உற்று நோக்கி... “ஏன்..உனக்குக் கையில்லையா..?, எழுந்து வந்து எடுத்துக் கொள்..”என்று கூறி விட்டு மீன் வறுவலை வாயில் அடைக்க..

“திமிரைப் பார்.. வேலைக்காரப் பெண்ணிடம் அக்கறையாக நடந்து கொள்வாராம்.. சொந்த அத்தைப் பெண்ணிடம்.. திமிரைக் காட்டுவாராம்..”என்று முணுமுணுத்தவள்.. “எனக்கு உப்பே வேண்டாம்..”என்று கூற.. “ஆமாமாம்.. ரோஷம் தான் அளவுக்கு அதிகமாக இருக்கிறதே... உனக்கு எதற்கு உப்பு...?”என்று கூற.. “அய்யோ சாமி.. நீங்கள் இந்த ஊரின் மிகப் பெரிய மைனர் என்று தெரியாமல்.. உங்கள் கார் கண்ணாடியை உடைத்தது தவறு தான்.. மன்னித்து விடுங்கள்...”என்று கூற...

சாப்பிட்டு முடித்து கைகளைத் துடைத்துக் கொண்டே அவள் கூறுவதை நோக்கியவன்.. அவள் முகத்தில் தோன்றிய அபிநயங்களையும், கையெடுத்துக் கும்பிட்டு.. மன்னித்து விடுங்கள் சாமி.. என்றதும்.. அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க.. துடைத்துக் கொண்டிருந்த துணியை அவள் முகத்தில் எறிந்து.. டேபிளின் மீதிருந்த ஸ்பூனினால்.. அவள் தலையைத் தட்டி விட்டுச் சென்றான்.

அவன் தன் முகத்தில் துணியை எறிந்ததுமே.. கோபமாக அதை விலக்கி நிமிர்ந்தவள்.. அவன் தன் தலையில் தட்டியதும்.. “ஏய்.. அடிக்கிறாயா என்னை....?”என்று அவனை நோக்கி ஓடி.. அவன் தோளைப் பற்றி தலையில் குட்ட முயல.. “ஏய் ராங்கி.. விடுடி...”என்று அவளை விலக்குவதற்குள்.. அவன் தலையில் அவள் குட்டி விட்டு.. கலகலவெனச் சிரித்து ஓட.. “உன்னை....”என்று துரத்திக் கொண்டு அவனும் ஓடினான்...

மகன் முகத்தில் விளையாட்டுத் தனத்தைக் கண்டு குமரி மகிழ.. தாங்கள் இருவரும் நினைத்து வந்த காரியம்.. தடபுடலாக ஆரம்பித்து விட்டதை எண்ணி சித்ராவின் தாயும்,தந்தையும் மகிழ்ந்தனர். ஆதித்யனின் விளையாட்டுத் தனத்தையும், அவள் மீது அவன் காட்டிய உரிமையையும் கண்டு.. நெஞ்சுக்குள் ஏதோ செய்தது மதுமதிக்கு.. ஆனாலும் எதையும் முகத்தில் வெளிக் காட்டாமல்.. புன்னகையுடனே உள்ளே சென்றாள்..

மறு நாள் காலை.. விடிந்தவுடன்.. தந்தைக்கு டீ தயாரித்து வைத்து விட்டு.. ஸ்வெட்டரையும்,சால்வையும் மாட்டிக் கொண்டு குமரிம்மாவின் வீட்டிற்குச் சென்றாள்.. எப்போதும் பனிக் கொட்டும் அந்தக் காலை வேளையை ரசிப்பது அவளுக்குப் பிடித்தமான ஒன்று.. ரோஜாத் தோட்டத்தில் காலைப் பனியில் மலர்ந்திருக்கும் மலர்களைக் கண்ட பின் தான் அந்த நாளையே தொடங்குவாள்.. அன்றும் அதே போல்.. கைகளைத் தேய்த்து.. குளிரை அடக்க முயன்று.. தன்னிடம் புன்னகைத்த ரோஜாக்களைக் கண்டுத் தானும் புன்னகைத்தாள்..

சிறிது நேரம் நின்று விட்டுத் திரும்பியவள்... ஆதித்யன்.. ஜாகிங் செய்த படி.. அவளை நோக்கி வருவதைக் கண்டாள்.. “குட் மார்னிங் மதி..”என்று புன்னகையை உதிர்த்தான். பதிலுக்கு குட் மார்னிங் என்றவள் தொடர்ந்து.. “ரொ..ரொம்பவும் குளிராக உள்ளதே.. இந்தக் குளிரில் ஜாகிங் கண்டிப்பாக செய்தாக வேண்டுமா..?, வீட்டிற்குள்ளேயே ஏதேனும் உடற்பயிற்சி செய்யலாமே...?”என்று எப்போதும் போல்.. அவன் முகம் பார்க்காமல் கூற..

“ம்.. நீ எதற்காக தினமும் காலை விரைவிலேயே எழுந்து ரோஜாக்களைக் காண வருகிறாய்..?”என்று பதில் கேள்வி கேட்டான்.. “ஏ..ஏனென்றால்.. எனக்கு ரோஜாக்களைக் கண்டால் தான்.. அந்த நாள்.. நிறைவு பெறுகிறது,,,”என்று கூற.. “ம்,..எனக்கும் அதே காரணம் தான்.. நீ ரோஜாக்களோடு நிறுத்திக் கொள்கிறாய்.. நான் மல்லிப் பூப் பந்தல்,யூகலிப்டஸ் மரங்கள், இந்தக் குளிர்க் காற்று.. பச்சைப் புல்வெளி அனைத்தையும் ரசிக்கிறேன்.. இவையனைத்தையும் காலையில் கண்டால் தான் நீ சொல்வது போல்.. எனக்கு அந்த நாள் நிறைவு பெறுவது போல் தோன்றுகிறது..”எனக் கூற.. அவனை நிமிர்ந்து நோக்கி.. மீண்டும் தலை குனிந்து முறுவலித்தாள் மதுமதி..

அவள் தலையைக் குனிந்து கொண்டதைக் கண்டவன்.. “மதி.. எலி.. எலி..”என்று கூவ.. “எலியா...?”என்று துள்ளிக் குதித்தவள்.. அவனருகே சென்று அவன் முகத்தை நோக்கி.. “எலி.. எங்கே..?”என்று வினவ.. கடகடவெனச் சிரித்தவன்.. “இப்போது நிமிர்ந்து என் முகம் பார்த்து விட்டாயே மதி.. அதிசயம் தான்...!” எனக் கூறிச் சிரிக்க.. வெட்கத்தில் சிவந்த முகத்தை அவன் பார்க்கா வண்ணம் திரும்பிக் கொண்டவள்.. “நான் போகிறேன்...”என்று ஓட.. “அறைக்குக் கஞ்சி கொண்டு வா மதி.. ஜாகிங் முடித்து விட்டேன்...”என்று கூறினான்.. அவனிடம் சரியெனத் தலையாட்டியவள்.. வீட்டிற்குச் சென்று சமைலறையினுள் நுழைந்தாள்.. அங்கே சமையல் வேலைகளை. மல்லி,பைரவியுடன் சேர்ந்து கொண்டு தானும் கவனிக்கத் தொடங்கினாள்..

அடுத்த பத்து நிமிடத்தில்.. அவன் கேட்ட சத்து மாவுக் கஞ்சியை எடுத்துக் கொண்டு அவன் அறையை நோக்கிச் சென்றாள்.. சிறிது நேரத்திற்கு முன்பு நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டு.. அவள் நடக்க.. இடையிலிருந்த அறையிலிருந்து வெளிப்பட்ட சித்ரலேகா.. “மதி நில்...”என்று நிறுத்தியவள் தொடர்ந்து.. “கஞ்சி யாருக்குக் கொண்டு போகிறாய்..?”என்று வினவினாள்..

ஆதியை இதுவரை யாரிடமும்.. பெயர் சொல்லிக் குறிப்பிடாதவள் அவள்.. அதனால்.. அவனுக்கு எடுத்துச் செல்கிறேன் என்பதை இவளுக்கு எப்படிச் சொல்வது என்று தயங்கியவள்.. “அ.. அவருக்கு..”என்று அவனது அறையைக் கை காட்ட.. “எவர்..?, ஓ! ஆதி அத்தானுக்கா..?, கொடு.. நான் எடுத்துச் செல்கிறேன்..”என்று அவளிடமிருந்து கிண்ணத்தைப் பிடுங்கிக் கொண்டு முன்னே நடந்தாள்.. அவள் ‘ஆதி அத்தான்’ என்றதுமே.. முகம் சுருங்கத் தொடங்கி விட்டது மதுமதிக்கு.. எதுவுமே கூறாமல்.. விறுவிறுவென நடந்து சென்று விட்டாள்..

ஆதித்யனின் அறைக்கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்த சித்ரலேகா.. அவனைக் காணாது “ஆதி அத்தான்..”என்றழைத்தாள்.. தன் அறையின் மறுபுற பால்கனியின் வழியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவன்... “ஏய்.. ராங்கி.. என்ன நீ எடுத்துக் கொண்டு வருகிறாய்..?, மதி எங்கே..?”என்று வினவ.. அதில் எரிச்சலுற்ற லேகா.. “ஏன் அத்தான் நான் கஞ்சி கொடுத்தால் நீங்கள் குடிக்க மாட்டீர்களா..?”என்று கோபமாக வினவினாள்..

அவள் முறைப்பைக் கண்டு சிரித்தவன்.. “என்னவோ நீயே தயாரித்து எடுத்து வந்தது போல்.. ரொம்பத்தான் முறைக்கிறாய்..?”என்றபடி கஞ்சியை எடுத்துப் பருகத் தொடங்கினான்.. “ஏன்..?,என்னால் இந்தக் கஞ்சியைத் தயாரிக்க முடியாதாக்கும்...?, நாளை நான் செய்து காட்டுகிறேன் பாருங்கள்..”என்று ரோஷமாகக் கூற.. “அம்மா பரதேவதை.. உன்னைப் போன்ற ஆட்கள்.. சமையல் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக எங்கள் வீட்டில் 2 மாடு வளர்க்கிறோம்.. நீ சமைப்பதை எல்லாம்.. அதற்குக் கொட்டு..”என்று கூற..

“ஆமாமாம்.. உங்களுக்குக் கொட்டுவதும்.. அதற்குக் கொட்டுவதும் ஒன்று தானே.. சரியாகச் சொன்னீர்கள் அத்தான்..”என்று சிரிக்க.. “உன்னை…”என்று அவள் காதைத் திருகியவன்.. “வாயாடி.. வாயாடி..”என்று கூறிச் சிரித்தான்.. பின் “உனக்கு ஸ்கூட்டி எப்படிக் கிடைத்தது…?, நம் வீட்டில் யாரும் உபயோகிப்பதில்லையே..”என்று வினவ.. “உங்கள் ஊரிலேயே யாரும் உபயோகிப்பதில்லை என்று சொல்லுங்கள் அத்தான்.. பக்கத்து எஸ்டேட் கிருஷ்ணப் பிள்ளை அங்கிளின் மகள் கௌசி என் தோழி.. நான் இங்கே வருவதாகச் சொன்னதும் என்னைப் பார்க்க வந்து விட்டாள்.. அவளுடைய ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு தான் நான் ஊர் சுற்றக் கிளம்பினேன்..”என்று பெருமையாகக் கூற..

“நீ இப்படி ஊர் சுற்றித் திரியும் பழக்கத்தை இன்னும் விடவில்லையா..?”என்று வினவினான் ஆதி.. “கேலி செய்யாதீர்கள் அத்தான்.. மலைகளையும், அழகான இயற்கைக் காட்சிகளையும் காண யாருக்குத் தான் கசக்கும்..?, நியாயமாகப் பார்த்தால் நீங்கள் தான் என்னை வெளியே அழைத்துச் சென்று ஊர் சுற்றிக் காட்ட வேண்டும்.. நீங்கள் 24 மணி நேரமும் பிஸியாயிற்றே…”என்று சலித்துக் கொள்ள..

“ஏன்..?, ஊர் சுற்றிப் பார்க்க நான் தான் வர வேண்டுமென்று என்ன இருக்கிறது..?,அம்மவையோ.. மதியையோ அழைத்துச் செல்ல வேண்டி தானே..?”என்று கூறினான்.. “யாருடன்..?, அத்தையுடனா..?, எனக்குக் கால் வலி கண்ணு.. எனக் கூறி வெளியே வருவதைத் தவிர்த்து விடுகிறார்கள்.. மதியுடன் செல்வதானால்.. நிறைய பொறுமை வேண்டும் அத்தான்.. நான் 10 வார்த்தை பேசினால்.. அவள் 2 வார்த்தையில் பதில் சொல்வாள்..”என்று கூறினாள்.

அவள் சொல்வதைக் கேட்டுச் சிரித்தவன்.. “பின்னே.. மதியை உன்னைப் போன்ற வாயாடி என்றெண்ணிக் கொண்டாயா..?, அவள் அமைதியானவள்…”என்று கூற.. வேகமாக அவனருகே வந்தவள்.. “ஏன் அத்தான்… நான் வாயாடி.. அவள் அமைதியானவளா..?,சொந்த அத்தைப் பெண்ணை விட்டுக் கொடுத்து… ஒரு வேலைக்காரப் பெண்ணுக்கு இப்படி வக்காலத்து வாங்குகிறீர்கள்..?”என்று பொறியத் துவங்க…

“ஏய்… இதோ பார்.. அவளை நாங்கள்.. வேலைக்காரப் பெண்ணாக ஒரு போதும் நினைத்ததேயில்லை.. அவளும் இந்த வீட்டில் ஒருத்தியாகத் தான் வளர்ந்து வருகிறாள்.. நினைவில் வைத்துக் கொள்.. வாய்க்கு வந்தபடி எதையேனும் பேசி.. என்னிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளாதே..”என்று அவன் திட்ட.. அவனது குரலும்,முகமும் மாறிய விதத்தைக் கண்டு.. ஒரு வேலைக்காரியின் மீது இவ்வளவு அக்கறையா..?, அவளைச் சீக்கிரமே.. இங்கேயிருந்து துரத்தியடிக்கிறேன்..”என்று கறுவிக் கொண்டவள்.. அவனிடம் முகத்தை மாற்றி..

“அத்தான்.. என் பிரச்சனை மதியல்ல.. என்னை வெளியே அழைத்துச் செல்லுங்கள் ப்ளீஸ்.. நம் எஸ்டேட்டிற்கேனும் அழைத்துச் செல்லுங்கள் அத்தான்.. உங்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல்.. நான் சுற்றிப் பார்க்கிறேன்.. ப்ளீஸ்..”என்று கெஞ்ச.. அவனும் கோபம் மாறிப் புன்னகைத்து.. “சரி..அரை மணி நேரத்தில் தயாராக இரு.. அழைத்துச் செல்கிறேன்..”என்றான்.. “நான் இப்போதே தயார் தான் அத்தான்.. நீங்கள் குளித்து வந்ததும்.. சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாம்.... சீக்கிரம் தயாராகி வாருங்கள்..”எனக் கூறி விட்டுத் துள்ளிக் குதித்து ஓடினாள்..

வேலைக்காரப் பெண் மீது இப்படி ஒரு அக்கறையா..?என்று சித்ரலேகா தொடங்கிய போதே.. குமரியின் அறைக்குச் செல்வதற்காக.. ஆதியின் அறை அருகே வந்த மதுமதி.. அவள் கூறியதைக் கேட்டுத் தலை குனிந்து குமரியின் அறைக்குச் செல்லாமலேயே அந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்..

ஆதித்யன் எப்போதும் அமரும் பன்னீர் மரத்தடியின் மர பெஞ்சில் அமர்ந்தவளுக்கு ஏனென்றே புரியாமல் அழுகை வந்தது.. அவள் அந்த வீட்டில் ஒரு வேலைக்காரி என்பதை இதுவரை அவள் உணர்ந்ததேயில்லை.. ஏனெனில் ஆதித்யனோ... குமரியோ.. அவளை அப்படி நடத்தியதும் இல்லை.. அப்படி ஏதும் பேசியதுமில்லை.. இன்று சித்ரலேகா தன்னை ஒரு வேலைக்காரி என்றதும்.. அழுகையும்,இனம் புரியாத பயமும் வந்தது.. ஒரு வேளை.. ஆதித்யனும்.. தன்னை அது போல் நினைத்துக் கொண்டால்.. என்ன செய்வது..! என்றெண்ணியவளுக்கு.. என்ன செய்வதென்றே புரியாமல்.. அழுகை நிறைந்தது...

வெகு நேரமாக அழுத படியே அமர்ந்திருந்தவளை.. ஆதியின் ஜீப் சத்தம் வெகுவாக ஈர்த்தது.. ஏனெனில் ஜீப் சத்தத்தோடு சேர்ந்து லேகாவின் சிரிப்புச் சத்தமும் ஒலித்தது.. கண்களில் கண்ணீர் பளபளக்க.. அவர்கள் இருவரும் செல்வதை வேடிக்கைப் பார்த்தாள் மதுமதி.. லேகா வாயடிப்பதற்கு.. ஏற்றவாறு.. தானும் அவளோடு சேர்ந்து கொண்டு புன்னகை முகத்துடனே செல்லும் ஆதியைக் காண்கையில்.. அவளுக்கு மேலும் பயம் கூடியது.. காரணமேயில்லாமல் லேகா மீது கோபம் வந்தது.. வந்த 2 நாளில் அவள் ஆதியைத் தன்னிடமிருந்து பிரித்துச் செல்வதாகவே தோன்றியது அவளுக்கு.. அவர்கள் இருவரும் ஜோடியாகச் செல்வதைக் காணும் போதே உள்ளுக்குள் எரிந்தது... இந்த எரிச்சல்களையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடும் அளவிற்கு மிகப் பெரிய இடி.. மறு நாளே அவள் தலையில் விழுந்தது..



## அத்தியாயம் – 5



**உயிர் விடத் துணிந்து விட்டேன்!**
**நீ இல்லாத நரகத்தில்...**
**உன் சுவாசமற்று,,...**
**உன் ஸ்பரிசம் அற்று..**
**உன் சிரிப்பற்று..**
**உன் பேச்சற்று...**
**உயிர் வாழ்வதை விட....**
**சாவது மேல் என்று துணிந்து விட்டேன்!**

**ஆ**தியுடன் அவனது எஸ்டேட்டிற்குச் சென்று பார்வையிட்ட லேகாவிற்கு.. அன்னையும்,தந்தையும் ஏன் இந்த எஸ்டேட்டின் மீது பைத்தியமாக இருக்கிறார்கள் என்பதற்கான காரணமே விளங்கியது.. பல ஏக்கர் நிலத்தைத் தனதாக்கிக் கொண்டு செழிப்புடன் காட்சியளித்த அந்தத் தேயிலைத் தோட்டத்தைக் கண்டவளுக்கு.. அதை விரவிலேயே தனதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற.. பேராசை பிறந்தத்.. இதோ..! அருகிலிருக்கும்.. இந்தக் கிரேக்கச் சிலையைத் திருமணம் செய்து கொண்டால்.. இந்த எஸ்டேட் சொந்தமாகி விடும்.. என்றெண்ணிக் கொண்டவள்.. நினைத்ததை அவனிடம் கேட்கவும் செய்தாள்..

"ஏன் அத்தான்... நான் உன்னைக் கட்டிக் கொண்டால்.. இந்த எஸ்டேட் முழுக்க என் சொந்தமாகி விடும் தானே...?"என்று விளையாட்டுப் போக்கில்.. மிகப் பெரிய விசயத்தை அவள் வெளியிட்டு விட.. அவளது சூசகத்தை அறியாத அவனும் சிரித்தபடி.. "நான்..?, உன்னைத் திருமணம் செய்து கொள்வதா..?, நீ நாள் முழுக்க திறந்த வாய் மூடாமல் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்க.. என்னால் முடியாது தாயே..."என்று கும்பிடு போட..

அவனை நின்று முறைத்தவள்.. "அப்படியானால்.. என்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டீர்கள்.. அப்படித்தானே...?"என்று கேட்க.. அவன் மேலும் புன்னகையை விரித்து.. ஆமாம் என்று தலையசைக்க.. அவனருகே வந்து அவன் சட்டையைப் பற்றியவள்.. "அத்தான்.. நீ என்னைத் திருமணம் செய்து

கொள்ளா விட்டால்.. உன்னை இந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளி விட்டு விடுவேன்...”என்று கூற..

“அடிப்பாவி..!”என்று வாயைப் பிளந்த ஆதித்யன்.. “பொதுவாக.. நீ என்னைக் காதலிக்கவில்லையென்றால்.. நான் மலை உச்சியிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்வேன்.. என்று சொல்பவர்களைக் கேள்வி பட்டிருக்கிறேன்.. ஆனால்.. நீ என்ன வித்தியாசமாக.. என்னைத் தள்ளி விட்டு விடுவேன் என்கிறாய்..?”என்று வினவ.. “நான் ஏன் கோழைத் தனமாக தற்கொலை செய்து கொள்ள வேண்டும்..?, உன்னை வேண்டுமானால் தள்ளி விடுவேனே தவிர.. நான் சாக மாட்டேன்..”என்று கூறினாள்..

“அய்யோ.. அப்படியேதும் செய்து என்னைத் தள்ளி விட்டு விடாதே தாயே.. நான் உன்னையே திருமணம் செய்து கொள்கிறேன்..”என்று பயந்தவன் போல் தன் சம்மதத்தை அவன் தெரிவிக்க.. முகம் மலர்ந்து சிரித்தவள்.. “அந்த பயம் இருக்கட்டும்..”என்று சிரித்து விட்டு.. அவனருகே வந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டு.. “தேங்ஸ் அத்தான்....”என்றாள்.. அவள் செயலில்.. திகைத்துப் போன ஆதி.. பின் “பொது இடத்தில்.. என்னடி செய்கிறாய்..?,”என்று பொறிய.. “அப்படித் தான் செய்வேன்..”எனக் கூறி அவனது மறு கன்னத்திலும் முத்தமிட்டு விட்டு ஓடி விட்டாள்.. அவள் சென்ற பின் கன்னத்தைத் தடவிக் கொண்ட ஆதியும்.. உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டான்...

அதன் பின் இருவரும் ஊர் சுற்றி விட்டு.. மாலை வீட்டிற்குள் நுழைந்தனர்.. மாலைக் காபியை அனைவரிடமும் அளித்துக் கொண்டிருந்த மதுமதிக்கு.. இருவரும்.. கை கோர்த்த படி சிரிப்புடன் நடந்து வந்ததைக் கண்டு.. இதயம் ரத்தக் கண்ணீர் வடித்தது.. கோர்த்திருந்த கரங்களைப் பிரிக்காமல்.. ஷோபாவில் அருகருகே அமர்ந்த இருவரும்.. ஏதோ ஒரு ஆங்கிலப் பாடலை டிவியில் கண்டு.. அந்தப் பாட்டைப் பற்றி மிக சுவாரசியமாக உரையாடிக் கொண்டிருந்தனர்.. இருவரையும் கண்டு.. கண்களில் நீர் நிரம்பி.. அசையாமல் நின்றிருந்தவளைக் குமரியின் குரல் நடப்பிற்குக் கொண்டு வந்தது..

“மதி.. ஆதிக்கும்,சித்ராவிற்கும் டீ கொடும்மா..”என்று கூற.. சரியெனத் தலையாட்டி உள்ளே சென்று டீயைக் கொண்டு வந்து அவர்களின் முன்னே நீட்டியவளுக்குக் காலையில் லேகா கூறிய வார்த்தைகள் நினைவிற்கு வந்தது.. என்ன தான் அந்த வீட்டு எஜமானி வேறுபாடு இல்லாமல்.. பாச, நேசத்துடன்.. அன்பும்,இரக்கமுமாய் அவளிடம் பழகி வந்தாலும்.. உண்மையில் அவள் அந்த வீட்டு வேலைக்காரி தானே..?, இது தானே உண்மை..?,

குனிந்த தலையுடன் தன்னிடம் தட்டை நீட்டுபவளைக் கண்டு ஆதித்யன்.. “மதி... என்னவாயிற்று..?, சோர்வாகத் தெரிகிறாய்..?,உடம்பு சரியில்லையா..?”என்று அக்கறையுடன் விசாரித்தான்.. என்றுமே தித்திப்பாக

நெஞ்சில் இனிக்கும் அவனது அக்கறை.. இன்று பாகற்காயாய்க் கசந்தது அவளுக்கு.. இந்த அக்கறை.. அவள் மீது கொண்ட நேசத்தினால் விளைந்தது அல்லவே! அன்னையற்ற.. பெண் பிள்ளை... தந்தையின் அரவணைப்பில் தனியாக வளர்கிறாளே என்கிற இரக்கம்,பரிதாபம்.. அது தான் அவனைத் தன் மீது அக்கறை காட்ட வைத்திருக்கிறது.. மற்றபடி.. அவள் கற்பனை செய்து கொண்டதைப் போல்.. அவள் மீது அவனுக்கு எந்த வித நேசமும் இல்லை..

இந்த உண்மையைப் புரிந்து கொண்டவளுக்கு அவனது அக்கறையும்,அன்பும் கசக்கத் துவங்க.. அவன் முகம் பாராமல் திரும்பி நின்று கொண்டு.. “உடம்புக்கு ஒன்றுமில்லை.. ந.. நன்றாகத் தான் இருக்கிறேன்..”என்று கூறி விட்டு சமையலறையை நோக்கி நடந்தாள்.. சோர்வுடன் நடப்பவளை யோசனையுடன் நோக்கிய ஆதி.. “மதி.. உடம்பு சரியில்லையென்றால்.. அம்மாவின் அறையிலிருக்கும்.. மாத்திரையை இரவு போகும் முன் எடுத்துக் கொண்டு செல்..”என்று கூற.. அவனைத் திரும்பிப் பாராமல் தலையாட்டியவள்.. விறுவிறுவென நடந்துச் சென்று விட்டாள்..

அதன் பின்.. மதுமதியைப் பற்றிய யோசனையில்.. அவன் ஆழ்ந்து விட.. அவன் யோசிப்பதைக் கண்டு அதைக் களைக்கும் விதமாக.. “அத்தான்... கேரம் விளையாடலாம்.. வாருங்கள்.. எனக்கு போர் அடிக்கிறது..”எனக் கூறி அவன் கையைப் பற்றி இழுத்துச் சென்றாள்..

காலி டிரேயை சமையலறையின் மேடையின் மீது வைத்த மதுமதிக்கு.. தோளும்,தோளும் உரசிக் கொள்ளும் இடைவெளியில்.. நெருக்கமாக அமர்ந்திருந்த இருவரையும் கண்டு.. கோபமும்,அழுகையும்,இயலாமையும் ஒரு சேர எழுந்தது.. தன் உணர்வுகள் எதையும் வெளிக் காட்ட முடியவில்லை என்பதை எண்ணுகையில் நெஞ்சம் தவித்தது.. எப்படி ஆதியிடம் சென்று அவனைத் தான் விரும்புவதாகக் கூறுவது..?, பத்தாம் வகுப்பிலிருந்து அவனை நேசித்துக் கொண்டிருக்கும் தான்.. எதற்காக அவனிடம் இது வரை தனது மனதை வெளிப் படுத்தியதில்லை...?

யோசித்துப் பார்த்தால்.. அவன் தனக்குச் சம்பளம் கொடுக்கும் முதலாளி என்கிற நினைப்பு தான் இதுவரை அவளைக் கூற விடாமல் தடுத்திருக்கிறது.. அப்படியானால்.. அவளால் தனது காதலை எவரிடமும் வெளிப்படுத்த முடியாது என்ற உண்மையை அவள் மனம் அறிந்து தான் இருக்கிறது.. ஆனால் அதைப் பற்றி எண்ணுவதை அப்படியே தவிர்த்து விட்டு.. ஆதித்யனின் அருகாமையை ரசித்துக் கொண்டு அவனுடனே வலம் வந்து கொண்டிருக்கின்றது..

இது தான் உண்மை! இது தான் நடப்பு! அவனிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கி.. தங்களது வயிற்றை நிரப்பிக் கொண்டிருக்கும்.. தான்... அவன் வீட்டில்

வேலையாளாகிய தான்.. தனது எஜமானனையே காதலிப்பதும்.. அவனை அடைய நினைப்பதும்.. எவ்வளவு பெரிய அபத்தம்..?, நடக்காத ஒரு விசயத்தை இத்தனை நாட்களாக நினைத்துக் கொண்டு கனவுலகத்தில் வாழ்திருக்கிறாளே.. ஒரு வருடமா.. இரண்டு வருடமா..?., விவரம் புரிய ஆரம்பித்த வயதிலிருந்தே.. அவனை மட்டுமே கவனித்து.. பருவம் வந்த பின்.. அந்த உணர்வு காதலாக மாறி.. எவ்வளவு அழகான நேசம்.. எஜமானி,வேலைக்காரன் என்கிற வேறுபாட்டினால் சிதைந்து போனதே!

அவன் காட்டிய அன்பும்,அக்கறையும் வெறும் இரக்கத்தினால் விளைந்தது... என்பதை நினைத்து.. நினைத்து.. அழுகையில் குமுறியவள்.... “மதி..”என்ற.. குமரியின் அழைப்பை உணர்ந்து... கண்களைத் துடைத்துக் கொண்டு.. “இதோ வருகிறேன்..”என்று கூறி ஓடினாள்..

“என்ன குமரிம்மா...?”என்றவளிடம்.. “கால் வலி அதிகமாக இருப்பது போல் தோன்றுகிறது.. தைலம் தேய்த்து விடுகிறாயாமா..?”என்று அவர் வினவ.. “இதோ மருந்து எடுத்துக் கொண்டு வருகிறேன்..”என்று ஓடிச் சென்றவள்.. மருந்தை எடுத்துக் கொண்டு வந்து.. அவர் காலில் தடவத் தொடங்கினாள்.. கண் மூடிச் சாய்ந்திருந்தவரை.. “அண்ணி...”என்றழைத்துக் கொண்டு மீனாம்பாள் உள்ளே நுழைந்தார்.

“வா.. மீனாம்பா..”என வரவேற்று அமரச் செய்தவரிடம்... “அண்ணி.. உங்களிடம் ஒரு முக்கியமான விசயத்தைப் பேசத் தான் வந்திருக்கிறேன்..”என்று நிறுத்தியவர் தொடர்ந்து.. “நான் ஆதி,சித்ராவின் கல்யாணத்தைப் பற்றித் தான்...”என்று கூற.. மினுக்கென.. கண்ணீர் எட்டிப் பார்த்தது மதுமதிக்கு.. சமாளித்துக் கொன்று அமர்ந்திருந்தாள்..

“அண்ணி.. சித்ராவிற்கு சிறு வயதாக இருந்த போதே.. இது பற்றி.. நான் அண்ணனிடம் பேசியிருக்கிறேன்.. அவருக்கும் கூடச் சம்மதம் தான்.. பிள்ளைகள் வளரட்டும் மீனா.. அவர்களது விருப்பம் அறிந்து நடந்து கொள்வோமென்று.. கூறியிருந்தார்.. இப்போது.. அவர்களிருவரும் பழகுவதைப் பார்த்தால்.. இருவருக்குமே சம்மதம் என்று தான் தெரிகிறது.. என்ன இருந்தாலும்.. அத்தை மகள்.. என்றால் உரிமைத் தன்னாலே வரத் தானே செய்யும்..?,நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அண்ணி.. திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்..?”என்று அவர் வினவ...

தொண்டையைச் செறுமிய குமரி.. “நீ சொல்வது சரிதான்.. மீனா.. இருவரும் நெருக்கமாக.. விருப்பத்துடன் பழகுவது போலத் தான் தெரிகிறது.. எனக்கும் வெளியிடத்தில் பெண் எடுக்க விருப்பமில்லை.. லேகா அவனுக்கு முறைப் பெண்.. அவன் விருப்பப்பட்டால்.. லேகாவையே அவனுக்குத் திருமணம் செய்து வைப்பதில்.. எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை..”என்று

கூறிய குமரி.. தொடர்ந்து.. “நாளைக் காலை இருவரிடமும்.. அவர்களது சம்மதத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம்..”என்று முடிக்க.. “உங்களுக்குச் சம்மதம் என்பதில்.. எனக்கு மிக மிக மகிழ்ச்சி அண்ணி.. பிள்ளைகள் நாளை என்ன சொல்கிறார்கள் என்பதைப் பொறுத்து முடிவெடுப்போம்..”என்று கூறி விட்டு எழுந்து சென்றார் அவர்..

குமரியின் காலைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்த மதுமதிக்கு.. மீனாம்பாள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும்.,.. ஆயிரம் தணல் மூட்டைகளைத் தலையில் கொட்டியது போல்.. எரிந்தது... தலையை சுற்றிக் கொண்டு வந்து.. மயக்கம் வந்து விடும் போலிருந்தது.. தான் உயிராக நேசித்த ஒருவனுக்குத் தன் முன்னேயே திருமணமா...! இப்படியொரு கொடுமைய அனுபவிக்க.. என்ன பாவம் செய்தேன்.. ஆண்டவா..! என்று கண் மூடி வேதனையில் ஆழ்ந்தவளை குமரியின் குரல்.. மேலும்.. எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றியது போல்.. ஆனது..

“மதி.. நம் ஆதிக்கு.. லேகா மிகப் பொருத்தமாக இருப்பாளல்லவா..?, அவனது உயரத்திற்கு.. அவள் உயரம் வெகுவாகப் பொருந்திப் போகும்.. இருவரும்.. பொருத்தமான ஜோடியாக இருப்பார்கள் தானே..?, நாளை ஆதியிடம் நேரடியாகவே விசயத்தைக் கேட்டு விட வேண்டியது தான்.. மீனாம்பாள்.. ஆதி அப்பா இருந்த காலத்திலிருந்தே.. இந்த யோசனையைக் கூறிக் கொண்டிருக்கிறாள்.. ஆதிக்குப்பிடித்து விட்டதென்றால்.. சம்மதம் கூறி விட வேண்டியது தான்...”என்று கூறியவர்.. அவளிடமிருந்து பதிலற்றுப்போக.. “மதி..”என்று மீண்டும் அழைத்தார்.

அரும்பாடு பட்டு கண்ணீரைக் கட்டுப் படுத்திக் கொண்டிருந்த மதி.. அதற்கு மேல் தாங்காது என்பதை உணர்ந்து.. “எ..எனக்குக் கொ..கொஞ்சம்.. தலைவலியாக இருக்கிறது குமரிம்மா.. நான் செல்லட்டுமா..?”என்று வினவ.. “அடக் கழுதை.. ஆதி.. அப்போது கேட்டதற்கு... ஒன்றுமில்லையென்று சமாளித்தாயே.. உடம்பு சரியில்லாமல் உன்னை யார் அவ்வளை வேலை பார்க்கச் சொன்னது,,..?, நாளை அதிகாலைப் பனியில் நடந்து வரக் கூடாது.. சரியா..?, வீட்டிற்குச் சென்று நன்றாக ஓய்வெடு..”என்று கூறி அனுப்பி வைத்தார்..

குமரி கூறியதையும், அவள் வெளியே செல்வதையும் கண்ட படியே அன்னையின் அறைக்குள் நுழைந்த ஆதித்யன்... “மதிக்குத் தலைவலியா அம்மா..?, மாத்திரை ஏதும் எடுத்துச் செல்கிறாளா..?”என்று வினவினான்... “இல்லை ஆதி.. அவள் எடுத்துச் செல்லவில்லை..”என்று அவர் கூறியதும் தானே எடுத்துக் கொண்டு அவள் பின்னே சென்றான் ஆதித்யன்..

கண்களைத் துடைத்தபடி.. சோர்வுடன் நடந்து கொண்டிருந்த மதுமதி.. ஆதியின் “மதி...”என்ற அழைப்பில்.. நின்றாள்.. அவன் முகம் பார்க்கவோ.. அவனது அருகாமையைத் தாங்கிக் கொள்ளவோ தெம்பில்லாததால்.. இவன் எதற்காக அழைக்கிறான்.. என்று உதட்டைக் கடித்த படி.. நின்றிருந்தவளின் அருகே வந்தவன்.. “உனக்குத் தலைவலி என்று அம்மா கூறினார்கள்.. மாத்திரை எதுவும் எடுத்துக் கொள்ளாமல் செல்கிறாயா மதி..?, இது என்ன..?, என் சொல் பேச்சுக் கேட்காமல்.. உன் போக்கில் செல்கிறாய்..?”என்று வினவினான்..

ஆமாம்.. பிடிக்கிறதோ.. பிடிக்கவில்லையோ.. அவன் கூறி விட்டால்.. அவள் எதையும் நிறைவேற்றி விடுவாள்.. அவன் சொல்வதைச் செய்கையில்.. அப்போது.. அவளுக்கு உற்சாகமும்,மகிழ்ச்சியும் நிறைந்திருந்தது... ஆனால் இப்போது அப்படியல்லவே...!

அவள் பதிலேதும் கூறாமல்.. அமைதியுடன் நிற்பதைக் கண்டவன்.. “சரி, என்னவாயிற்று என்று இனி நான் கேட்க மாட்டேன்.. நான் கேட்டாலும்... நீ சொல்லப் போவதில்லை.. இந்த மாத்திரையையேனும்.. வாங்கிக் கொண்டு செல்..”என்று அவள் முன்னே நீட்டினான்.. அவள் அசையாமல் நிற்பதைக் கண்டு.. “என்ன மதி.....?”என்று அழுத்தமாகக் கூறியவன்.. அவள் கையைப் பற்றி... மாத்திரைகளைத் திணித்தான். “நாளைக் காலைப் பனியில் நடக்க வேண்டாம்.. சரியா..?”என்றவன்.. “பார்த்துப் போ..”எனக் கூறி அவளது பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே சென்று விட்டான்...

அவனது அன்பை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல்.. தவிர்க்கவும் முடியாமல்.. திண்டாடிய மதுமதி.. அன்றைய இரவுத் தன் தூக்கத்தைத் தொலைத்தாள்.. மறு நாள் காலை.. அவனது மாளிகையில் கால் எடுத்து வைக்கும் போதே.. இன்று ஆதித்யன்.. அவனது திருமணத்திற்கு ஒப்புதல் தெரிவிக்கப் போகும் நாள்.. என்று மனம் கூறியது...

காலை உணவை அனைவரின் தட்டிலும் பரிமாறியபடி.. நின்று கொண்டிருந்தவள்... ஆதித்யனின் பார்வை தன்னைத் துளைப்பதை உணர்ந்து.. மெல்ல நிமிர்ந்து அவன் முகம் நோக்கினாள்.. தலை வலி எப்படியிருக்கிறது.. என்று அவன் சைகையில் வினவ.. “பரவாயில்லை...”என்று முணுமுணுத்து விட்டு விலகிச் சென்றாள் அவள்.. அடுக்களை வாயிலில் நின்று கொண்டு அவர்கள் உண்பதைக் கவனித்துக் கொண்டு நின்றாள்...

சிறிது நேரத்தில்.. மகனிடம்.. லேகாவைத் திருமணம் செய்து கொள்வது பற்றி விசாரித்தார் குமரி.. “ஆதி.. எனக்கும்,மீனா அத்தைக்கும்.. உங்கள் இருவரது திருமணத்தை விரைவில் முடிக்க வேண்டுமென்று ஆசை.. உன் அப்பா காலத்திலேயே.. இரண்டு குடும்பங்களும்.. இந்தத் திருமணத்திற்கான தங்களது விருப்பத்தை உன் அப்பாவிடம் தெரிவித்தோம்.. உங்கள் இருவருக்கும்

விருப்பம் என்றால்.. அடுத்து நடக்கப் போகும் நிகழ்வுகளைத் தீர்மானிப்போம்..” என்று கூறினார்...

லேகா தன் முகத்தை ஓர் எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு சிரிப்பு வந்தாலும் அடக்கி.. “இவளைத் திருமணம் செய்து கொள்வதா...?”என்று யோசிப்பது போல் பாவனை செய்தவன்.. அவலை மேலும்,கீழும் உற்றுப் பார்க்க.. அவன் பார்வையில் பொறுமை இழந்தவள்.. “அத்தான்.. மலை உச்சி.. ஞாபகம் இருக்கட்டும்... ஒப்புக் கொள்ளவில்லையென்றால்.. தள்ளி விட்டு விடுவேன்..”என்று மிரட்ட.. வாய் விட்டுச் சிரித்தவன்... அன்னையிடம்.. “இந்த வாயாடியைத் திருமணம் செய்து கொள்வதில்.. எனக்குச் சம்மதம் தான் அம்மா..”என்று கூற.. அனைவரும் மகிழ்வுற்றனர்.. ஒவ்வொருவரின் மகிழ்ச்சிக்குப் பின்னே.. வேறு வேறு காரணங்கள் இருந்தாலும்.. அனைவரும் ஒன்று கூடி அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.. “மதி.. அந்தப் பாயாசத்தைக் கொண்டு வாம்மா.. சந்தோசச் செய்தி சொல்லியிருக்கிறான் ஆதி.. அவனுக்கு இனிப்பு கொடுக்கலாம்....”என்று கூவ..

அங்கே நடப்பவை அனைத்தையும் வலியுடன் பார்த்துக் கொண்டிருந்த மதி... “இதோ.. எடுத்து வருகிறேன்..”என்று ஓடியவள்.. சுய நினைவற்று.. சுடு பாத்திரத்தை.. துணி கொண்டு தூக்காமல்.. வெறும் கையால்.. தூக்கி விட.. கொதிக்கும் சூட்டை உணரத் தொடங்கியதும்.. கை தன்னாலேயே பாத்திரத்தைக் கீழே விட்டது.. சூடு பாயாசம்.. அவள் கைகள் முழுதிலும் பட்டு விட.. வலியில்.. கண் சொருகியது அவளுக்கு...

சத்தம் கேட்டு உள்ளே வந்த மல்லி.. அவளது நிலையைக் கண்டு விட்டு.. சத்தமிட.. “சத்தம் போடாதே மல்லி..”என்று அவள் அடக்க முயல்கையில்.. “என்னவாயிற்று...?”என்றபடி அனைவரும் அடுக்களைக்குள் நுழைந்தனர்.. அவள் கை முழுதும் சுடு பாயாசம் பட்டதில்.. வெந்து போய் இருக்க.. அதைக் கண்டு பதறி.. ஆதியும்,குமரியும் அருகே வந்தனர்..

“கவனமாக இருக்க வேண்டாமா மதி.. உடம்பு சரியில்லையென்றால் வேலை பார்க்காதே என்று.. எத்தனை முறை கூறியிருக்கிறேன்..?”என்று கடிந்த படி ஆதி அவள் காயத்திற்கு முதல் சிகிச்சை கொடுக்க.. அவள் குமரிம்மாவிடம்.. “சா...சாரி குமரிம்மா.. நீங்கள் இனிப்பு கொடுக்க அழைக்கும் வேளையில்.. நா.. நான் இப்படிக் கையில் ஊற்றிக் கொண்டேன்..”என்று மன்னிப்பு கோர..

“இப்போது அதுவா முக்கியம் மதுமதி..?”என்று கோபமாகக் கூறிய ஆதி.. அவளை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தான்... மருத்துவமனையில் அவள் காயத்திற்கு மருந்திட்டதும் அவளை அழைத்துக் கொண்டு அவள் வீட்டில் இறக்கி விட்டான்... “டாக்டர் கூறியது அனைத்தும் நினைவிருக்கிறது அல்லவா...?, மருந்து மாத்திரைகளை ஒழுங்காகச் சாப்பிடு..

வேலை பார்க்கிறேனென்று.. உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே.. நன்றாக ஓய்வெடுக்க வேண்டும்.. சரியா..?"என்று கூறினான்....

அவள் பதிலேதும் பேசாமல் அமைதியாக நிற்பதைக் கண்டு.. "என்னவாயிற்று 2 நாட்களாக உனக்கு..?, நான் கேட்கும் எதற்கும் சரியாக பதிலளிப்பதே இல்லை.. பித்து பிடித்தாற் போல்.. திரிந்து கொண்டிருக்கிறாய்..?, என்னவென்று சொல்லவும் இல்லை..,ம்..?"என்று வினவியவன்.. அவள் அதற்கும் தலை குனிந்து அமைதியாக நிற்பதைக் கண்டு.. கோபமுற்று... அவள் நாடியைப் பற்றி நிமிர்த்தித் தன் முகம் பார்க்கச் செய்து... "என்ன தான் செய்கிறது உனக்கு..?" என்று வினவ..
அவன் நாடியைப் பற்றி.. கோபமாக வினவியதில்.. பயந்து.. "வ...வலிக்கிறது.." என்று கண்ணீருடன் கூற.. பாவமாக அவளை நோக்கியவன்.. அவள் தலை கோதி.. "டாக்டர் கொடுத்த மாத்திரையெல்லாம் சாப்பிட்டால்.. வலி போய் விடும் மதிம்மா.. சென்று ஓய்வெடு.. போ.."என்று அவளை அனுப்பி வைத்தான்..

அவன் சென்றதும்.. மனதில் ஏற்பட்ட வலியும், காயத்தால் ஏற்பட்ட வலியும் உயிரை எடுக்க.. தலையணையில் முகம் புதைத்து அழுது தீர்த்தாள்.. அவளது கைக் காயத்தைப் பற்றி.. அன்பரசுவிடம் ஆதி தெரிவிக்க.. உடனே அவர் பதறி மகளைக் காணப் புறப்பட்டார்... "என்னவாயிற்று குட்டிமா..?"என்று பதறியவரைச் சமாதானப் படுத்தி.. "சின்னக் காயம் தான் அப்பா.. ஆறி விடும்.."என்று கூறினாள்..

அதன் பின் இரண்டு நாட்கள்.. அவர் உடனிருந்து அவளைக் கவனித்துக் கொள்ள.. குமரிம்மாவின் வீட்டுப் பக்கம் போகாமல்.. தன் வீட்டிலேயே இருந்து விட்டாள் மதுமதி.. ஆதித்யன் தன்னைக் காண வரும் போதெல்லாம்.. உறங்குவது போல் நடித்துச் சமாளித்தாள்.. அவனது முகத்தை எதிர் நோக்கும் தைரியமற்றுப் போனது அவளுக்கு...

அன்பரசு அவ்வப்போது.. "புதுப்பொன்னு.. எஸ்டேட்டிற்கு வந்திருந்தாள்.. சின்னைய்யாவும்,அந்தப் பெண்ணும்.. தினமும் கை கோர்த்த படி உலா வருவது.. அப்படியே அவரது அப்பா,அம்மாவைக் காண்பது போல் இருக்கிறது.." என்று கூற.. அவளோ இதையெல்லாம் கேட்பதற்குத் தான் கடவுள் தனக்குக் கேட்கும் திறனைப் படைத்திருக்கிறாரா? என்று தவித்துப் போய் விடுவாள்...

அடுத்த நான்கு நாட்களும் இப்படியே செல்ல.. ஐந்தாம் நாள் தந்தை வேலைக்குக் கிளம்பியதும்.. தான் எப்போதும் செல்லும் அருவிக்குச் சென்றாள் மதுமதி.. சுற்றி நடக்கும் ஒவ்வொரு விசயங்களும்.. தன் சந்தோசங்கள் அனைத்தையும் பறித்துத் துக்கக் கடலில் ஆழ்த்தி விட்டதை எண்ணி... கொஞ்சமேனும் நிம்மதி கிடைக்கும் என்பதற்காகத் தான் அவள் அருவியை

நாடிச் சென்றதே.. ஆனால் அங்கே சென்றவளுக்கு.. வேறு விதமான எண்ணங்கள் தோன்றியது...

அருவிக்கு வந்து சேர்ந்து.. எப்போதும் அமரும்... அந்தப் பாறை நுனியில் அமர்ந்தவள்.. சலனமற்று ஓடும் தண்ணீரை வேடிக்கை பார்த்தபடி வெகு நேரம் அமர்ந்திருந்தாள்.. முன்பொரு நாள்.. இதே போல்.. அவள் தண்ணீரின் அருகே அமர்ந்திருந்த போது.. ஆதித்யன் வந்ததும்.. தன்னைச் சென்னைக் கல்லூரியில் சேர்ந்து கொள்ளும் படி வற்புறுத்தியதும்.. தான் மறுத்து அழுததும்.. தன்னைச் சமாதானப் படுத்தியதும்.. நினைவிற்கு வந்தது..

அன்று தோள் பற்றித் தன் கண்ணீரைத் துடைத்து.. எவ்வளவு பாசமாக.. அக்கறையுடன் நடந்து கொண்டான்..? அவையனைத்தும்.. பரிதாபத்தினால்.. இரக்கத்தினால்.. ஏற்பட்டது மட்டுமே..! காதலால் ஏற்பட்டதல்ல!! இது நாள் வரை அனைவருக்காகவும்.. அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்துச் சிதற.. கத்தி கத்தி.. அழுது தீர்த்தாள்..

அன்று அவனோடு பேசிய போது.. அருவியில் விழுந்து தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறினாளே.. அப்போதிருந்த மதுமதிக்கு.. அன்று கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாது தான்.. அன்று அப்படிக் குதிப்பதற்கு.. தைரியமும் நிச்சயம் இருந்திருக்காது.. ஆனால் இந்த மதுமதி அப்படியல்லவே...!,

கல்யாணத்திற்குச் சம்மதம் என்று அவன் வாய் வார்த்தையால் கூறியதே.. உயிர் போகுமளவிற்கு வலியைக் கொடுக்கிறதே..! இனி அவன் திருமணத்தை,.. அவன் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்வதை.... வேறு கண்டாக வேண்டுமா..?, அதையெல்லாம் காணும் தைரியம் தனக்கு உண்டா..?, அப்படியொரு நிலையை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லையே.. உண்மையயில் அதை எப்படி அனுபவிப்பது..?, வேண்டாம்.. இந்தத் துன்பம் வேண்டாம்...!

ஆதித்யனுக்குத் தன்னை ஒருத்தி இப்படிக் காதலிப்பது.. கடைசி வரை தெரியாத விசயமாகவே இருக்கட்டும்.. என்னைப் பற்றிய ரகசியங்கள்.. என்னுள்ளே புதைந்து போகட்டும்..."என்றெண்ணிக் கொண்டு.. தான் அமர்ந்திருந்த பாறையின் மீது ஏறி நின்றாள்.. இப்போது.. அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தத் துன்பம் தீர வேண்டுமானால்.. தற்கொலை செய்து கொண்டு உயிர் விடுவதைத் தவிர வேறு வழி இல்லை..!! பாறை மீதிருந்த கீழே ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரைக் குனிந்து நோக்கினாள்.. தண்ணீரின் வேகத்திற்குக் கண்டிப்பாக உள்ளே இழுத்துச் சென்று விடும்...

நான்கு நாட்களாக ஆதித்யன் எவ்வளவோ முயன்றும் மதுமதியைக் காணவோ.. அவளிடம் பேசவோ.. அவனால் முடியவில்லை.. அவன் செல்லும்

நேரமெல்லாம் அவள் உறங்குவதாகவே தெரிவித்தார் அன்பரசு.. ஓரளவு சரியாகி விட்ட பின்பும்.. அவள் அவனது மாளிகையின் பக்கம் வரவில்லை.. அன்னையிடம் விசாரித்தால் அவருக்கும் விவரம் தெரியவில்லை...

மதுமதியைப் பற்றி அவனிடம் விசாரிக்கச் சொன்னவர்.. அவனது திருமணத்தைப் பற்றியும் விசாரித்தார்.. உனக்கு இதி சம்மதம் தானே கண்ணா..?என்று வினவியவரிடம்.. "எப்படியும் யாரையேனும்.. ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ளத் தானே போகிறேன்.. அவள்.. உங்கள் அனைவரின் விருப்பத்துக்கும் ஏற்றவளாக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி தான்..எனக்குச் சம்மதம் தான் அம்மா.."என்று கூறி விட்டு நகர்ந்தான்...
அதன் பின் லேகாவைக் கூட்டிக் கொண்டு அந்தக் கிராமம் முழுதிலும் அலைந்து திரிந்தவன்.. கடைசியாக.. மதுமதி வந்து செல்லும் அருவிக்கு வருகை தந்திருந்தான்... தூரத்தில்.. பாறையின் மீது மதுமதி நின்றிருப்பதைக் கண்டு விட்டவன்.. "மதி அங்கே இருக்கிறாள் பார்.. வா.. செல்லலாம்.."என்று கூற.. லேகாவை முகத்தைச் சுருக்கி.. "அவள் தான் அங்கே இருக்கிறாளே.. நாம் வேறு புறம் செல்வோம்.."என்று கூற..

"உளறாதே லேகா.. அவள் கைக் காயத்தைப் பற்றி நான் அவளிடம் இன்னும் விசாரிக்கக் கூட இல்லை.. வா.. அவளைப் பார்த்து விட்டுப் போகலாம்.." என்றவன்.. அவளை நோக்கி நடந்தான்..

தற்கொலை செய்யும் எண்ணத்துடன் பாறை மீது ஏறி நின்ற.. மதுமதி.. கடவுளிடம் தன் கடைசி பிரார்த்தனையைத் தொடங்கினாள்.. இந்தப் பிறவிக்கான பயனை இது வரை அடையாமலேயே சாகப் போகிறேன் ஆண்டவா.?, என்னக் காரணத்திற்காக என்னை இந்த உலகுக்குக் கொடுத்தாயோ.. அதை நிறைவேற்றாமல் செல்கிறேன்.. என் தந்தை.. அவர்.. அவர் நீண்ட நாட்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று வேண்டியவளுக்குத் தந்தையை நினைத்துக் கண்ணீர் தேங்கியது...

அவள் ஒருத்திக்காக மட்டுமே.. உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர்! மதுமதி இல்லையென்று ஆனால்.. அவர் உயிருடன் இருப்பாரா..?, எத்தனை கஷ்டங்களை,துயரங்களை அவளுக்காகத் தாங்கிக் கொண்டு.. இத்தனை வருடங்களில் அவளை ஆளாக்கியிருப்பார்..?, அவரை விட்டு விட்டு.. அவள் உயிர் விடுவதா..?, முட்டாள்தனம்...!

ஆதித்யன் வாழும் இந்த ஊரில் இருக்க இஷ்டமில்லையென்றால்.. தந்தையை அழைத்துக் கொண்டு வேறு ஊருக்குச் செல்ல வேண்டியது தான்.. இதற்காக.. பெற்றெடுத்தத் தந்தையை மறந்து உயிரை விடத் துணிவதா..?, தன்னைப் பேணிக் காத்த தந்தைக்கு..இது வரை என்ன கைம்மாறி செய்திருக்கிறாள்.. செத்த பின்பும் கூட இந்தப் பாவம் சும்மா விடாது.. என்னை மன்னித்து

விடுங்கள் அப்பா.. இனி இப்படியொரு அறிவீனமான காரியத்தைச் செய்ய மாட்டேன்..! முதலில் இந்த இடத்தை விட்டு நகர வேண்டும்.. என்றெண்ணிக் கொண்டு அவள் திரும்ப எத்தனித்த வேளை... விதி சதி செய்து விட.. அவள் நின்றிருந்த பாறை வழுக்கி.. எதிர்பாராமல்.. தண்ணீருக்குள் விழுந்தாள் மதுமதி...

அவளைக் கண்டு அவளை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த ஆதித்யன் இந்தக் காட்சியைக் கண்டு... “நோ.. நோ.. மது... மதுமதி....”என்று கத்திக் கொண்டு... அவளை நோக்கி ஓடினான்.....



**என் வாழ்வின் ஆதாரமாய்**
**நான் எண்ணிக் கொண்டிருந்த**
**உயிரும்.. உணர்வற்றுப் போய்விட்டதே..!**
**இனி வாழ்ந்தென்ன பயன்..?**

## அத்தியாயம் – 6



**உன் காதலை யாசித்து..**
**உன் முன்னே மண்டியிட்டு..**
**அமர்ந்திருக்கிறேன்...!**
**என் விழிகளில் வழியும்..**
**ஒவ்வொரு துளிக் கண்ணீரும்..**
**என் நேசத்தின் ஆழத்தை..**
**உனக்கு உணர்த்தவில்லையா...?**

**ம**துமதி தண்ணீருக்குள் விழுந்து விட்ட மறுநொடி மின்னல் விரைவில் ஓடி வந்துத் தானும் நீருக்குள் குதித்தான் ஆதித்யன்.. வருங்காலக் கணவனுடன் ஊர் சுற்றிப் பார்ப்பதற்காக.. காலையிலிருந்து அவனைத் தொல்லை செய்து வெளியே அழைத்து வந்த லேகாவிற்கு... அருவியின் அருகில் மதுமதியைக் கண்டு விட்டு.. அருகில் சென்று அவளிடம் பேசியே ஆக வேண்டுமென்று அவன் கூறிய போதே உள்ளுக்குள் லேசாக எரியத் துவங்கி விட்டது..

அவனுடன் எரிச்சலுடனே நடந்து சென்றவள்.. மதுமதி பாறையிலிருந்து வழுக்கிக் கீழே விழுந்ததும்.. ஒரு நிமிடம் திகைத்துப் போனாள்.. ஆனால் அதை விட.. அவள் விழுந்ததைக் கண்டு ஆதித்யன் பதறியது தான் அவளது திகைப்பை அதிகரித்தது.. உடனிருப்பவளை மறந்து விட்டு.. அவன் அவளருகே ஓட.. உள்ளே விழுந்தவள்.. என்ன ஆனாள் என்பதையறியும் ஆவலில் அவளும் ஓடினாள்..

தண்ணீருக்குள்.. விழுந்த மதுமதி.. நீரின் வேகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டாள்.. மூச்சுக்குத் திணறி.. நீருக்கு மேலே வர முயன்றவள்.. முடியாமல் போக.. அப்பா... என்னை மன்னித்து விடுங்கள்... என்கிற கடைசி வாக்கியத்துடன்.. நீருக்குள் நினைவிழக்க ஆரம்பித்து விட்டாள்..

அவள் தண்ணீருக்குள்.. விழுந்த அடுத்த நொடியே ஆதித்யனும் குதித்து விட்டதால்.. அவளை மேலும் தண்ணீர் உள்ளே இழுத்துச் செல்வதற்குள்.. அவளைக் கண்டறிந்து விட்டான்.. அவளைத் தூக்கிச் சுமந்து கொண்டு வெளியே வந்தவனுக்கு.. பயமும்,பதற்றமும் ஒரு சேர எழுந்தது.. அவளைக்

கீழே கிடத்தி.. வயிற்றை அழுத்தி.. அவள் குடித்திருந்த நீரை வெளியேற்றியவன்.. கைகளையும், கால்களையும் பரபரவெனத் தேய்த்து சூடு பரப்பினான்.. "மது... மது..."என்று அவள் கன்னங்களைத் தட்டி.. அவளை சுய நினைவு அடைய வைக்க முயல.. அவளோ.. கண்கள் மூடி மயக்கத்திலேயே இருந்தாள்.. கண்களிலிருந்து கண்ணீர் கரகரவென வழிய.. அவள் நாடியையும்,சுவாசத்தையும் தொட்டுப் பார்த்தவனுக்கு.. ஒன்றும் புரியாமல் போக.. "மது... மது.. எழுந்திரு..."என்றபடி தனது முயற்சியை மீண்டும் தொடங்கினான்..

அவனது கண்ணீரும், குரலும்.. அவளை உலுக்கியதோ.. அல்லது.. அவனது ஸ்பரிசம் தந்த சூடு.. அவள் உடலில் பரவி விட்டதாலோ.. சிறிது நேரத்திலேயே.. கண் விழித்தாள் மதுமதி.. யாரைக் காணக் கூடாதென்ற எண்ணத்தில் அந்த ஊரை விட்டே சென்று விட வேண்டுமென்று முடிவு செய்தாளோ.... யாரை எண்ணி.. தன் உயிரையே விட்டு விடத் துணிந்தாளோ... அவனது மடியிலேயே படுத்துக் கொண்டு.. அவன் முகத்தை வெகு அருகில் காணும் பாக்கியம் கிடைத்ததில்.. மற்றவை அனைத்தும் மறைந்து போனது அவளுக்கு... அவளது ஆதித்யன் அவள் அருகில் இருக்கிறான்.. அவளது காதலன் அவளிடம் வந்து விட்டான்....

தான் இருக்கும் சூழலையும், இந்தச் சம்பவத்திற்கு முன் நடந்த அத்தனை விசயங்களும்.. ரப்பரால் அழிக்கப் பட்டது போல்.. நினைவில் நிற்காமல் போக.. அவனது கண்களில் வழிந்த கண்ணீரைக் கண்டு.. தனக்காக அவன் அழுகின்றான் என்கிற எண்ணம் தலைக்கேறிய அந்த நேரத்தில்.. அவனும் தன் ஜீவன் முழுதையும் வார்த்தையில் தேக்கி... "மது....."என்று அழைக்க.. மறு நொடி.. தேம்பலுடன்.. அவன் தோளை இறுக அணைத்து.. அவன் மார்பில் முகம் புதைத்தாள்...

பச்சிளங்குழந்தையாக.. தந்தைக்குப் பின் மறைந்து நின்று.. விரல் சூப்பியபடித் தன் வீட்டிற்குள்.. மதுமதி நுழைந்த அந்த நாள்.. நினைவிற்கு வந்து போனது ஆதித்யனுக்கு... அன்றிலிருந்து இன்று வரைத் தன் வீட்டில் ஒருத்தியாகவே மாறித் தன் அன்னைக்குச் சேவகம் செய்து கொண்டு.. தன் முன்னே.. பட்டாம் பூச்சியாய் திரிந்து கொண்டிருக்கும்.. இந்தக் கால் முளைத்த ரோஜா.. இன்றைய விபத்தில்.. உயிரற்றுப் போயிருந்தால்.. அந்த வலி.. நிச்சயம் அவன் வாழ்க்கை முழுதிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்...

ஏனோ.. தண்ணீரில் அவள் விழுந்த போது.. உள்ளே எழுந்த படபடப்பு.. அவள் கண் விழித்தப் பின்பும் சற்றும் குறையவில்லை ஆதித்யனுக்கு... தான் சரியான நேரத்தில் அங்கே வந்து சேர்ந்திருக்காவிட்டால்.. என்னவாகியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கையிலேயே... உள்ளம் பதறியது அவனுக்கு.. தன் மார்பில் தலை சாய்த்திருந்தவளை.. தன்னோடு சேர்த்து இறுக அணைத்தான்..

அவன் அணைப்பை உணர்ந்து மேலும் அவன் மார்பில் ஒண்டினாள் மதுமதி.. இருவரும் நடுங்கிய மனதை சமன் படுத்தும் முயற்சியில் ஈடு பட்டிருக்க.. அவர்களிருவரையும் கண்ட லேகாவிற்கு உடலோடு சேர்ந்து மனமும் எரிந்தது...

என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்..?, வீட்டில் வேலை செய்யும் ஒரு வேலைக்காரி.. தவறி விழுந்ததில்.. இவன் பதறிப் போகிறான்.. அவளும் கண் விழித்த மறு நொடி.. அவனை அணைத்துக் கொள்கிறாள்.. என்ன தான் நடக்கிறது இவர்களிருவருக்குள்ளும்...?, கோபத்தில்.. அவள்... "ஆதி.."என்று சற்று உரத்த குரலிலேயே அழைத்தாள்..

அவளது குரல் ஒலித்த மறு நொடி.. தான் இருக்கும் சூழ் நிலை உணர்ந்து பதறி அவனிடமிருந்து விலகினாள் மதுமதி.. அவன் மார்பில் சாய்ந்திருந்த அந்த இரண்டு நிமிடங்களில்... பிறவிப் பயனை அடைந்து விட்டதாகவேத் தோன்றியது அவளுக்கு.. சந்தோசமும்,துக்கமும் கை கோர்த்து மனதில் எழுந்த அந்தப் புது வித உணர்வை வெளிக் காட்டவும் முடியாமல்.. ஆதியின் முகத்தையோ... லேகாவின் முகத்தையோ.. நிமிர்ந்து பார்க்கவும் துணிவற்று வேறு புறம் திரும்பி நின்று கொண்டாள்...

தண்ணீரில் முழுதாக நனைந்து விட்டிருந்ததால்.. குளிர் காற்றின் வீரியம் தாங்க முடியாமல்.. அவளது உடல் நடுங்கத் தொடங்கியது.. லேகா அழைத்ததும் தன்னிடமிருந்து விலகியவளைத் தொடர்ந்து.. தானும் எழுந்தவன்.. அவள் உடல் நடுங்குவதையும்,கால்கள் தள்ளாடுவதையும் கண்டு... லேகா போர்த்தியிருந்த சால்வையை உறுவி.. அவளைப் போர்த்தியவன்.. குனிந்து அவளைத் தூக்கிக் கொண்டு காரை நோக்கி நடந்தான்..

"நா.. நான் நடக்க.. என்னால் நடக்க முடியும்..."என்று... இடையில் பதிந்த அவன் கரங்கள் தந்த கூச்சத்தில்.. அவள் தட்டுத் தடுமாறிக் கூற.. அவளை நோக்கித் தீப்பார்வை செலுத்தியவன்.. லேகாவிடம்.. "நீ முன்னே சென்று காரைத் திற.. சீக்கிரம்.. குளிர் தாங்க முடியாமல் நடுங்குகிறாள் பார்.."என்று கூற.. லேகா.. கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டாள்.. இவளுக்காகத் தன்னை ஏவுகிறானே.... என்று ஆத்திரம் வந்தாலும்.. மறைத்து விரைந்து சென்று காரைத் திறந்து வைத்தாள்..

காரின் பின் இருக்கையில் அவளைக் கிடத்தியவன்.. லேகாவை அவளருகே அமர வைத்து விட்டு.. வண்டியைச் செலுத்தினான்.. "நீ அருவியில் குளித்ததாக அங்கிளிடம் கூறிச் சமாளித்துக் கொள்கிறேன்... நீ வேறு எதையும் உளறிக் கொட்ட வேண்டாம்.. என்ன..?"என்று கேட்க.. அவன் குரலில் இருந்த அழுத்தமும், கோபமும் அவளைக் கிலி ஏற்றியது.. பதில் கூறாமல் தலையை

மட்டும் ஆட்டி வைத்தாள்.. காரின் முன் கண்ணாடி வழியாக அவள் முகத்தைக் கண்டவன்.. கோபப் பார்வை பார்க்க... எதற்காக கோபப் படுகிறான் என்பது புரியாமல்.. உதட்டைக் கடித்தபடி தலை குனிந்து அமர்ந்திருந்தாள் மதுமதி..

இருவரது பார்வைப் பரிமாற்றத்தையும் குறிப்பெடுத்துக் கொண்ட லேகா பொறிந்தபடி அமர்ந்திருக்க... அதற்குள் மதுமதியின் வீடும் வந்து விட்டது.. அவர்களின் அதிர்ஷ்டம் அன்பரசு வீடு வந்து சேரவில்லை... நிம்மதிப் பெருமூச்சை வெளிவிட்ட ஆதித்யன்.. “உள்ளே சென்று சீக்கிரம் உடை மாற்று....”என்றபடியே வண்டியை விட்டுக் கீழே இறங்கினான்.. மதி உள்ளே சென்ற பின்பு.. சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அவள் வீட்டு வாசலில் இருந்த வேப்ப மரத்தின் கீழ் சில நிமிடங்கள் நின்றிருந்தவன்..

லேகா காரை விட்டு இறங்காததைக் கண்டு அருகே வந்து விசாரித்தான்.. “நீ உள்ளே செல்லவில்லையா..?”என்று வினவியவனிடம்.. “ம்க்கும்..”என்று நொடித்துக் கொண்டவள்.. மதுமதியின் ஓட்டு வீட்டை ஏளனத்துடன் நோக்கி.. “நீங்கள் வேண்டுமானால் சென்று விட்டு வாருங்கள்.. நான் இங்கேயே அமர்ந்திருக்கிறேன்...”என்று கூறினாள்..

மதுமதியையும்,அவளுக்கு அன்று நேர்ந்த விபத்தையும்,இந்த சேதி அன்பரசுவுக்குத் தெரிந்தால்.. அவர் எப்படித் துடித்துப் போவார் என்பதைப் பற்றியும் மட்டுமே.. சிந்தித்துக் கொண்டிருந்த ஆதித்யனுக்கு.. லேகாவின் முகச் சுழிப்பும்.. அவளது குரலில் இருந்த வேறுபாடும்.. புத்திக்கு எட்டவேயில்லை.. அவளுக்குப் பதில் கூறாமல் மதுமதியைக் காண்பதற்காக அவள் வீட்டுக்குள் நுழைந்தான்..

அணிந்திருந்த தாவணியை மாற்றியிருந்தவள்.. சால்வையைப் போர்த்திக் கொண்டு.. ஜன்னல் வழியே இருளை வெறித்த படி.. நின்றிருந்தாள்.. அவன் வருகை எதிர்பார்த்தது தான் என்பதால்.. அவள் அசையாமல் நிற்க... அவளது அமைதி ஏற்படுத்திய எரிச்சலில்.. “எத்தனை முறை... எத்தனை முறை கூறியிருப்பேன்...?, அந்த அருவிக்குச் செல்லாதே என்று...?,வழுக்குப் பாறைகளும்,விஷச் செடிகளும் நிறைந்த இடம் என்பதால் தான் அங்கே செல்லாதே என்றேன்.. நான் மட்டும் அங்கே வராமல் போயிருந்தால்.. என்னவாகியிருக்கும்..?,உயிரைப் பற்றிய பயமும்,அக்கறையும் கொஞ்சம் கூடக் கிடையாதா உனக்கு..?,”

“அப்படி என்ன அசட்டையாக இருக்கிறாய்..?,அது போன்ற இடங்களுக்கெல்லாம் எந்த தைரியத்தில் தனியாகச் செல்கிறாய்..?, விபரீதமாக ஏதேனும் நடந்திருந்தால்.. அங்கிள் எப்படித் தாங்கியிருப்பார்..?, உனக்காக மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர்.. தன் சுகம் பாராமல்..

உனக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர்... இந்த விசயம் தெரிந்தால்.. துடித்துப் போவார்... இனியொரு முறை நீ அருவிக்குச் சென்றாயென்று தெரிந்தால்... தோலை உரித்து விடுவேன்..”என்று மிரட்ட...

ஓங்கி ஒலித்த அவனது குரலும்,வார்த்தைகளும் எரிச்சலைத் தர.. ஜன்னல் கம்பியை அழுந்தப் பிடித்து பேச்சற்று நின்றிருந்தாள்.. இவனுக்கு எதற்காக இந்த அன்பும்,அக்கறையும்...?, வேலைக்காரியை வேலைக்காரியாக மட்டுமே நடத்தியிருந்தால்.. இப்படியொரு உணர்வு தனக்குள் தோன்றியிருக்குமா..?, நான் எங்கே விழுந்தால் என்ன... எங்கே செத்தால் என்ன.. இவனுக்கு என்ன வந்து விட்டது.. என்றெண்ணியவளுக்குக் கண் விழித்ததும்.. அவன் முகத்தில் கண்ட கண்ணீர் நினைவிற்கு வந்தது..

இவனை வெறுத்து ஒதுக்கவும் முடியவில்லை என்றெண்ணியவளுக்குத் தன் இயலாமையை நினைத்துத் தன் மீதே கோபம் வந்தது.. அவள் மட்டுமல்ல. அந்த ஊரில் யார் தண்ணீருக்குள் விழுந்திருந்தாலும் அவன் பதறிப் போய் தான் உதவி புரிந்திருப்பான்.. அவனது தாத்தா காலத்திருந்தே அவன் குடும்பத்தாருக்கு.. அந்த ஊர் மக்களின் மீதிருந்த அன்பு அது.. ஆதலால்.. தனக்காகத் தான் அவன் கண்ணீர் வடித்தான் என்று பேராசை பட்டுக் கொள்ள முடியாது...

ஆனால் நேசம் கொண்ட மனது.. அந்தக் கண்ணீரையும்,அதைத் தொடர்ந்த அவனது அணைப்பையும் எண்ணி எண்ணிப் பூரிக்கிறதே.. இதை என்ன சொல்லி அடக்குவது..?, தறி கெட்டு ஓடிக் கொண்டிருக்கும் அவளது குதிரை மனதை.. வாசலில் ஆதித்யனின் வருங்கால மனைவி காத்துக் கொண்டிருக்கிறாள் மதி.. மனதைக் கட்டுக்குள் கொண்டு வா.. எனக் கண் மூடி முயற்சியில் ஈடுபட்டாள்..

வெகு நேரமாக அவளிடமிருந்து பதில் வராது போக.. அவள் கைப் பற்றித் தன் புறம் திருப்பினான் ஆதித்யன்.. “நான் பேசுவதற்கு பதில் கூறாமல் இப்படியே நின்றிருந்தால் என்ன அர்த்தம் மதி...?,இனி அருவிக்குப் போக மாட்டேன்.. ஆபத்தில் சிக்கிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லித் தொலையேன்.. பிடித்து வைத்த பிள்ளையாரைப் போல்.. உணர்ச்சியற்ற முகத்தை பதிலாகக் காட்டினால்.. நான் என்ன தான் எண்ணிக் கொள்ளட்டும்...?,”

“நீ வழுக்கி விழுந்த அந்த நொடி நான் எப்படிப் பதறிப் போனேன் தெரியுமா..?, அங்கிள் மட்டுமே என் கண்களுக்குள் வந்து போனார்.. நீ ஒரு நாள் சாப்பிடாமல் கல்லூரிக்குச் சென்று விட்டால்.. வேலையின் போது கூட அதைப் பற்றியே புலம்புபவர் அவர்.. உனக்கு ஏதேனும் ஆகி விட்டால்... அவருக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் நான் எப்படித் தவித்துப் போனேன் தெரியுமா...?”என்று அவன் உணர்ச்சி நிறைந்த குரலில் கூற..

மதிக்குத் தான் சை என்றாகிப் போனது.. ஆக அவன் விழுந்தடித்துக் கொண்டு முழு வேகத்தில் வந்து காப்பாற்றியது.. அவளுக்காக அல்ல.. அவளுக்கு ஏதேனும் நடந்து விட்டால்.. அன்பரசுவிடம் என்ன பதில் சொல்வதென்று தான் கவலை.. ஏளனத்துடன் உதட்டைச் சுழித்தவளின் முகத்தைக் கண்ட ஆதித்யன்.. என்னவென்று கேள்வியாக நோக்க.. வெளிப்படையாகவே எரிச்சலைக் காட்டினாள் மதுமதி...

“எனக்குத் தான் ஒன்றுமாகவில்லையே.. இன்னும் உயிரோடு தானே இருக்கிறேன்...?”என்று கூறியவள் அவனிடமிருந்து கையை உறுவிக் கொண்டு விலகிச் செல்ல.. முதன்முறையாக அவள் தன்னை எடுத்தெறிந்து பேசியதைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விட்டான் ஆதித்யன்.. இவளுக்கு என்ன தான் பிரச்சனை என்றெண்ணிக் கொண்டவன்.. அவள் சமைலறைக்குள் நுழைந்ததைக் கண்டுத் தானும் அவள் பின்னேயே சென்றான்..

“என்ன உளறுகிறாய் மதி...?, நான் என்ன கேட்கிறேன்.. நீ என்ன பதில் சொல்கிறாய்...?”என்று அவன் பொறுமையற்று வினவ.. தன் போக்கில்.. பாத்திரத்தை கையில் எடுத்துக் கொண்டவள்.. “நான் சமையல் செய்ய வேண்டும்.. அப்பா வந்து விடுவார்...”என்று உணர்ச்சியற்றக் குரலில் தெரிவிக்க முகம் கருத்து விட்டது ஆதித்யனுக்கு..

“அதாவது.. என்னை வெளியே போ என்று மறைமுகமாகச் சொல்கிறாய்.. அப்படித் தானே...?”என்று கேட்க.. அவள் பதிலேதும் சொல்லாமல்.. தன் வேலையில் ஈடுபட்டாள்.. கோபமாக அவளை நோக்கியவன் விறுவிறுவென நடந்து சென்று விட.... அவன் செல்வதைக் கண்டவளுக்கு நெஞ்சைப் பிசைந்தது.. அழுகை வந்தது..

பின்னே... பின்னே எப்படித் தான் அவனைத் தவிர்ப்பது...?, கொஞ்சமும் காதல் கலந்திராத அவனது அன்பை அனுபவிக்கப் பிடிக்காமல் தானே அவள் விலகப் பார்க்கிறாள்...?, இவையனைத்தும் என்றேனும் அவனுக்குப் புரியுமா..?, மதுமதி என்ற ஒருத்தி.. அவனை உயிருக்கு உயிராக நேசித்து.. அவன் இல்லாத வாழ்வு எதற்கு என்று உயிர் விடத் துணிந்த கதை அவனுக்கு என்றேனும் தெரிய வருமா..?,

எவரிடமும் வெளிப் படுத்த முடியாமல்.... நெஞ்சில் அடைத்து வைத்திருந்த காதலின் அழுத்தம்..... தாங்க முடியாமல் போக.. சரிந்து கீழே அமர்ந்தவள்.. சத்தமில்லாமல் குலுங்கிக் குலுங்கி அழுது தீர்த்தாள்..

மதுமதி தந்த எரிச்சலில் கோபமாகக் காரைத் திறந்து வண்டியை வீடு நோக்கிச் செலுத்தியவன்.. லேகா என்று ஒருத்தி காரின் பின்னே அமர்ந்திருப்பதை சுத்தமாக மறந்தே போனான்... தனது நினைப்பே அவனுக்கு

இல்லையென்பதை நினைத்து ஆத்திரமானது அவளுக்கு.. இவனுக்கும் மதுமதிக்கும் இடையே ஏதோ இருக்கிறது.. என்னவென்று கண்டுபிடிக்கிறேன்.. கண்டு பிடித்து அந்த வேலைக்காரியை வீட்டை விட்டுத் துரத்துகிறேன் என்று தீர்மானித்துக் கொண்டவள்.. அமைதியாக அமர்திருந்தாள்..

வீடு வந்த பின்பும் அவளைக் கண்டு கொள்ளாமல் அவன் தன் அறைக்குச் சென்று விட.. கட்டுக் கடங்காமல் பொங்கிய கோபத்தை... பல்லைக் கடித்து அடக்கியவள்.. தானும் கார் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.. அவள் நுழைந்ததும்.. “என்னம்மா.. மாப்பிள்ளையுடன் நன்றாக ஊர் சுற்றிப் பார்த்தாயா...?”என்று வினவிய மீனாம்பாளை எரிச்சலுடன் நோக்கியவள்.. “அம்மா.. நீ வேறு என் எரிச்சலை அதிகப் படுத்தாதே..”என்று கோபமாகக் கூறியவள்.. தன் அறைக்குச் சென்று விட்டாள்...

“இவள் கோபத்தைக் காட்டித் திருமணத்தை நடக்க விடாமல் செய்து விடப் போகிறாள்.. பின் நம் ஆசை நிறைவேறுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய் விடும்.. “என்று மீனாம்பாள் கணவனிடம் புலம்ப.. “கல்யாணத்தை நிறுத்தும் அளவிற்கு உன் பெண் முட்டாள் அல்ல.. வீணாகப் புலம்பாதே.. யார் காதிலேனும் விழுந்து விடப் போகிறது...”என்று யோகேந்திரன் எச்சரிக்க.. வாய் மூடி அமைதியானார் மீனாம்பாள்.

மறு நாள் காலை வழக்கம் போல்.. குமரிம்மாவின் வீட்டிற்குச் சென்றாள் மதுமதி.. குளிர் தாங்க முடியாமல்.. அணிந்திருந்த ஸ்வெட்டருக்குள்.. கைகளை நுழைத்துக் கொண்டவள்.. மறந்தும் கூட ரோஜாத் தோட்டத்தின் பக்கம் பார்வையைச் செலுத்தவில்லை.. ஏனெனில்.. அங்கே நின்றிருந்த ஆதித்யனின் எரிமலைப் பார்வையை அவள் உணர்ந்திருந்ததால்.. விறுவிறுவென நடந்து உள்ளே சென்று விட்டாள்...

சமையலறைக்குள் நுழைந்து இத்தனை நேரமாகப் பிடித்து வைத்திருந்த மூச்சை வெளிவிட்டவளுக்கு.. நேற்று அவனிடம் அதிகப் பிரசங்கித் தனமாகப் பேசியது நினைவிற்கு வந்து வருத்தத்தை ஏற்படுத்தியது.. அவன் மட்டும் சரியான நேரத்தில் வந்து காப்பாற்றியிருக்கா விட்டால்.. இன்று தன்னால் இப்படி நடமாடிக் கொண்டிருக்க முடியுமோ என்னவோ... அவனிடம் நன்றி கூடத் தெரிவிக்காமல்.. எடுத்தெறிந்து பேசி அவனது வெறுப்பைச் சம்பாதித்தாயிற்று...! இதனால் ஆகப் போவது தான் என்ன..?

அவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் நிச்சயம் ஆகி விட்டது.. இன்னும் சிறிது நாட்களில் அவன் அந்தப் பெண்ணுக்குக் கணவனாக இருப்பான்.. அன்னையற்ற சிறுமி என்ற மனிதாபிமானத்துடன் அன்னையும்,மகனும் அவள் மீது காட்டிய அன்பைத் தவறாகப் புரிந்து கொண்டு நேசத்தை வளர்த்துக் கொண்டது அவள் தான்.. இப்படித் தவறுகள் அனைத்தையும் தன் மீது வைத்துக் கொண்டு..

இத்தனை நாட்களாக.. அவன் தனக்காக செய்த அத்தனை உதவிகளையும் மறந்து விட்டு.. அவன் தன்னை நேசிக்கவில்லை என்ற காரணத்திற்காக.. அவனைத் தவிர்ப்பதும் ஏசுவதும்.. எப்படி நியாயமாகும்..?, நீ பாவம் செய்து கொண்டிருக்கிறாய் மதி... என்று தனக்குத் தானே கூறிக் கொண்டவள்.. ஆதித்யனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்..

எப்போதும் போல் அவனுக்கு சத்து மாவுக் கஞ்சியை எடுத்துக் கொண்டு அவனது அறைக்குள் நுழைந்தாள்.. அலமாரியைத் திறந்து வைத்துக் கொண்டு எதையோ தேடிக் கொண்டிருந்தவன்.. அரவம் உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.. அவளைக் கண்டதும் அவன் உஷ்ணமாக.. அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்காமல்.. “க..கஞ்சி..”என்றாள்.. “எனக்கு வேண்டாம்..”என்று அவன் பட்டென்று ஒரே வார்த்தையில் கூறி விட..

எப்போதும் கொடுப்பது தானே.. ஏன் மறுக்கிறான்.. என்று திகைத்து.. “ஏ...ஏன்...?”என்று வினவினாள்.. அவளை முறைத்த படியே அருகே வந்தவன்.. “இந்தக் கஞ்சி உனக்குத் தான் அதிகம் தேவைப் படும்.. அதனால் நீயே குடி.. இன்னும் 4 பேரை எடுத்தெறிந்து பேசத் தெம்பு வேண்டாம்...?,”என்று வினவ.. மூக்கு விடைத்து.. வெளி வரத் துடித்தக் கண்ணீரை சிரமப்பட்டு அடக்கியவள்.. எதுவும் கூறாமல் நடந்து வெளியே சென்று விட்டாள்..

“ரோஷத்திற்கு மட்டும் குறைச்சலில்லை...”என்று முணுமுணுத்தபடி குளியலறைக்குச் சென்று விட்டான்.. அவனது அறையிலிருந்து வெளியே வந்தவள்.. சமையலறையில் அமர்ந்து அழ.. பதறி அருகே ஓடி வந்த மல்லி.. “அக்கா.. அக்கா.. என்னவாயிற்று.. ஏன் அழுகிறாய்...?”என்று வினவ.. இப்படி அனைவரும் பார்க்குமளவிற்கு அழுது தொலைத்து விட்டேனே.. என்ன சொல்லி சமாளிப்பது என்று சிந்தித்தவள்.. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு “வ.. வயிறு வலி மல்லி... அதனால் தான் அழுகை வந்து விட்டது...,”என்று கூற.. நம்பாமல் சந்தேகத்துடன் அவளைப் பார்த்த மல்லி.. “சரி,, நீங்கள் இங்கேயே அமருங்கள்.. வேலை ஏதும் பார்க்க வேண்டாம்..”எனக் கூறி விட்டு சமையலைக் கவனிக்கச் சென்றாள்..

சிறிது நேரத்தில் குமரிம்மா அழைக்க.. அவருக்குத் தேநீர் தயாரித்து எடுத்துக் கொண்டு அவர் அறைக்குச் சென்றாள்.. ஆதித்யன் அன்னையுடன் அமர்ந்திருந்ததைக் கண்டு அவள் தயங்கி வாசலிலேயே நிற்க.. “மதி... என்ன அங்கேயே நிற்கிறாய்..?,”என்று குமரிம்மா கேட்டதும் மேலும் நின்று கொண்டிருந்தால் தேவையில்லாத கேள்வி வரும் என்றுணர்ந்து அவரருகே சென்று தேநீரை நீட்டினாள்..

தேநீரை எடுத்துக் கொண்டவர்.. அவளது வாடிய முகத்தைக் கண்டு விட்டு “மதி... ஏன் சோர்வாகத் தெரிகிறாய்..?,முகம் வாடிப் போய்

இருக்கிறதே...?"என்று வினவ.. "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை குமரிம்மா.."எனக் கூறி விட்டு ஓடப் பார்த்தாள்.. "குரல் கூட நமநமக்கிறதே.. என்னவாயிற்று மதி..?"என்று அவர் மேலும் துருவ... "எனக்கு ஒன்றுமில்லை குமரிம்மா... நீங்கள் டீயைப் பருகுங்கள்.."என்று கூற.. அதற்கு அவர் பதில் கூறும் முன் முந்திக் கொண்டு ஆதித்யன் பதிலளித்தான்..

"அம்மா... அவளைக் கேள்வி கேட்கும் உரிமையெல்லாம் நமக்குக் கிடையாது... நீங்கள் ஏன் உங்கள் எனர்ஜியை வீணாக்கிக் கொள்கிறீர்கள்..?"என்று வினவ.. "ஏன் அப்படிச் சொல்கிறாய்..?, நீ இப்படிப் பேசுவதைப் பார்த்தால்.. நீ தான் எதையோ பேசி அவளை அழ வைத்திருக்கிறாய் என்று தெரிகிறது.. மதி.. என்ன நடந்தது.. என்னிடம் கூறு.."என்று மதியிடமே வினவினார்.

"ஆமாம்.. அவளைக் கேளுங்கள்.. அப்படியே மனதிலிருப்பதைக் கொட்டித் தீர்த்து விடுவாள்.. அவள் ஊமையாகிப் போய் பல நாட்களாயிற்று அம்மா.."என்று எரிச்சலாகக் கூறியவன்.. அறையை விட்டு எழுந்து சென்றான்.. அவன் சென்றதும் "என்ன மதி...?"என்று வினவியருக்கு அழுகையை மட்டுமே பதிலாகத் தந்தாள் மதுமதி.

அவள் அழுகையுடன் ஓடிச் சென்றதும்.. மகனை நாடிச் சென்றவர்.. "என்ன டா ஆதி.. சிறு பெண் தானே அவள்..?, அவளை என்ன அதட்டி மிரட்டி வைத்திருக்கிறாய்..?,என்ன நடந்தது..?"என்று வினவ.. "சிறு பெண்ணா..?, அப்படித் தான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்.. அவள் பேசிய வார்த்தைகளைக் கேட்ட பின்பு தான் எனக்கும் புரிந்தது.. அவள் பழைய மதி இல்லையென்று.."என்று அவன் கோபத்துடன் கூற.. "அப்படி என்ன தான் நடந்தது,..?,என்ன நடந்ததென்று கூறாமல்.. இருவரும் உங்கள் இஷ்டத்திற்கு நடந்து கொண்டால் என்ன அர்த்தம்..?"என்று வினவ.. இவரிடம் உண்மையைக் கூறினால்.. நிச்சயம் அன்பரசுவின் காதுகளுக்கு எட்டி விடும் என்று தீர்மானித்துக் கொண்டவன்.. "ஒன்றுமில்லை..."என்று விட்டு சென்று விட்டான்..

தலையும் புரியாமல் காலும் புரியாமல் என்பார்களே.. அது போல.. என்ன நடந்ததென்று தெரியாமல்.. அவரால் ஆதியின் மீது கோபப் படவும் முடியவில்லை.. மதியின் அழுகையைச் சமாதானப் படுத்தவும் முடியவில்லை...



## அத்தியாயம் – 7



**உன் அன்பை மட்டுமே..**
**கிரகிக்கப் பழகியிருந்த மனதிற்கு..**
**நீ காட்டும் இந்த வெறுப்பு புதிது தான்!**
**உனது நேசம் எனக்கில்லை என்பதையே...**
**ஏற்றுக் கொண்டு விட்ட எனக்கு..**
**உன் வெறுப்பைச் சகித்துக் கொள்வது..**
**பெரிதா என்ன...??**

**சி**த்ரலேகாவைப் பொறுத்த வரை ஆதியின் மீது கட்டுக்கடங்காத காதலோ.. என்றும் அழியாத நேசமோ.. நீயில்லாமல் நான் இல்லை என்று கூறுமளவிற்கு பாசமோ கிடையாது தான்.. அவளுக்குத் தேவை.. ஒரு பணக்காரக் கணவன்.. விதவிதமான கார்களில் உலா போய்.. பலவகையான ஆடைகளும்,அணிகலங்களும் அணிந்து.. விருப்பப் படி ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என்கிற நோக்கம் மட்டும் தான்...

அதற்காக.. கணவன் என்கிற ஒருவன்.. ஊரிலிருக்கும் அத்தனை பெண்களுடனும் தொடர்பு வைத்துக் கொண்டு திரியும் ஒழுக்கமற்றவனாக இருக்கவும் கூடாது என்று தான் எப்போதும் எண்ணுவாள்.. பணக்காரனாக புத்திசாலியாக.. அதே நேரத்தில் ஒழுக்கசீலனாகவும் இருக்க வேண்டும் என்று தான் விரும்பினாள்.. ஏனெனில்.. அவளும் பல ஆண்களைப் பார்த்திருக்கிறாள்.. பணம் இருப்பவன் ஒழுக்கமற்றுத் திரிவதையும், பணம் இல்லாதவன் ராமனாக இருப்பதையும்... தான் எண்ணுவது போல் ஒருவனைப் பார்க்கவே மாட்டோமா.. என்று கவலையுற்ற போது தான்... பணம்,அழகு,புத்திசாலித்தனம்,ஒழுக்கம் என அனைத்தும் நிறைந்த ஆதித்யனை அவள் சந்தித்தாள்...

தன் அத்தை மகள் என்கிற ஒரே காரணத்தினால்.. அன்னைக்கும்,தந்தைக்கும் பிடித்த சம்பந்தம் என்கிற ஒரே காரணத்தினால் ஆதியும் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட.... அவள் நினைத்தது சிரமமில்லாமல் அவளுக்குக் கிட்டியது... திருமணத்திற்கு ஆதித்யன் சம்மதம் தெரிவிக்கும் வரை மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்த அவளது வாழ்வு... ஆதி, மதுமதியின்

மீது காட்டிய அன்பையும்,பாசத்தையும் அறிந்து கொண்ட தினத்திலிருந்து.. நிம்மதியற்றுச் சென்று கொண்டிருக்கிறது...

அப்படி என்ன இருவருக்குமிடையே இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்க விரும்பி அந்த வீட்டில் வேலை செய்பவர்களிடம் மதுமதியைப் பற்றியும்.. இந்த வீட்டிற்கும் அவளுக்கும் உண்டான உறவைப் பற்றியும் மறைமுகமாக விசாரித்துப் பார்த்தாள்..

“மதுமதி பிறந்த போதே அவளது தாய் காலமாகி விட்டதால்.. 2,3 வயதிலிருந்தே இங்கே தான் வளர்கிறாள்.. தாயில்லாத குழந்தை என்பதால் அவள் மீது அனைவருக்குமே பாசம் அதிகம்.. மென்மையான குணம் கொண்டவள்.. ஆதி தம்பிக்கும்,குமரிக்கும் மதி என்றால் இஷ்டம் தான்.. அவளுக்கு சிறு வயதிலிருந்தே நிறைய உதவிகள் செய்து வந்திருக்கிறார்.. பாசம் நிறைந்த பெண்..”என்று அந்த வீட்டில் பல வருடங்களாக வேலை செய்து கொண்டிருக்கும் தாயம்மாள் மதுமதியின்  புகழ் பாட.. எரிச்சலானது தான் மிச்சம்..

ஆக.. தாயற்ற பிள்ளையின் மீது அனைவருக்கும் இருக்கும் சாதரணமான மனிதாபிமானமும்,இரக்கமும் தான் அவனுக்கு மதுமதியின் மீது இருப்பது.. என்பதை முடிவு செய்து கொண்ட பின்பு தான் லேகாவிற்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.. ஆனால் இவள்.. இந்த மதுமதி... எந்த மாதிரியான உணர்வுடன் ஆதியிடம் பழகுகிறாள் என்று தீர்மானிக்க முடியவில்லையே..

சாப்பிட்டாயா மதி..? என்று ஆதி விசாரிக்கையில்.. அவள் முகத்தில் ஏற்படும் மாற்றம்.. அவனிடம் உரையாடும் போதெல்லாம்.. அவன் முகத்தைப் பாராமல்.. முகம் சிவந்தபடியே அவள் பதிலளிக்கும் விதம்.. இதை விட.. அன்று தண்ணீரில் விழுந்து காப்பாற்றப் பட்ட அன்று.. ஆதியைக் கண்டதும் அவள் அணைத்துக் கொண்டது.. இவையனைத்தும்.. மதுமதிக்கு ஆதியின் மீது வேறு விதமான உணர்வுகள் உள்ளதென்பதை உறுதி செய்தது... இதை நிச்சயம் முடிவிற்கு கொண்டு வர வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்...

அன்றைய சம்பவத்திற்குப் பின்.. ஆதித்யனையும்,மதுமதியையும் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள்.. ஆதித்யனைச் சந்திப்பதை மதுமதி தவிர்ப்பதையும் குறித்துக் கொண்டாள்.. ஆனால்.. அன்று காரில் லேகா என்று ஒருத்தி இருப்பதையே மறந்து விட்டு.. தன் போக்கில் இறங்கிச் சென்ற ஆதித்யன்.. அதன் பின்பும் கூட அவளைத் தேடி வரவேயில்லை.. அவனாகவே வந்து பேசுவான் என்று ஒரு நாள் முழுதும் அறையை விட்டு வெளியே வராமல் இருந்தவள்.. அதன் பின்பு தானே சென்று அவனிடம் பேச்சு கொடுக்க எண்ணி.. அவன் எஸ்டேட்டிற்குச் செல்லும் நேரம் பார்த்து சரியாக வெளியே வந்தாள்..

அவன் வண்டியில் ஏற இருந்த சமயம் “அத்தான்...”என்றழைத்தபடியே அருகே வந்தாள்.. என்ன என்பது போல் நோக்கியவனிடம் “நானும் உங்களோடு வருகிறேன்..”எனக் கூறி அவன் பதிலை எதிர்பாராது காரில் அமர்ந்து கொண்டாள்.. உர்ரென்ற முகத்துடனே அமர்ந்திருந்தவனிடம்.. “அத்தான்... இன்று என்னை குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறீர்களா..?, ப்ளீஸ்..”என்று கெஞ்சல் குரலில் கொஞ்ச.. அவனும் “ம்ம்..”என்றான்..

“அழைத்துச் செல்கிறீர்களா...?, தேங்ஸ் அத்தான்..”எனக் கூறி அவன் கன்னத்தில் முத்தமிடச் சென்றவளை கைப் பற்றித் தடுத்தவன்.. வேண்டாம் என்பது போல் தலையசைக்க.. முகம் கருத்தாலும் அவள் அலட்டிக் கொள்ளாமல்.. வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.. சிறிது நேரத்தில் மீண்டும் அவன் புறம் திரும்பியவள்.. “எதற்காக அத்தான்.. அமைதியாக இருக்கிறீர்கள்..?, மதுமதியை நினைத்தா..?, அவளைத் தான் காப்பாற்றி விட்டீர்களே.. நான் கூடக் காலையில் விசாரித்தேனே.. நன்றாக இருப்பதாகத் தான் தெரிவித்தாள்..”என்று விசாரிக்க..

ஏற்கனவே மதுமதியின் மீது கோபத்தில் இருந்தவன்.. அவள் இப்படிக் கேட்டதும் மேலும் கோபமாகி... “நான் ஏன் அவளைப் பற்றி நினைக்கப் போகிறேன்.. என் வேலையைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன்..”எனக் கூற.. லேகாவிற்கு குஷியாகி விட்டது.. சரி தான் என்றெண்ணிக் கொண்டவள்.. சில நிமிடங்கள் அமைதியாகிப் பின் மெல்ல நகர்ந்து ஆதியின் அருகே வந்து அவன் தோளில் தலை சாய்த்தாள்.. அவனிடமிருந்து எந்தவித எதிர்ப்பும் வரவில்லையென்றதும்.. மேலும் நன்றாகச் சாய்ந்து கொண்டாள்..

அவள் தேகம் தன் மீது உரசியதும்.. ஆதித்யனுக்கு.. முந்தைய நாள்.. தண்ணீரிலிருந்து காப்பாற்றப்பட்ட மதுமதி.. அவன் மார்பில் முகம் புதைத்தது நினைவிற்கு வந்தது.. சட்டென பிரேக் இட்டு வண்டியை நிறுத்தினான்.. திடீரென அவன் வண்டியை நிறுத்தியதும்.. திடுக்கிட்டு அவனை விட்டு விலகியவள்.. “என்ன... என்னவாயிற்று அத்தான்..?”என்று வினவினாள் லேகா. “ஒன்றுமில்லை...”என்றவன்.. வண்டியைச் செலுத்திக் கொண்டு எஸ்டேட்டிற்குச் சென்றான்..

அங்கே இவர்களிருவரையும் புன்னகையுடன் வரவேற்றார் அன்பரசு.. “வாங்க சின்னைய்யா.. வாங்க சின்னம்மா..”என்றவரிடம்.. “அங்கிள்.. என்னை சின்னைய்யா என்று அழைக்காதீர்கள் என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்..?, இதில் இவளையும் சின்னம்மா என்பீர்களா..?, பெயர் சொல்லி அழைத்தால் போதும் அங்கிள்..”என்று கூற.. அவன் அருகே நின்றிருந்த லேகாவிற்குத் தான் பற்றிக் கொண்டு வந்தது...

இவ்வளவு பெரிய எஸ்டேட்டிற்குச் சொந்தக்காரியாக ஆகப் போவதற்கு அடையாளமாக்த் தன்னை அங்கே வேலை செய்யும் ஒருவர் சின்னம்மா என்றழைப்பதை எண்ணி.. அவள் பூரித்துக் கொண்டு நின்றிருந்த வேளை ஆதித்யன் இவ்வாறு கூறியதும்,,. எரிச்சலுற்று.. வேறு வழியின்றி அன்பரசுவிடம் முறுவலித்தாள்..

அதன்பின்.. எஸ்டேட்டைச் சுற்ற அவள் வேறு புறம் செல்ல.. அன்பரசுவுடன் உள்ளே நுழைந்தான் ஆதித்யன்.. இவரிடம் மதுமதியைப் பற்றி விசாரித்தால் என்ன என்றெண்ணியவன்.. எப்படி ஆரம்பிப்பதென்று புரியாமல்.. தயங்கித் தயங்கி.. அவரிடம்.. "அங்கிள்.. மதுமதியின் செமஸ்டர் முடிவுகள் வெளி வந்து விட்டதா..?,"என்று விசாரித்தான்.. ஒரு வேளை அவள் எதிர்பார்த்த அளவிற்குத் தேர்வு முடிவுகள் வரவில்லையென்பதால் தான் இப்படி நடந்து கொள்கிறாளோ என்றெண்ணியதால் தான் அவரிடம் இப்படியொரு கேள்வியைக் கேட்டான்..

அதற்கு மறுத்துத் தலையசைத்த அன்பரசு.."இல்லையே சின்னைய்யா… அதற்கு இன்னும் 15 நாட்களுக்கு மேலேயே இருக்கிறதே.. ஏன்..?"என்று வினவினார்.. "இ..இல்லை அங்கிள்.. சில நாட்களாகவே.. மிகவும் சோர்வாகத் தெரிகிறாள்… அதனால் தான் விசாரித்தேன்.."என்று கூற.. "நானும் விசாரித்துப் பார்த்தேன்.. உடம்பு சரியில்லை என்றாளே சின்னைய்யா… ஒ..ஒன்றுமில்லை தானே…?,"என்று அவர் வினவ.. அவரைக் கண்டு முறுவலித்தவன்.. "அங்கிள்.. ஏன் பதறுகிறீர்கள்..?, டல்லாகத் தெரிகிறாளே.. என்னவென்று தான் விசாரித்தேன்.. வேறு ஒன்றுமில்லை அங்கிள்.."என்று முடித்து விட.. "சரி தான்.. எதற்கும் நீங்கள் அவளிடம் பேசிப் பாருங்கள் தம்பி.."என்று கூறி விட்டுச் சென்றார் அவர்.

ஆமாம்! நான் கேட்டதும் அப்படியே ஒப்பித்து விடுவாள்.. குனிந்த தலையை நிமிராமல்.. அழுத்தமாக நிற்பாள்.. அதட்டிக் கேட்டால்.. கண்ணீரே வந்து விடும்.. என்ன தான் செய்வதோ! என்றபடி தலையை முடியை பின்னுக்கு ஒதுக்கி அழுந்தக் கோதியவன்.. அவளைப் பற்றிய எண்ணங்களை ஒதுக்கி வேலையில் கவனம் செலுத்தினான்..

அதன் பின் லேகாவை வீட்டிற்கு அனுப்பி விட்டு.. வெகு நேரம் கழித்து வீடு திரும்பினான் ஆதித்யன்.. விடுமுறையின் போது.. மதுமதி குமரியின் வீட்டிலேயே தான் இருப்பாள்.. சமையலறையில் உதவி புரிந்து கொண்டு.. வீட்டின் தேவைகளைக் கவனித்துக் கொண்டு.. விடுமுறை நாட்கள் அனைத்தையும் அங்கேயே தான் கழிப்பாள்.. காலை,மாலை உணவு பரிமாறும் வேலையைக் கூடத் தானே தான் ஏற்றுக் கொள்வாள்..

அன்று இரவு உணவின் போது… மதுமதி சமையலறையை விட்டு வெளியே வராமல் உள்ளேயே நின்று கொண்டு மல்லியைப் பரிமாற அனுப்ப… "மதி

எங்கே..?"என்று விசாரித்தபடியே சாப்பாட்டு மேஜையை நோக்கி வந்தான் ஆதித்யன்..

"அது...அது வந்து.. அக்கா.. உள்ளே வேலையாக இருக்கிறாள்.."என்று பதில் கூறிய மல்லி.. அவனுக்குப் பரிமாறத் துவங்க.. "இப்படி சொல்லச் சொல்லி உன் அக்கா கூறினாளா...?"எனக் கூறியபடியே அமர்ந்தான்.. மல்லி எதுவும் கூறாமல்.. பரிமாறி விட்டு தப்பித்தோமடா சாமி.. என்று ஓடி விட.. மேலே எதுவும் கேள்வி கேட்காமல் உண்டு முடித்தான்..

மதுமதியைக் காப்பாற்றிய அன்று.. நனைந்த உடைகளுடன் வெகு நேரம் இருக்க நேரிட்டதால்.. ஜலதோஷம் பிடித்துக் கொண்டு விட்டது அவனுக்கு.. சாப்பாட்டுக்கிடையில் பல முறை அவன் தும்மியதைக் கண்டு விட்ட மதுமதி.. வேகமாகக் கஷாயம் தயாரித்து.. மல்லியிடம் கொடுத்தனுப்ப.. "அக்கா.. நீயே சென்று கொடுத்து விடேன்.. ப்ளீஸ்.."என்று கெஞ்சிய மல்லியை அரும்பாடு பட்டு அனுப்பி வைத்தாள்..

அவன் சாப்பிட்டு முடிக்கையில் கஷாயத்தைக் கொண்டு வந்து மல்லி.. மேஜையின் மீது வைக்க.. அதை யார் தயாரித்திருப்பார் என்பதை அறிந்து கொண்டவன்.. நேரில் முகத்தைக் காட்டுவதற்கு மனமில்லையாம்.. ஆனால்.. அக்கறையாக கஷாயம் கொடுப்பாளாம்.. என்று கோபம் கொண்டவன்.. "நில் மல்லி... உன் அக்காவிடமே இதைக் கொடுத்து விடு.."என்று அவளிடம் கிண்ணத்தை நீட்டி விட்டு எழுந்து சென்று விட்டான்..

அவன் கூறுவதைக் கேட்டு வேகமாக சமையலறையிலிருந்து வெளிப் பட்டவளைப் பொருட்படுத்தாது அவன் சென்று விட.. கிண்ணத்தை வாங்கிக் கொண்டு அவனைத் தொடர்ந்து சென்றாள்.. அறைக்குள் நுழைந்தவனின் பின்னே தானும் நுழைந்தவளைக் கண்டவன்.. "என்ன...?, என்ன வேண்டும் உனக்கு..?, உன்னைக் கேள்வி கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்பதை செயலிலும்.. வார்த்தையிலும் மறைமுகமாகக் காட்டினாயல்லவா..?, நான் உன்னைப் போல் இல்லையம்மா.. வெளிப் படையாகவே கூறி விடுவேன்.. உனக்கு என்ன அக்கறை என் மீது,..?, நீ எதற்காக நான் இருமியதும்,தும்மியதும் கஷாயம் எடுத்துக் கொண்டு ஓடி வர வேண்டும்..?"என்று கோபமாக வினவ..

வழக்கம் போல் அழுகையை அடக்க முயன்று தோற்று.. அவன் முன்பு நின்று அழுது கொண்டிருந்தாள் மதுமதி.. "எதற்காக இந்த அழுகை இப்போது..?, செய்வதெல்லாம் செய்து விட்டு இந்த அழுகை எதற்கு..?, எனக்கு இது வேண்டாம்.. எடுத்துச் செல்.."என்றவன் "எதற்கெடுத்தாலும் அழுகை மட்டும் வந்து விடுகிறது.. என்ன நடந்தது உனக்கு என்று கேள்வி கேட்டாலும் இதே அழுகை தான்.."என்று முணுமுணுத்தபடியே திரும்பி நடந்தான்..

பின் என்ன நினைத்தானோ... அவள் அசையாமல் நிற்பதைக் கண்டு.. திரும்பி வந்து அவள் கையிலிருந்த கிண்ணத்தை வாங்கிக் கஷாயத்தைப் பருகியவன்.. காலிக் கிண்ணத்தை அவள் கையில் கொடுத்து விட்டு விலகிச் சென்றான்.. அவன் குடித்து முடித்ததும் கண்களைத் துடைத்துக் கொண்டே திரும்பியவள்.. எதிரே நின்ற சித்ரலேகாவைக் கண்டு விழித்தாள்..

இந்த நேரத்தில் இவள் எதற்காக ஆதியின் அறைக்கு வந்திருக்கிறாள்.. என்று சந்தேகத்துடன் அவள் மதுமதியை நோட்டம் விட.. பதிலேதும் சொல்லாமல் இறங்கிச் சென்றாள் மதுமதி.. அவள் சென்றதும் ஆதியை நோக்கியவள்.. “இவள் எதற்காக இப்போது இங்கே வந்து செல்கிறாள்..?, கண்கள் வேறு கலங்கியிருந்ததே.. என்ன நடந்தது அத்தான்..?”என்று விசாரித்தாள்..

“என்னை ஏன் கேட்கிறாய்..?,அவளிடமே கேள்.. குரலை ஓங்கி 2 வார்த்தை பேசினாலே அவளுக்கு அழுகை வந்து விடுகிறது..”என்று எரிச்சலுடன் கூறியவனிடம்.. “ஏன்..?,வேலைக்காரியிடம் அன்பொழுகவா பேச முடியும்..?, குரலை ஓங்கித் தான் பேச வேண்டும்..”எனக் கூறியவள் சட்டெனத் தான் கூறியதை உணர்ந்து நாக்கைக் கடித்த படி அவனைப் பார்வையிட.. அவனோ தன் காதில் எதுவுமே விழாதது போல்.. சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்..

மதுமதியை வேலைக்காரி என்றாலே எரிந்து விழுபவன்.. இன்று அமைதியாக இருப்பதைக் கண்டு.. இது தான் சமயம் என.. மேலும் தன் வாய் ஜாலத்தைக் காட்டினாள் சித்ரலேகா.. “இதற்குத் தான் கூறுகிறேன் அத்தான்.. வீட்டு வேலைக்காரர்களை தூர நிறுத்தித் தான் வைக்க வேண்டும்.. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் பிறவிகள்.. வேறுபாடு பார்க்காமல் நீங்கள் பழகினால் அவர்கள் வேறு விதமான சலுகைகளையும் எதிர்பார்க்கத் தான் செய்வார்கள்... இப்படித் தான் என் தோழி சுபாவின் வீட்டில்...”என்று ஆரம்பித்தவள்.. ஆதித்யனின் முறைப்பில் அடங்கி.. “தூக்கம் வரவில்லையா அத்தான்..?”என்று வினவினாள்..

“நீ அறையை விட்டு நகர்ந்தாயானால்.. நன்றாகத் தூங்குவேன்.. செல்கிறாயா..?”என்று அவன் பதிலுக்கு வினவ.. “அத்தான்.. இன்னும் சிறிது நாட்களில்.. நமக்குத் திருமணம் முடிந்து விட்டால்.. நாம் இருவரும் ஒரே அறையில் தான் இருந்தாக வேண்டும்.. அப்போது என்னை வெளியே துரத்த உங்களால் முடியாது.. நினைவிருக்கட்டும்..”என்று எச்சரிக்க.. அவளை எரிச்சலுடன் நோக்கியவன்.. “என்ன தான் வேண்டும் உனக்கு..?”என்று பொறுமையற்றக் குரலில் வினவினான்..

“ஒரே ஒரு முத்தம் கொடுங்கள்.. நான் சென்று விடுகிறேன்...”என்று சிரிப்புடன் கூற.. அவளை முறைத்தவன்.. “அச்சம்,மடம்,நாணமெல்லாம் பெண்களுக்கு

உள்ளது என்பார்களே.. உனக்கு மட்டும் ஏன் இவையெல்லாம் இல்லை..?, குறைந்த பட்சம் எல்லாப் பெண்களும் கூறும் ஒரே வசனமான ‘எல்லாம் கல்யாணத்திற்கு அப்புறம் தான்..’ என்பதைக் கூட நீ சொல்வது போல் தெரியவில்லையே..”என்று அபினயத்துடன் கூற..

கலகலவென்று சிரித்தவள்.. “அத்தான்.. எனக்கு பசிக்கும் போது பசிக்கிறதென்று வாய் விட்டுத் தானே கேட்கிறேன்.. முத்தம் கேட்பதற்கு மட்டும் எதற்காக வெட்கப் பட வேண்டும்..?,உங்களால் என்னை முத்தமிட முடியாமா முடியாதா..?”என்றவள் தொடர்ந்து “நீங்கள் கொடுக்க வேண்டாம்... வழக்கம் போல் நானே தருகிறேன்..”என்றவள் அவனருகே வந்து நின்றாள்..

“ஏய்.. ஒழுங்காக உன் அறைக்குச் செல்லும் வழியைப் பார்..”என்று அவன் எச்சரிப்பதைப் பொருட்படுத்தாமல்.. அவன் கன்னத்தில் அவள் முத்தமிடக் குனிந்த அடுத்த நொடி.. இருவரும் மதுமதியின் ஒரு பெரிய கேவலைக் கேட்டுத் திடுக்கிட்டு விலகினர்.. நேரம் பார்த்துச் சரியாக வந்து அனைத்தையும் கெடுத்து விட்டவளைக் கண்டு எரிச்சல் பொங்கியது லேகாவிற்கு..

கொஞ்சமும் கோபம் குறையாமல்.. மதுமதியிடம் திரும்பியவள்.. “ஏய்.. உனக்குக் கொஞ்சம் கூட புத்தி என்பதே கிடையாதா..?, அடுத்தவர்களின் அறைக்குள் நுழைகையில்.. கதவைத் தட்டி விட்டு நுழைய வேண்டுமென்ற அடிப்படை அறிவு கூடவா கிடையாது..?,நீயெல்லாம் என்ன படித்து என்ன பிரயோஜனம்..?, இடியட்..”என்று தன் போக்கில் திட்டிக் கொண்டே செல்ல.. மதுமதிக்கு அழுகையை அடக்குவது சிரமமாகிப் போனது.. அவள் முன்னே அழவும் பிடிக்கவில்லை அவளுக்கு.

வீட்டிற்குச் செல்வதற்கு முன் குமரிம்மாவின் கால் வலிக்கு மருந்து தேய்த்து விட்டுச் செல்லலாம் என்று வந்தவளை.. ஆதியை அழைத்து வா என்று குமரிம்மா அனுப்பி வைக்க.. அவன் அறைக்குச் சென்றாள் அவள்.. ஏதோ ஞாபகத்தில் கதவைத் தட்டாமல் அவள் உள்ளே நுழைந்து விட்டவளுக்கு.. அங்கே கண்ட காட்சியோ பெரும் வலியை ஏற்படுத்தியது.. அவ்வளவு நெருக்கத்தில்.. ஆதித்யன் வேறு ஒரு பெண்ணுடன் நிற்பதைக் கண்டவளுக்கு.. தலை முதல் கால் வரை சகலமும் எறிந்தது.. இதையெல்லாம் காண்பதற்காகவா என்னை உயிருடன் வைத்திருக்கிறாய் ஆண்டவா! என்றெண்ணியவளுக்கு.. கோபமும்,அழுகையும்,இயலாமையும் சேர்ந்து கொள்ள.. சட்டெனத் திரும்பி நின்றவள்.. அவர்கள் அறியும் முன் வெளியே சென்று விட எத்தனித்த வேளை.. கேவல் வந்து அனைத்தையும் கெடுத்து விட்டது..

தினமும் கனவில்.. ஆதித்யனின் தோள் சாய்ந்து.. அவன் தன்னை முத்தமிடுவதை ரசித்து உணர்பவளுக்கு.. அதே காட்சி.. இன்று நினைவில்..

ஆனால்.. தன்னுடன் அல்லாது.. அவன் வேறு ஒரு பெண்ணை கை வளைவில் நிறுத்திக் கொண்டு முத்தமிடுவதைக் கண்டு எரிமலைக் குழம்பில் சிக்கிக் கொண்டதைப் போல்.. உடல் தகதகவென எரிந்து.. உள்ளம் வெம்பியது.. கைகளை இறுக்கி.. அருகேயிருந்த மேஜையை அழுந்தப் பற்றினாள்..

அத்தனையையும் மீறி.. சித்ரலேகாவின் வாயிலிருந்து வெளிப்பட்ட.. கடும் சொற்கள்.. மனதை அதிகமாகவே சுட்டது.. அவர்களின் புறம் திரும்பாமலே.. கழுத்தில் கிடந்த பாசியை அழுந்தப் பற்றிக் கொண்டு கண்ணை மூடி நின்றவளுக்கு.. கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரை அவள் முன்பு காட்ட மனமில்லை...

தன் போக்கில் பேசிக் கொண்டே சென்றவளை.. “வாயை மூடு லேகா..”என்று அடக்கியவன்.. “என்ன விஷயம் மதி...?”என்று அவளருகே வர.. அவன் தன் அருகே வருவதை உணர்ந்தவள்.. மேலும் 4 எட்டுக்கள் முன்னே சென்று.. “கு..குமரிம்மா உங்களை அழைத்தார்கள்..”எனக் கூறி விட்டு அந்த அறையை விட்டு வெளியேறி விட்டாள்..

எதிலிருந்தோ தப்பிக்க நினைப்பவள் போன்று.. அந்த நீண்ட.. காரிடாரை விட்டு.. முழு வேகத்தில் ஓடியவள்.. சமையலறை வழியாக தோட்டத்தில் ஓடி.. மல்லிகைப் பந்தலைச் சென்றடைந்தாள்.. அதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியாமல்.. அழுகை பீறிட.. அங்கே அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தின் தூணில் சாய்ந்து அழுது தீர்த்தாள்..

தீரவே தீராத.. தாகமாய்.. அணைக்கவே முடியாத நெருப்பாய்... மாறி அவர்களிருவரும் அருகருகே நின்றிருந்த காட்சி மறுபடி மறுபடி தோன்றி.. உடலையும்,மனதையும் இம்சித்தது.. நீண்ட நேரமாக தூணில் சாய்ந்த படி நின்றிருந்தவளை.. தோட்டக்காரன் வேலன் வந்தழைக்க.. வேகமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு “என்ன அண்ணா..?”என்று வினவினாள்.. “பனியில் இங்கே ஏன் மா நிற்கிறாய்..?, உள்ளே செல்..,”என்று அவர் கூற.. “இதோ..”என அவரிடம் முகத்தைக் காட்டாமல்.. வீட்டிற்குள் சென்றாள்..

மறுபடியும் குமரியின் அறைக்குள் நுழைந்தவள் அங்கே ஆதித்யன் அமர்ந்திருப்பதைக் கண்டு திரும்பிச் செல்ல எத்தனிக்க.. அதற்குள் அவளைக் கண்டு விட்ட ஆதித்யன் “மதி.. உள்ளே வா” என்று கட்டளையிட்டான்.. உள்ளே வந்து கட்டிலில் படுத்திருந்த குமரியின் கால்களில் மருந்தைத் தடவத் தொடங்கினாள்..

“மதி அப்பாவிடம் எந்த மாதிரி பத்திரிக்கை டிசைன் வேண்டுமென்பதைக் கூறி விட்டாயானால் பத்திரிக்கை அடிப்பதையும் தொடங்கி விடலாமல்லவா கண்ணா..?, மண்டபம்,சாப்பாடு என அனைத்தையும் அவர் பார்த்துக்

கொள்வதாகக் கூறினார்.. நீ ஒரு முறை மேற்பார்வை பார்த்தாயானால் போதும் என்றாரே.. நீ அவரிடம் பேசினாயா..?"என்று மகனிடம் வினவினார் குமரி..

ஆம்! அனைத்து பொறுப்புகளையும்.. அன்புள்ள எஜமானருக்காக.. பாசமுள்ள சின்னைய்யாவிற்காகத் தானே ஏற்றுக் கொண்டார் அன்பரசு.. வீட்டிற்கு வரும் நேரங்கள் கூட இப்போதெல்லாம் குறைந்து போனது.. கல்யாண வேலையாக அலைகிறேன் என்கிறார்.. உடல்,பொருள்,ஆவி அனைத்தையும் மகளைப் போல் அவரும் அந்தக் குடும்பத்திற்காகவே அளித்து விட்டார் போலும்.. மகளின் மனம் இந்தத் திருமணத்தால் செத்துக் கொண்டிருப்பது புரியாமல்.. வெகு தீவிரமாகத் தன்னை இதில் ஈடுபடுத்திக் கொண்டு விட்டார்.. ஒரு முறை.. ஒரு முறை இந்த உண்மையை அவள் தந்தையிடம் தெரிவித்திருந்தால்.. ஆதித்யனின் வாழ்க்கையில் தலையிடாமல்.. மகளை அழைத்துக் கொண்டு தூரதேசம் எங்கேனும் சென்றிருப்பார்.. அடுத்த நடக்கப் போகவிருக்கும் அத்தனை துன்பங்களிலிருந்தும் மதுமதி காப்பாற்றப் பட்டிருப்பாள்..

தங்களது எஜமானியின் மீதும்,சின்னைய்யாவின் மீதும் அவருக்கு பாசத்துடன் கலந்த பக்தி இருந்ததைப் போல் அவளுக்கும் இருந்திருந்தால்.. இந்த அவஸ்தை இருந்திருக்காதே.. வரம் தரும் சாமியையே சொந்தமாக்கிக் கொள்ள நினைப்பது எவ்வளவு பெரிய பேராசை..!! நடக்குமா..?, சாத்தியமான ஒன்றா..?, இது ஏன் புத்திக்கு எட்டாமல் போனது..?, தவறென்று ஆரம்பத்திலேயே அறுத்து எறியாமல்.. இவ்வளவு தூரம் வளர விட்டு.. தவித்துக் கொண்டு நிற்கிறாளே....! தன்னையறியாமல்.. கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்.. குமரியின் கால்களில் பட்டு விட..

"மதி.."எனக் கூறியபடி எழுந்தமர்ந்தார் குமரி.. "என்ன.. என்னவாயிற்று.. மதி.. அழுகிறாயா..?"எனக் கேட்டபடியே அவளது முகத்தை நிமிர்த்தியவரிடம்.. மறுத்துத் தலையசைத்தபடி நிமிர்ந்தவள் முறுவலித்து.. "அதெல்லாம் இல்லை குமரிம்மா.. கண்ணில் ஏதோ விழுந்து விட்டது போலும்.. அப்போதிருந்தே உறுத்திக் கொண்டே இருந்தது.. வேறு ஒன்றுமில்லை.. நான் கிளம்பட்டுமா குமரிம்மா..?,"என்று வினவினாள்..

"அப்பா இன்று இரவு எஸ்டேட்டிலேயே தங்கி விடுவார் மதி.. நீ இங்கேயே படுத்துக் கொள்.."என்று ஆதித்யன் கூற.. மறுத்துத் தலையசைத்தவள்.. "இல்லை குமரிம்மா.. வீட்டில் வேலை இருக்கிறது.. நான் செல்ல வேண்டும்.." என்று தரையைப் பார்த்தபடி கூற.. "அர்த்த ராத்திரியில் அப்படி என்ன வேலை பார்க்கப் போகிறாய்,..?"என்று குரலை உயர்த்தத் தொடங்கிய ஆதித்யனை அடக்கிய குமரி.. "அவள் தான் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்கிறாலல்லவா ஆதி... வேலனைத் துணைக்கு அழைத்துச் செல் மதி.."என்று அவர் முடிக்க.. தலையசைத்து எழுந்தவளுடன் தானும் எழுந்தவன் "நான் உடன்

செல்கிறேன்..”எனக் கூற.. சட்டென நிமிர்ந்து அவனை நோக்கியவள்.. “வே..வேண்டாம்.. நான் வேலன் அண்ணாவுடன் செல்கிறேன்..”என்று கூற.. கோபத்துடன் அவளை நோக்கியவன் “ஏன்..?, என்னுடன் வருவதில் என்ன பிரச்சனை உனக்கு..?”என்று மீண்டும் தொடங்க.. “ஆதி.. கொஞ்சம் பொறுமையாகத் தான் பேசேன்.. அவள் ஏற்கனவே பயந்த முகத்துடன் காட்சி தருகிறாள்.. நீ வேறு அவளை மிரட்டாதே..”என்று திட்டவும் அடங்கி.. அவளை நோக்கினான்..

எதுவும் கூறாமல்.. கூற முடியாமல்.. உதட்டைக் கடித்தபடி.. முன்னே நடந்து சென்றாள்.. அவள் தன்னைக் கடந்து செல்வதை முறைப்புடன் நோக்கியவன்.. “வருகிறேன் அம்மா...”எனக் கூறி அவளுடன் சென்றான்.. மாளிகை வாயிலைக் கடந்ததும்.. லேகா அப்படி ஏசியதற்காக மதியிடம் மன்னிப்புக் கேட்க எண்ணி... “மதி..”என்றழைத்தான்.. அழைத்த பிறகும் அடுத்த சில நிமிடங்களுக்கு அவன் எதுவுமே பேசாமல் போக.. அவன் அழைத்த போது அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. அதன் பின் எதுவும் பேசாமல் உடன் நடந்தாள்..

“மதி.. வந்து.. லேகா அப்படிப் பேசியதற்கு நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.. மன்னித்து விடு.. தெரியாமல் பேசி விட்டாள்..”என்று அவன் தயங்கித் தயங்கி தன்னுடைய வருத்தத்தை அவளுக்குப் புரிய வைக்க முயல.. அவன் மேலே கூறுவதற்கு முன் தடுத்து நிறுத்தியவள்.. “இ..இல்லை சின்னையா.. நான்.. நான் தான்.. தவறு என் மீது தான்.. அனுமதி கேட்காமல் நுழைந்ததால் தானே சின்னம்மா என்னைக் கோபித்துக் கொண்டார்கள்.. நான் தான் மன்னிப்புக் கேட்க வேண்டும்..”

“அத்தோடு.. ஒரு நன்றியும் பாக்கியிருக்கிறது.. ஆ..ஆம்.. என்னைத் தண்ணீரிலிருந்து காப்பாற்றியதற்கு உங்களிடம் நான் நன்றி தெரிவிக்கவேயில்லையே... நீங்கள் வராமல் போயிருந்தால் இன்று நான் உயிரோடு இருந்திருப்பேனோ என்னவோ... ரொ...ரொம்ப நன்றி சின்னையா..” என்றவள் தொடர்ந்து.. “வீ..வீடு வந்து விட்டது.. நான் வருகிறேன்..”எனக் கூறி விட்டு விறுவிறுவென நடந்து சென்று விட்டாள்..

அவள் குரலில் இருந்த அந்நியத் தன்மையும்,’சின்னையா’ என்ற அவளது அழைப்பும்.. எப்போதும் குனிந்த தலையுடன் அமைதியாய் பதில் தருபவள்.. இன்று நிமிர்ந்து நேர்ப் பார்வையால் அவனைச் சந்தித்து... தடையற்ற குரலில்.. மென்மையான புன்னகையுடன் அவனிடம் பேசி விட்டுச் சென்றவளைக் கண்டுத் திகைத்து நின்றான் ஆதித்யன்.



## அத்தியாயம் – 8



**பாசத்தைக் காட்டி எதற்காக**
**என்னைக் கொல்ல முயல்கிறாய்..?**
**மாசற்ற உன் அன்பை**
**மறுக்க முடியாமல் நான் திணறுவது..**
**உன் மூளைக்கு எட்டவேயில்லையா..?**
**உன் காதலைத் தவிர**
**வேறு எதையும் உன்னிடமிருந்து**
**ஏற்றுக் கொள்ளும் மனநிலையில்**
**நான் இல்லை!!**

**ம**துமதியா இது..?, வெளியே ஆதித்யனிடம்.. அவன் கண்களை நேராகச் சந்தித்து.. எவ்வித சலனமுமின்றி.. தெளிவாகப் பேசி அவனைத் திகைக்கச் செய்தவள்.. உள்ளே நுழைந்ததும்.. பொங்கி அழுவதா..?, எதற்காக..?, ஆம்! அவனிடம் வீரமாய்ப் பேசி விட்டு வந்தாள் தான்.. இனியும் அவனது அன்பிற்கும் பாசத்திற்கும் மயங்கி.. அவனையே தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள நினைக்கும் அபத்தமான ஆசையை வளர்த்துக் கொள்ளக் கூடாது என்கிற எண்ணத்தில் தான்.. அவனிடம் அவ்வாறு பேசியதே! ஆனால்.. அவனது முகத்தில் தெரிந்த திகைப்பையும்,பேச்சற்று அவன் நின்றதையும் கண்டவளுக்குத் தனிமையில் கண்களிலிருந்து மடை திறக்கத் துவங்கியது..

அப்படியொரு கோலத்தில் இருவரையும் கண்டு விட்டவளுக்கு.. இனியும் தன் எண்ணங்களை அழிக்காமல்.. உயிர் வாழ விடுவது தவறென்றே பட்டது.. இன்னும் சிறிது நாட்களில் ஆதித்யன் சித்ரலேகாவுடன் திருமணம் புரிந்து கொண்டு அவள் முன்னே தம்பதி சகிதமாக உலா வரத் தான் போகிறான்.. அதன் பின் குழந்தை,குட்டியென சராசரி மனித வாழ்க்கையைத் தொடரத் தான் போகிறான்.. இது தான் நிதர்சனம்..

திருமணமாகப் போகும் ஒரு ஜோடி.. தனிமையில் முத்தமிட்டுக் கொள்வது தவறல்லவே! அது தன் கண்ணான காதலன் ஆதித்யனாக இருந்த போதிலும்! வீணான ஆசைகளையும்,எண்ணங்களையும் வளர்த்துக் கொண்டது

அவளுடைய தவறு.. அவன் அவளது வருங்கால மனைவியுடன் முத்தமிட்டுக் கொள்வதைக் கண்டு இவளுக்கு எதற்காக எரிய வேண்டும்..?,

தந்தையைப் பின்பற்றித் தானும்.. அந்த வீட்டிற்குத் தன் நன்றிக் கடனைச் செலுத்த எண்ணி.. ஆதித்யனை இன்றோடு மறந்து விட வேண்டுமென்று முடிவு செய்து விட்டாள்... அவர்களிருவரும் கை கோர்த்ததற்கு ஒரு அழுகை, கட்டிப் பிடித்ததற்கு ஒரு அழுகையென்று இப்படியே தொடர்ந்து கொண்டே போனால்.. நிச்சயம்.. மதுமதியின் எதிர்காலம்.. கேள்விக் குறி தான்.. இன்னும் ஆறே மாதம் தான்.. மதுமதியின் படிப்பு முடிந்து விடும்.. அதன் பின் வெளியூரில் தன் படிப்பிற்கேற்ற ஒரு வேலையைத் தேடிக் கொண்டு இந்த ஊரைக் காலி செய்து கிளம்பி விட வேண்டியது தான்...

தன் வீட்டில்.. தன் பார்வையில் வளர்ந்த மதுமதி.. அவனை விரும்பினாள் என்கிற உண்மை ஆதித்யனுக்குக் கடைசி வரைத் தெரியாமலே போகட்டும்.. இங்கே இருக்கும் வரை.. இந்த உண்மை எவ்வித காரணம் கொண்டு யாருக்கும் தெரிந்து விடக் கூடாது.. வெளிப் பட்டு விடும் அளவிற்குத் தானும் நடந்து கொள்ளக் கூடாது.. முதலில் கோழைத்தனமான இந்த அழுகையைத் தவிர்த்தாக வேண்டும்.. என்று தீர்மானித்துக் கொண்டவள்.. அதைச் செயல் படுத்தும் விதமாக அவனிடம் தைரியமாகப் பேசி விட்டாள்..

நான் உனது எஜமான் என்கிற பாகுபாடில்லாமல் ஆதித்யன் அவளுடன் பழகியது தானே அவளை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டது..?, தான் அவனது வீட்டில் வேலை செய்யும் ஒரு சாதாரண வேலைக்காரப் பெண் தான் என்பதை நிரூபிக்கும் பொருட்டு அவனைச் சின்னைய்யா என்று அழைத்தாள்.. இனியும் அப்படித் தான் அழைக்கப் போகிறாள்.. இதை அவன் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி, தன் முடிவிலிருந்து பின் வாங்கிக் கொள்ளக் கூடாது எனத் தீர்மானித்துக் கொண்டு.. கண்களைத் துடைத்தபடி உள்ளே சென்றாள்..

அவள் சென்ற பின்பும் சில நிமிடங்கள் திகைத்து அவளது வீட்டு வாசலிலேயே நின்று விட்ட ஆதித்யனுக்கு பல வகையான எண்ணங்கள் எழுந்தது... ஏன் இப்படி பட்டும் படாமல் பேசி விட்டுச் செல்கிறாள்..?, சித்ரலேகா அவளை வேலைக்காரி என்றதால் வந்த கோபமா..?, இல்லையே.. இந்தச் சில நாட்களாகவே இப்படித் தானே நடந்து கொள்கிறாள்..?,அது எப்போதிருந்து என்று அவனால் சரியாக யூகிக்க முடியவில்லை. (யூகித்திருந்தால் விடை கிடைத்திருக்கும்).

தண்ணீரில் தவறி விழுந்து காப்பாற்றப்பட்ட அன்று.. எதற்காக அப்படி எடுத்தெறிந்து பேசிக் கோபமாக நடந்து கொண்டாள்..?,இது வரை விடை கிடைக்காத இந்தக் கேள்விக்குப் பதிலாக இன்று நன்றி கூறி விட்டுச் செல்கிறாள்..! எதற்காக இப்படி நடந்து கொள்கிறாள்..?, ஏன் இந்த மாற்றம்..?

காரணம் கேட்டாலும் நிச்சயம் அவள் வெளிப் படுத்தப் போவதில்லை.. ச்ச, என்ற எரிச்சலுடன் வீட்டிற்குத் திரும்பினான்.

மறுநாள் அவளிடம் இதைப் பற்றி பேசி விட வேண்டுமென்று அவன் முடிவெடுத்த வேளை.. அவள் அவனது கண்ணில் படவேயில்லை.. அன்று மட்டுமல்லாது.. அடுத்த இரண்டு நாட்களுக்கு அவள் அவனது வீட்டுப் பக்கம் வரவேயில்லை..

மூன்றாம் நாள் மாலை குமரிம்மாவின் நச்சரிப்புத் தாங்காமல் ஆதித்யனே அவளைத் தேடிச் சென்றான்.. பின்னே! முதல் நாள் நடந்த அனைத்தையும் அவரும் பார்த்துக் கொண்டு தானே இருந்தார்..?, நீ தான் எதையோ சொல்லி அவளை மிரட்டி வைத்திருக்கிறாய்.. சென்று சமாதானப் படுத்தி அழைத்து வா.. சிறு பெண்ணுடன் சரிக்குச் சரியாக மல்லுக் கட்டிக் கொண்டு.. போடா.. அழைத்து வா..என்று கூற.. வேறு வழியில்லாமல் சென்றான்..

அவனுக்குக் கோபம் தான்.. காரணம் கூறாமல்.. வேண்டுமென்றே தவிர்ப்பவளைக் கண்டு...! ஆனாலும் தினமும் அவள் வளைய வரும் வீடு வெறுமையுடன் காட்சி தருவதைக் கண்டு பொறுக்க முடியாமல் தான் அவளை நாடிச் சென்றான்.

ஆதித்யனின் நினைவை அடியோடு அழித்தாக வேண்டுமெங்கிற எண்ணத்தில் அவனது வீட்டுப் பக்கம் செல்லாமல் முழுதாக இரண்டு நாட்களைக் கடத்தி விட்ட மதுமதி, மூன்றாம் நாள் அவனே தன்னைத் தேடி வந்ததும் ஆடித் தான் போனாள்..

அவளுடைய சிறிய வீட்டின் வளாகத்தில் போடப் பட்டிருக்கும் பூச்செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தவள்.. தெருமுனையில் அவன் கார் வருவதைக் கண்டு பதறி உள்ளே ஓடிச் சென்றாள்.. மதுமதியைக் காண்பதற்காக வந்திருந்த மல்லி கீரையை ஆய்ந்த வண்ணம் அமர்ந்திருக்க அவளிடம் சென்றவள்.. “மல்லி.. அ..அவர் வந்து கொண்டிருக்கிறார்.. நான்.. நான் வீட்டில் இல்லையென்று கூறி விடு..”என்று அவசர அவசரமாகக் கூற..

“எவர்..?”என்று மல்லி விழித்ததைக் கூட நின்று கேளாமல் வீட்டின் பின் புறத்திற்கு ஓடிச் சென்று விட்டாள். காரை நிறுத்தி விட்டு வேக நடையுடன் உள்ளே நுழைந்தவனைக் கண்டு மல்லி திகைக்க.. “நீ இங்கே தான் இருக்கிறாயா மல்லி..?”என்று வினவினான்.. “ஆ..ஆமாம்.. மதிக்காவை பார்க்க வந்தேன்..”என்றாள். “சரி.. மதி எங்கே...?”என்றவனிடம் உள்ளே பார்வையைச் செலுத்திய படி.. “அ..அது.. வந்து..”என்றவள் தயங்கியபடி நிற்க.. அவள் பார்வை சென்ற திசையைக் கண்டு விட்டுத் தானே உள்ளே சென்றான்..

வீட்டின் பின் புறத்தில் அமைக்கப்பட்டிருந்த கிணற்றின் அருகே விரல் நுனியில் தாவணியைக் கசக்கிய படி நின்று கொண்டிருந்தவளைக் கண்டதும்.. கோபம் அனைத்தும் வடிந்து போனது ஆதித்யனுக்கு.. பத்தாம் வகுப்பில் அவனிடம் பாடம் கற்க வந்த போதும் கூட.. முதல் நாள் இப்படித் தான் நின்று கொண்டிருந்தாள்.. ஆனால் அன்றுத் தன்னைக் கண்டதும் பயம் ஏற்படுவதாக் நேரடியாகவே தெரிவித்தவள்.. இன்று காரணம் கூறாமலேயே விலகி நிற்பதைக் கண்டு எரிச்சலும் கோபமும் வந்தது அவனுக்கு.

அருகே சென்று "மதுமதி.."என்றழைக்க.. அக்கா இல்லையென்று மல்லி கூறி விட்டால் மேலே விசாரிக்காமல் சென்று விடுவான் என்று எண்ணியிருந்த மதுமதி... அவன் அவளைத் தேடி வந்து அழைக்கவும் திடுக்கிட்டுத் திரும்பித் தடுமாறி.. கிணற்றின் உள்ளே விழப் போனாள்.. "ஏ..ஏய்.."என்றவன் சட்டென அருகே வந்து அவளைத் தாங்கிப் பிடிக்க.. பயத்தில் விதிர்விதிர்த்துப் போனவள்.. அவனது சட்டைக் காலரை இறுகப் பற்றினாள்..

நொடியில் அவளை விலக்கி நிறுத்தியவன்.. "உனக்கு இது தான் வேலையா மதி..?, அருவி,கிணறு என்று தேடித் தேடிப் போய் விழப் பார்க்கிறாயே..!, இவ்வளவு இடமிருக்கையில்.. கிணற்றின் அருகே சென்று ஏன் நிற்கிறாய்..?" என்று கடிந்து கொள்ள.. பதில் கூறாமல் தலை குனிந்தபடி நின்றிருந்தாள்..

அவள் தரையை ஆராய்ச்சி செய்து கொண்டு நிற்பதைக் கண்டவனுக்கு மேலும் எரிச்சலாகியது.. "நிலத்தை ஆராய்ந்து முடித்து விட்டாயா..?,தோராயாமாக எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்குமென்று நினைக்கிறாய்..?"என்று வினவ.. முதலில் புரியாமல் விழித்தவள்.. பின் அவனை முறைத்தாள்..

அவள் முறைத்ததும் குஷியாகி விட்டவன்.. "பின்னே என்ன மதி..?, நான் வாய் திறந்து பேச ஆரம்பித்தாலே.. நீ தரையைத் தான் பார்க்கிறாய்.. சரி,ஆராய்ச்சி ஏதும் செய்கிறாயோ என்று கேள்வி கேட்டால் என்னை முறைக்கிறாய்..?"என்று சிரிப்புடன் வினவ.. இந்த முறை தலை குனியாமல் மறுபுறம் திரும்பி நின்று கொண்டாள்...

பின்னே?,இந்தச் சிரிப்பையும்,இந்தக் குரலையும் கேட்கக் கூடாது என்பதற்காகத் தானே இரண்டு நாட்களாக.. அவன் வீடிருக்கும் பக்கம் கூட அவள் பார்வையைச் செலுத்தவில்லை.. இன்று அவனாகவே தேடி வந்ததோடு நில்லாது.. கேலி பேசி அவளைச் சிரிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபடவும்.. எங்கே மனம் மறுபடியும் அவன் புறம் சாய ஆரம்பித்து விடுமோ என்ற பயத்தில் அவன் முகம் பாராமல் திரும்பி நின்று கொண்டாள்..

அவள் பதில் பேசாமல் நிற்பதைக் கண்டவன்.. சில நிமிடங்கள் இடைவெளி விட்டுப் பின்.. "மதி..."என்று மென் குரலில் அழைத்தவன்.. தொடர்ந்து "அன்று

சித்ரலேகா பேசியதற்குத் தான் நான் மன்னிப்புக் கேட்டு விட்டேனே.. நீ எதற்காக வீட்டிற்கு வராமல் இருக்கிறாய்..?, நீ இல்லாததால் அம்மாவிற்குக் கை ஒடிந்தது போல் இருக்கிறதாம்.. வா மதி.. வீட்டிற்குச் செல்லலாம்..''என்று கூற...

அவசரமாக மறுத்துத் தலையசைத்தவள்.. "இ..இல்லை எனக்கு வீட்டில் வேலை இருக்கிறது..''என்று கூற... அதில் கோபமுற்றவன்.. "அப்படியென்ன வேலை இருக்கிறது..?,இத்தனை நாட்களாக இல்லாத வேலை..?, மதி நீ என்னைக் கோபப்படுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறாயா..?, நானும் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.. சில நாட்களாக உன்னில் தெரியும் மாற்றத்தையும்,நீ என்னைத் தவிர்ப்பதையும்.. அப்படியென்ன கெடுதல் செய்து விட்டேன் நான் உனக்கு..?, எதுவாயிருந்தாலும் நீ காரணத்தைக் கூற வேண்டுமல்லவா மதி.. திடீரென்று நீ இப்படி நடந்து கொண்டாயானால்.. நான் என்னவென்று நினைத்துக் கொள்ளட்டும்..?, உன் தந்தையிடம்,என் அன்னையிடம் கூட விசாரித்துப் பார்த்து விட்டேன்... யாருக்கும் எதுவும் தெரியவில்லை.. உனக்கு என்னப் பிரச்சனை மதி..?, என்னிடம் கூறு.. முடிவில்லாத பிரச்சனைகளே உலகத்தில் இல்லை.. சொல் மதி..''என்றான்..

என்னவென்று கூறுவாள்..?, நீ என்னிடம் காட்டிய அக்கறையிலும்,அன்பிலும் நான் உன் மீது காதல் கொண்டு விட்டேனடா மடையா என்றா கூற முடியும்..? அவளையும் ஒரு ஜீவனாக மதித்து.. வீடு தேடி வந்து அவளது பிரச்சனைகளை விசாரிக்கும் அளவிற்கு.. அவளுக்கு அவனிடம் செல்வாக்கு இருக்கிறது.. அவன் மனதில் மதி உயர்ந்த இடத்தில் இருப்பதால் தானே.. வேலைகளுக்கு மத்தியில் அவளையும் காண வந்திருக்கிறான்..?, அப்படிப் பட்டவனுக்கு உண்மை தெரிய வந்தால்.. நிச்சயம் மதுமதியின் முகத்தில் விழிக்கக் கூட விரும்ப மாட்டான்...

அந்த சித்ரலேகா கூறினாளே.. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிக்கும் ரகமென்று.. அந்தப் பட்டியலில் மதுமதியின் பெயரைச் சேர்த்து விட்டு... அவளை முற்றிலுமாகத் தலை முழுகி விடுவான்.. அவன் மனதில் அவளைப் பற்றி.. இப்போதிருக்கும் நல்ல எண்ணங்கள் கூட அழிந்து போனாலும் ஆச்சரியப் படுவதிற்கில்லை.. அதனால் மதி.. எந்தக் காரணத்தைக் கொண்டும் உன் மனதில் இருக்கும் ஆசைகளை வெளிப் படுத்தி விடாதே.. என்று தனக்குத் தானே தீர்மானித்துக் கொண்டு... அவன் முகத்தைப் பாராமல்.. அவனது கழுத்துச் சங்கிலியில் பார்வை பதித்து..

"நீ.. நீங்கள் நினைக்குமளவிற்கு.. எனக்கு எந்தப் பிரச்சனையுமில்லை.. சின்னம்மா என்னைத் திட்டியதில் எனக்கு எந்தக் கோபமும் இல்லை.. தவறு என் மீது தானே.. அனைத்திலும்! அதனால் அவர்கள் திட்டியதை நான் பெரிது

படுத்தவில்லை.. இரண்டு நாட்களாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்ததால் தான் வர முடியவில்லை.. மற்றபடி.. நீங்கள் கவலை கொள்ளும் அளவிற்கு எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை சின்னைய்யா..” என்று அவள் முடித்ததும்.. அவளது கடைசி வார்த்தையைக் கண்டு சினம் கொண்டான் ஆதித்யன்..

“இத்தனை நாட்களாக இல்லாது.. இது என்ன புதுப் பழக்கம்.. சின்னைய்யா என்கிறாய்..?,”என்று வினவ.. “எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் முதலாளி நீங்கள்.. உங்களை அய்யா என்றழைப்பது தான் மரியாதை..”என்றாள் சின்னக் குரலில்..

“ஆமாம்.. இத்தனை நாட்களாக இல்லாத மரியாதை இப்போது திடீரென எங்கிருந்தோ முளைத்து விட்டது... என்ன..?, மதி.. உனக்கு ஏதோ பிரச்சனை இருக்கிறது.. ஆனால் என்னிடமிருந்து மறைக்கப் பார்க்கிறாய்.. அது சித்ரலேகா பேசிய பேச்சினால் உண்டானதென்றால்.. தயவு செய்து அதை மறந்து விடு.. எனக்காக..”என்று பொறுமையுடன் விளக்கியவன்.. அவள் பதிலற்று நிற்பதைக் கண்டு.. அருகே சென்று அவள் தோளைப் பற்றி.. முகத்தை நிமிர்த்தி.. “என்ன மதி.. என்ன செய்கிறது உனக்கு...?”என்று வினவ.. கண்கள் குளம் கட்டத் துவங்கி விட்டது மதுமதிக்கு..

அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு.. அழுது தீர்க்க வேண்டுமென்று வேகம் எழுந்தது அவளுக்குள்.. உன் ஒரு விரல் தீண்டலாகவே இருந்தாலும் கூட.. அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் மன திடம் எனக்கு இல்லை.. திகு திகுவென நெருப்பு பற்றிக் கொள்வதைப் போல்.. உன் தீண்டல்.. உடல் முழுதும் அனலை மூட்டி விடுகிறது.. வேண்டாம்.. தயவு செய்து விலகி விடு.. என்று கண் மூடி அவனிடம் மானசீகமாக வேண்டிக் கொண்டவள்.. சட்டென அவனை விட்டு விலகிச் செல்ல நினைத்தாள்..

“மதி.. நில்..”என்று அவள் கையைப் பற்றி நிறுத்தியவன்.. “நீ உன் இஷ்டப் படி எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்.. ஆனால்.. வீட்டிற்கு வராமல் பிடிவாதம் பிடித்துக் கொண்டு.. அனைவரையும் கஷ்டப் படுத்தாதே..”என்றவன் சிறிது இடைவெளி விட்டு.. “உன்னை வீட்டில் விட்டு விட்டுச் செல்கிறேன்.. வா..”என்றழைத்தான்..

முதலில் சிறிது தயங்கியவள்.. பின் அவனுடன் புறப்பட்டு விட்டாள்.. அவளுக்குமே.. குமரிம்மாவைப் பார்க்க வேண்டுமெங்கிற ஆசை இருந்ததால் மறுக்காமல் கிளம்பி விட்டாள்.. அப்படியே மறுத்திருந்தாலும்.. மேலும் அரை மணி நேரம் பேசி.. சண்டையிட்டு அவன் அழைத்துச் சென்றிருப்பான்.. அவன் அருகாமையைச் சகித்துக் கொண்டு.. தன் எண்ணங்களுடனே போராடிக் கொண்டு நிற்பதற்கு.. அவன் சொல்படி சென்று விடலாமென்று புறப்பட்டு

விட்டாள்.. மல்லியையும் அழைத்துக் கொண்டு.. வீட்டை நோக்கிப் புறப்பட்டவன்.. இருவரையும் வீட்டில் இறக்கி விட்டு விட்டு எஸ்டேட்டிற்குச் சென்றான்.. ஆதித்யனின் காரில் வந்திறங்கிய மதுமதியைப் பொங்கிய கோபத்துடன் பால்கனியில் நின்று முறைத்துக் கொண்டிருந்தாள் சித்ரலேகா..

அவன் சென்றதும் நேராக குமரியின் அறைக்குச் சென்றாள் மதுமதி.. அன்பரசுவும் அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டு "அப்பா.. நீங்கள் இன்னும் எஸ்டேட்டிற்குச் செல்லவில்லையா..?"என்று வினவினாள்.. "அம்மாவுடன் கணக்கு வழக்கைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன்.. இதோ கிளம்பி விட்டேன்.."என்றபடி எழுந்தார் அவர்.

"வாம்மா.. ஜான்சி ராணி.. கோபமெல்லாம் போய் விட்டதா..?,ஆனால் யார் மீது கோபப் பட்டுக் கொண்டு வீட்டிற்கு வராமல் இருந்தாய்..?, என்ன ஏதேன்று நீ இப்போதெல்லாம் நீ கூறுவதே இல்லை மதி.. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்றும் யூகிக்க முடியவில்லை.."என்று சலித்துக் கொள்ள.. "கோபமெல்லாம் இல்லை குமரிம்மா.. இரண்டு நாட்களாகக் காய்ச்சல்.. அதனால் தான்.."என்று சமாளித்தாள்..

"என்ன..?,காய்ச்சலா.. என்னடா மதி.. அப்பாவிடம் கூறவேயில்லையே.. இப்போதே மருத்துவரிடம் சென்று வரலாம் வா.."என்று அவர் அவளது கைப்பற்ற.. அவள் பதில் கூறும் முன் முந்திக் கொண்ட குமரி "உண்மையாக்வே காய்ச்சல் என்றால் தான் முன்னமே கூறியிருப்பாளே.. இது நான் கேள்வி கேட்டதற்காக வந்த திடீர்க் காய்ச்சல்.. இல்லையா மதி..?, பொய் சொல்வதற்கும் ஒரு முக லட்சணம் வேண்டும் தாயி.."என்று கூற.. "குமரிம்மா..."என்று செல்லம் கொஞ்சியபடி அவரருகே சென்று காலடியில் அமர்ந்தாள்..

"இந்தக் கொஞ்சல் எல்லாம் இரண்டு நாட்களாக உனக்கு மறந்து போய் விட்டது தானே..?,"என்று அவர் நொடித்துக் கொண்டதும் "என்னை மன்னித்து விடுங்கள் குமரிம்மா.. இனி இப்படி நடந்து கொள்ள மாட்டேன்.."என்று தாஜா செய்யத் தொடங்கினாள்.. இருவரையும் கண்டு சிரித்தபடி "நான் கிளம்புகிறேன் குமரிம்மா... வரேன் டா.."என்று புறப்பட்டார் அன்பரசு.

குமரியும்,மதியும் பேசிச் சிரிப்பதைக் கேட்டபடியே குமரியின் அறைக்குள் நுழைந்தாள் லேகா. "வாம்மா சித்ரா..,"என்று அவளை வரவேற்ற குமரி மதியிடம் திரும்பி.. "மதி.. ஆதித்யன் எஸ்டேட்டிற்குச் சென்ற பின் லேகாவிற்கு பொழுதே போகவில்லையாம்.. நீ தான் காடு,மலையெல்லாம் அலைவாயே.. இவளையும் அழைத்துச் செல்.."என்று கூற.. அவளைக் கண்டதும் முகம் கன்றத் தொடங்கிய மதுமதி.. எதுவும் கூறாமல் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்..

மாலையானதும் அவளிடம் வந்த லேகா.."மதி.. வாயேன்.. ரோஜாத் தோட்டம் வரை சென்று வருவோம்.."என்று அழைக்க.. விருப்பமில்லாவிட்டாலும் வேறு வழியின்றி அவளுடன் சென்றாள் மதுமதி. ஒன்றும் பேசாமல் தன்னுடன் நடந்து வருபவளை வெறித்த லேகா.. பின் "மதி.. நீ பன்னிரெண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்றாயாமே.. சென்னையில் நல்ல கல்லூரியில் படிக்க வாய்ப்பு கிடைத்தும் நீ மறுத்து விட்டதாக ஆதி அத்தான் கூறினாரே.. ஏன்..?"என்று விசாரித்தாள்..

என்னவென்று கூறுவாள்..?,உன் வருங்காலக் கணவன் மீது நான் கொண்ட காதல்.. அவனை விட்டு விலகிச் செல்ல விடவில்லையென்றா கூற முடியும்..?, தயங்கிபடி நிமிர்ந்தவள்.. "எனக்கு.. அப்பாவை விட்டும்,இந்த ஊரை விட்டும் செல்ல மனமில்லை.. அதனால் தான்.."என்று முடித்து விட.. "ஓஹோ.."என்றபடி செடிகளின் பக்கம் பார்வையைத் திருப்பியவள்.. "ரொம்ப வருடங்களாக இந்தத் தோட்டம் இருக்கிறதல்லவா..?,பூக்களைப் பறிக்கலாம் தானே..?"என்று வினவியவள்.. ஆதித்யனின் கார் வீட்டிற்குள் நுழைவதைக் கண்டு.. ஒரு ரோஜாவைப் பறித்துக் கொண்டு அவனருகே ஓடினாள்..

அதற்குள் அவனும் அவளருகே வந்து விட.. சிரித்தபடி அவனிடம் ரோஜாவை நீட்டி.. "இது உங்களுக்காகத் தான் அத்தான்.."என்றவள் அவன் பெற்றுக் கொண்டதும் அவன் கன்னத்தில் முத்தமிட்டு.. "ஐ மிஸ்ட் யூ அத்தான்.."என்று அவன் தோள் சாய்ந்து கொள்ள.. கஷ்டப்பட்டுப் பார்வையை வேறு புறம் திருப்பிய மதுமதி.. உள்ளே செல்ல எத்தனித்தாள்..

லேகா தன்னை முத்தமிட்டதும் அவளை முறைத்த ஆதித்யன்.. "சின்னப் பெண் முன்பு எப்படி நடந்து கொள்கிறாய்..?,அறிவில்லையா உனக்கு..?"என்று கடிந்து கொள்ள.. "சின்னப் பெண்ணா..?,அவள் சின்னப் பெண்ணா..?,அனைத்தும் புரிவதால் தான் இங்கேயிருந்து செல்லப் பார்க்கிறாள்.."என்று கூறியவள்.. "மதி.."என்று அவளை அழைத்து.. "நானும் அத்தானும் சிறிது நேரம் இங்கேயே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.. எங்கள் இருவருக்கும் டீ கொண்டு வா.." என்று ஆணையிட.. திரும்பிப் பாராமல் சரியென்று தலையாட்டியவள்.. உள்ளே சென்றாள்.

தேநீர் தயாரனதும் மல்லியை அழைத்து தோட்டத்தில் அமர்ந்திருக்கும் அவர்களிருவருக்கும் இதைக் கொண்டு போய் கொடுக்குமாறு அவள் கூற.. மல்லியும் தட்டை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள்.. மீண்டும் அவர்கள் முன்னே சென்று.. விஷப் பரீட்சை செய்ய அவள் விரும்பவில்லை.. எப்போதும் அவனை உரசிய படியே சுற்றித் திரியும் லேகாவைக் கண்டு உள்ளே பொறாமை எழுவதைத் தடுக்கவும் முடியவில்லை.. இந்தக் கண்றாவிக்காகத் தான் அவள் இந்த வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்காமல் காலம் கடத்தினாள்.. அதற்கும் வழியில்லாமல் செய்து விட்டான் அந்தப்

புண்ணியவான்! இதையெல்லாம் சகித்துக் கொள்வதற்கும் சக்தியில்லை.. என்ன தான் செய்வதோ! என்று தலையில் கை வைத்தபடி அடுக்களையில் அமர்ந்து விட்டாள்..

அங்கே மல்லியோ.. லேகாவிடம் அவஸ்தை பட்டுக் கொண்டிருந்தாள்.. தேநீர் எடுத்து வாவென மதுமதியிடம் தான் ஆணையிட.. ஆனால் அவளோ.. மல்லியை அனுப்பி விட்டதைக் கண்டு கோபம் வந்து விட்டது அவளுக்கு.. அவளுக்கு அளிக்கப் பட்ட வேலையை அவள் செய்யாமல் இது என்ன மல்லியை அனுப்பி வைத்திருக்கிறாள்.... வீட்டில் அனைவரும் அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினால்... ஆடத் தான் செய்வாள் என்று நினைத்துக் கொண்டவள்.. மல்லியிடம் "அவளிடம் கொண்டு வரச் சொன்னால் உன்னை அனுப்பியிருக்கிறாளா..?, ஏன்..?,அப்படியென்ன முக்கியமான வேலையில் இருக்கிறாள்..?, போ.. சென்று அவளையே நான் எடுத்து வரச் சொன்னதாகச் சொல்.."என்று திருப்பி அனுப்பினாள்.. ஆதித்யனின் அலைபேசி அழைத்ததால்.. அவன் விலகிச் சென்றது அவளுக்கு அனுகூலமாகிப் போனது.. அதனால் தனது அதிகாரத்தை மல்லியிடம் செலுத்திக் கொண்டிருந்தாள்..

சென்ற சிறிது நேரத்தில் கொண்டு சென்ற தேநீர் கோப்பைகளோடு திரும்பி வந்த மல்லியைக் கண்டு திகைத்த மதுமதி.. "என்ன மல்லி.. அவர்களிருவரும் அங்கே இல்லையா..?, டீ அப்படியே இருக்கிறது.."என்று வினவ.. அதற்கு மல்லி.. "அக்கா.. இதை நீயே எடுத்துச் செல்.. லேகா அக்கா என்னை திருப்பி அனுப்பி விட்டார்கள்.."என்றவள் அங்கே நடந்ததை அப்படியே தெரிவித்தாள்..

"சரி, நானே செல்கிறேன், கொடு.."என்று வாங்கிக் கொண்டவள் தோட்டத்திற்குச் சென்றாள்.. அப்போது ஆதித்யனும் அலைபேசியில் தனது உரையாடலை முடித்துக் கொண்டு அருகே வந்தான்.. மதியைக் கண்டதும் புருவம் சுருக்கியவன்.. "நான் ஃபோன் பேசச் சென்ற போது மல்லி தானே தட்டை ஏந்திக் கொண்டு வந்தாள்...?,"என்று வினவ..

"அது.. அவள் சக்கரை எடுத்து வர மறந்து விட்டாளென்று நான் தான் அவளைத் திருப்பி அனுப்பினேன்.."என்றாள் லேகா. "ஓ!"என்றவன்.. மதுமதி கொடுத்த டீக் கோப்பைகளை பெற்றுக் கொண்டபடி.. "மதி.. நீயும் அருந்து.. உட்கார்.."என்று விலகி அமர.. "இ..இல்லை நான்... குமரிம்மா என்னை அழைத்தார்கள்.. நான் செல்ல வேண்டும்"என்று கூறிய படி லேகாவிடம் தட்டை நீட்டினாள்.. அவள் தன்னை உறுத்து விழிப்பதை உணர்ந்தாலும் தலை நிமிராமல் கோப்பையைக் கொடுத்து விட்டு ஓடிச் சென்று விட்டாள்.

அவள் செல்வதைக் கண்ட ஆதித்யன்.. லேகாவிடம் "சும்மாவே அவள் என் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூச்சப் படுவாள்.. இன்று அவள் முன்னே செய்த

காரியத்திற்கு.. நிச்சயம் என் சட்டைப் பட்டனைக் கடந்து அவள் பார்வை இனி செல்லாது..”என்று சிரித்தபடி கூற.. அவனை வித்தியாசமாக நோக்கிய லேகா..

“அவள் உங்கள் முகத்தைப் பார்த்தால் என்ன.. பார்க்காவிட்டால் என்ன..?, அவளுக்காக நான் உங்களை முத்தமிடாமல் இருக்க வேண்டுமா..?, அத்தான்.. என்ன தான் சொல்ல வருகிறீர்கள்..?”என்று பொறுமையற்று வினவ.. “அய்யோ! நீ வேறு ஆரம்பித்து விடாதே தாயே.. நான் ஒன்றும் சொல்ல வரவில்லை.. உள்ளே செல்லலாம் வா..”என்றழைத்துக் கொண்டு சென்றான்..



## அத்தியாயம் - 9



**உன் மார்பில் சாய்ந்து..**
**குளிர் காய ஆசையில்லை..**
**உன் கைகளில் முகம் புதைத்து..**
**அழுதால் மட்டும் போதும்!**

“**ஏ**ன்டி முகத்தை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறாய்..?,காலையில் சாப்பிட்ட பருப்பு அடை செரிக்கவில்லையா..?”என்று அந்த அறையில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து ஒய்யாரமாக ஆடியபடி மகளைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள் மீனாம்பாள். “ஆனாலும்.. இந்த வீட்டுச் சாப்பாட்டை சாப்பிடுவதற்கே அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்.. என்ன ஒரு சுவையான போஜனம் ஒவ்வொரு வேளையும்..!”என்று சப்புக் கொட்டிக் கொண்டவரை அருவெறுப்புடன் நோக்கினாள் சித்ரலேகா.

“அம்மா.. இதுவரை நல்ல சாப்பாடே சாப்பிட்டதேயில்லை..?,ஏன் இப்படி மாறிப் போனாய்..?”என்று எரிச்சலுடன் வினவ.. “அடியேய்.. இந்த வீட்டுச் சாப்பாட்டிற்கும்,நம் வீட்டுச் சாப்பாட்டுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.. சொற்ப வருமானம் தரும் உன் அப்பாவின் எஸ்டேட்டை வைத்துக் கொண்டு வக்கணையாகவா இத்தனை நாட்களாக உண்டு வந்தோம்...?, ஏதோ.. அந்த வீட்டையும்,காரையும் உன் தாத்தா விட்டு வைத்ததால்.. பந்தாவாகப் பிழைத்துக் கொண்டிருக்கிறோம்.. ஆனால் இனி அந்தப் பிரச்சனையே இல்லை.. நீ தான் இந்த வீட்டின் மகாராணியாகப் போகிறாயே.. உன்னை வைத்து நானும்,உன் அப்பாவும் பிழைத்துக் கொள்வோம்..”என்று வாய் நிறைய பல்லாகச் சிரித்தவரிடம்.. “ம்க்கும்” என்று நொடித்துக் கொண்ட லேகா..

“அதற்கும் ஆப்பு வைத்து விடுவாள் போலும் அந்த மதுமதி..”என்று கூற.. “மதுமதியா..?”என்று புருவத்தைச் சுருக்கிய மீனாம்பாள்.. பின்பு வாய் விட்டுச் சிரித்து “அந்த வேலைக்காரப் பெண்ணா உன் வாழ்க்கையைக் கெடுத்து விடுவாள் என்று நினைக்கிறாய்..?”என்று வினவினார்.

“அம்மா.. அவளைச் சாதாரண வேலைக்காரப் பெண் என்று தீர்மானித்து விட முடியாது.. இந்த வீட்டில் அத்தை மற்றும் அத்தானின் மகத்தான செல்வாக்கைப் பெற்றிருக்கிறாள்.. அவளைப் பற்றித் தவறாகப் பேசினால்..

இருவரும் சீறுகிறார்கள்.. நாம் நினைக்கும் அளவிற்கு அவள் சாமானியப் பெண் இல்லை அம்மா.. சாந்தமாக முகத்தை வைத்துக் கொண்டு அவள் அத்தானையே வளைத்துப் போட்டு விடுவாள் போலும்.. அவள் இந்த வீட்டை விட்டுச் சென்றாள் தான் எனக்கு நிம்மதி.. அதற்கு ஏதேனும் வழி கூறு..”என்றாள்.

“லேகா.. உன் சந்தேகம் வீணானது.. ஆதி அம்மாவின் பேச்சைக் கேட்கும் உத்தமன்.. ரம்பையே வந்து மயக்கினாலும் அவன் அசர மாட்டான்.. உன்னை குமரிக்குப் பிடிக்கும் என்பதை முன்னமே அறிந்ததால் தான் அவன் உன்னுடன் நெருக்கமாகப் பழகியதே.. மற்றபடி அவன் மிக மிக ஒழுக்கமானவன்.. அப்படியே அவன் தவறு செய்பவன் என்று வைத்துக் கொண்டாலும்.. லேகா... பணக்காரப் பையன் என்றால்.. கொஞ்சம் அப்படி,இப்படி இருக்கத் தான் செய்வான்.. நீ அதையெல்லாம் பொறுத்துக் கொள்வது தான் நல்லது..”ஏன்று கூற.. கோபத்தில் பொங்கி விட்டாள் லேகா..

“இப்படியெல்லாம் பேச உனக்கு வெட்கமாக இல்லை..?, நீ பெற்ற பெண்ணை விட உனக்கு பணம் தான் முக்கியமா..?, ஒழுக்கமில்லாத ஒருவனை நான் நிச்சயம் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்.. ஞாபகம் வைத்துக் கொள்..”என்று சீற.. அதில் பயந்து போன மீனாம்பாள்.. “லேகா.. லேகாம்மா.. இங்கே அமரு..”எனக் கூறி அவளை அருகே அமர்த்திக் கொண்டவள்.. பின் பொறுமையுடன்..

“அம்மா.. உனக்குக் கெடுதல் செய்வேனா கண்ணா..?, நீ நினைப்பது போல் மதுமதிக்கும் ஆதிக்கும் இடையே எந்தவொரு தப்பான உறவும் இருப்பதற்கு வாய்ப்பில்லை.. எதை வைத்து நீ இப்படியொரு பழியை ஆதியின் மீது போடுகிறாய்..?என்று வினவ.. “அம்மா.. அந்த மதுமதியின் பார்வையும்.. அவள் ஆதியிடம் பேசும் விதமும் சரியே இல்லை.. அதைப் போல்.. ஆதியும் அவளுக்கு ஏதாவது ஒன்றென்றால் துடித்துப் போய் விடுகிறார்.. கேட்டால்.. பிறந்ததிலிருந்து இங்கே தான் வளர்கிறாள்.. அதனால் விளைந்த பாசம் என்கிறார்.. நம்பும் படியாகவா உள்ளது..?”என்று அன்னையிடமே வினவினாள் லேகா.

“அவன் கூறியபடியே கூட இருக்கலாமே லேகாம்மா.. சிறு வயதிலிருந்து அவள் அவனுடன் வளர்ந்ததால்.. அவனுக்கு விளைந்த சகோதரப் பாசமாகக் கூட இருக்கலாம்.. இதை எதற்காகப் பெரிது படுத்துகிறாய்..?, லேகா... குமரியின் வளர்ப்பைப் பற்றி உனக்குத் தெரியாது.. ஆதி நிச்சயம் தவறு புரிபவனாக இருக்க முடியாது..”என்று உறுதியாகக் கூற..

மறுத்துத் தலையசைத்தவள்.. “அம்மா.. ஆதி அத்தான் நல்லவராகவே இருந்து விட்டுப் போகட்டும்.. ஆனால்.. எனக்கு.. எனக்கு அந்த மதுமதியைப்

பிடிக்கவில்லை.. என்னை விட அவளுக்குத் தான் இந்த வீட்டிலும், அவர்களிடத்திலும் செல்வாக்கு அதிகமுள்ளது.. அது எனக்குப் பிடிக்கவில்லை.. என் வருங்காலக் கணவன் வேறு ஒருத்தியின் மீது பாசமாக இருப்பதை நான் விரும்பவில்லை.. அவள் இங்கேயிருந்து சென்றால் தான் எனக்கு நிம்மதி.. எப்படியேனும் அவளை இங்கேயிருந்து துரத்தியாக வேண்டும் அம்மா..”என்று கூறினாள்.. மகளின் முகத்தை யோசனையுடன் பார்த்தவர் பின் “சரி தான்.. அவளை இங்கேயிருந்து துரத்துவதற்கு சீக்கிரம் ஏதேனும் வழி செய்யலாம்..”என்று முடித்தார். இருவரின் கோபத்தையும் அதிகப்படுத்தும் சம்பவம் அன்றிரவே நடந்தேறியது.

அன்றைய இரவு உணவின் போது.. அனைவரும் சாப்பிட அமர.. டைனிங் டேபிளில் கிண்ணங்களை அடுக்கி வைத்து விட்டு உள்ளே செல்ல எத்தனித்தாள் மதுமதி. “மதி நில்.. நீயும் அமர்ந்து சாப்பிடு.. தினமும் இரவு நீ இங்கேயும் சாப்பிட்டுச் செல்வதில்லை.. வீட்டிற்கு சென்றும் சாப்பிடுவதில்லையென்று உன் அப்பா கூறுகிறார்.. இங்கே வா.. உட்கார்..”என்று அவளை அழைத்துத் தன்னருகே அமரச் செய்தார் குமரி..

“அப்படியெல்லாம் இல்லை குமரிம்மா.. நான் தினமும் இரவு வீட்டிற்கு சென்று சாப்பிடுகிறேனே.. ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்..?,பொய் சொல்லவில்லை குமரிம்மா..”என்றவள் தொடர்ந்து “இப்போது பசியில்லை.. பிறகு மல்லியுடன் சேர்ந்து சாப்பிட்டுக் கொள்கிறேனே..”என்று தயங்கினாள்..

அவளுக்குத் தயக்கம் தான்.. மீனாம்பாளும்,சித்ரலேகாவும் ஏதோ கேட்காததைக் கேட்டு விட்டது போல்.. ஆச்சரியமாக குமரியையும்,மதியையும் மாறி மாறி நோக்கிக் கொண்டிருந்தனர். வீட்டில் வேலை செய்பவளை தனக்குச் சரியாக அமர்ந்து சாப்பிட அமரும் எஜமானியைக் கண்டால் அவர்கள் ஆச்சரியம் கொள்ளத் தானே செய்வார்கள்..?

தயங்கி அவள் நிற்பதைக் கண்டு ஆதித்யன் “மதி.. அம்மா அழைக்கிறார்களல்லவா..?,வந்து அமரு..”என்று அதட்ட.. வேறு வழியின்றி மெல்ல நடந்து சென்று குமரியின் அருகே அமர்ந்தாள்.. உணவு பரிமாறப் பட்டதும் அனைவரும் சாப்பிடத் துவங்க.. காலையிலிருந்து எதுவும் சாப்பிடாததில்.. உணவை வாயில் வைத்ததும் விக்கத் துவங்கியது அவளுக்கு.. விக்குவதைப் பொருட்படுத்தாது.. அவள் வேகமாக உண்டு முடிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தில்.. மேலும் மேலும் உணவை வாயில் அடைத்தாள்..

அவள் விக்குவதைக் கண்ட ஆதித்யன்.. “விக்குகிறதல்லவா மதி..?, தண்ணீர் குடிக்காமல் உண்டு கொண்டிருக்கிறாய்..?”என்றபடி.. டம்ளரில் தண்ணீரை ஊற்றி.. அவளிடம் நீட்டினான்.. அவள் வந்து ஆதிக்கும்,குமரிக்கும் நடுவில் அமர்ந்ததுமே எரியத் துவங்கி விட்ட லேகாவிற்கு.. இந்தக் காட்சியைக் கண்டு

தீ ஜ்வாலைக்குள் மூழ்கி விட்ட உணர்வு.. கோபத்தில் சிவந்த விழிகளுடன் அவர்களிருவரையும் வெறித்துக் கொண்டிருந்த மகளைக் கண்ட மீனாம்பாளுக்கும் அவர்களைக் கண்டு ஆச்சரியம் தான்.. என்ன இது..?, தாயும், மகனும் ஒரு வேலைக்காரப் பெண்ணைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள் என்று..!

அவன் நீட்டிய டம்ளரை வாங்கிப் பருகிய மதிக்குத் தான் அவனது அக்கறைத் தேனாக இனித்தது... வேண்டாம்,வேண்டாமென்று எவ்வளவு தூரம் விலகிப் போனாலும்.. இந்தக் காதல் அவனது ஒரு செயலில் ஓடி வந்து அணைத்துக் கொள்கிறது.. என்று எண்ணமிட்டபடி அமர்ந்திருந்தாள்.

அவளையே கோப விழிகளால் நோக்கிக் கொண்டிருந்த லேகா.. பின் “தயிர்க் கிண்ணம் எங்கேயிருக்கிறது..?”என்று கூறியபடி தேடுவதைப் போல் எழுந்தவள்.. தன்னருகே இருந்த கிண்ணத்தை மதி எடுக்கும் முன் தான் முந்திக் கொண்டு.. எடுப்பது போல் நடித்து.. அதை அவள் மீதே கவிழ்த்தினாள்..

கிண்ணத்திலிருந்த தயிர் முழுதும் மதியின் மீது சிதறி விட.. “அய்யோ..”என்று எழுந்தவளிடம் “சாரி மதி... தெரியாமல் பட்டு விட்டது.. என்னை மன்னித்து விடு..”என்றவள் தொடர்ந்து “வா.. கழுவிக் கொள்ளலாம்..”என்று அவளைத் தானே அழைத்துச் சென்றாள்..

மதுமதித் தன் ஆடையை அலசும் வரை பொறுத்திருந்தவள்.. அவள் தன் புறம் திரும்பி தயங்கித் தயங்கி லேசாக முறுவலித்ததும்.. அவளை உறுத்து நோக்கினாள்.. பாசமாக அழைத்து வந்தவள் எதற்காக இப்போது முறைக்கிறாள் என்று காரணம் அறியாத மதுமதி விழிக்க.. அவளருகே வந்தவள்.. :மீதிச் சாப்பாட்டை இங்கேயே அமர்ந்து சாப்பிடு என்ன..?”என்று கூற.. அவளது பேச்சையும்,பார்வையையும் கண்டு திகைத்தாள் மதுமதி.

“என்ன அப்படிப் பார்க்கிறாய்..?, வேண்டுமென்றே தான் உன் மீது தயிரைக் கொட்டி விட்டேன்.. எங்களுடன் சரிக்குச் சரியாக அமர்ந்து சாப்பிடுமளவிற்கு உனக்கு எந்தத் தகுதியும் இல்லை.. இதை என்றைக்கும் நினைவில் வைத்துக் கொள்..”என்று மிரட்டி விட்டுச் சென்றாள்.. எதற்காக அவள் தன்னிடம் குரூரமாக நடந்து கொள்கிறாள் என்று புரியாமல் மேலும் திகைத்தபடி நின்றிருந்தாள் மதுமதி.

மதுமதியை மிரட்டி விட்டு சாப்பாட்டு அறையை நோக்கி வந்தவளிடம் “மதி எங்கே..?”என்று குமரியும்,ஆதியும் வினவ.. “அவள் அலசிக் கொண்டிருக்கிறாள்.. வந்து விடுவாள்.. நீங்கள் சாப்பிடுங்கள்..”எனக் கூறி அமர்ந்தாள்.. அதற்குள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு குமரிம்ம எழுந்து விட.. அவரைத் தொடர்ந்து ஆதியும் எழுந்தான்.. “மதி வந்ததும் அவளை நன்றாகச் சாப்பிட வைத்து விடு

லேகா.. அவள் ஒரு மாதிரி ரோஷம் பார்ப்பவள்.. அவள் இங்கே அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள்.. ஆனால் எதையும் வாங்கிக் கொள்ள மாட்டாள்..”என்று சிரித்து விட்டு ஆதித்யன் சென்று விட்டான்.

அத்தை,அத்தானின் முன்பு சிரித்து வைத்த லேகா.. அவர்கள் சென்ற பின் பல்லைக் கடித்தாள்.. என்ன பெரிய பாசம் இவனுக்கு அவள் மீது! ரொம்பவும் தான் உருகுகிறான்.. இந்த அன்பை உடைத்து.. உன்னைத் துரத்துகிறேன் மதுமதி.. என்று கறுவிக் கொண்டாள்..

அன்று இரவு முழுதையும் தூங்காமல் கழித்த மதுமதி.. லேகாவின் கோபத்தையும், குமரி,ஆதித்யனின் அக்கறையையும் எண்ணியபடியே படுத்திருந்தாள்.. வருங்காலக் கணவனும்,மாமியாரும் ஒரு சாதாரண வேலைக்காரப் பெண்ணிடம் அக்கறைக் காட்டுவதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை போலும்.. என்னவாக இருந்தாலும் சரி! இன்னும் 15 நாட்கள் தான்.. கல்லூரி திறந்து விடும்.. அதன் பின் படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்தி.. நல்ல மதிப்பெண்கள் பெற்று.. வெளியூரில் நல்ல வேலையில் சேர்ந்து விட வேண்டும்.. அந்த வீட்டிற்குச் சென்று லேகாவின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்து கொண்டாள்.

இங்கே லேகாவோ.. வேறு மாதிரி யோசித்துக் கொண்டிருந்தாள்.. அவளைப் பொறுத்தவரை மதுமதியை அந்த வீட்டை விட்டு அனுப்பியாக வேண்டுமென்பது முடிவு செய்யப்பட்ட ஒன்றாகி விட்டது. ஆனால் அதற்கு முன்.. எதற்கெடுத்தாலும் மதுமதியை நாடும் குமரி மற்றும் ஆதித்யனை மாற்றியாக வேண்டும்.. இனி எதற்கும் அவர்கள் அவளை அணுகக் கூடாது.. மருமகள் என்கிற பெயரில் இந்த வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டால் தான் நினைத்ததை நிறைவேற்ற முடியும்.. மதுமதியிலிருந்து ஆரம்பித்து எஸ்டேட் வரை! முதல் வேலை மதுமதியைத் துரத்துவது தான்..

எண்ணியதை செயல்படுத்தும் விதமாக.. மறுநாள் காலை சீக்கிரமாகவே துயில் எழுந்து விட்டவள்.. குமரிக்குத் தானே தேநீர் தயாரித்துக் எடுத்துக் கொண்டு அவரது அறைக்குச் சென்றாள். “அத்தை.. இந்தாருங்கள்.. நானே தயாரித்த தேநீர்..”என்று நீட்ட.. மருமகள் அக்கறையாகத் தன்னைக் கவனித்துக் கொள்வதை எண்ணி மகிழ்ந்தவர்.. “நீ எதற்காக உன்னைச் சிரமப்படுத்திக் கொள்கிறாய் சித்ரா.. மதியிடமோ,மல்லியிடமோ கொடுத்தனுப்ப வேண்டியது தானே..?”என்று கூற.. “ம்ஹ்ம்.. இனி உங்களுக்குத் தேவையான அனைத்தையும் நானே தான் செய்யப் போகிறேன்.. என்றானாலும் நான் தானே அத்தை இவையனைத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.. இப்போதிருந்தே ஆரம்பித்து விடுகிறேன்.. சரி தானே.., நீங்கள் இதை அருந்துங்கள்.. நான்

அத்தானுக்கு சத்து மாவுக் கஞ்சி எடுத்துச் செல்கிறேன்..”என்று விடைபெற்றாள்.
ஆதியின் அறைக்குள் கஞ்சியுடன் நுழைந்தவளை.. அவன் ஆச்சரியமாக நோக்கினான். “ஏய்.. வாயாடி.. நீ என்ன சீக்கிரம் எழுந்து விட்டாய்..?, பொதுவாக சூரியன் உச்சிக்கு வந்த பின் தானே கண் திறந்து பார்ப்பாய்..?”என்று கேலி செய்ய.. “அத்தான்..”என்று சிணுங்கியவள்.. “இனி நான் இந்த வீட்டு மருமகளாகவே மாறப் போகிறேன்.. உங்களுடைய,அத்தையுடைய தேவைகளை நானே கவனித்துக் கொள்ளப் போகிறேன்..”என்று தெரிவிக்க..

“அடேங்கப்பா!”என்று சிரித்தவன்.. “சரிதான்.. இனி உன் பொறுப்பான கவனிப்பில் சிக்கி நாங்கள் இருவரும் சின்னா பின்னமாகப் போகிறோமா..?, லேகா.. என்ன வேண்டுமானாலும் செய்.. ஆனால் தயவு செய்து.. நீங்கள் என் சமையலைத் தான் சாப்பிட்டாக வேண்டும் அத்தான் என்று சமையலில் மட்டும் இறங்கி விடாதே..”என்று அவன் கெஞ்சிக் கேட்க.. சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டவள்.. “ச்ச, இந்த ஐடியா எனக்கு தோன்றவேயில்லையே அத்தான்.. இப்போதே சென்று உங்களுக்குக் காலை உணவு சமைக்கிறேன்..”என்று கூற “அய்யோ தொலைந்தேன்..”என்று அலறினான் ஆதித்யன்.

ஆதித்யனின் அறையிலிருந்து சிரிப்புடன் வெளியே வந்தவளின் புன்னகை குமரியின் அறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மதுமதியைக் கண்டதும் உதட்டிலேயே உறைந்தது. “ஏய்.. நில்..”என்று அவளை நிறுத்தியவள் பின் “எங்கே செல்கிறாய்..?,கையில் என்ன....? டீயா..?,அத்தைக்கு நான் அப்போதே கொடுத்து விட்டேன்.. நீ சமையலறையில் வேறு ஏதும் வேலையிருந்தால் கவனி.. செல்..”என்று விரட்டினாள்..

“அ..அப்படியா..?,நா..நான் குமரிம்மாவை பார்த்து விட்டுச் செல்கிறேனே..”என்று தயங்க.. “பார்த்து...?,பார்த்து என்ன செய்யப் போகிறாய்..?, இனி என் அனுமதி இல்லாமல்.. அத்தையின் அறைக்கோ,அத்தானின் அறைக்கோ செல்லக் கூடாது.. என்ன..?”என்று அதட்ட.... முகம் அழுகையில் சுருங்கினாலும் அடக்கித் தலையாட்டியபடி ஓடி விட்டாள்.

அதன்பின் அடுத்து வந்த சில நாட்கள் இதையே தொடர்ந்தாள் லேகா. மதுமதியை அவர்களிருவரின் அருகே கூட அனுமதிக்கவில்லை.. சாப்பாடு பரிமாறும் நேரம் அவள் மேஜை மீது கிண்ணங்களை அடுக்கும் போது மட்டும் தான் அவர்களிருவருக்கும் காட்சி தருவாள்.. அத்தோடு.. ஆதித்யனும் அவனது அலுவலில் பிஸியாகி விட்டதால்.. அவனைச் சந்திக்கும் வாய்ப்பு வெகுவாகக் குறைந்து போனது மதுமதிக்கு. அது அவளுக்குச் சோர்வை ஏற்படுத்தினாலும்.. ஒரு வகையில் நன்மையையே செய்தது. அவனை விட்டு விலகி இருந்தாக

வேண்டுமென்ற கட்டாயத்தில் இருந்தவள்.. இந்த வாய்ப்பை உபயோகப் படுத்திக் கொண்டாள்...

“**அ**ம்மா.. இன்று என் நண்பன் கௌஷிக் நம் எஸ்டேட்டைச் சுற்றிப் பார்க்க வருகிறான்.. நம் வீட்டில் தான் தங்குகிறான் அம்மா..”என்று குமரியிடம் கூறிக் கொண்டிருந்தான் ஆதித்யன்.. “அமெரிக்காவில் இருக்கிறான் என்று கூறினாயே அவனா..?”என்று வினவியவரிடம் “ஆமாம் அம்மா.. என்னுடன் கல்லூரியில் படித்தவன்.. படிப்பு முடிந்ததும் அமெரிக்காவிற்குச் சென்று விட்டான்.. இப்போது விடுமுறையில் வந்திருக்கிறான்.. 4 நாட்களுக்கு இங்கே தான் இருப்பான்..”என்று கூறினான்.. “தாராளமாக வந்து தங்கட்டும் கண்ணா.. அழைத்து வா..”என்று முடித்தார் குமரி.

அன்று காலையே ஆதித்யனின் மாளிகைக்கு வந்து சேர்ந்தான் கௌஷிக். “டேய்.. நண்பா.. எப்படியடா இருக்கிறாய்..?”எனக் கூறியபடி ஓடி வந்து அணைத்துக் கொண்டான் கௌஷிக்.. “நான் நன்றாக இருக்கிறேன் மச்சி.. என்னடா அமெரிக்கா சென்றால்.. சொந்த ஊரை மறந்து விடுவீர்களா.. எத்தனை வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறாய்..”என்று தானும் அவனை அணைத்துக் கொண்டான் ஆதித்யன்.

“என்ன செய்வது மச்சி.. உன்னைப் போல் பிறவிப் பணக்காரனாக இருந்தால் நானும் சொந்த ஊரில் செட்டிலாகி இருப்பேன்.. நமக்குத் தான் அப்படியொன்றும் இல்லையே..”என்று அவனை வம்பிக்கிழுக்க.. “டேய்.. வாய் மட்டும் குறையவே இல்லை உனக்கு.. வா உள்ளே செல்லலாம்.. அம்மா உன்னைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.”என்று வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்.

உள்ளே நுழைகையில் லேகா எதிரே வர.. நின்று அவளை நண்பனுக்கு அறிமுகப் படுத்தினான்.. “கௌஷிக் இது.. லேகா.. என் அத்தைப் பெண்..”என்று கூற.. “என்ன அத்தான்.. அத்தைப் பெண் என்று வெறுமனே கூறுகிறீர்கள்.. உங்களைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் நான்.. என்னை நீங்கள் வருங்கால மனைவி என்று தானே அறிமுகப் படுத்த வேண்டும்..?, நீங்கள் கூறாவிட்டாலும் நான் விட மாட்டேன்..”என்றவள்... கௌஷிக்கிடம் “ஹாய் கௌஷிக்.. நான் சித்ரலேகா.. உங்கள் நண்பனின் வருங்கால மனைவி..”என்று பெருமையுடன் கூற..

வாயைப் பிளந்தபடி இருவரையும் நோக்கினான் கௌஷிக்.. “டேய்..”என்று ஆதி உலுக்கியதும் சுய நினைவிற்கு வந்தவன்.. அசட்டுச் சிரிப்பை உதிர்த்து.. “ஹி..ஹி.. நைஸ் டு மீட் யூ மேடம்..”என்று சிரித்தான். அவள் நகர்ந்ததும் நண்பனின் புறம் திரும்பியவன் “நீ எப்போதடா வில்லனாகிப் போனாய்..?”என்று வினவினான்.

“என்ன உளறுகிறாய்..?”என்று முறைத்தவனிடம் “இல்லையடா.. பொதுவாக இந்த மாதிரிப் பெண்களெல்லாம் சினிமாக்களில் வில்லன் பக்கம் தானே இருப்பார்கள்..?, நீ ஏன் டா இப்படி ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறாய்..?, ஆக்ஸிடென்ட் ஏதும் ஆகி விட்டதா உனக்கு..?,முக்கியமான பார்ட் எதுவும் டேமேஜா டா..?”என்று அவன் தீவிரமாக விசாரிக்க..

அவன் முதுகில் அடித்தவன் “டேய்.. அப்பா காலத்திலிருந்தே அத்தைக்கு எங்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள ஆசை.. அதனால் அம்மா மறுக்கவில்லை.. நானும் மறுக்கவில்லை.. நீ கூறுவது போலெல்லாம் ஒன்றுமில்லை.. அவள் நல்ல பெண் தான்.. நீ வாயை வைத்துக் கொண்டு சும்மா இரேன் டா.. அம்மாவிடம் செல்லலாம் வா..”என்று இழுத்துக் கொண்டு சென்றான்..

“வாப்பா..”என்று வாஞ்சையுடன் வரவேற்ற குமரி.. அவனிடம் சிறிது நேரம் உரையாடி விட்டு.. “இரவு முழுதும் பயணம் செய்ததில் சோர்வாக இருப்பான்.. அவனது அறைக்கு அழைத்துச் செல் கண்ணா..”என்று கூற..அவனை விருந்தினர் அறைக்குச் சென்றான் ஆதித்யன்.

“இந்த ஊருக்கு நான் வர விரும்பியதே இந்த கிளைமேட்டுக்காகத் தானடா.. எங்கு பார்த்தாலும் பனிப் போர்வை போர்த்தியிருக்கிறது.. என்ன ஒரு குளிர்.. இட்ஸ் சோ ரொமான்ட்டிக் டா..”என்று பால்கனியில் நின்றபடி ரசித்துக் கொண்டிருந்தவன்.. சிறிது நேரத்தில் “ஹேய்.....”என்று விசிலடிக்க... அறையில் அமர்ந்திருந்த ஆதித்யன் வெளியே வந்து என்னவென்று விசாரித்தான்.

“ஆதி.. அந்தப் பெண் யாரடா... என்னவொரு அழகு.. பனியில் நனைந்த ரோஜாப்பூவைப் போல் இருக்கிறாள்..”என்று விழி விரித்து நோக்க... யாரென்று எட்டிப் பார்த்த ஆதித்யன் அங்கே மதுமதி.. சிவப்பும்,நீலமும் கலந்த பாவாடை தாவணியில்.. இடை வரை நீண்ட விரிந்த கூந்தலுடன்.. காதுத் தொங்கட்டாங்கள் அசைந்தாட.. ரோஜாப் பூக்களோடுத் தானும் ஓர்ப் பூவாய் மாறி.. அதை வருடிக் கொண்டிருந்தாள்..

இமைக்க மறந்து திகைத்துப் போய்.. அவளை நோக்கினான் ஆதித்யன்.. “ஆதி.. நேர்த்தியான அந்தப் புருவங்களுக்கு மத்தியில்.. வாகாகப் பொருந்தியிருக்கும் அந்த வட்டப் பொட்டைப் பாரேன்.. என்னவொரு அழகான சிவந்த இதழ்.. அவள் கையில் வைத்திருக்கும் ரோஜாவின் இதழ்களை விட.. அவளுடைய இதழ் தான் மென்மையாக இருக்கும் போலும்.. எவ்வளவு நீளமான தன்னியல்பாய் வளர்ந்த கூந்தல்..”என்று கௌஷிக் வர்ணிக்கத் துவங்க..

அவன் கூறியபடி அவளை நெற்றி முதல் உள்ளங்கால் வரை ரசித்துப் பார்க்கத் தொடங்கிய ஆதித்யன்.. தன்னை மறந்து நின்றது சில நொடிகள் தான்..

சட்டெனத் தலையை உலுக்கி.. நினைவிற்குக் கொண்டு வந்தவன்.. “டேய்.. உளறாதே.. அவள்.. அவள் மதுமதி.. எங்கள் வீட்டுக் கணக்கரின் மகள்.. தயவு செய்து உன் வாலுத்தனத்தையெல்லாம் அவளிடம் காட்டாதே.. அவள் மிகவும் அமைதியான பெண்..”என்று கூற.. அவனோ.. அவளை மேலும் ரசித்துப் பார்த்து.. “மதுமதி.... நைஸ் நேம்.. அவள் மிகவும் அழகு டா..”என்று அவன் தொடங்க.. “நீ உள்ளே வா..”என்று அவனை இழுத்துச் சென்றான்.

“கீழே சென்று டீ அருந்தலாம் வா..”என்று இருவரும் கீழே வந்த வேளை மதுமதியும் உள்ளெ நுழைந்தாள்.. “ஹே.. பியூட்டி டா..”என்று துள்ளிய கௌஷிக்கை அடக்கியவன்.. மதி என்றழைப்பதற்குள்.. முந்திக் கொண்ட கௌஷிக்..”மதுமதி..”என்று சத்தமிட்டு அழைத்து விட.. தன் போக்கில் நடந்து சென்ற மதுமதி.. அவனது அழைப்பை உணர்ந்து நின்றாள்..

அறிமுகமற்ற ஒருவன் தன்னைப் பெயர் சொல்லி அழைப்பதில் பயந்து போனவள்.. தூணைப் பிடித்தபடி அதன் பின்னே மறைந்து கொண்டாள்.. அவள் பயத்தைக் கண்டு மேலும் விழி விரித்த கௌஷிக்.. பின் ஆதித்யனிடம் “என்னடா ஆதி.. நான் அவள் பெயரைச் சொல்லி அழைத்ததற்கே.. அவளது கையைப் பிடித்தது போல் பயந்து கொள்கிறாள்.. ஆனாலும் பியூட்டி இப்படி என்னை இன்சல்ட் செய்யக் கூடாதுடா.. சொல்லி வை..”என்று அலுத்துக் கொள்ள..

“போடா.. இடியட்.. நான் அறிமுகம் செய்து வைக்கும் முன் உன்னை யார் அழைக்கச் சொன்னது..?”என்று கடிந்து கொண்டவன்.. மதுமதியிடம் அவசரமாக.. “மதி.. இவன் என் நண்பன் கௌஷிக்.. நம் ஊரைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறான்..”என்று கூற.. விறுவிறுவென ஓடிச் சென்றவள்.. நின்று திரும்பிப் பார்த்து.. ஆதி கூறியதைக் கேட்டபடியே நடந்தாள்.. பதில் கூறாமல் அவள் ஓட..

அதில் மேலும் கடுப்பாகிப் போன கௌஷிக்.. “ஏன் டா.. ஒரு டீ கிடைக்குமா என்று கேட்பதற்காகத் தானே அழைத்தேன்.. இப்படி அவமானப் படுத்தி விட்டுப் போகிறாள்..”என்று புலம்ப.. “டேய் நான் தான் கூறீனேனே.. அவள் கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவள்.. தவறாக எடுத்துக் கொள்ளாதே..”என்று கூறிச் சமாதானப் படுத்தினான் ஆதி.

உள்ளே சென்ற சிறிது நேரத்தில் கையில் டீக்கோப்பையுடன் வெளி வந்தாள் மதுமதி.. மிரண்ட விழிகளுடன் பயந்து போய் உள்ளே ஓடியவள்.. சிரித்த முகத்துடன் வெளி வருவதை இருவரும் வியந்து நோக்க.. கௌஷிக்கின் அருகே வந்து டீக் கோப்பையை நீட்டியவள்.. “சாரி.. நீங்கள் அவரின் நண்பன் என்று எனக்குத் தெரியாது.. திடீரென்று என் பெயர் சொல்லி அழைத்ததும்

நான் பயந்து விட்டேன்.. கோபித்துக் கொள்ளாதீர்கள்.. டீ எடுத்துக் கொள்ளுங்கள்..”என்று கூறினாள்..

வட்டப் பொட்டிட்ட.. அந்தப் புருவங்கள் மேலெழுந்தும்,சுருங்கி விரிந்தும் அழகான பாவனைகளை வெளிப்படுத்துவதையும்.... விரிந்த புன்னகையில்.. மலர்ந்த முகத்தையும்.. அவள் குனிந்தவுடன் முன் விழுந்தக் கருங்கூந்தல்.. அவளது வெள்ளைக் கன்னங்களைத் தழுவ.. காதில் தொங்கிக் கொண்டிருந்த தொங்கட்டான்கள்.. லேசாக அசைந்தாட.. அழகே உருவமாய் தன் முன்னே நின்றிருப்பவளை.. படபடவென அடித்துக் கொள்ளும் இதயத்துடன்.. திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தான் ஆதித்யன்..

கௌஷிக்கிடம் பேசி விட்டு.. நிமிர்ந்தவள்.. ஆதித்யன் தன்னையே நோக்குவதைக் கண்டு புருவம் சுருக்கி.. டீ எடுத்துக் கொள்ளுமாறு விழிகளில் சைகை செய்தாள்.. அவன் கையில் எடுத்துக் கொண்டதும்.. அவனைக் கடந்து நடந்து செல்பவளை.. இதுவரைப் பார்க்காத.. இதுவரைத் தோன்றாத.. உணர்வுடன் இமைக்க மறந்து.. பரவசத்துடன் நோக்கிக் கொண்டிருந்தான் ஆதித்யன்.



## அத்தியாயம் – 10



**பெண்ணே....**
**உன் மையிட்ட விழிகளில் கலந்து..**
**உன் இதழ்களின் மென்மையில் கரைந்து..**
**உன்னுள் என்னைத் தொலைத்து விட**
**விரும்புகிறேன்...!!**
**ஒரே ஒரு முறை... தலை நிமிர்த்தி..**
**என் கண்களைச் சந்தித்து விடு!!!**

**இ**மைக்க மறந்து திகைத்துப் போய் தன்னைக் கடந்து நடந்து செல்லும் அழகு தேவதையை ஆதித்யன் இதுவரைத் தோன்றாத புது உணர்வுடன் நோக்கிக் கொண்டிருக்க.. நண்பனிடமிருந்து வெகு நேரமாக சத்தமே இல்லாததைக் கண்டு "ஆதி.. ஆதி.."என்று உலுக்கினான் கௌஷிக். சட்டென விழித்துக் கொண்டவன் "சா..சாரி டா.. என்ன.. என்ன கூறினாய்..?"என்று தட்டுத் தடுமாறி வினவினான் அவன்.

அவனை வித்தியாசமாக நோக்கியவன்.. "டேய்.. என்ன..?,பயந்து நடுங்கிய மதுமதியே.. சகஜமாகப் பேசி விட்டுச் செல்கிறாள்.. உனக்கு என்னவாயிற்று..?"என்று வினவ... ஒன்றுமில்லையென்பது போல்.. தலை அசைத்தான்.. பின் "களைப்பாக இருப்பாய்.. நீ சென்று ரெஸ்ட் எடு.. நான் உன்னைப் பிறகு சந்திக்கிறேன்.."என்றவன் நண்பனை அழைத்துச் சென்று அவனது அறையில் விட்டு விட்டுத் தன் அறைக்குச் சென்றான்..

கதவைத் தாழிட்டு விட்டுத் தலை முடியை அழுந்தக் கோதி... மனதைச் சமன் படுத்தியவன்.. தனக்கு எதிரே இருந்தக் கண்ணாடியில் தன் பிம்பத்தை நோக்கினான். என்ன செய்து கொண்டிருக்கிறேன் நான்..?, நான்.. நான் மதியை ரசிப்பதா..?, சிறு வயது முதல் இங்கேயே.. தன் கண் முன்னே வளர்ந்து.. ஆளாகி விட்ட அந்த அழகு ரோஜாவைத் தானே ரசிப்பதா..?, இது தப்பு.. அவள் ஒரு குழந்தை.. ஏதுமறியாத பச்சை மண் என்பார்களே.. அதைப் போல்.. அமைதியே வடிவானாள்.. அவளைப் போய்.. நான் ரசித்து நோக்குவதா..?, இது தவறு.. ஆதி.. என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டு.. கட்டிலில் விழுந்தான்.. மூடிய விழிகளுக்குள் மறுபடியும் மதுமதியின் புருவச் சுழிப்பே வந்து போனது..

இது என்ன புதுத் தொல்லை.. என்றெண்ணியவன்.. உடையை மாற்றிக் கொண்டு ஜாகிங் புறப்பட்டான்.. மறுபடியும் மறுபடியும் மதுமதியின் விழிகளும், புன்னகையும் கண் முன்னே வந்து சென்று அவனை இம்சித்தது.. அந்தக் காலைப் பனியில் உடல் விறைத்து.. நொடிக்கொரு முறை வேகத்தைக் கூட்டி.. எதிலிருந்தோ தப்பிக்க நினைப்பவன் போன்று.. அவன் ஓடியும் கூட.. அவளது கார் கூந்தலும்,அது தழுவிச் சென்ற கன்னங்களுமே நினைவிற்கு வந்தது..

இது சரி வராது ஆதி! கௌஷிக் அவளை இன்று தான் முதன்முதலாகப் பார்க்கிறான்.. அதனால் அறிவீனமாக ஏதோ உளறி வைத்தான்.. ஆனால் தான் எதற்காக அவளை அவ்வாறு நோக்க வேண்டும்..?, இதற்கு முன்பு இதே தாவணியில் அவளைப் பார்த்ததே இல்லையா..?, அந்த திராட்சை விழிகளையும்... முத்துப் பல் சிரிப்பையும்.. கார் கூந்தலையும் தினமும் தானே காண்கிறான்..?, இன்று மட்டும் ஏன் இந்தப் புதிய உணர்வு..?,

வேண்டாம்.. வேண்டாம்.. இது சரியில்லை.. இந்த உணர்வை மனதிலிருந்து நீக்கியாக வேண்டும்..! எப்படியேனும்! பலவாறு சிந்தித்த படி அந்த நீண்ட தோட்டத்தைச் சுற்றி ஓடியவன்.. சோர்ந்து.. அங்கே போடப் பட்டிருந்த கல் பெஞ்சின் மீது அமர்ந்து கண்களை மூடினான்.. நீ எத்தனை முறை இந்தத் தோட்டத்தைச் சுற்றினாலும்.. நான் உன் மனக் கண்ணில் இருந்து நீங்க மாட்டேன் என்பது போல்.. மூடிய கண்களுக்குள்.. மதுமதி புன்னகைத்தாள். ச்ச.. என்று தலையை உலுக்கிக் கொண்டவன்.. தன் அறைக்குச் சென்றான்..

ஆதித்யன் தனது காலை நேர உடற்பயிற்சியை முடித்து விட்டதை சமையலறையிலிருந்து கண்டு விட்ட மதுமதி அவன் எப்போதும் அருந்தும் சத்து மாவுக் கஞ்சியைத் தயாரித்து வைத்தாள்.. அவனது அறைக்கு எடுத்து செல்வதற்காகக் கிண்ணத்தில் ஊற்றியவளுக்கு லேசானத் தயக்கம் உண்டானது. எப்படி இதை எடுத்துக் கொண்டு அவன் அறைக்குச் செல்வது..?, தன் அனுமதியின்றி.. ஆதியின் அறைக்கோ.. குமரியின் அறைக்கோ செல்லக் கூடாதென்று சித்ரலேகா கட்டளை பிறப்பித்திருக்கிறாளே.. அதை மீறுவதா..? வேறு வினையே வேண்டாம்..! ஆனால்... ஆனால்.. ஏனோ.. இன்று ஆதித்யனைத் தனியே சந்திக்க வேண்டுமென்று மனம் கேட்கிறதே.. இது என்ன முட்டாள்தனம்??

ம்ஹ்ம்.. மதி.. வேண்டாம்.. அழிக்க நினைக்கும் எண்ணங்களை மீண்டும் தட்டி எழுப்பாதே... அவளே வந்து எடுத்துச் செல்லட்டும்.. என்று முடிவு செய்து கொண்டு விலகினாள்... அவள் யோசனை செய்து கொண்டு நிற்பதைக் கவனித்த மல்லி.. “அக்கா.. கஞ்சியை எடுத்துச் செல்லவில்லையா அவருக்கு..?

நேரமாயிற்றே..?”என்று வினவ.. “இல்லை மல்லி.. லேகா.. வந்து.. சின்னம்மா தானே எடுத்துச் செல்வார்கள் எப்போதும்..?”என்றாள்.

“லேகாக்கா இப்போது.. அவரின் அம்மாவின் அறையில் பேசிக் கொண்டிருக்கிறார்.. ஏதோ முக்கியமான பேச்சு போலும்.. அவருக்கு இதைப் பற்றி ஞாபகம் இருப்பதாகவே தெரியவில்லை..?,பேசாமல் நீயே சென்று கொடுத்து விடு.. நேரமாயிற்று..”என்று கூற.. “அப்படியா..?,நான்.. நான் செல்லட்டுமா..?”என்று தயக்கமும்,ஆசையுமாய் நோக்கியவளை.. வித்தியாசமாக நோக்கிய மல்லி..

“அக்கா.. உனக்கு என்னவாயிற்று..?,ஆதி அண்ணாவின் அறைக்குச் செல்வதற்கு.. ஏன் இப்படி யோசிக்கிறாய்..?”என்று புரியாமல் வினவ.. “ஆமாம்.. யோசிப்பது அவசியம் தான்.. இல்லையெனில்.. அந்த ராட்சசி கடித்துக் குதறி விடுவாளே..! சரி,ஆவது ஆகட்டும்.. கிளம்பி விட வேண்டியது தான்.. என்றெண்ணிக் கொண்டவள்.. தட்டை எடுத்துக் கொண்டு அவன் அறைக்குச் சென்றாள்..

வெகு நாளைக்குப் பிறகு அவனது அறைக்குள் நுழைவதினால்.. உள்ளம் குதூகலித்தது அவளுக்கு.. முதன்முதலாக அவன் அறைக்குப் பாடம் படிக்கச் செல்லும் போது தயங்கினாலே தவிர.. அதன் பின் ஒவ்வொரு முறையும்.. கோடி சந்தோசங்களுடன் தான் அவளை வரவேற்றிருக்கிறது அந்த அறை.. லேகா கூறிய பின் அந்த அறை இருக்கும் பக்கம் கூட அவள் கால்கள் செல்லவில்லை..ஆனால் இன்று அவள் விதித்தத் தடைகளை மீறித் தன் காதலனின் அறைக்குள் நுழைகிறாள்..

முகம் முழுக்க.. மகிழ்ச்சியும்,குதூகலமுமாய் உள்ளே சென்றவள்.. அவன் அவனது அலமாரிக்குள் தலையை விட்டுக் கொண்டு நின்றிருப்பதைக் கண்டு.. “ம்க்கும்..”என்று தொண்டையைச் செருமினாள்.. எதிர்பாராமல் அவளது குரலைக் கேட்க நேர்ந்து விட்டதில்.. அவன் திடுக்கிட்டுத் திரும்ப.. அந்த அலமாரியின் கதவில் நன்றாக முட்டிக் கொண்டான்.. வலியில் நெற்றியைப் பிடித்த படி அவன் குனிய..

“அய்யோ..!”என்றபடி கையிலிருந்த தட்டை மேஜை மீது வைத்து விட்டு.. அவனருகே ஓடியவள்.. மூடியிருந்த அவன் கைகளை விலக்கி.. நெற்றியை அழுத்தித் தேய்த்தாள்.. ஒரு கையால் அவனது தோளைப் பற்றி மறுகையால்.. அவன் நெற்றியைத் தேய்ப்பவளை.. அவன் வியப்புடன் நோக்க.. அவன் பார்வையை அறியாத மதுமதி கருமமே கண்ணாயிருந்தாள்..

தோளை அழுத்திய அவள் கரங்களின் மென்மை.. நெற்றியை அழுத்தியதில் எழுந்த சூடு.. அனைத்திற்கும் மேலே.. வெகு அருகே நிற்க நேரிட்டதில்..

அவளிடத்திலிருந்து புறப்பட்ட அவளுக்கே உரித்தான.. அந்த வாசம்.. அனைத்தும் அமைதியையும், நிம்மதியையும் கொடுக்க.. கண் மூடி அதை அனுபவித்தான்..

“ரொம்பவும் வலிக்கிறதா..?”என்று பதற்றத்துடன் வினவினாள்.. மூடியிருந்த விழிகளைத் திறவாமலே.. தன் நெற்றியின் பதிந்திருந்த அவள் விரல்களை அழுந்தப் பற்றியவன்.. அவள் கைகளை விலக்காமல் தன் விழிகளைத் திறந்து அவள் கண்களைச் சந்தித்தான். உயிர் வரை ஊடுருவிச் செல்லும் அந்தப் பார்வையை... சந்திக்கவும் முடியாமல்... தன் விழிகளை விலக்கவும் தோன்றாமல்.. செய்கையற்று நின்று விட்டாள் மதுமதி.

திடீரென்று வீசிய காற்றில் ஜன்னல் படபடவென அடித்துக் கொள்ள.. அந்தச் சத்தத்தில் விழித்துக் கொண்ட இருவரும்.. சட்டெனப் பார்வையை விலக்கிக் கொண்டனர்.. மறுபுறம் திரும்பி நின்று கொண்ட மதுமதி.. “வ..வந்து.. அடி மிகவும் பலமாகப் பட்டு விட்டதா..?, வீங்கி விடப் போகிறது..”என்று கூற.. அவளது கேள்விக்குப் பதில் கூறாமல்.. கை முஷ்டி இறுக.. அலமாரியின் கதவைக் குத்திக் கொண்டிருந்தான் ஆதித்யன்.

பின்னே..! பார்வைக்கு மட்டும் தான் அவள் புதிதாகத் தெரிகிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்க.. இப்போது.. மதுமதியின் அருகாமையும்,அவளது ஸ்பரிசமும் கூட அவனைச் செயலிழக்கச் செய்வதை எண்ணி.. அவன் தன்னையே கடிந்து கொண்டு.. எரிச்சலுடன் நின்றிருக்க.. இது போதாதென்று மதுமதியின் அக்கறையான பேச்சு வேறு.. மேலும் மனதில் இதத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

இது தவறு! இது தவறு என்று தனக்குத் தானே கூறிக் கொண்டவன்.. அவள் முகம் பாராமல்.. “நீ எதற்காக இங்கே வந்தாய் மதுமதி..?”என்று வினவினான்.. இவ்வளவு நேரமாக மனதில் குடியிருந்த சுகம் மாறிக் கனம் ஏற.. அவனை நிமிர்ந்து நோக்கினாள்..

வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வராமல் போய் விட.. கையை நீட்டி.. “அ..அ..அங்கே..”என்று சத்து மாவுக் கஞ்சியைக் காட்டினாள்.. அவள் காட்டிய இடத்திலிருந்த பாத்திரத்தைக் கண்டவன்.. “நான் எடுத்துக் கொள்கிறேன்... நீ செல்..”என்று அவன் முகத்தில் அடித்தாற் போல் கூறி விட.. மேலும் அங்கே நிற்க மனமற்று.. அவன் அறையை விட்டு வெளியேறி விட்டாள்.. அவள் சென்றதும் விழிகளை அழுந்த மூடித் திறந்தவன்.. தலையைப் பிடித்துக் கொண்டு கீழே அமர்ந்தான்..

அவன் அறையை விட்டு வெளியே சென்ற மதியோ.. வேறு விதமாக யோசித்தாள்.. மதி..மதியென புன்னகை மாறாமல் உரையாடுபவன்.. இன்று அவள் முகத்தைக் கூடப் பார்க்கப் பிடிக்காமல்.. வெளியே செல் என்கிறான்..

ஆகத் தன் அறைக்குள் மதி நுழையக் கூடாதென்கிற ஆணையை உண்மையில் பிறப்பித்தது ஆதித்யன் தான்.. அவன் எய்த அம்பு தான் லேகா.. அவளது வருங்காலக் கணவன் என்ன கூறினானோ.. அதை அப்படியே அவளிடம் வந்து தெரிவித்திருக்கிறாள்.

அவன் கூறத் தான் செய்வான்.. இத்தனை நாட்களாக அவனது கோபத்தைக் கிளறியதற்கு உண்டான தண்டனையை இப்போது அனுபவிக்கிறாள்.. அவள் தண்ணீரில் விழுந்து அவனால் காப்பாற்றப்பட்ட நாளிலிருந்து இன்று வரை அவனை எத்தனை முறை அவனைக் கோபப் படுத்தியிருப்பாள்..?, அன்பும்,அக்கறையுமாய்.. அவளிடம் நடந்து கொண்டவன்.. இப்போது அவள் முகத்தைப் பார்க்கக் கூடத் தயங்குகிறான்.. அந்த அளவிற்கு அவனது வெறுப்பைச் சம்பாதித்திருக்கிறாள் மதுமதி.

தான் கொண்ட நேசம்.. அவனுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகத் தானே.. அவள் அவனிடமிருந்து விலகி ஓடியது..?,அது அவனுக்குத் தன் மீதிருக்கும் அன்பை மாற்றி வெறுப்பை உண்டாக்கும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.. சரி தான்! அவனது பொறுமைக்கும் எல்லை உண்டு தானே..?, இத்தனை வருடமாக அல்லாது புதிதாக அவனை சின்னைய்யா என்றழைத்து அந்நியப் படுத்திய போது.. அவன் முகத்தில் விழிக்கப் பயந்து அவள் அந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைக்காத போது.. அவனே தேடி வந்து அழைத்தானே.. அவள் வீம்பு செய்த போதெல்லாம் சமாதானப் படுத்தியவன்.. இப்போது கோபம் கொண்டு விட்டான்.. தனக்குத் தானே புலம்பியபடி.. சமைலறைக்குள் நுழைந்தாள் மதி.

சிறிது நேரத்தில் நீராடி விட்டு.. காலைச் சாப்பாட்டுக்காக டைனிங் டேபிளின் அருகே வந்தான் ஆதித்யன். அன்னையின் அறையிலிருந்து கீழே வந்த லேகா ஆதித்யனைக் கண்டு விட்டு “அத்தான்.. அதற்குள் கிளம்பி விட்டீர்களா..?, ஜாகிங் செல்லவில்லையா..?,நான் சத்து மாவுக் கஞ்சி தயாரிக்க மறந்து போனேன்.. சாரி அத்தான்..”என்று கூற.. அவன் “ஏன்..?, நான் குடித்தேனே..” என்று புருவம் சுருக்கியபடிக் கூறினான்..

“குடித்தீர்களா..?,எப்படி..?”என்று வினவியவளுக்குப் பதிலாக.. அவனுக்கு வைக்கப்பட்டிருந்த தட்டில் இட்லிகளை அடுக்கிக் கொண்டிருந்த மதுமதியின் மீதுத் தன் பார்வையை செலுத்தினான் ஆதித்யன். “இவள்.. இவளா உங்களுக்குக் கஞ்சி கொண்டு வந்தாள்..?”என்று கோபமாக வினவிய லேகா.. மதுமதியிடம் “ஏய்.. உன்னை யார் அத்தானின் அறைக்குச் சென்று கொடுக்கச் சொன்னது..?,என்னை ஏன் நீ அழைக்கவில்லை..?”என்று வினவினாள்.

“அது..அது..”என்று அவள் திக்கித் திணறுவதற்குள்.. அவள் கையிலிருந்த பாத்திரத்தைப் பிடுங்கிக் கொண்டவள்.. “நானே அவருக்குப் பரிமாறிக்

கொள்வேன்.. இனி இந்த வேலையையும் நீ செய்ய வேண்டாம்..”என்று கூற.. அங்கே நடப்பதை எரிச்சலுடன் நோக்கிக் கொண்டிருந்த ஆதித்யன்.. “எனக்கு சாப்பாடே வேண்டாம்..”என்று எழுந்து சென்று விட்டான்..

மதுமதியை உறுத்து நோக்கிய லேகா.. “அத்தான்.. அத்தான் நில்லுங்கள்..” என்று கூவியபடி அவன் பின்னேயே ஓடிச் சென்றாள்.. “ஏன் சாப்பாடு வேண்டாம் என்கிறீர்கள் அத்தான்..?”என்று வினவ.. அவளைக் கோபமாக நோக்கியவன்.. “அவள் பரிமாறுவதால் என்னப் பிரச்சனை உனக்கு..?,இத்தனை நாட்களாக நம் அனைவருக்கும் அவள் தானே பரிமாறினாள்..?, இப்போது மட்டும் என்ன..?”என்று வினவினான்..

அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. “என்ன கூறுகிறீர்கள் அத்தான்..?,நீங்கள் என் வருங்காலக் கணவர்.. உங்களது தேவைகளை நான் கவனித்துக் கொள்ள நினைப்பது தவறா..?,இத்தனை நாட்களாக அவள் செய்தது போதும்.. இனி செய்ய வேண்டாம் என்று தானே கூறினேன்..?,அவள் மீது காட்டும் அன்பு, அக்கறையில் ஒரு சதவீதத்தையேனும் என் மேல் காட்டுங்கள் அத்தான்..” என்று ஏளனமாகக் கூறினாள்.

“வாய்க்கு வந்த படி உளறாதே.. நீ ஏன் அவளிடம் அப்படி எடுத்தெறிந்து பேசுகிறாய்..?, இத்தனை வருடங்களாக வீட்டில் வேலை செய்யும் எவரிடமும் நானோ.. அம்மாவோ கடுமையாக நடந்து கொண்டதேயில்லை.. சொல்வதை மென்மையாகச் சொல்லலாமே.. உன் அதிகாரத்தைக் காட்டி அனைவரையும் அடக்கி ஆளலாமென்று நினைக்காதே.. என் தந்தை காலத்திலிருந்து இந்த ஊரையும்,இங்கு வாழும் மக்களையும் அன்பும்,அக்கறையுமாய் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.. நீ இப்படி நடந்து கொள்வது சரியில்லை சித்ரலேகா..”என்று அவன் கோபமாகக் கத்தினான்.

அவள் எதுவும் கூறாமல்.. அவனை முறைத்தபடி நடந்து சென்று விட.. நெற்றியை அழுத்தித் தேய்த்து எரிச்சலை அடக்கினான் ஆதித்யன். இவள் கூறுவதும் சரி தானே..?, கணவனாகப் போகும் ஒருவனின் தேவைகளைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாள்..!, அதில் தவறில்லையே.. ஆனால் அவள் மதுமதியை எதற்காக எடுத்தெறிந்து பேசி அவமதிக்க வேண்டும்..?

ஆதிக்கே அவனது எண்ணங்களைக் கண்டு வியப்பாகிப் போனது. லேகா கூறியதைப் போல்.. நான்.. மதுமதியின் மீது தான் அதிக அன்பும்,அக்கறையும் செலுத்துகிறேனோ.. இல்லையில்லை.. இது.. அவள் மீது மட்டுமல்ல.. அவர்களது குடும்பத்தினருக்கு அந்த ஊரிலிருக்கும் அனைவரின் மீதிருக்கும் அக்கறை.. பொறுப்பு.. மற்றபடி.. மதுமதியின் மீது எந்தவித உணர்வும்

அவனுக்குக் கிடையாது... என்று தனக்குத் தானேக் கூறிக் கொண்டு மல்லிகைப் பந்தலின் கீழ் அமர்ந்து விட்டான்.

வெகு நேரம் கழித்து வீட்டினுள் நுழைந்தவனை மதுமதியின் கலகல சிரிப்பொலி வரவேற்றது. லேகா அவளை ஒவ்வொரு முறையும் வெளிப்படையாகத் திட்டி அவமானப் படுத்துவதை எண்ணி அவள் நிச்சயம் கலக்கமுற்றிருப்பாள்.. வருந்துவாள் என்று தீர்மானித்திருந்த ஆதித்யன் அவளது சிரிப்பைக் கண்டு வியந்து போனான்.

கௌஷிக் சமையல் மேடையில் அமர்ந்து கொண்டு தோசைகளை விழுங்கிய படி அவளிடம் கதையடித்துக் கொண்டிருக்க. அவன் கூறுவதைக் கேட்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தாள் மதுமதி. அவள் சிரிப்பைக் கண்டபடித் தானும் சமையலறைக்குள் நுழைந்தான் ஆதித்யன். அவனைக் கண்டதும் மதுமதியின் சிரிப்பு உதட்டிலேயே உறைந்து போக.. தலை குனிந்தபடி ஒதுங்கி நின்று கொண்டாள்.

தன்னைக் கண்டதும் அவள் முகத்தில் கண்ட மாற்றத்தைக் குறித்துக் கொண்டவனுக்கு உள்ளே எறிந்தது. இன்று காலை அறிமுகமானவுடன் பல் சுளிக்கிக் கொள்ளுமளவிற்குச் சிரிக்கிறாள். என்னைக் கண்டதும் மட்டும் தலையைத் தரையில் புதைத்துக் கொள்கிறாள்..ச்ச.. என்று எரிச்சல் பட்டவன்.. அதே எரிச்சலுடன் நண்பனின் புறம் திரும்பி “டேய்.. வீட்டில் அவ்வளவு பெரிய டைனிங் ஹால் இருப்பது உன் கண்ணிலேயே படவில்லையா..?,இங்கே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாய்..?”என்று வினவினான்.

“அது வந்து மச்சி.. அந்த பெரிய டைனிங் ஹாலில் தனியாக அமர்ந்து சாப்பிடுவதற்கு ஒரு மாதிரியாக இருந்தது.. அத்தோடு.. மதுமதியிடம் பேசினால்.. நொடிக்கொரு முறை சில்லறைகளைச் சிதற விடுகிறாள்.. வேண்டுமளவிற்கு அள்ளிக் கொள்ளலாமே என்று தான் இங்கே வந்து விட்டேன்..”என்று கூற.. சிரிப்பை அடக்க முயன்று தோற்று களுக்கென்று சிரித்தாள் மதுமதி.

அவளைத் திரும்பி முறைத்தவன்.. நண்பனிடம் “சரி அரட்டை அடித்தது போதும்.. எஸ்டேட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்றாயே..?,வா செல்லலாம்..”என்று கூறினான். கையைக் கழுவி விட்டு நண்பனுடன் கிளம்பியவன்.. மதுமதியிடம் “பாய் மதி.. மீதிக் கதையை வந்து தொடர்கிறேன்..”என்று கூறி விட்டுப் புறப்பட்டான். மதியைப் பார்வையிட்ட படியேத் தானும் நண்பனைத் தொடர்ந்தான் ஆதித்யன்.

வெளியே சென்று காரில் ஏறி அமர்ந்தவன் பின் என்ன நினைத்தானோ.. கௌஷிக்கிடம் “ஒரு நிமிடம் இதோ வந்து விடுகிறேன்..”என்று கூறி விட்டு..

மீண்டும் உள்ளே சென்றான்.. அடுக்களைக்குள் நுழைந்து அங்கே முகத்தில் உறைந்து போன புன்னகையுடன் தன் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருந்த மதுமதியைக் கண்டு சில நிமிடங்கள் நின்று விட்டான்.

பின் "ம்க்கும்.."என்று என்று தொண்டையைச் செறும.. கையில் வைத்திருந்த பாத்திரத்தைக் கீழே விட்டுச் சத்தத்தை எழுப்பிய பின் தான் அவனை நிமிர்ந்து நோக்கினாள் மதுமதி.. இவன் எதற்காக வந்திருக்கிறான் என்ற குழப்பத்தில் அவள் விழிக்க.. கீழே கிடந்த பாத்திரத்தில் பார்வையைப் பதிக்கத் துவங்கியவன் மெல்ல அவள் முகத்தை நோக்கினான்.

"கு..குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா..?"என்று அவன் வினவ.. மேலும் பெரிதாக விழித்துத் தன் ஆச்சரியத்தை வெளியிட்டாள் மதுமதி. பின்னே.. டைனிங் ஹாலைக் கடந்து தான் சமையலறைக்கு வர முடியும்.. அங்கேயே ஜாடியில் தண்ணீர் ஊற்றி வைக்கப் பட்டிருக்கையில் அவன் எதற்காக இங்கே வர வேண்டும்..?, குழப்பம் ஏற்பட்டாலும்.. மேலும் முழித்துக் கொண்டு நிற்க மனமற்று.. வேகமாக அவனிடம் தண்ணீரை நீட்டினாள்.

அவள் முகத்திலிருந்துப் பார்வையை விலக்காமல் தண்ணீரைப் பருகி முடித்தவன்.. காலி சொம்பை அவளிடம் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டதும் தயங்கியபடி அவன் நடந்து செல்ல.. மதிக்குக் குழப்பம் அதிகமாகிப் போனது.



# அத்தியாயம் – 11



**என்ன மாயம் செய்தாயடி..?**
**உன் வாசம் நுகர்ந்த பின்..**
**பூ வாசம் மறந்து போனேன்..**
**உன் ஸ்பரிசம் பெற்று விட்ட பின்..**
**சிறகின் மென்மையை மறந்து போனேன்..**
**போதுமடி.. நீ என்னை இம்சித்தது!**

“**ப**ழகுவதற்கு மிக மிக இனிமையானவளடா மதுமதி.. பரம சாது தான்.. ஆனால்.. சரிக்குச் சரியாக வாயடிக்கவும் அவளுக்குத் தெரிந்திருக்கிறது.. உன் வீட்டில் குமரிம்மாவிற்குப் பிறகு என்னை மிகவும் கவர்ந்தது மதுமதி தானடா.. ஆனால்.. நீ ஒரு உண்மையைச் சொல்.. நீ நிஜமாகவே அந்த வில்லியைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாயா..?”என்று நண்பனிடம் வளவளத்துக் கொண்டிருந்தான் கௌஷிக்.

ஆனால்.. எங்கே?,இதையெல்லாம் கவனிக்கும் மன நிலையில் தான் ஆதித்யன் இல்லையே.. கன்னத்தில் கை வைத்து பேப்பர் வெயிட்டை உருட்டியபடி.. அவன் பதில் பேசாமல் அமர்ந்திருக்க.. “கரெக்ட் டா ஆதி.. திருமணத்திற்குப் பின் இதைப் போலத் தான் அந்த சித்ரலேகா உன் தலையை உருட்டுவாள்.. இதற்காகத் தான் கல்லூரியில் காதல் மன்னன் என்று பெயரெடுத்தாயா..?, மகாக் கேவலமடா..”எனக் கேலி செய்தபடி.. அவன் கையிலிருந்த பேப்பர் வெயிட்டைப் பறித்தான்.

“டேய்.. நீ வேறு என்னை எரிச்சல் படுத்தாதே.. என்ன டா வேண்டும் உனக்கு..?” என்று பொறுமையற்ற குரலில் வினவ.. “சரியாகக் கேட்டாய் போ.. எஸ்டேட்டைச் சுற்றிக் காட்டுகிறேன் வாடா என்று வாய் நிறைய அழைத்து விட்டு.. வந்ததிலிருந்து இங்கேயே அமர்ந்திருக்கிறாய்.. என்னடா விளையாடுகிறாயா..?, நான் வீட்டிலேயே மதியுடன் அரட்டை அடித்துக் கொண்டு ஜாலியாகப் பொழுதைக் கழித்திருப்பேன்.. ”என்று கூறினான்..

அதுவரை அவன் கூறுவதைச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தவன் அவனது கடைசி வாக்கியத்தில் நிமிர்ந்து அவனை முறைத்தான். “டேய்.. உனக்கென்ன இப்போது..?, இந்த எஸ்டேட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.. அவ்வளவு

தானே.. வா..”என்றழைத்துச் சென்றான். செல்லும் வழியில் அன்பரசுவையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான். “மதியின் அப்பாவா..?”என்று குஷியாகி விட்ட கௌஷிக்.. அவரிடம் உரையாடியபடியே வர.. ஆதித்யனுக்குத் தான் எரிச்சலாகிப் போனது,

என்ன தான் வேறுபாடில்லாமல்.. அவன் பழகினாலும்.. அவர்கள் முதலாளி என்கிற மரியாதையுடன் தான் அவனிடம் பழகி வருகின்றனர். ஆனால் அன்று அறிமுகமான கௌஷிக்கிடம் இயல்பாகப் பழகிய மதுமதியையும்,அன்பரசுவையும் கண்டு கோபம் வந்தது ஆதித்யனுக்கு. இது முட்டாள் தனம் என்று தோன்றினாலும் நண்பனின் மீது பொறாமை கூட வந்தது அவனுக்கு.,

தன் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட தயங்கும் மதுமதி.. இன்று அவனுடன் சரிக்குச் சரியாக அமர்ந்து கொண்டு பேசிச் சிரிக்கிறாள்.. சின்னைய்யா என்று அவனை மரியாதையாக அழைக்கும் அன்பரசு கௌஷிக்கை தம்பி,தம்பி என்கிறார்.. அவனுடன் முதலாளி என்கிற அளவோடு அவர்கள் பேசுவதையும், கௌஷிக்கிடம் இயல்பாகப் பேசுவதையும் கண்டு மேலும் கோபமானது அவனுக்கு. அவர்கள் இருவரும் தன்னுடன் நெருங்கிப் பழக வேண்டுமென்று தான் ஏன் விரும்புகிறோம் என்றும் அவனுக்குப் புரியவில்லை.

ஏதேதோ எண்ணங்களுடனும்,எரிச்சலுடனும் வீட்டிற்கு வந்து சேர்ந்தவனது கோபத்தை அதிகப் படுத்தும் வகையில் மேலும் ஒரு சம்பவம் நடந்து கொண்டிருந்தது.

அன்றிரவு உணவிற்குத் தாமதமாகத் தான் வருவோமென்று கௌஷிக்கும்,ஆதியும் கூறி விட்டதால் மற்ற அனைவரும் உணவை முடித்துக் கொண்டு உறங்கச் சென்று விட்டனர். அறைக்குச் செல்லும் மதியிடம் வந்த குமரி “மதி.. இடியாப்பத்தில் எலுமிச்சை கலந்து தாளித்துத் தனியாக எடுத்து வைத்து விடு.. ஆதித்யனுக்கு அது தான் இஷ்டம்..”என்று கூறி விட்டுச் செல்ல.. அனைவரும் சென்ற பின் சமையலறையில் குமரிம்மா கூறியதைச் செய்யத் துவங்கினாள்.

வெங்காயம் நறுக்கிக் கொண்டிருக்கையில் உள்ளே நுழைந்தாள் லேகா. “என்ன செய்கிறாய்..?,அத்தானுக்காகத் தானே சமைக்கிறாய்..?,நானே செய்து கொள்வேன்.. நீ நகர்ந்து செல்..”என்று விரட்டியவள்.. தானே நறுக்கத் துவங்கினாள். சமையல் செய்து பழக்கமில்லாததால்.. அவள் கத்தியைப் பிடித்து வெங்காயத்தை நறுக்கும் தொனியே அபாயகரமாக இருந்தது மதுமதிக்கு, எதுவும் கூறினால் நிச்சயம் திட்டு விழும் என்பதால் அவள் அமைதியாக நிற்க..

சில நொடிகளில் விரலை வெட்டிக் கொண்டு “ஆ.. அம்மா..”என்று சத்தமிடத் துவங்கினாள்.. செய்வதறியாது மதி விழித்துக் கொண்டு நின்ற வேளைச் சரியாக ஆதியும்,கௌஷிக்கும் உள்ளே நுழைந்தனர். சமையலறையிலிருந்து சத்தம் வருவதைக் கண்டு இருவரும் பதறி ஓட.. அங்கே கையில் வழிந்த ரத்தத்துடன் சத்தமிட்டுக் கொண்டிருந்தாள் லேகா.

“என்ன.. என்னவாயிற்று..?”என்று அருகே சென்றவன்.. அவள் வெங்காயம் வெட்ட முயன்றதில் உண்டான காயம் என்பதை ஒரு பார்வையில் அறிந்து கொண்daan.. அவள் கையைப் பற்றி.. அருகேயிருந்த குழாயைத் திறந்து தண்ணீரில் காயத்தை நனைத்தான்.. “பழக்கமில்லாத வேலைகளை நீ எதற்காகச் செய்கிறாய்..?,உன்னை யார் இதையெல்லாம் செய்யச் சொல்லிக் கட்டாயப் படுத்தியது..?,வீட்டில் வேலை பார்ப்பவர்கள் இத்தனை பேர் இருக்கையில் நீ எதற்காகக் கிச்சனுக்குள் நுழைகிறாய்..?”என்றவன்..

கையைப் பிசைந்தபடி நின்று கொண்டிருந்த மதுமதியின் புறம் கோபமாகத் திரும்பினான்.., “இவளைச் சமையல் செய்ய விட்டு நீ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாயா..?, ஏன் இதையெல்லாம் அனுமதிக்கிறாய்..?, எப்போதும் எதையேனும் இழுத்து வைத்துக் கொண்டு தான் இருப்பீர்களா..?,”என்று அவள் மீது பாய்ந்தான்.

தன் வருங்கால மனைவிக்குக் காயம் பட்டு விட்டதென்றதும்.. அவன் துடிப்பதைப் பார் என்று பொறுமியபடி நின்று கொண்டிருந்த மதுமதிக்கு.. அவன் தன்னை வைததும்.. விதிர்விதிர்த்துப் போனது. நான் இதையெல்லாம் அனுமதிக்கிறேனா..?,என்ன கூறுகிறான் இவன்..?, யார் யாருக்கு அனுமதி அளிப்பது..?,அவளாக உள்ளே நுழைந்து நான் பார்த்துக் கொள்கிறேன் எனக் கூறி மதியை விரட்டி அடித்து விட்டாள்.. இதில் அவளை எங்கே மதி தடுப்பது..? என்ன கூறுவதென்று புரியாமல்.. மதி மேலும் விழிக்க..

அவள் மீது தவறில்லை அத்தான் என்ற வார்த்தைகள் தொண்டை வரை வந்தாலும் அடக்கிக் கொண்டாள் லேகா. அவனே எப்போதோ ஒரு முறை தான் மதியைத் திட்டுகிறான்.. அதை ஏன் தடுக்க வேண்டும்.. என்கிற நல்ல எண்ணத்தில்.. வாயை இறுக மூடி அமைதியாகி விட்டாள்..

இருவரது முகத்தையும் கண்டு என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்ட கௌஷிக்.. “என்ன விழிக்கிறாய்..?”என்று மதியை அதட்டிய ஆதித்யனின் கையைப் பற்றி.. “விடு.. விடு டா.. ஒரு பேண்ட்-எய்ட் போட்டால் சரியாகி விடும்.. சின்னக் காயம் தான்..”என்று அடக்கியவன்.. லேகாவை அழைத்துக் கொண்டு நகர்ந்து விட்டான். தலை குனிந்த படி சுவரோடு சுவராக ஒன்றிப் போய் நிற்பவளை முறைத்து விட்டுத் தானும் வெளியேறினான் ஆதித்யன்.

காலையிலிருந்து மனதில் அடக்கி அடக்கி வைத்திருந்த கோபம்.. வெளியேறி விட்டதில்.. அவன் பெரு மூச்சு விட்டபடித் தன் அறையை நோக்கிச் சென்றான்.. ஆம்! நாள் முழுதும் மதுமதியின் முகத்தைத் தன் மனக்கண்ணில் கண்டு ரசித்துக் கொண்டிருந்தவனுக்குத் தன் மீதே தோன்றிய கோபம்.. தன்னுடன் முகம் காட்டிப் பேச மறுப்பவள்.. கௌஷிக்கிடம் சிரித்துப் பேசுவதால் உண்டான கோபமென்று அனைத்தையும் அவள் மீதே காட்டி விட்டு அவன் வெளியேறி விட்டான்..

குமரிம்மா கூறியதைப் போல்.. ஆதித்யனுக்கு வேண்டியதைச் செய்து வைத்து விட்டு உடனேத் தன் வீட்டிற்குச் சென்று விட்டாள் மதுமதி. சாப்பிட அமர்ந்ததும்.. மல்லி வந்து பரிமாறுவதைக் கண்ட கௌஷிக்.. "மதி எங்கே மல்லி..?"என்று விசாரித்தான். "அக்கா வீட்டிற்குச் சென்று விட்டாள்.."என்று அவள் பதில் கூறவும்.. எதையும் கண்டு கொள்ளாமல் இடியாப்பத்தை உள்ளே தள்ளிக் கொண்டிருந்த நண்பனை முறைத்தான் கௌஷிக்.

வெங்காயத்தைக் கூட வெட்டத் தெரியாத ஒரு முட்டாள்.. கையை நறுக்கிக் கொண்டாள் என்கிற ஒரு காரணத்திற்காக.. அந்த அப்பாவிப் பெண்ணைத் திட்டி விரட்டி விட்டான் படுபாவி..

அவன் தன்னை பார்ப்பதை உணர்ந்தவன் நிமிர்ந்து "என்ன..?"என்று வினவ.. "ஒன்றுமில்லை ராசா.. நன்றாகச் சாப்பிடு.. சாப்பிட்டு முடித்ததும்.. பெரிய காயம் பட்டுப் படுத்திருக்கிறாளே.. உன் வருங்கால மனைவி.. அவளைச் சென்று பார்த்து விடு..?,என்ன..?"என்று கூற.. எதுவும் கூறாமல் முறைத்தான் ஆதித்யன்.

"பின்னே என்ன டா..?, என்னவோ.. பெரிதாக அடி பட்டு விட்டதைப் போல்.. அப்படிக் குதித்தாயே.. என்னே ஒரு பாசம் உனக்கு அவள் மீது.. ஏன் டா..?, பாசமோ.. மண்ணாங்கட்டியோ.. அவள் விரலை வெட்டிக் கொண்டதற்கு.. மதியை எதற்காகத் திட்டி அனுப்பி விட்டாய்..?, அவளைப் பார்க்க எவ்வளவு பாவமாக இருந்தது தெரியுமா..?, மோசமான முதலாளி டா நீ.."என்று திட்ட.. ஆதித்யனுக்கும் வருத்தம் உண்டானது. ஆனால் அதை வெளிக் காட்டாமல்.. "போதும்.. சாப்பிடு.."என்று கூற.. "எப்படியோ.. போ.."என்று தலையில் அடித்துக் கொண்டான் கௌஷிக்.

மறு நாள்.. வெள்ளிக்கிழமை.. குமரிம்மா காலையிலேயே பூஜை செய்யத் தொடங்கி விடுவார் என்பதால்.. தோட்டத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்தாள் மதுமதி.. பால்கனி வழியாக அவளைக் கண்டு விட்டு.. கௌஷிக் கீழே இறங்கி வர.. அவனுடன் உரையாடியபடியே பூக்களைப் பறித்துக் கூடைக்குள் போட்டுக் கொண்டிருந்தாள்.

“நான் அந்த வெள்ளைக்காரியிடம் என் காதலைச் சொல்லப் போய்.. அவள் என்னை ஜாக்கிஜானைப் போல்.. அடித்து விரட்டியது தான் மிச்சம்..“ என்று அவனது காதல் அனுபவங்களைப் பற்றி அவன் அளந்து கொண்டிருக்க.. வழக்கம் போல்.. அவன் பேச்சில் மற்றதை மறந்து விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள் மதுமதி..

சிரித்தபடியே பார்வையைத் திருப்பியவள்.. எதிரே வந்து கொண்டிருந்த ஆதித்யனைக் கண்டு வேறு புறம் திரும்பினாள்.. அவள் தன்னைக் கண்டதும் வேறு புறம் திரும்பியதைக் கண்டபடியே அருகே வந்தவன்.. கௌஷிக்கிடம் “உனக்கு ஃபோன் டா..”என்றுத் தன் செல்லை அவனிடம் நீட்டினான்.. “ஓ! ஃபோனை அறையிலேயே வைத்து விட்டேன்.. சாரி..”என்றபடி செல்லை வாங்கிப் பேசியபடியே நடந்து சென்றான்.

அவன் சென்றதும்.. ஆதித்யன் தன்னை நோக்குவதைக் கண்ட மதுமதி.. பறித்த வரை போதுமென்று.. பூக்கூடையுடன் உள்ளே செல்லப் பார்த்தாள். “நில்..” என்று அவனது கடினக் குரல் அவளை நிறுத்த அவன் புறம் திரும்பாமல்.. அப்படியே நின்று விட்டாள்.. “ம்க்கும்..”என்றப்படியே அவளருகே வந்தவன்.. “கல்லூரி எப்போது திறக்கிறது உனக்கு..?,விடுமுறை முடியப் போகிறது தானே..?”என்று விசாரித்தான்..

“நாளை.. நாளைத் திறக்கிறது..”என்று அவன் முகம் பாராமல் வேகமாகப் பதில் சொல்லி விட்டு அவள் ஓட எத்தனிக்க.. அவளைப் பற்றி நிறுத்தியவன்.. தன் புறம் திருப்பி.. “என் முகத்தைப் பார்த்துக் கூடப் பதில் சொல்லத் தயங்குகிறாய்.. அவனிடம் மட்டும்.. பல் சுளுக்கிக் கொள்ளுமளவிற்குச் சிரிக்கிறாயே..?,என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்..?”என்று தன் போக்கில் பேசிக் கொண்டே சென்றவன்.. அவள் முகத்தில் தெரிந்த ஏளனத்தைக் கண்டு பேச்சை நிறுத்தினான்...

அவன் கையில் சிக்கியிருந்தத் தன் கைகளை உறுவிக் கொண்டவள்.. “இப்போதெல்லாம்.. நான் என்ன செய்தாலும் உங்களுக்குத் தப்பாகத் தான் தெரிகிறது.. என்ன செய்வது..?”என்று கூறி விட்டு விறு விறுவென நடந்து சென்று விட்டாள்.. அவள் செல்வதைத் தடுக்கத் தோன்றாமல். தலையை அழுந்தக் கோதினான்.

எப்போதாவது தான் கண்களை நேராகச் சந்தித்து பதில் கூறுகிறாள்.. அப்படிக் கூறும் போது.. ஒவ்வொரு வார்த்தையும் சாட்டையடி தான்.. பெருமூச்சொன்றை வெளி விட்டு நகர்ந்து சென்றான்.

விடுமுறை முடிந்து மறு நாள் கல்லூரி தொடங்குவதால்.. அன்றிரவு விரைவிலேயே குமரிம்மாவின் வீட்டிலிருந்து கிளம்பி விட்டாள் மதுமதி.

செல்வதற்கு முன் ஒரு முறை குமரிம்மாவைச் சந்திக்க எண்ணித் தயங்கி அவரின் அறை அருகே சென்றாள். அங்கே.. தன் வருங்கால மாமியாரின் காலருகே அமர்ந்து.. மருந்து தடவ முயன்று கொண்டிருந்தாள் லேகா.

“நீ எதற்காக இதையெல்லாம் செய்கிறாயம்மா..?,மதியை வரச் சொல்லலாமே.. அது என்னவோ தெரியவில்லை.. அவள் மருந்து தடவி கால் பிடித்து விட்டுப் பழகிப் போனதால்.. அவளைத் தான் எதிர்பார்க்கிறது மனது.. அவளைக் கொஞ்சம் இங்கே வரச் சொல்கிறாயா..?”என்று குமரி வினவ.. முகம் தொங்கிப் போனது லேகாவிற்கு..

வேறு வழியின்றித் தலையாட்டி விட்டு வெளியே வந்தவள் அங்கே மதி நின்று கொண்டிருப்பதைக் கண்டு.. முறைத்து விட்டுப் பின்.. உள்ளே போகுமாறு சைகை செய்தாள். “குமரிம்மா..”என்று புன்னகையுடன் அழைத்தபடி தன் காலடியில் அமர்பவளை அதே புன்னகையுடன் எதிர் கொண்ட குமரி.. “மதி.. நாளை உனக்குக் காலேஜ் இருக்கிறதல்லவா..?,விடுமுறையும் முடிந்து விட்டது...இனி நாளை முதல் அம்மணி பிஸியாகி விடுவீர்கள்..”என்று கேலி செய்ய.. “குமரிம்மா.. காலையும்,மாலையும் வந்து சென்று கொண்டு தான் இருப்பேன்.. அநியாயத்திற்குக் கேலி செய்கிறீர்களே..” என்று சிரித்தவளிடம்.. “கௌஷிக் தம்பி சரியாகச் சாப்பிடாதது போல் தெரிந்தது.. ஒரு டம்ளர் பால் கொடுத்து விட்டுச் செல்கிறாயா...?”என்று வினவினார்.

“சரிம்மா..”என்று தலையாட்டி விட்டு பாலை எடுத்துக் கொண்டு அவன் அறைக்குச் சென்றாள்.. கதவைத் தட்டி.. “உள்ளே வரலாமா..?”என்று அவள் வினவியது.. கௌஷிக்கின் காதில் விழுந்ததோ இல்லையோ.. பக்கத்து அறையில் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த ஆதித்யனின் காதுகளில் விழுந்து விட்டது. படாரெனக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவனைக் கண்டு கொள்ளாமல்.. அவள் நிற்க.. “உள்ளே வா மதி..”என்று அறையிலிருந்தபடியே கௌஷிக் குரல் கொடுத்தான்.

அவள் உள்ளே சென்ற பின் இருப்புக் கொள்ளாமல்.. பால்கனியில் நடை பயின்று கொண்டிருந்தான். கௌஷிக்கின் அறையை விட்டு வெளியே வந்த போதும்.. அவனைக் கண்டு கொள்ளாது அவள் சென்று விட.. ஆதித்யனுக்கு எரிச்சலாகிப் போனது. இங்கே ஒருவன் நின்று கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமல் செல்வதைப் பார்.. என்று பொறுமிய படி.. அறைக்குள் நுழைந்தான்.

மறுநாள்.. கௌஷிக் சென்னை திரும்புவதால்.. காலை பதினோரு மணியளவில் புறப்பட்டு விட்டான். வீட்டில் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டவன்.. மதியைத் தேடிச் சமையலறைக்குச் செல்ல.. அவள் காலேஜ் சென்று விட்டதாக மல்லி தெரிவித்தாள்.. “என்ன டா ஆதி.. இன்று மதிக்குக்

காலேஜ் திறந்து விட்டதாமே.. அவளிடம் கூறிக் கொள்ளாமல் செல்ல முடியாது.. என்னை அவளது காலேஜிற்கு அழைத்துச் செல்.. பார்த்து விட்டுச் செல்கிறேன்..”என்று கூறினான்.

“ரொம்பப் பாசம் தான்..”என்று ஆதி அலுத்துக் கொள்வதைப் பொருட்படுத்தாது.. அவன் பிடிவாதம் பிடிக்க.. அவனை அழைத்துக் கொண்டு மதியின் கல்லூரிக்குச் சென்றான் ஆதித்யன். மதிய இடைவேளையில் சாப்பிட வெளியே வந்த மதுமதி... காரின் மீது சாய்ந்து நின்று கொண்டிருந்த ஆதித்யனைக் கண்டு குழப்பமுற்றாள்.. இவன் எதற்காக இங்கே வந்திருக்கிறான்.. என்றெண்ணியவள்.. அவனருகே செல்ல.. காரின் மறு பக்கக் கதவைத் திறந்து கொண்டு கௌஷிக் இறங்கினான்.

அவளைக் கண்டதும் அவன் புன்னகை புரிய.. ஆதித்யனோ.. இங்கே நடக்கும் எதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பதைப் போல்.. மரத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்.. அவன் செய்கையைக் கண்டு கலங்கி நிற்பவளை சாந்தமாக நோக்கிய கௌஷிக்.. “அவனை விடு மதி.. நான் ஊருக்குக் கிளம்பி விட்டேன்.. உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் செல்ல மனமில்லை.. அதனால் தான் உன் காலேஜிற்கே வந்து விட்டோம்.. கிளம்புகிறேன் மதி.. மறுபடியும் ஆதித்யன் திருமணத்திற்கு வருவேன்.. அப்போது சந்திப்போம்.. நன்றாகப் படி.. ஆறே மாதம் தான்.. படிப்பு முடிந்ததும் சென்னையில் நல்ல வேலைக்கு நானே ஏற்பாடு செய்கிறேன்.. ஆல் த பெஸ்ட்..”என்று கூறி விடை பெற்றான்.

அவனிடம் சிரித்தபடி தலையாட்டி விடை கொடுத்தவள்.. தயங்கியபடி ஆதித்யனை நோக்க.. அவன் இவளைக் கண்டு கொள்ளாமல்.. காரில் ஏறி அமர்ந்து கொண்டான்.. காரைக் கிளப்பியவன் சிறிது தூரம் சென்றதும் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். “என்னடா..?”என்று வினவிய கௌஷிக்கிடம் “இல்லை.. மதிக்கு சென்னையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறினாயே.. அதை நினைத்துச் சிரித்தேன்.. படிப்பிற்காக சென்னைச் செல்லச் சொல்லி அவளைக் கட்டாயப் படுத்திய போதே.. அவள் ஒப்புக் கொள்ளவில்லை.. வேலைக்காக.. அவளாவது அங்கே வருவதாவது.. இந்த ஊரை விட்டு அவள் எங்கேயும் வர மாட்டாள்..”என்றான்.

“இல்லையே டா ஆதி.. படிப்பு முடிந்ததும்.. சென்னையில் வேலை தேட வேண்டுமென்று என்னிடம் கூறியதே அவள் தாண்டா.. ஒரு வேளை இப்போது அவளுக்குச் சென்னை வருவதில் ஈடுபாடு வந்திருக்கலாம்.. அதனால் தான் நானே ஒரு நல்ல வேளைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினேன்..” என்று கௌஷிக் கூற.. முகம் இறுகிப் போனது அவனுக்கு.

இதுவரை.. அவளைப் பற்றிய விசயங்கள் அனைத்திலும்.. அவனிடம் கலந்தாலோசிக்காமல் அவள் எந்தவொரு முடிவிற்கும் வந்ததேயில்லை..

ஆனால்.. இப்போது.. படிப்பு முடிந்ததும் சென்னையில் வேலைக்குச் செல்ல வேண்டுமெங்கிற ஆசையை அவள் அவனிடம் வெளிப் படுத்தவேயில்லை.. பல நாட்களாகவே.. அவனை விட்டு விலகி நிற்கவே முயன்று கொண்டிருக்கிறாள்.. ஆனால் ஏன்..?

இந்த ஊரை விட்டுச் செல்ல மாட்டேன்.. மீறி என்னை நீங்கள் வற்புறுத்தினால் தண்ணீரில் விழுந்து உயிரை விட்டு விடுவேன் எனக் கூறி அழுது அடம் பிடித்தவள்.. இன்று இந்த ஊரை விட்டுச் செல்லத் தயாராகி விட்டாள்.. கௌஷிக் இதைக் கூறியிருக்கா விட்டால்.. கடைசி வரை இந்த விசயத்தைப் பற்றி ஆதித்யன் அறியாமலே போயிருப்பான்.. கோபமும்,எரிச்சலும் கிளம்ப காரை முழு வேகத்தில் செலுத்திக் கொண்டு சென்றவன்.. நண்பனை பஸ் ஏற்றி விட்டு எஸ்டேட்டிற்குக் கிளம்பினான்.

**க**ல்லூரி முடிந்து அன்று மாலை வீடு திரும்பிய மதி.. வீட்டின் கதவு திறந்திருப்பதைக் கண்டு.. "அப்பா..."என்றழைத்துக் கொண்டு ஓடினாள்.. "வந்து விட்டாயா.. கண்ணா.. டீ தயாரித்து வைத்திருக்கிறேன் பார்.. எடுத்துக் கொள்.." என்று மகளை வரவேற்றார் அன்பரசு. "எடுத்துக் கொள்கிறேன் அப்பா.."என்றவள்.. மேஜையில் மீது பெரிய பெரிய பார்சல்களில் அடுக்கப் பட்டிருந்த திருமணப் பத்திரிக்கைகளைக் கண்டு "யாருடையது அப்பா இது..?"என்று விசாரித்தாள்.

"வேறு யாருடையது..?,நம் சின்னையாவின் திருமணப் பத்திரிக்கை தான் மதிம்மா.. சாம்பிள் பத்திரிக்கை இங்கே இருக்கிறது பார்.. இதோ.."என்று ஒரு பத்திரிக்கையை நீட்டினார். நடுங்கிய விரல்களால் அவர் கொடுத்தப் பத்திரிக்கையை வாங்கிப் பார்த்த மதுமதிக்கு.. இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது போல் இருந்தது.

இன்னும் பத்தே நாட்களில் ஆதித்யன்-சித்ரலேகாவின் திருமணம்.. கொடைக்கானலில் இருக்கும் ஒரு பிரபல ஹோட்டலில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறுமென்று அச்சிடப் பட்டிருந்தது. பத்து நாட்கள் தான்.. ஆதித்யன் வேறு ஒரு பெண்ணின் கணவனாகி விடுவான்.. புலி வருது.. புலி வருது என்று பயந்து போய் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தவள்.. இப்போது நிஜமாகவே அவன் வேறு ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவதைக் காணப் போகிறாள்..

எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறேன்..?, லேகாவின் கணவனாக வலம் வரப் போகும் ஆதித்யனை எப்படி எதிர் கொள்ளப் போகிறேன்..?, கலங்கிய மனதுடன் வாயடைத்துப் போய் நிற்பவளை அன்பரசு உலுக்க.. விழித்துக் கொண்டவள்.. "எ..என்னப்பா..?"என்று வினவினாள்.. "என்னம்மா அப்படி நின்று விட்டாய்..?, பத்திரிக்கை நன்றாக இருக்கிறதா..?"என்றவரிடம் "ந..நன்றாக இருக்கிறது

அப்பா..”என்று தலையாட்டியவள்.. தொடர்ந்து “நான் மல்லி வீடு வரை சென்று வருகிறேன்.. அவளுடைய புத்தகம் இங்கே இருக்கிறது..”என்று கூறியவள்.. கைக்கு அகப்பட்ட புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

நடப்பை ஏற்றுக் கொள் மதி.. கலங்காதே.. என்றுத் தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு மல்லியின் வீட்டை அடைந்து சிறிது நேரம் உரையாடி விட்டு அவளுடனே குமரிம்மாவி வீட்டிற்குச் சென்றாள்.. அங்கே அவளுக்கு முன்பே.. பத்திரிக்கைகளுடன் வந்து சேர்ந்திருந்தார் அன்பரசு.

தன் திருமணப் பத்திரிக்கையை முகம் முழுக்க பூரிப்புடன் நோக்கிக் கொண்டிருந்த சித்ரலேகாவைக் கண்டு.. மீண்டும் கலக்கமுற்றது மதியின் மனது. மீனாம்பாளின் குடும்பம்,குமரிம்மா மற்றும் இன்ன பிற பெரியவர்கள் அங்கே பத்திரிக்கைகளைப் பார்வையிட்டபடி அமர்ந்திருக்க.. ஆதித்யன் அங்கே இல்லாததைக் கண்டு.. பார்வையைச் சுழற்றினாள் மதுமதி.

அந்த பெரிய அறை முழுதையும் சுற்றி நோக்கியவள்.. அவன் இல்லாததைக் கண்டு.. அங்கேயிருந்து நழுவி அவனது அறைக்குச் சென்றாள். திறந்து கிடந்த அவனது அறை அங்கே அவனில்லை என்பதைப் பறை சாற்ற.. மெல்ல உள்ளே நுழைந்தாள்.. முதன்முதலாக அவனிடம் பாடம் படிக்கையில் தான் அவள் அந்த அறைக்கு வருகை தந்திருந்தது.

இதோ.. இந்த நாற்காலியில் தான் அவன் அமர்ந்திருப்பான்.. புரியவில்லை என்று அவள் தலையைச் சொறிகையில்.. அவள் தலையில் குட்டிச் சொல்லிக் கொடுப்பான்.. சிரிப்பும்,மகிழ்ச்சியுமாய்.. அவனிடம் பாடம் படித்த நாட்கள் நினைவில் வந்து போனது அவளுக்கு..

இனி இது ஆதித்யனின் அறை அல்ல.. ஆதித்யன்-சித்ரலேகா தம்பதியின் அறை.. இனி இந்த அறைக்குள் வந்து செல்ல அவளுக்கு அனுமதி கிட்டுமோ என்னவோ.. அவன் அமரும் நாற்காலியை வருடிச் சென்றவள்.. பால்கனிக்குச் செல்லும் கதவில் தலையைச் சாய்த்து கண் மூடி நின்று விட்டாள்.. அந்த பால்கனியின் மறு ஓரத்தில் தோட்டத்தை வெறித்தபடி நின்று கொண்டிருந்த ஆதித்யன் அரவம் உணர்ந்து.. எட்டிப் பார்த்தான்....

பச்சை நிறப் பாவாடை தாவணியில்.. இடையைத் தாண்டி நீண்டு செல்லும் கருங்கூந்தலுடனும்.. காதில் நடனமாடிக் கொண்டிருந்த சின்ன ஜிமிக்கியுடனும்.. நேர்த்தியானப் புருவங்களுடன் அமைந்திருந்த அழகான பெரிய விழிகளுடனும்.. கூரான நாசியின் இடது பக்கத்தில் பளபளத்த ஒற்றைக் கல் மூக்குத்தியுடனும்.. இயல்பாகச் சிவந்திருந்த மென்மையான இதழ்களுடனும்.. பேரழியாகத் தன் முன்னே கண் மூடி நின்று

கொண்டிருந்தவளைக் கண்டு.. மலைத்துத் தானும் அந்தக் கதவில் சாய்ந்து விட்டான் ஆதித்யன்.

இமைக்கக் கூட மறந்து போய் சில நிமிடங்கள் நின்று விட்டவன்.. பெரு மூச்சொன்றை வெளியிட.. அவன் மூச்சுக் காற்று... முகத்தில் மோதியதில் சட்டென இமை திறந்தவள்.. அவன் முகத்தை அவ்வளவு அருகில் கண்டு விட்டதில் திகைத்துப் பின்னோக்கி நகர முயன்றதில்.. தடுமாறிக் கீழே விழப் போனவள்.. அவனது சட்டைப் பாக்கெட்டைப் பற்றிச் சமாளித்து நின்றாள்.

கைக் கட்டி.. கதவில் சாய்ந்து நின்றவன் அவள் தடுமாறி விழப் போனதைக் கண்டும் அசையாமல்.. அவளைக் கண்ட வண்ணமே நிற்க.. ஒருவாறுச் சமாளித்து நிமிர்ந்த மதி.. அவன் தன்னையே நோக்குவதைக் கண்டுத் தயங்கி "எ..என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்..?"என்று திக்கியபடி வினவினாள்.. அதன் பின்னும் சிறிது நேரம் பதில் கூறாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன்.. பின் கையை நீட்டி.. "இந்த மூக்குத்தி எப்போதிருந்து அணிந்திருக்கிறாய்..?"என்று வினவினான்.

அவன் கேள்வியில் புன்னகை கொண்டவள்.. "இதுவா..?,இதை நான் பத்தாம் வகுப்பிலிருந்து அணிந்திருக்கிறேனே.. ஏன்..?"என்று கூற.. ஆழ்ந்த மூச்சுடன் அவளிடமிருந்து பார்வையைத் திருப்பி.. மீண்டும் பால்கனிக்குச் சென்றவன்..
ஆமாமாம்.. பத்தாம் வகுப்பிலிருந்து அணிந்திருக்கிறாய்.. ஆனால் அப்போதெல்லாம் என் கண்ணில் படவேயில்லையே.. இந்த நான்கு நாட்களாகத் தானே என்னை விடாமல் இம்சித்துக் கொண்டிருக்கிறது.. என்று எண்ணமிட்டவன்.. பின் தலையைச் சிலுப்பினான்..

முட்டாள்தனமான எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறாயே ஆதி.. அவன் என்ன டீனேஜ் பையனா..?, இதைப் போலெல்லாம்.. உணர்வுகளை அடக்கத் தெரியாமல் விழிப்பதற்கு.. அதிலும்.. மதுமதிக்கும் அவனுக்கும் எத்தனை வருட வித்தியாசம் இருக்கிறது.. அவள் கல்லூரிப் படிப்பைக் கூட முடிக்காத சின்னப் பெண்.. நிறைய சாதித்து வளமான எதிர்காலத்துடன் நன்றாக வாழப் போகிறவள் அவள்.. அவளைப் போய்... இத்தனை வருடங்களாக அல்லாது.. இது என்ன,,..?, இனியொரு முறை அவளை அப்படிப் பார்க்கக் கூடாது.. என்று அவசர.. அவசரமாக முடிவெடுத்துக் கொண்டவன்.. எதுவும் கூறாமல் அமைதியாகி விட.. அவன் ஏதேனும் பதில் கூறுவான் என்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் மதி.

அவள் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திரும்பி அவள் முகம் நோக்கினான். அது வரை எடுத்த சபதங்கள் அனைத்தும் நிமிடத்தில் அழிந்து போக.. "இந்த ஊரை விட்டுச் செல்லத் தயாராகி விட்டாய்.. இல்லையா மதுமதி..?"என்று

அவ்வளவு நேரமாக தொண்டை வரை வந்து.. வெளிவரத் துடித்துக் கொண்டிருந்த வார்த்தையைக் கேட்டே விட்டான்.

ஆதித்யனுக்கு இதைப் பற்றித் தெரிந்து விடக் கூடாது என்பதால் தான்.. அவள் வேலை விசயத்தைப் பற்றி கௌஷிக்கிடம் கேட்டதே.. அவனிடம் வினவினால்.. ஏன்,எதற்கு என்கிற கேள்விகள் எழும் என்பதால்.. அவள் நேரடியாக கௌஷிக்கிடமே கேட்டு விட்டாள்.. காலையில் கௌஷிக் ஆதித்யனின் முன்பு அனைத்தையும் போட்டு உடைத்த போதே.. இதற்காக ஆதித்யன் நிச்சயம் தன் மீது கோபம் கொள்வான் என்று அவள் நினைத்திருந்தது தான்..

பதில் கூறாமல்... தலை குனிந்தபடி.. தாவணியின் முந்தானையைச் சுற்றிக் கொண்டிருந்தவளைக் கண்டவன் மீண்டும்.. “பதில் சொல் மதி.. படிப்பு முடிந்ததும் வேலை வாங்கித் தருமாறு கௌஷிக்கிடம் எதற்காக வினவினாய்..?, எல்லா விஷயத்திலும் எப்போதும்,என்னுடனும் அன்பரசு அங்கிளிடமும் கலந்தாலோசித்துத் தானே முடிவெடுப்பாய்..?,இப்போது என்னவாயிற்று..?, வெளியூர் சென்று வேலை பார்க்க வேண்டுமென்று நீயே தீர்மானித்து விட்டாய்..?”

“உன் முடிவு எனக்கு மகிழ்ச்சி தான் மதி.. ஆனால்.. அதை ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை..?,நான் ஏற்பாடு செய்ய மாட்டேனா..?, சொல்லப் போனால்.. இந்தச் சில நாட்களாக நீ என்னிடம் எதையுமே பகிர்ந்து கொள்வதில்லை.. ஏன்..?,எதற்காக இந்தத் திடீர் மாற்றம்..?, யார் உன்னை என்ன கூறினார்கள்...?, எத்தனை முறை வினவினாலும்.. உன்னிடம் பதில் கிடைப்பதேயில்லை.. என் மேல் ஏதும் கோபமா மதி..?, சொன்னால் தானே எனக்குப் புரியும்..?”என்று அவன் பொறுமையாகக் கூற..

உதட்டைக் கடித்தபடித் தயக்கத்துடன் நின்றிருந்தவள் பின் “இ..இல்லை.. உங்களுக்கென பொறுப்புகளும்,கடமைகளும் வந்து விட்டபின்.. எனக்காக உதவு செய்யுமாறு உங்களைக் கோர எனக்கு மனம் வரவில்லை.. இது வரை நீங்கள் எனக்குச் செய்த உதவிகளே போதுமானதாக இருக்கையில்.. இனியும் உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று தோன்றியது... அதனால் தான்..” என்று அவள் சின்னக் குரலில் கூறி முடிக்க..

“எனக்கென்று பொறுப்பும்,கடமையுமா..?, என்ன... எதைச் சொல்கிறாய் நீ..?” என்று புருவம் சுருக்கியவனுக்குப் பதிலாக.. “அத்தான்....”என்ற சந்தோஷக் கூவலுடன் அவனை நோக்கி ஓடி வந்தாள் சித்ரலேகா.. இது தான்.. என்பதைப் போல்.. அவனை ஒரு முறை நிமிர்ந்து பார்த்த மதுமதி பதில் சொல்லாமல் விலகி விட..

தன் தோளைக் கட்டிக் கொண்டு “நம் திருமணப் பத்திரிக்கை அத்தான்..”என்று துள்ளிய லேகாவை மீறி.. ஆதித்யனின் பார்வை.. சோர்ந்த நடையுடன் அறையை விட்டு வெளியேறிய மதுமதியையேத் தொடர்ந்து சென்றது..



## அத்தியாயம் – 12



**கண்ணீர்க் கடலில் மூழ்கி..**
**தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்..**
**காப்பாற்ற நீ வருவாய் என்கிற**
**நம்பிக்கையும் பொய்த்துப் போக..**
**முழுதாக மூழ்கி..**
**உயிர் விடப் போகிறேன்…!**

**சி**த்ரலேகா நீட்டியத் தன் திருமணப் பத்திரிக்கையைக் கண்டவனுக்கு நடப்பு புரியத் துவங்க… நெற்றியை அழுத்திக் கண்களை இறுக மூடித் திறந்தான்.. இதோ.. எதிரில் நிற்கிறாளே.. இவள் தான்.. இவள் தான் உன் வருங்கால மனைவி.. அன்னை,உற்றார் உறவினர் என அனைவரும் கூடி அவளை அவனது மனைவியென அறிவிக்கப் போகிறார்கள்.. அதற்குச் சான்று.. இதோ இந்தப் பத்திரிக்கை..

அவனும் இதற்கு ஒப்புக் கொண்டதால் தானே இந்த அளவிற்கு வந்திருக்கிறது.. மதுமதியைக் காணும் போது எழும் தேவையில்லாத எண்ணங்களை மனதிலிருந்து நீக்கி.. நடப்பைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.. கனவிலும்,நனவிலும் அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு திரிவதை நிறுத்த வேண்டும்.. இனித் திருமணம் முடியும் வரை அவள் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்த்து விடக் கூடாது.. என்று முடிவு செய்து கொண்டவன்.. லேகாவிடம் லேசாகப் புன்னகைத்து விட்டு நகர்ந்து சென்று விட்டான்.

திருமணப் பத்திரிக்கையைக் கண்டும் கூட அவன் எதுவும் கூறாதுத் தன் கையை விலக்கி விட்டு சின்னப் புன்னகையுடன் நகர்ந்து சென்றதைக் கண்டு லேகாவிற்கு உள்ளே எரிந்தது. அறைக்குள் நுழைகையில் மதுமதி வெளியே சென்றாளே.. அவள் என்று இந்த வீட்டை விட்டு வெளியேறுகிறாளோ.. அன்று தான் நிம்மதி.. என்று எரிச்சலுற்றாள்.

அவனது அறையிலிருந்து வெளியேறிய மதி.. குமரிம்மாவின் அறைக்குச் செல்ல.. “மதி.. காலேஜிலிருந்து வந்து விட்டாயா..?.,ஆதியின் திருமணப் பத்திரிக்கையை அப்பா கொண்டு வந்தாரே.. கண்டாயா..?”என்று புன்னகையுடன் வினவினார். “பார்த்தேன் குமரிம்மா..”என்று சிரித்தவளிடம் “மதி.. கல்லூரி

முடிந்ததும் நீ நேராக இங்கேயே வந்து விடு.. வேலைகள் நிறைய இருக்கும்.. சரியா..?,எனக்கு ஒத்தாசையாகத் தான் கண்ணு.. மற்றபடி உன் படிப்பு கெடுமளவிற்கு பெரிய பெரிய வேலைகளையெல்லாம் நான் உனக்குக் கொடுக்க மாட்டேன் சரியா..?"என்று கூற.. மனது வலித்தாலும்.. வெளியே சிரித்தபடி "நிச்சயம் வருகிறேன் குமரிம்மா.."என்று உறுதி கூறினாள்..

மறு நாளிலிருந்து பத்திரிக்கைக் கொடுக்க ஆரம்பித்ததும்.. உறவினர்கள் குமரிம்மாவின் வீட்டிற்கு வருகை புரியத் துவங்கினர்.. கல்லூரி முடிந்ததும் நேராக இங்கே வந்து விடும் மதுமதி.. இரவு பதினோரு மணிக்குத் தான் வீட்டிற்கே சென்றாள்..

ஆதித்யன் எண்ணியவாறு.. அடுத்த மூன்று நாட்களில் ஒரு முறை கூட அவன் மதுமதியைச் சந்திக்கவேயில்லை.. ஒரு நாளின் பாதி நேரத்தை அவள் கல்லூரியிலேயே கழித்து விடுவதால்.. பிரச்சனையற்றுப் போனது அவனுக்கு. அப்படியிருந்தும் மூன்றாம் நாள் காலை இருவரும் நேரெதிரே சந்தித்துக் கொள்ளும் படி நேர்ந்து விட்டது..

அன்று விடுமுறை நாள் என்பதால்.. மதுமதி காலையிலேயே குமரிம்மாவின் வீட்டிற்கு வந்து விட்டாள்.. அடுத்த நான்கு நாட்களில் திருமணம் என்கிற நிலையில்.. அன்று மதுரைக்குச் சென்று நகை வாங்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தார் குமரி. அவர் வெளியே செல்வதற்குத் தேவையானவற்றை எடுத்து வைக்க அவரது அறைக்குள் நுழைந்த மதி.. "அம்மா..."என்றழைத்தபடி எதிரே வந்த ஆதித்யனின் நெற்றியில் நன்றாக இடித்து விட்டாள்.

"ஆ.."என்று இருவரும் நெற்றியைப் பிடித்துக் கொண்டு நிற்க.. முதலில் சுதாரித்துக் கொண்ட ஆதி.. அவள் முகத்தைக் காணக் கூடாது என்று தனக்குத் தானேக் கூறிக் கொண்டு மறுபுறம் திரும்பிக் கொண்டான்.. "சா..சாரி.."என்று அவனது முதுகுப் புறத்திலிருந்து வந்த மதுமதியின் குரலைக் கூடக் கேட்க பயந்து அவன் விறுவிறுவென நடந்து சென்று விட.. மதுமதியின் மனது மேலும் சோர்ந்தது.. இப்படி முகத்தைக் கூடப் பார்க்க மறுக்கிறானே என்று.. பெரு மூச்சுடன் குமரியை நாடிச் சென்றாள்..

அன்று இரவு வீட்டிற்கு வந்தவள்.. அன்பரசு எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு "அப்பா.."என்றபடி உள்ளே நுழைந்தாள்.. "வா மதி.. உனக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.."என்றவர் தொடர்ந்து "அவசர வேலையாக நான் நெல்லை வரை செல்கிறேன்.. சின்னையா செல்ல வேண்டிய வேலை இது.. ஆனால் திருமணத்தை வைத்துக் கொண்டு அவர் எங்கே நகர்வது..?,அதனால் தான் நானே செல்வதாகக் கூறி விட்டேன்.. திருமணத்திற்கு முதல் நாள் வந்து விடுவேன்.. நீ இங்கே தங்க வேண்டாம்.. மல்லியின் வீட்டிலோ.. குமரிம்மாவின் வீட்டிலோ படுத்துக் கொள்.. பத்திரம்..

அப்பா சென்று வருகிறேன்..”என்றவர் நின்று அவளது தலையை வருடி விட்டுச் சென்றார்..

இப்படியொரு சூழ்நிலையில் என்னைத் தனியாக விட்டுச் செல்கிறீர்களே அப்பா.. என்று மனதில் நினைத்துக் கொண்டவளுக்கு.. ஏனோ.. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.. அப்போது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.. தந்தையின் கடைசி வருடல் அது தான் என்பது...!

அவர் சென்ற பின் அன்றிரவு மல்லியின் வீட்டில் உறங்கியவளுக்கு வெகு நேரமாகத் தூக்கம் வர மறுத்தது.. மறு நாள் காலை விடிந்த பின்னும் வெகு நேரம் உறங்கி விட்டவள்.. அரக்க பரக்க எழுந்து குளித்து உடை மாற்றி விட்டு குமரிம்மாவின் வீட்டிற்கு ஓடினாள்.. வீடு முழுக்க குவிந்திருந்த உறவினர்களோடு.. மாளிகையே கோலாகலமாகக் காட்சியளித்தது.. முகம் முழுக்க சந்தோசத்துடன் அங்குமிங்கும் நடந்து விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருந்த குமரிம்மாவைக் கண்டு மென்மையானது மனது..

தனது ஒரே ஆசை மகனான ஆதித்யனுக்குத் திருமணம் என்றதும்.. தனது கால் வலியைக் கூடப் பொருட்படுத்தது.. வலம் வருபவரைக் கண்டு பெருமை கொண்டது மனது.. இவருக்காகவேனும்.. அனைத்தும் நல்லபடியாக நடக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள் மதுமதி..

சிரிப்புடன் அவரருகே சென்றவள்.. “குமரிம்மா.. காலையிலிருந்து இப்படித் தான் நடந்து கொண்டிருக்கிறீர்களா..?, வந்தவர்களைக் கவனித்துக் கொள்ளத் தான் ஆட்கள் இருக்கிறார்களே.. நீங்கள் சென்று அமருங்கள்..”என்று கூற.. “என்ன இருந்தாலும்.. நான் சென்று வரவேற்பது போல் இருக்காதல்லவா மதி.. இந்த ஆதி வேறு.. இரண்டு நாளில் திருமணத்தை வைத்துக் கொண்டு வேலை,வேலையென்று திரிகிறான்.. அனைத்தையும் நான் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றால் கஷ்டம் தானேம்மா..?”என்று புலம்பியவரைச் சமாதானப் படுத்தி.. பழச்சாறுக் கொடுத்து கவனித்து விட்டுத் தான் உள்ளே சென்றாள் மதி.

மாலை நான்கு மணியளவில்.. அலங்காரத்திற்காக.. ரோஜாப் பூக்களைப் பறித்து வருமாறு குமரி அவளை ஏவியது நினைவிற்கு வர.. ரோஜாத் தோட்டத்திற்கு ஓடிச் சென்றாள் மதி. ரோஜாக்களைக் கண்டதும் பழைய நிகழ்வுகள் மனதில் தோன்றி வாட்டினாலும்.. கண்களிலிருந்து கண்ணீர் கரகரவென வழிந்தாலும்.. தன் காதலனின் திருமணத்திற்கு ஓடி ஓடி வேலை செய்யும் தனது நிலையை எண்ணி தன்னிரக்கம் எழுந்தாலும்.... மனதை அடக்கி.. கண்ணீரைத் துடைத்தபடி பூக்களைப் பறித்துக் கூடைக்குள் போட்டாள்..

அவளது கண்ணீர் பொறுக்காமலோ.. என்னவோ.. அடுத்த நொடி வானமே.. சடசடவென மழையைப் பொழிந்து தனது இரங்கலைத் தெரிவித்தது.. பெரிய பெரிய துளிகளுடன் ஆரம்பித்து சோவென மழை பொழியத் துவங்க.. நனைந்த படியே வீட்டை நோக்கி ஓடிய மதி.. வீட்டை அடைந்த போது தொப்பலாக நனைந்து விட்டிருந்தாள்.. "என்ன மதிக்கா.. இப்படி நனைந்து விட்டாயே..?, மல்லிகை மண்டபத்தில் நின்று விட்டு வருவதற்கென்ன..?"என்று கடிந்து கொண்ட மல்லி.. "உடை மாற்றிக் கொண்டு வா... போ.."என்று அவளது பையிலிருந்து மாற்றுடையை எடுத்துக் கொடுத்தாள்.. திருமணம் முடியும் வரை அங்கேயே தங்குமாறு குமரிம்மா கூறியதால்.. அன்று காலை தான் 4 நாட்களுக்குத் தேவையான துணிகளை எடுத்து வந்திருந்தனர் இருவரும்.. மல்லி கொடுத்த உடையை வாங்கிக் கொண்டு பக்கத்திலிருந்த அறைக்குச் சென்றாள் மதுமதி..

எஸ்டேட்டிலிருந்து வீட்டிற்குப் புறப்பட்ட ஆதித்யன்.. வீட்டை அடைந்த போது.. மழை பெரிதாகப் பொழியத் துவங்கியிருந்தது.. காரை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கியவன்.. வீட்டிற்குள் நுழைவதற்குள்.. நனைந்து போனான்.. போதாதற்கு.. சகதி வேறு கால் முழுதிலும் அப்பிக் கொண்டது.. வீட்டிற்குள் நுழைந்தவன்.. காலைக் கழுவி விட்டு அறைக்குச் செல்லலாம் என்று தீர்மானித்து.. சமையலறைக்கு அருகேயிருக்கும் அறையில் நுழைந்தான்..

உடை மாற்றுவதற்காக அறைக்குச் சென்ற மதுமதி.. கதவைச் சரியாகத் தாழிடாமல் விட்டு விட.. ஆதித்யன் அந்த அறையின் கதவைத் திறந்ததுமே திறந்து கொண்டது.. உள்ளே சென்று நனைந்திருந்த தலை முடியைக் கையால் களைத்தபடி கதவைத் தாழிட்டான்..

தாவணியில் மடிப்பு வைத்துக் கொண்டிருந்த மதுமதி.. திடீரென்று அறைக்குள் யாரோ நுழைந்து விட்டதைக் கண்டுத் திகைத்து நிமிர.. கதவைத் தாழிட்டு விட்டு நிமிர்ந்த ஆதித்யன்.. அப்படியொரு கோலத்தில் அவளை எதிர்பாராததால் மூச்சடைக்க நின்று விட்டான்... நெஞ்சம் படபடவென அடித்துக் கொள்ள சட்டென மறுபுறம் திரும்பி நின்ற மதுமதிக்கு.. கை,கால்கள் விறைத்துப் போய் விட.. நெஞ்சோடு தாவணியை இறுகப் பற்றிய படி கண்களை மூடிக் கொண்டாள்.

ஒரு நிமிடம்... ஒரே நிமிடம் தான் என்றாலும்.. நீலப் பாவாடையில் வெண் நிறத்தில்.. பளீரென்று தெரிந்த அவளது இடையையும்.. அவள் அணிந்திருந்த மேலாடையை மீறித் திமிறித் தெரிந்த அவளது இளமையையும்.. கண்டு விட்டவனுக்கு ஏதோ செய்ய.. உச்சந்தலையிலிருந்து.. உள்ளங்கால் வரை ஜிவ்வென... நரம்பு முழுவதிலும் புது ரத்தம் பாய்வதை உணர்ந்து.. தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் திணறிக் கைகளை இறுக மூடினான்..

தனது எண்ணப் போக்கை நினைத்துத் தன் மீதே கோபம் வர.. உடனே அந்த இடத்தை விட்டு வெளியேற நினைத்துச் சட்டெனக் கதவைத் திறந்தான்.

திறந்த கதவின் வெளியே சித்ரலேகா நிற்பதைக் கண்டு அவன் திகைக்க.. சிரிப்புடன் அவனை எதிர்கொண்டவள்.. அவன் முகம் போன போக்கைக் கண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.. அங்கே தாவணியை மாரோடு அணைத்தபடி.. விரிந்த தலைமுடியுடன் நின்று கொண்டிருக்கும் மதுமதியைக் கண்டு.. உள்ளம் எரிந்தது அவளுக்கு...

தகதகவென உடல் முழுதும் எரியத் துவங்க.. இருவரையும் உறுத்து நோக்கியவள்.. “இங்கே என்ன நடக்கிறது அத்தான்..?,”என்று குரலை உயர்த்தாமல்.. வார்த்தைகளில் அழுத்தத்தைக் கூட்டி வினவினாள்.. குழப்பமாக அவளை ஏறிட்டவன்.. பின் “என்ன.. என்ன கேட்கிறாய் நீ...?”என்று கோபத்துடன் வினவினான்..

“ஓ! குரலை உயர்த்துகிறீர்களா...?,தவறும் செய்து விட்டுக் குரலை வேறு உயர்த்துவீர்களா..?,இவளுக்கும் உங்களுக்கும் இடையே என்ன நடந்து கொண்டிருக்கிறது..?,ஒழுக்கமாக இருப்பதாக வெளியே காட்டிக் கொள்கிறீர்களே.. வீட்டு வேலைக்காரியுடன் இப்படி கேடு கெட்டத் தனமாக நடந்து கொள்கிறீர்கள்..?,இது தான் பெரிய மனுஷத் தனமா..?,இவள் மட்டும் தானா..?,அல்லது இங்கே வேலை பார்க்கும் அத்தனை பெண்களுடனும் இது போலத் தான் நடந்து கொள்வீர்களா..?,”என்றவளை.. மேலே பேச விடாமல் “ஏய்...”என்ற உறுமலுடன் அவளது கழுத்தைப் பற்றினான் ஆதித்யன்..

“இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசினாயானால்.. கொன்று விடுவேன்.. என்ன வார்த்தை பேசுகிறாய்..?,”என்று அவன் தொடங்க.. அவன் கரத்தைப் பிரித்து அவனை ஒதுக்கித் தள்ளியவள்.. “பின்னே..?,இதற்கு.. இதற்கு என்ன அர்த்தம்..?, பூட்டியிருந்த கதவின் உள்ளே என்ன நடந்ததென்பதை யூகிக்க.. அவளது அரைகுறை ஆடையே போதுமே.. இது எத்தனை நாட்களாக நடக்கிறது அத்தான்,,?,”என்று அவள் மனசாட்சியே இல்லாமல் கொச்சையாகப் பேச.. அறையின் உள்ளே வாய் மூடிக் குலுங்கி அழுது கொண்டிருந்த மதுமதிக்கு.. உயிரே போய் விடுமளவிற்கு வலித்தது..

இருவருமிட்ட சத்தத்தில் வீட்டில் அனைவரும் ஒன்று கூடி விட.. “ஆதி.. ஆதி என்னவாயிற்றுப்பா..?,லேகா ஏன் சத்தமிடுகிறாய்..?”என்று அவளருகே சென்று கைப் பற்றிய குமரிம்மாவின் கரத்தை உதறியவள்.. “உங்களுக்குத் தெரிந்து தான் எல்லாம் நடக்கிறதா அத்தை.. ஒழுக்கமான மகனை வளர்த்து விட்டதாக மார் தட்டிக் கொள்வீர்களே.. உங்கள் மகன் செய்யும் ஈனக் காரியத்தைப் பற்றி.. உங்களுக்கு ஏதேனும் தெரியுமா..?, இவருக்குக் கல்யாணம் எதற்கு அத்தை... இப்படியே ஒவ்வொரு வேலைக்காரியுடன் ஒவ்வொரு இரவையும் கடத்தி

விடச் சொல்வது தானே..?"என்று கேட்க.. அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல்.. அவளை ஓங்கி அறைந்தான் ஆதித்யன்..

"இதற்கு மேல்.. ஒரு வார்த்தை பேசினாயானால்... நீ உயிருடன் இருக்க மாட்டாய்.. வெளியே போ.."என்று அவன் சத்தமிட.. கோபத்துடன் அவனை நோக்கியவள்.. "என்னை அடிப்பதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.. உன்னைப் போன்ற கேவலமான ஒருவனின் கை என் மேல் படுவதைக் கூட நான் விரும்பவில்லை.. நீ என்ன சொல்வது.. நான் செல்கிறேன் இந்த வீட்டை விட்டு.. நீ வப்பாட்டிகளுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டு மகிழ்ச்சியாக இரு.."என்று கூறி விட்டு விறுவிறுவென உள்ளே செல்ல..

கோபத்தில்.. கண்கள் சிவக்கக் கொதித்துப் போய் நின்றிருந்த ஆதித்யனையும், உள்ளே அழுகையில் குலுங்கிக் கொண்டிருந்த மதுமதியையும் கண்டு.. பயம் சூழ்ந்தது குமரிக்கு.. கைகளும்,கால்களும் நடுங்கத் துவங்க.. உறவினர்கள் அனைவரும் வேடிக்கை பார்ப்பதை உணர்ந்து.. "லேகா.. என்னம்மா..?, என்ன நடந்தது.. நீங்கள் இருவருமாகச் சண்டையிட்டுக் கொண்டால் எப்படி..என்ன நடந்தது சொல்லம்மா.."என்று கெஞ்சியவரிடம்..

"அதை உங்கள் மகனிடமே கேளுங்கள் அத்தை.. அமைதியே உருவானவள் போன்று வேடமிட்டு.. பற்பல வேலைகளைப் பார்க்கிறாளே.. மதுமதி.. அவளைக் கேளுங்கள்.. இருவருக்குமிடையே என்ன நடந்ததென்று.. பட்டப் பகலில்.. வீட்டில் இத்தனை பேர் இருக்கையில்.. இருவரும் ஒரே அறையில் சல்லாபம் புரிகிறார்கள்.. இதைச் சகித்துக் கொண்டு நான் வாழ வேண்டுமா..?, உங்கள் மகனைப் போன்ற ஆட்களுக்குக் கல்யாணமே தேவையில்லை அத்தை.."என்று கோபமாகக் கூறியவளை.. அதே கோபத்துடன் எதிர் கொண்ட குமரி..

"வாய்க்கு வந்தபடி பேசினாயானால்.. நாக்கு அழுகிப் போகும் ஜாக்கிரதை.. யாரையும்,யாரையும் சேர்த்து வைத்துப் பேசுகிறாய்..?, உன்னை விட.. என்னை விட.. மிகப் பெரிய உத்தமி அவள்.. ஏழைப் பெண் என்ற ஒரே காரணத்தினால்.. அவள் மீது வீண் பழியைச் சுமத்தாதே.."என்று உள்ளம் பதற.. கண்களில் கோர்த்த நீருடன் அவர் கோபமாகக் கூற.. "உத்தமியா..?, அவள் உத்தமியா..?" என்று ஏளனமாகச் சிரித்த லேகா.. "அந்த உத்தமிக்கு.. பூட்டிய அறையில்.. அரைகுறை ஆடையுடன் என்ன வேலையென்று கேளுங்கள் அத்தை.."எனக் கூறித் தன் சாமான்கள் அனைத்தையும் பெட்டிக்குள் அடைத்தாள்..

என்ன செய்வதென்று புரியாமல்.. கையைப் பிசைந்து கொண்டு நின்ற மீனாம்பாளிடம் "நீயேனும் அவளிடம் பேசு மீனா.. ஊரைக் கூட்டிக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டோம்.. இப்போது போய்.. இப்படிப் பிரச்சனை செய்தால் எப்படி..?"என்றவர் விறுவிறுவென நடந்து மதியிடம்

சென்றார்.. அறையை விட்டு வெளியே வரப் பயந்து சுவரோடு ஒன்றிப் போனவளை.. அவர் எதிர்கொள்ள.. “குமரிம்மா....”என்று அணைத்துக் கொண்டவள்..

“நான்... நான் எந்தத் தவறும் செய்யவில்லை குமரிம்மா.. எதுவும் நடக்கவில்லை.. அவர்களை இப்படியெல்லாம் பேச வேண்டாமென்று சொல்லுங்கள் குமரிம்மா..”என்று கதறி அழுதவள்.. நடந்த அனைத்தையும் கூறி முடிக்க.. அவளைச் சமாதானப் படுத்தியவர்.. “அழாதே.. உன்னை யாரும் தவறு சொல்லப் போவதில்லை.. உன்னையும்,ஆதியையும் இணைத்து அவள் பேசுவதை நம்புமளவிற்கு இங்கு எவரும் மனசாட்சியற்று இல்லை மதி.. அழாதே..”என்று சமாதானப் படுத்தியவர்.. அவளை வெளியே அழைத்துச் செல்ல முயன்றார்..

“நான் வர மாட்டேன்.. நான் வரவில்லை குமரிம்மா.. எல்லாரும் வேடிக்கைப் பார்க்கிறார்கள்.. நான் வர மாட்டேன்..”என்று அவள் அழுவதை வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த ஆதித்யனுக்கு.. கோபத்தில்.. தலை சூடானது.. மதியின் கையைப் பற்றிக் கொண்டு வெளியே வந்த குமரி.. தன் பெட்டிகளுடன் வெளியே வந்த லேகாவைக் கண்டு பதறி அவளருகே ஓடினார்..

“லேகா.. என்ன.. என்னம்மா இது.. கண்ணால் பார்ப்பது பொய் என்று உனக்குத் தெரியாதா..?,நீ நினைப்பது போல்.. எதுவும் இங்கே நடக்கவில்லை..”என்றவர் நடந்ததைக் கூற முயல.. “அம்மா.. இவளிடம் எதற்காக விளக்கிக் கொண்டிருக்கிறீர்கள்..?, இவ்வளவு நடந்த பின்பும் இவளைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறீர்களா..?,”என்று அவன் அன்னையிடம் முறையிட.. அவனை உறுத்து விழித்தவள்..

“நீ என்ன திருமணத்தை நிறுத்துவது..?, நான் ஏற்கனவே நிறுத்தி விட்டேன்..” என்று கூறியவளிடம் “நான் சொல்வதைக் கேளம்மா..”என்று அழுகையுடன் குமரி கெஞ்சத் துவங்க.. “தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்.. நீங்கள் நினைக்குமளவிற்கு.. எதுவும் நடக்கவில்லை..”என்று அவளுக்குப் புரிய வைக்க முயன்ற மதுமதியை வெறுப்புடன் நோக்கியவள்..

“நீ தான்.. நீ ஒருத்தி தான் ஆரம்பத்திலிருந்து என் பிரச்சனையே.. என்று பெரிதாக முடியப் போகிறதோ என்று பயந்து கொண்டிருந்தேன்.. இன்று அது நடந்தே விட்டது..”என்று அவள் கோபமாகக் கத்த.. மேலும் அவள் ஏதேனும் பேசி விடும் முன் இடை புகுந்த மீனாம்பாள்.. “சித்ரா.. சித்ரா.. அமைதியாகப் பேசு.. உனக்கு ஆதியைப் பற்றித் தெரிந்தும் நீயே இப்படிப் பேசலாமா..?, அவர்கள் கூறுவதை ஒருமுறை காது கொடுத்துக் கேளேன்..”என்று கூற..

திரும்பி அன்னையை முறைத்தவள்.. “பணத்திற்கு ஆசைப் பட்டு.. உன் மகளை இவனைப் போன்ற கேடு கெட்ட ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பாயாம்மா..?, நீயும்,அப்பாவும் அடைய நினைக்கும் எஸ்டேட்டை விட என் வாழ்க்கை எனக்கு முக்கியம் அம்மா..”என்று கோபத்தில் வாய் விட்டு விட.. அன்னையையும்,மகளையும் நோக்கிய ஆதித்யனின் பார்வை ஏளனத்தின் உச்சியை அடைந்திருந்தது..

“ஓ!,திட்டத்துடன் தான் குடும்பத்தோடு என் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறீர்கள்.. ஆக.. நீ அத்தையென்று அக்கறை காட்டியதும்.. அத்தானென்று ஆசை காட்டியதும் எஸ்டேட்டை மனதில் வைத்துத் தான் என்ன..?, பணத்திற்கு ஆசைப் பட்டு.. என்னைத் திருமணம் செய்து கொள்ள நினைத்த.. உன்னை விட கேவலமான பிறவி உலகத்தில் இனி பிறக்கப் போவதில்லை.. நீ.. நீ என் ஒழுக்கத்தைச் சந்தேகப் படுகிறாயா..?, என்னைப் பற்றி நினைக்கக் கூடத் தகுதியற்ற நீ.. என் ஒழுக்கத்தை விமர்சிக்கிறாயா..?, போ.. வெளியே போ..” என்று அவளைத் துரத்த.. தன் வாயாலேயே உண்மை வெளியாகி விட்டதில் துணுக்குற்றாலும் கோபத்துடனே வெளியேறினாள் லேகா.. அவளைத் தொடர்ந்து அவமானத்தில் கூனிக் குறுகியபடி வெளியே சென்றார் மீனாம்பாள்.. லேகாவின் தந்தை முன்னமே அவர்களது எஸ்டேட் விசயமாக சென்று விட்டதால்.. அவரைத் துரத்தும் பணி மிச்சமானது ஆதித்யனுக்கு.

எதிர்பாராத தொடர் அதிர்ச்சிகளைச் சந்தித்ததிலும்.. சீராட்டி பாராட்டி வளர்த்த மகனது கல்யாணம் பாதியில் நின்று போனதில் உண்டான கவலையும்,,. உறவினர் அனைவரும் சூழ்ந்திருக்கும் இந்த நேரத்தில்.. இப்படியொரு அவமானத்தை சந்தித்து விட நேர்ந்ததில் உண்டான வருத்தமும்.. அனைத்தும் சேர்ந்து உடலையும்,மனதையும் அழுத்தியதில்.. கைகளும்,கால்களும் ஒவ்வொரு பக்கமாக இழுத்துக் கொள்ள.. நேர் வெறித்த விழிகளுடன் கீழே சரிந்தார் குமரி..

அவர்கள் இருவரும் செல்வதை வெறுப்புடன் நோக்கிய ஆதித்யன் மதியின் “குமரிம்மா....”என்ற கூவலில்.. பதறி.. உள்ளே ஓடினான்.. அன்னை கிடந்த கோலத்தைக் கண்டு உடல் நடுங்க.. “அம்மா....”என்று அருகே ஓடியவன்.. “வே.. வேலு அண்ணா... வண்டி எடுங்கள்...”என்று குரல் கொடுக்க.. உடனே அன்னையைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு காருக்குச் சென்றான் ஆதித்யன்..

அடுத்த சிறிது நேரத்தில்.. குமரிம்மாவிற்கு சிகிச்சைக் கொடுக்கப்பட.. கடந்து சென்ற ஒவ்வொரு நொடியும் நரமாகிப் போனது இருவருக்கும்.. சிறிது நேரத்தில் வெளியே வந்த மருத்துவர் குமரிக்குப் பக்கவாதம் என்று தெரிவிக்க.. உடைந்து போனான் ஆதித்யன். அழுதபடி அவர் காட்டிய

அறைக்குள் நுழைந்து மயக்கத்தில் ஆழ்ந்திருந்தவரைக் கண்ட மதுமதிக்கு குற்ற உணர்வில் அழுகை பொங்கியது..

தவறே செய்யவில்லையென்றாலும்.. ஏதோ ஒரு வகையில்.. நடந்த அத்தனைக்கும் தான் காரணமென்பதை நினைக்கையில் உள்ளம் துவண்டது அவளுக்கு.. தன் சொந்த மகளாகவே எண்ணி.. பாசத்துடனும்,அக்கறையுடனும் சிறு வயதிலிருந்துத் தன்னைக் கவனித்து வந்த அவருக்குத் தன்னாலே இவ்வளவு பெரியக் கஷ்டம் நேர்ந்து விட்டதை எண்ணி.. அந்தப் படுக்கையில் நெற்றியை முட்டிக் கவிழ்ந்து உடல் குலுங்க அழத் துவங்கினாள்..

அவளைத் தொடர்ந்து அறைக்குள் நுழைந்த ஆதித்யனுக்கு.. அன்னையைக் கண்டு அழுகை பொங்கியது.. இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டாளே பாவி.. என லேகாவின் மீது கோபம் வந்தது.. தவறான எண்ணங்களுடன் திட்டமிட்டு ஒவ்வொன்றையும் செய்த அவளும்,அவளது பெற்றோரும் எவ்வித சேதமுமின்றி.. நன்றாக இருக்கையில்.. அனைவருக்கும் நல்லது மட்டுமே நினைக்கும் இவருக்கு இப்படியொரு நிலைமையா..? அன்னையின் கை,கால்களை வருடி.. அழுகையில் குலுங்கியவனை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி.. அறையை விட்டு வெளியேறினாள் மதுமதி.



# அத்தியாயம் – 13



**உயிரில் பாதியை இழந்து..**
**ஜீவனற்றுப் போய் விட்டேன் நான்..**
**இனியும் நீ வதைப்பதற்கு..**
**ஏதுமில்லை என்னிடம்..**
**சென்று விடு.. என்னை விட்டு..!**

**ம**ருத்துவமனையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிய மதுமதிக்கு.. அந்த மாளிகையில் நுழைவதற்குத் தயக்கமாக இருந்தது.. அவமானத்தில் கூனிக் குறுகி நின்றிருந்தது நினைவிற்கு வந்தது. மெல்லப் படியேறி வீட்டிற்குள் நுழைந்தவளை... மல்லியும்,பைரவியும் ஓடி வந்து வரவேற்றனர்.. "அம்மாவிற்கு எப்படியிருக்கிறது மதி..?"என்று பரபரத்தவர்களிடம் அவள் நிலைமையைக் கூற.. அனைவருக்கும் கவலை சூழ்ந்தது.

ஆதித்யனின் உறவினர்கள் அவளை வெறித்து நோக்குவதைக் கண்டு மேலும் கூசிப் போனவள்.. மேலும் உள்ளே செல்ல மனமற்று சமையலறை வழியாக வெளியேறித் தன் வீட்டிற்குச் சென்று விட்டாள்.. கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவளுக்கு அழுகை பீறிட்டது.. உடனே தந்தையைக் காண வேண்டுமென்று ஆர்வம் பிறந்தது.. அவர் மட்டும் இன்று அவளுடன் இருந்திருந்தால்.. அவரது அருமை மகள் அவமானப் படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்திருப்பாரா..?,

தந்தைக்கு இந்த விசயம் தெரிய நேர்ந்தால்.. எப்படித் துடித்துப் போவார் என்பதை எண்ணிப் பார்க்கையில் நெஞ்சு பிசைந்தது அவளுக்கு.. சித்ரலேகா கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் நினைவிற்கு வந்து தலை குனிய வைத்தது.. எப்படிக் கொச்சையாகப் பேசி விட்டாள் பாதகி..! என்ன நடந்ததென்பதை விசாரிக்காமல்.. சூழ இருப்போர் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்காமல்.. தன் போக்கில் பழி போட்டு விட்டுத் திருமணத்தையும் நிறுத்தி விட்டுச் சென்று விட்டாள்..

அத்தனை உறவினர்களுக்கு மத்தியில் அப்படியொரு அவமானம் நேர்ந்து விட்டதில்.. குமரிம்மா சரிந்து விழுந்த சம்பவம் மீண்டும் மீண்டும்

நினைவிற்கு வந்தது.. தன்னால் தான் அனைத்தும் நடந்து விட்டதாக எண்ணி.. அழுது அழுது ஓய்ந்து போனாள் மதுமதி..

தனக்குள்ளே நொந்து செயலற்றுப் போய்.. வீட்டின் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தவளைக் காலையில் பைரவி வந்து எழுப்பினார்.. "மதி.. எழுந்திரு.." என்று அவளை உலுக்கியவர்.. "என்ன மதி.. இப்படி சோர்ந்து விட்டாயே..?, ராத்திரி முழுதும் அழுதாயா..?, எதற்காக..?, உன்னைப் பற்றியும்,சின்னைய்யாவைப் பற்றியும் எங்களுக்குத் தெரியாதா மதி..?, அவள் அநியாயமாக பேசி விட்டுச் சென்றாள் என்றால்.. அதை நினைத்து நீ அழுது சோர்வதா..?,"என்று கடிந்து கொள்ள.. "எ... என்னால் தாங்க முடியவில்லை பைரவிக்கா.."என்று அழுதவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டார்..

"அழாதே மதி.. நீ இப்படி நொந்து போகும் அளவிற்கு எதுவும் நடந்து விடவில்லை.. அப்பா வந்து விட்டால் எல்லாம் சரியாகிப் போகும்.. குமரிம்மா உன்னைப் பார்க்க விரும்புவதாக சின்னைய்யா கூறினார்.. வா.. குளித்து விட்டு வா.. செல்லலாம்.."என்று அவளைக் குளியலறைக்கு அனுப்பி விட்டு.. அவள் கிளம்பும் வரைப் பொறுமையாகக் காத்திருந்து அழைத்துச் சென்றார்.

வேலு அண்ணாவுடன் அவள் மருத்துவமனைக்குள் நுழைகையில் அன்னையின் அறையில் அமர்ந்திருந்தான் ஆதித்யன்.. மகனின் கைப் பற்றி.. குழறிய வாயுடன் பேச முற்பட்டவரைத் தடுத்தவன்.. "அம்மா... நீங்கள் எதுவும் பேச வேண்டாம்.. அவளுடனான திருமணம் நின்று போனதற்கு நானோ.. செய்யாத தவறுக்கு அவள் பழி போட்டு விட்டுச் சென்றதற்காக... மதியோ.. வருத்தப்படவேயில்லை.. அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.. அவளது எண்ணம் என்னவென்பதைத் தான் அவளே சொல்லி விட்டுச் சென்றாளே.. சொத்துக்காக என்னை மணக்க நினைத்தவள்.. கடைசி வரை எனக்கு உண்மையாக இருப்பாளாம்மா...?, இந்தத் திருமணம் நடந்திருந்தால் என்னவாகியிருக்கும்..?, அந்த நரகத்திற்கு.. இப்போதே திருமணம் நின்று போனதில் எனக்கு மகிழ்ச்சி தான்... என்னுடைய ஒரே வருத்தம்... இப்போது நீங்கள் தானம்மா.. நீங்கள் சரியாகி வர வேண்டும்.. சீக்கிரமே.. ப்ளீஸ் மா.." என்று அவன் கெஞ்ச...

கண்களில் கண்ணீர் வழியச் சரியெனத் தலையாட்டியவர்.. மதியைத் தேட.. அறை வாசலில் நின்று கொண்டிருந்தவளை.. நிமிர்ந்து நோக்கினான் அவன். அவன் பார்வையைக் கண்டு அருகே வந்தவள்.. குமரியிடம் குனிந்து.. "எ..என்னை மன்னித்து விடுங்கள் குமரிம்மா.. என்னால்.. என்னால் தான் இவ்வளவும் நடந்து விட்டது.."என்று அழுதபடிக் கூற.. அவள் கண்ணீரைத் துடைத்தவர்.. "நான் தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.. இப்படியொரு அவப்பெயரை உனக்குத் தேடித் தந்ததற்காக..."என்று அவர் குழறியபடிக் கூற.. "இல்லை குமரிம்மா.."என்று அவரது கைப் பற்றிக்

கொண்டவள்.. “நீங்கள் சீக்கிரம் குணமாகி வர வேண்டும் குமரிம்மா..”என்று கூற.. “நீ அழுவதை நிறுத்த வேண்டும்..”என்று அவர் கூற.. கண்களைத் துடைத்துக் கொண்டு புன்னகை புரிய முயன்றாள் மதுமதி.

இரவு முழுதும் அவள் அழுது புரண்டதை.. அவளது கண்கள் காட்டிக் கொடுத்து விட.. தன்னருகே அமர்ந்து.. அன்னையிடம் ஜீவனற்றுப் புன்னகைத்தவளைக் கண்டவனுக்கு.. ஊசி கொண்டு நெஞ்சில் குத்தியதைப் போல்.. வலியெடுத்தது.. உடல் விறைத்து முகம் இறுகிப் போய் அமர்ந்திருப்பவனை உணர்ந்து கொண்ட மதுமதி... அவனிடம் பேசப் பயந்து நகர்ந்து விட்டாள்..

வெளியே நின்றிருந்த வேலு அண்ணாவிடம் “அண்ணா.. அப்பா எப்போது வருவார்கள்..?,இன்று வருவதாகக் கூறினாரே..?”என்று அவள் வினவ.. “வந்து விடுவாரம்மா.. இன்று இரவு வந்து விடுவார்..”என்று வேலன் கூறத் தலையாட்டி விட்டு அங்கே போடப் பட்டிருந்த பெஞ்சில் சோர்ந்து அமர்ந்தாள்.. சிறிது நேரத்தில் அன்னையின் அறையை விட்டு வெளியே வந்த ஆதித்யனும் அந்த பெஞ்சின் மறுபுறத்தில் அமர.. இருவரும் சோர்ந்து போய் அமர்ந்திருப்பதைக் கண்டு.. மதிய உணவு வாங்கி வந்து சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினார் வேலன்..

“அவளைச் சாப்பிடச் சொல்லுங்கள் வேலு அண்ணா..”என்று ஆதியும் “அவருக்குக் கொடுங்கள் அண்ணா..”என்று மதுமதியும் மாற்றி மாற்றிக் கை காட்ட.. இருவரையும் வற்புறுத்திச் சாப்பிட வைத்தார். அவ்வப்போது... குமரிம்மாவைச் சென்று பார்த்தபடியும் மீண்டும் அந்த பெஞ்சில் வந்தமர்ந்தபடியும்.. ஒருவர் மற்றவரின் மீது பார்வையைச் செலுத்தாமல்.. தங்கள் போக்கில் அமர்ந்திருந்தனர் இருவரும்.

இரவானதும் தந்தை வந்து விடுவாரென்கிற நம்பிக்கையில்... அந்த பெஞ்சிலேயே.. கால் மடித்து அமர்ந்திருந்தாள் மதி. நேரம் செல்லச் செல்ல.. மதியின் நிலை மோசமானது.. வாசலில் அமர்ந்திருந்த வேலுவிடம் சென்று பலமுறைக் கேட்டு விட்டாள்.. அவள் சென்று வருவதைக் கண்டு கொள்ளாமல்.. கண் மூடி அமர்ந்து விட்டான் ஆதித்யன். சிறிது நேரத்தில் வேலு வேகமாக உள்ளே வந்து ஆதியை எழுப்ப.. “என்ன வேலுண்ணா..?”என்றவனிடம் “கொஞ்சம் பேச வேண்டும் தம்பி.., முக்கியமான விசயம் வாருங்கள்..”என்று அவனை அவசரமாக அழைத்துச் சென்றார்.

“என்ன அண்ணா..?”என்று விசாரித்தவனிடம் அவர் கூறிய செய்தி அவனைத் தூக்கிவாரிப் போட வைத்தது. வேகத்துடன் அவர் சட்டையைப் பற்றி.. “என்ன.. என்ன சொல்கிறீர்கள் அண்ணா..?,அங்கிளுக்கு என்னவாயிற்று..?”என்று வினவியவனிடம் “ஆமாம் தம்பி.. வத்தலகுண்டிலிருந்து அவர் ஏறிய வண்டி மலை மீது ஏறுகையில் எதிரே வந்த லாரி மோதியதில்.. கவிழ்ந்து விபத்து

ஏற்பட்டு விட்டது போலும் தம்பி.. அவரோடு சேர்த்து ஆறு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டதாகச் செய்தி தம்பி..”என்று கூற.. தலையைப் பிடித்துக் கொண்டுக் கீழே அமர்ந்து விட்டான் ஆதித்யன்..

“அவள்.. அவள் நிச்சயம் தாங்க மாட்டாள் வேலுண்ணா.. நான்.. எப்படி எப்படி அவளிடம் இதைப் பற்றிக் கூற முடியும்..?,என்னால் முடியாது..”என்று சுவரைக் குத்தியவனைக் கண்டு வேலு அண்ணா செய்வதறியாது கையைப் பிசைந்தார். “அங்கே.. அங்கே சென்றாக வேண்டும் தம்பி..”என்றவரை நிமிர்ந்து நோக்கியவனின் கண்களில் நீர் கோர்த்திருந்தது.. கண்ணீரைச் சுண்டியெறிந்தபடி.. உள்ளே சென்றவன்.. பெஞ்சின் மீது கண் மூடி சாய்ந்திருந்த மதுமதியைக் கண்டு கலங்கிப் போனான்..

அவளுக்கென்று இந்த உலகத்திலிருக்கும் ஒரே உறவு அவளது தந்தை தான்.. எப்போது வருவார்... எப்போது வருவாரெனக் காலையிலிருந்து ஆயிரம் முறை கேட்டு விட்டாள்.. இனி அவர் வரவே மாட்டாரென்பதை எப்படி அவளிடம் தெரிவிப்பது.. அடுத்தடுத்து எத்தனை விசயங்களைத் தான் தாங்குவாள்..?, ஆண்டவா.. ஒரே சமயத்தில் அத்தனைக் கஷ்டங்களையும் தருகிறாயே.. என்று எண்ணமிட்டவன்.. அவளருகே சென்று..

“ம..மது...”என்று அவள் தோளில் கை வைத்தான்.. திடுக்கிட்டு விழித்தவளின் கைகளை இறுகப் பற்றியவன்.. “மது.. வெ.. வெளியே... செல்ல வேண்டும்.. வருகிறாயா..?”என்று வினவ... “எ..எங்கே....?”என்று தயங்கியவளின் தோளைப் பற்றி எழுப்பித் தன்னோடு இறுக்கியபடி அவன் நடந்து செல்ல.. காரணமற்று மனதில் கிலி ஏறியது மதுமதிக்கு.. அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கியவள்... “எ..எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்..?,குமரிம்மாவிடம் சொல்லவில்லையே..?” என்றவளிடம்..

“பிறகு சொல்லிக் கொள்ளலாம்..”என்று முகம் இறுகக் கூறியவன்.. காரில் அவளை அழைத்துச் சென்ற இடம் அரசு மருத்துவமனை. அவன் அழைத்து வந்த இடமும்,வேலு,ஆதியின் முகங்களையும் வைத்து.. விசயத்தை ஓரளவு யூகித்து விட்ட மதுமதி.. ஆதித்யனின் சட்டையைப் பற்றி.. “இங்கே எதற்காக அழைத்து வந்திருக்கிறீர்கள்..?,அப்பா.. அப்பாவிற்கு என்ன..?,அப்பா எங்கே..?”என்று உலுக்க.. பதில் கூற முடியாமல் கண்களில் கண்ணீர் தேங்கியது ஆதித்யனுக்கு..

“அப்பா.. நம்மை விட்டுப் போய் விட்டாரம்மா...”என்று குலுங்கி அழுத வேலுவை வெறித்து நோக்கியவள்.. ஆதித்யனைத் திரும்பி நோக்க.. “மது...”என்று அவள் தோளைப் பற்றினான்.. “இல்லை.. அப்பாவிற்கு ஒன்றுமாகவில்லை.. அப்பா என்னைத் தனியாக விட்டுப் போக மாட்டார்..”என்று அவன் கையைத் தட்டி விட்டவளை.. “மது..மது.. என்னைப்

பார்.. இங்கே பார்..”என்று அவள் முகத்தைத் தன் புறம் திருப்ப.. “அப்பாவிற்கு ஒன்றுமில்லை தானே.. ஒன்றுமாகவில்லை என்று கூறுங்கள்.. “என்று அவனிடம் மன்றாடியவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டவன்.. “அங்கிள் இப்போது உயிருடன் இல்லை மது.. அவருக்கு.. அவருக்கு விபத்து ஏற்பட்டு விட்டது..”என்று கூற.. பொங்கிய அழுகையை அடக்க முடியாமல்.. அவன் மார்பிலேயே அழுது தீர்த்தாள்.

அவள் முதுகை வருடி.. சமன் செய்ய முயன்றவனுக்கும் அவளது கதறலைத் தாங்க முடியாமல் போகத் தானும் கண்ணீர் சொரிந்தான். அதன் பின் விபத்தில் சிதைந்து போன அவரது உடலை அடையாளம் காட்ட வேலு சென்று விட.. அங்கே விபத்தில் இறந்து போன உடல்களைக் காண வந்த உறவினர்கள் எழுப்பிய ஓலம்.. அவளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது..

நடுங்கிய உடலுடன் தன்னோடு ஒன்றியவளைக் கண்டு இரக்கம் எழுந்தது ஆதித்யனுக்கு.. தான் அடையாளம் காட்டிய உடலுடன் வெளியே வந்த வேலுவைக் கண்டு விட்ட மதுமதி.. “அப்பா....”என்ற கதறலுடன் அருகே ஓட.. செய்வதறியாது செயலிழந்து நின்று விட்டான் ஆதித்யன். “அப்பா.. அப்பா.. எழுந்து வாருங்கள்.. நீங்கள் இல்லாத உலகில் என்னால் எப்படி வாழ முடியும்..?, என்னை அநாதையாக்கி விட்டுச் சென்று விட்டீர்களேப்பா..?,என்னால்.. என்னால் தாங்க முடியவில்லைப்பா..”என்று கதறியவளைச் சமாதானப் படுத்த முடியாமல் திணறினான் ஆதித்யன்.

அதன் பின் நடக்க வேண்டிய காரியங்கள்.. விறு விறுவென நடந்தேறின. அன்பரசு இறந்து விட்ட செய்தியை குமரிம்மாவிடம் தெரிவித்தான் ஆதித்யன். வீட்டில் அனைவருக்கும் செய்தி பரவ.. மதியைத் தேடி அனைவரும் வந்து விட்டனர். மறு நாள்.. இறுதிச் சடங்குகள் அனைத்தும் நடந்து விட.. மதுமதி ஜீவனற்றுச் சாய்ந்து விட்டாள்..

அடுத்த நான்கு நாட்களில்.. குமரியும் மருத்துவமனையிலிருந்து திரும்பி விட.. சக்கர நாற்காலியில் அமர்ந்து வீட்டினுள் நுழைந்தவரை மதுமதி அழுகையுடன் எதிர் கொள்ள.. தன் காலடியில் அமர்ந்து மடியில் தலை சாய்த்துக் கொண்டவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டார் குமரி.. “ஒன்றுமில்லை மதி.. நான் இருக்கிறேன் அல்லவா..?, உன்னைக் கவனித்துக் கொள்ள.. அப்பா நம்முடன் தான் இருக்கிறார்.. அழாதே மதி..”என்று அவர் சமாதானப் படுத்த.. எதற்கும் சமாதானாமாகாமல் அழுதே கரைந்தாள் மதுமதி..

வீட்டில் அனைவருக்கும் அவள் பிரியமானவள் என்பதால்.. அவளைச் சாப்பிட வைப்பதையும்.. உறங்க வைப்பதையும் கவனித்துக் கொண்டனர். அவளது அழுகையையும்,அவள் சோர்வதையும் ஆதித்யனும் கவனித்துக் கொண்டு தான் இருந்தான்.. அவளைச் சமாதானப் படுத்த முயன்று தோற்றுப் போய்..

அனைவரும் கவலையுற்ற போது.. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக.. குமரி ஒரு முடிவுடன் ஆத்யனையும், மதுமதியையும் தன் அறைக்கு வரவழைத்தார்.

ஒரு சேர அறைக்குள் நுழைந்த இருவரும்.. ஒருவரின் மீது மற்றவர் பார்வையைச் செலுத்தாமல்.. நிற்க.. அவர்களிருவரையும் நோக்கிய குமரி ஆதித்யனை அருகே அழைத்தார். "இது வரை நான் கூறிய எதையும் நீ மறுத்துப் பேசாமல் செய்து வந்திருக்கிறாய் தானே ஆதி..?"என்று கேட்க.. ஆம் என்று தலையாசைத்தபடியேத் தன்னருகே அமர்ந்தவனின் கரத்தைப் பற்றிக் கொண்டவர்.. "இப்போது.. இப்போது நான் கூறப் போகும் விசயத்தையும் நீ மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் ஆதி.. அனைவரது நன்மைக்காகவும் நான் பலமுறை யோசித்து எடுத்த முடிவு இது.."என்று அவர் கூற.. என்ன சொல்ல வருகிறார் என்பது போல்.. அன்னையின் முகம் பார்த்தான் ஆதித்யன்.

பார்வையை மதுமதியின் மீது செலுத்தியவர் பின் தயங்கி மகனிடம் "நீ... நீ மதுமதியைத் திருமணம் செய்து கொள்வாயா..?"என்று வினவ.. திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்த மதுமதியும்.. சட்டென இருக்கையை விட்டு எழுந்த ஆதியும்.. பேரதிர்ச்சியைச் சந்தித்து விட்டவர்கள் போன்று.. வியப்பில் வாயடைத்துப் போய் விட்டனர்.

முகம் முழுக்க கோபத்தில் சிவக்க... அன்னையை எதிர்த்து ஏதோ கூற முயன்றவனை அவசரமாகத் தடுத்து நிறுத்திய குமரி.. "வேண்டாம்.. வேண்டாம் ஆதி.. மறுத்து எதுவும் கூறி விடாதே.. யோசிப்பதற்குக் கூட நம்மிடம் இப்போது அவகாசமில்லை.. இருக்கும் ஒரே உறவானத் தந்தையையும் இழந்து விட்டாள் அவள்.. போதாததற்கு.. தவறே செய்யவில்லையென்றாலும் நம்மால் விளைந்த கெட்டப் பெயரை வேறுச் சுமந்து கொண்டிருக்கிறாள்.. அவள் வாழ்க்கை பாழாகி விட வேண்டாம் தம்பி.. உன் அப்பாவின் காலத்திலிருந்து புண்ணியத்தை மட்டுமே தேடிக் கொள்ளும் குடும்பமிது.. இந்தப் பெண்ணின் பாவத்தைச் சுமக்க வேண்டாம்.. தயவு செய்து ஒப்புக் கொள்.."என்று கெஞ்ச..

செய்வதறியாது தலையைக் கோதினான் ஆதித்யன், "அம்மா.. அப்படியானால்.. அந்த ராட்சசி கூறிச் சென்ற அனைத்தையும் உண்மையென நிரூபிக்கப் போகிறீர்களா..?.எனக்கும் மதுமதிக்கும்.. எட்டு வருட வித்தியாசம்.. ஒரு தலைமுறை வித்தியாசமே அடங்கியிருக்கிறது.. அவள் படிப்பைக் கூட முடித்திராத சின்னப் பெண்.. அவளைப் போய்த் திருமணம் செய்து கொள் என்கிறீர்களே.. செய்யாத தவறுக்காக அவள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்..?,அங்கிள் இல்லாத காரணத்தினால் நாம் அவளை விட்டு விடப் போவதில்லை.. கடைசி வரை அவளைப் பார்த்துக் கொள்ளும் கடமை நமக்கு

இருக்கிறது.. அதற்காக.. ஒரு சின்னப் பெண்ணைப் போய்.. அம்மா.. இது முட்டாள்தனம்''என்று அவன் விளக்கினான்.

“நீ பேசுவது தான் முட்டாள்தனமாக இருக்கிறது ஆதி.. எவ்வளவு பெரிய அவமானத்தைச் சந்தித்திருக்கிறாள்.. எவ்வளவு தூரம் அவள் உடைந்து போயிருப்பாள் என்பதைப் புரிந்து கொள்.. எத்தனை பேரிடம் சென்று எங்களிருவருக்குமிடையே எதுவும் நடக்கவில்லை என்று விளக்கப் போகிறாய்.. வருங்கால மனைவி என்ற நிலையில் இருந்தவளிடமே நீ விளக்க முயற்சிக்கவில்லை.. அந்தச் சிறு பெண்ணின் வாழ்வை வீணாக்க வேண்டாம் ஆதி.. நம்மால் ஏற்பட்ட பழி.. நம்மாலேயே துடைக்கப்படட்டும்.. எனக்காக.. எனக்காக ஆதி.. தந்தையையும் இழந்து தவிப்பவள்.. க்ண்ணீர் விடும் ஒவ்வொரு நொடியும்.. இதற்கு நான் தான் காரணமென எனக்கு உறுத்தல் ஏற்படுகிறது.. இப்படி வருத்தபட்டே நான் என் உயிரை விட்டு விடும் முன் அவளை நீ திருமணம் செய்து கொள்.. நான் சொல்வதைக் கேள் ஆதி..''என்று அவர் கூற.. அழுகையில் குலுங்கிக் கொண்டிருந்த மதுமதியை ஏறெடுத்தும் பார்க்காமல்.. அன்னை சொல்வதை ஒப்புக் கொள்ளவும் முடியாமல்.. அறையை விட்டு வெளியேறி விட்டான்..

தன் உடல் நிலையைக் கூட கருத்தில் கொள்ளாமல்.. நா குழறக் குழற.. தனக்காக மகனிடம் போராடிக் கொண்டிருக்கும் குமரிம்மாவை நினைத்துப் பெருமையும்,வருத்தமும் எழுந்தது மதுமதிக்கு.. மறுபுறம் திரும்பி ஓசையற்றுக் கண்ணீர் சொரிந்தவரின் அருகே சென்று.. கண்ணீரைத் துடைத்தாள் மதுமதி.. அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு.. மேலும் அழுகையில் குலுங்கியவரை.. செய்வதறியாது நோக்கிக் கொண்டிருந்தாள் மதுமதி.

அதன் பின்.. அவளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறையில் அமர்ந்து பலவாறு யோசித்தவளுக்குத் தீர்வு ஒன்று தோன்றியது. வேகமாக எழுந்து சென்று தான் கல்லூரிக்கு எடுத்துச் செல்லும் பையில்.. கௌஷிக்கின் முகவரியைத் தேடினாள். இப்போதைக்கு இந்தப் பிரச்சனையில் உதவி செய்யக் கூடிய ஒருவன் அவன் மட்டுமே..

மதியின் வாழ்க்கை கெட்டு விடுமோ என்று குமரிம்மாவிற்குத் ஏற்பட்டிருக்கும் தேவையில்லாத பயமும்,உறுத்தலும் தான் இந்த வீட்டை விட்டுச் சென்று விட்டால்.. கொஞ்சமேனும் குறையும்.. அத்தோடு.. ஆதித்யனுக்கும் விருப்பமில்லாத இந்தத் திருமணத்தைச் செய்து கொள்ள வேண்டிய கட்டாயமும் ஏற்படாது.. திடீரென்று குமரிம்மா ஆதித்யனைத் திருமணம் செய்து கொள்ளும்படிக் கூறுவாரெனக் கனவிலும் கூட நினைக்கவில்லை அவள்.

கோபுர உச்சியும்,குப்பை மேடும் இணைவதா..?,அவளுக்கு ஆதித்யனின் மீது காதல் தான்.. அதற்காக அவனது அழகிற்கும்,அந்தஸ்திற்கும் கொஞ்சம் கூட ஒத்து வராதத் தன்னைப் போய்.. அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்துவதா..?, அவனுக்கென என்னென்ன கனவுகளையும், கற்பனைகளையும் வைத்திருக்கிறானோ.. செய்யாத தவறினால்.. ஏற்பட்டப் பழிக்காக அதையெல்லாம் உடைத்தெறிவதா..?,

கௌஷிக்கிடம் சென்று எந்த வேலையாயிருந்தாலும் பரவாயில்லையெனக் கூறி விட வேண்டும்.. பரீட்சையை மட்டும் காலேஜிலிருந்து எழுதி விட வேண்டியது தான்.. முதலில் இங்கேயிருந்து சென்று விட வேண்டும்.. இருக்கும் பிரச்சனையெல்லாம் தீர்ந்த பின் இங்கே தலை காட்டினால் போதும்.. அப்பா.. எனக்குத் துணையிருங்கள்.. என்று வேண்டிக் கொண்டவள்.. அனைவரும் உறங்கியதும்.. வீட்டை விட்டுச் செல்லத் தயாரானாள்.

12 மணி அளவில்.. கையில் வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு.. துணிகளுடன் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள்.. சுற்றி எதையும் பார்க்காமல் விறுவிறுவென நடந்து சென்றவள்.. எதிரே வந்தவரின் மீது மோதிக் கொண்டு நின்றாள். யாரென நிமிர்ந்து பார்த்தவளின் இதயம் தொண்டைக்குள் வந்து துடித்தது.

தூக்கம் வராமல் தோட்டத்தில் நடை பயின்று கொண்டிருந்த ஆதித்யன்.. வீட்டிற்குள் செல்ல எத்தனித்த போது.. எதிரே வந்த மதுமதித் தன்னை மோதியதைக் கண்டு “இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிறாய்..?”என்று அதட்டினான்.. “அது..அது..”என்று திக்கியவள்... துணிப் பையை பின்னால் மறைக்க முயல.. அதைக் கண்டு கொண்டவன்.. அவள் கையைப் பற்றிப் பையைப் பிடுங்கினான்..

“ஓஹோ.. அம்மையார்.. வீட்டை விட்டுச் சென்று விடத் தீர்மானித்து விட்டீர்கள்.. அப்படித் தானே..?”என்று அவன் கோபமாக வினவ.. விழியில் கண்ணீர் பெருகியது மதுமதிக்கு. “பேசிப்பேசியே அத்தனை பேரின் முன்பு அவள் என்னை அவமதித்து விட்டுச் சென்றாள்.. நீ.. அவள் கூறிய அனைத்தையும் உண்மையாக்குவது போல்.. இந்த ஊரை விட்டுச் சென்று.. என்னை அவமதிக்கப் பார்க்கிறாய்.., ம்..?”என்று வினவ.. அவன் முகம் பாராமல் திரும்பி நின்று கண்ணீர் சொரிந்தாள்..

அவள் அழுவதைக் கண்டவன் தலையை அழுந்தக் கோதி.. பின்.. “உள்ளே போ மதுமதி.. நடந்து கொண்டிருக்கும் விசயங்கள் அனைத்தும் ஏற்கனவே.. என்னைச் சிறிது சிறிதாகச் சாகடித்துக் கொண்டிருக்கிறது.. நீ வேறு என்னைத் துன்புறுத்தாதே..”என்று அமைதியான குரலில் கூற.. திரும்பி அவன் முகத்தை

நோக்கிய மதுமதி.. பதிலேதும் கூறாமல்.. தன் தலையெழுத்தை நொந்தபடி.. வீட்டிற்குள் நுழைந்தாள்..

நரகம்! நரகம் என்கிறார்களே.. அது இந்த மனித வாழ்வை விடக் கொடுமையானதாக இருக்குமென்று மதுமதிக்குத் தோன்றவில்லை.. சாகவும் துணிவில்லை.. கண்காணாத இடத்திற்குச் சென்று விடவும் வழியில்லை.. சூழ்நிலைக் கைதிகளாக மாறி.. ஆளுக்கொரு புறம் நிம்மதியற்றுத் திரிந்து கொண்டிருப்பதைக் கண்டு அவளுக்குத் துக்கம் பொங்கியது.

மதுமதி வீட்டை விட்டுச் செல்ல முயன்ற கதை குமரிம்மாவின் காதுகளில் எட்டி விட... ஆதியிடம் உடனே அவளைத் திருமணம் செய்து கொள்ளும் படி வற்புறுத்தினார். “அப்படி மட்டும் அவள் ஏதேனும் செய்திருந்தால்.. குற்ற உணர்வில் என் உயிர் உடனே சென்றிருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.. ஆதி... இனியும் தாமதிக்க முடியாது... நாளையே.. நம் வீட்டிலேயே.. அவள் கழுத்தில் தாலியைக் கட்டி விடு..”என்று குமரிம்மா அவசரப்படுத்த..

என்ன செய்வதென்று புரியாமல்.. நடப்பதை எதிர்க்கவும் முடியாமல்.. ஊமைகளாக மாறித் திருமணத்திற்குத் தயாராகினர் இருவரும்.. கடைசி வரை அன்னையின் வார்த்தைக்குப் பதிலளிக்காமல் இறுகிப் போயே அமர்ந்திருந்த ஆதித்யன்.. தாலி கட்டும் போது கூட கல்லாக மாறிப் போனதைக் கண்டு திகிலானது மதுமதிக்கு.



## அத்தியாயம் – 14



**பிறவிப் பயனை அடைந்து விட்டேன்..**
**என் நெற்றியில் பதிந்த உன் கரங்கள்..**
**திலகமிட்ட அந்த நொடி!!**

**இ**ரவு முழுதும் தன் வாழ்க்கையின் முக்கிய அத்தியாயங்களை யோசித்த வண்ணம் தூக்கத்தைத் தொலைத்து விட்டிருந்த மதுமதி.. விடியலை எதிர்கொள்ளத் துணிவின்றியே அன்று காலை கண் விழித்தாள். வாழ்வில் எதிர்பாராமல் நடந்த திடீர்த் திருப்பம் இந்தத் திருமணம்.. இனி என்னவாகும் எதிர்காலம்..?, ஆதித்யனின் மனைவியாக.. குமரிம்மாவின் மருமகளாக.. இந்த வீட்டில் வலம் வருவாளென என்றேனும் நினைத்துப் பார்த்திருப்பாளா..?

எப்பேர்ப்பட்ட குடும்பம்..?, பாரம்பரியத்தையும்,கௌரவத்தையும் பரம்பரை பரம்பரையாகக் கட்டிக் காத்துக் கொண்டு வரும் உன்னதமான குடும்பம்.. அப்பேர்ப்பட்ட குடும்பத்திற்கு மருமகளாகத் தானா.? என்று மதுமதியின் மனம் படபடவென அடித்துக் கொண்டது, இதற்கெல்லாம் தகுதி இருக்கிறதா எனக்கு என்று யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு.. ஆதித்யனின் கடுமை நிறைந்த முகம் நினைவிற்கு வந்து மீண்டும் சோர்வைத் தந்தது.

இது.. முழுக்க முழுக்க அவனது விருப்பமின்றி நடைபெற்றத் திருமணமாயிற்றே! கட்டிய கணவனுக்கே மனைவியின் மீது நேசமில்லாத போது.. அந்தப் பரம்பரையின் மருமகளாக வாழ்ந்து என்ன பிரயோஜனம்..?, தன் தலையெழுத்தை எண்ணி நொந்த படியே காலைப் பணிகளை முடித்துத் தன் தந்தையின் படத்தின் அருகே வந்து கை கூப்பி நின்றாள்..

தன்னைக் கண்டதும் வாரி அணைத்துக் கொள்ளும் அந்த உயிர் இன்று சட்டத்திற்குள் படமாக மாறி சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கண்ணீர் பெருகியது அவளுக்கு. ஏன் என்னை விட்டுச் சென்று விட்டீர்கள் அப்பா..?, ஏன் என்னை இப்படியொரு தர்ம சங்கடமான நிலைக்கு ஆளாக்கினீர்கள்..?, இனி என் எதிர்காலம் என்னவாகுமென்று எனக்கு பயமாக இருக்கிறது அப்பா.. இரக்கப்பட்டு குமரிம்மாவின் கட்டாயத்தினால் ஆதித்யன் கட்டிய இந்தத் தாலி எத்தனை நாட்களுக்கு நிலைக்கும்..? மார்பில் புரண்டு கொண்டிருந்தத் தங்கத் தாலியை கண்ணால் காண்பதற்குக் கூட அவளுக்குத் திகிலாக இருந்தது.

படிப்பிலிருந்து ஆரம்பித்து அவளது வாழ்வின் பல தேவைகளை உடனிருந்து கவனித்திருக்கிறான் அவன். இன்று அவனது சொந்த வாழ்விற்குப் பெரும் தடையாக அவளே மாறி விட்டாள். மனைவியைப் பற்றியும்,திருமண வாழ்வைப் பற்றியும் எவ்வளவு கனவு கண்டிருந்தானோ.. அவையனைத்தையும் சிதைக்குமளவிற்கு பெரிய தடைக்கல்லாக மதுமதி அவனது வாழ்வில் நுழைந்து விட்டாள். திருமணம்,தந்தையென ஆரம்பித்த அவளது எண்ண ஓட்டம் கடைசியில் ஆதித்யனிடம் வந்து முடிந்தது..

ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டு விட்டு ஆகப் போவதை கவனி என குமரிம்மா அடிக்கடி கூறுவார். அதையே இப்போது தன் மனதிடம் கூறி விட்டு.. திருநீரை அள்ளிப் பூசிக் கொண்டு குமரிம்மாவைக் காண அவரது அறைக்குச் சென்றாள்.

மல்லி மற்றும் பைரவியின் துணையால் சக்கர நாற்காலியில் அமர்ந்து காபியை பருகிக் கொண்டிருந்தார் குமரிம்மா. “குமரிம்மா...”என்றழைத்தபடி.. அவரது கையிலிருந்த காபிக் கோப்பையை வாங்கித் தானே அவருக்குப் புகட்டினாள். அவளை நிமிர்ந்து நோக்கிய குமரிக்கு அவளது கழுத்தில் பளிச்சிட்ட மஞ்சள் கயிறு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.. சிரிப்புடன் அவள் முகத்தை நோக்கியவர்.. அவள் கையை விலக்கி.. நெற்றியில் திலகம் எங்கே என்று விசாரித்தார்.

அதன் பின்பு தான் பொட்டிடாமல் வெறும் திருநீரை மட்டும் பூசிக் கொண்டு வந்தது நினைவிற்கு வந்தது. “மறந்து விட்டேன் குமரிம்மா.. நீங்கள் காபியைப் பருகுங்கள்.. நான் பிறகு சென்று பொட்டிட்டுக் கொள்கிறேன்..”என்று அவள் கூற.. மறுத்துத் தலையசைத்தவர்.. “திருமணம் முடிந்து முழுதாக 24 மணி நேரம் கூட ஆகவில்லை.. புதுப்பெண்.. பொட்டும்,பூவுமாக ஜொலி ஜொலிப்புடன் தான் காட்சி தர வேண்டும்.. சொல்வதைக் கேள் மதி.. அதோ.. அலமாரியிலிருந்து குங்குமத்தை எடுத்துக் கொண்டு வா..”என்று விரட்டினார்.

பொட்டு,பூ,ஜொலி ஜொலிப்பு... இவையெல்லாம் திருமணத்திற்கே உரிய அழகான விசயங்கள் தான்.. அவளும் தான் பார்த்திருக்கிறாளே.. பக்கத்துத் தெரு பரிமளாவிற்குக் கல்யாணம் ஆன போது.. அவள் கட்டியிருந்த பட்டுச் சேலையையும்,நகைகளையும் மீறி வெட்கத்தில் ஜொலி ஜொலித்த அவளது முகத்தை.. எப்படி பரிமளா இவ்வளவு அழகாகத் தெரிகிறாள் என்று ஆச்சரியப் பட்டதும் இப்போது அவளுக்கு நினைவிற்கு வந்தது,

அந்த வெட்கமும்,படபடப்பும்,மகிழ்ச்சியும்,சுகமான அவஸ்தையும், காதலும், காமமும்,எதிர்பார்ப்பும் அவளது வாழ்வில் என்றேனும் கிட்டுமா..?, பெருமூச்சை வெளி விட்டபடி அலமாரியைத் திறந்து வெள்ளிக் குங்குமச் சிமிழை எடுத்துக்

கொண்டு வந்தாள்.. அந்தச் சிமிழின் அலங்காரத்தைக் கண்டபடியே நிமிர்ந்தவள் வேக நடையுடன் ஆதித்யன் அறைக்குள் நுழைவதைக் கண்டாள்.

வேகமாகப் பார்வையைத் திருப்பியவள் குமரிம்மாவின் அருகே சென்று நின்று கொண்டாள்..சிமிழின் மீது பார்வையைச் செலுத்தியபடி தலை குனிந்து நின்றிருந்தவளைக் கண்டவன்.. பின் அன்னையிடம் "ஏதேனும் குடித்தீர்களா அம்மா..?,?"என்று விசாரித்தான். மகனுக்குப் பதிலளித்தவர் பின் மதியிடம் திரும்பி "என்ன குங்குமத்தைக் கையில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறாய் மதி..?"என்றவருக்கு ஒரு யோசனை தோன்ற.. "அந்தக் குங்குமத்தை ஆதித்யனிடம் கொடு மதி.. அவனே வைத்து விடட்டும்.."என்று கூற திடுக்கிட்டு ஆதித்யனை நோக்கினாள் மதுமதி.

அவரும் அனைத்தையும் கவனிக்கத் தானே செய்கிறார்.? வயது வித்தியாசத்தைப் பெரிதாக நினைத்துக் கொண்டு.. சிறு பெண்ணைத் தனக்குக் கட்டாயத் திருமணம் செய்து வைத்து அவளது வாழ்வை வீணாக்கி விட்டதாகக் கருதும் ஆதித்யன் ஒரு புறம்! தானும்,தந்தையும் தெய்வமாக எண்ணி விசுவாசமாக நடந்து கொண்ட குமரிம்மாவின் குடும்பத்திற்குத் தன்னால் அவப்பெயர் ஏற்பட்டு விட்டதாகவும்.. ஆதித்யனின் கனவு வாழ்வைத் தானே கெடுத்து விட்டதாகக் குற்ற உணர்வுடன் அலைந்து கொண்டிருக்கும் மதுமதி ஒரு புறம்! இவர்களிருவரது எண்ணத்தையும் துல்லியமாகக் கணித்து விட்ட குமரி.. இருவரையும் இணைக்க முயல மாட்டாரா என்ன..?, அவர்களது போக்கிலேயே விட்டுப் பிடிக்க வேண்டும் என்று தான்.. எதற்கும் இருவரையும் அவர் வற்புறுத்தவில்லை.. ஒரே அறையில் உறங்குவது உட்பட..

திடுக்கிட்டுத் தன் முகம் நோக்கியவளை ஆழ்ந்து நோக்கி.. அழுத்தமான காலடிகளுடன் அவன் அவளருகே செல்ல.. மேலும் திடுக்கிட்டவள்.. குமரிம்மாவிடம் "நா.. நானே வைத்துக் கொள்கிறேன் குமரிம்மா.. கு..குங்குமம் தானே.."என்று சிமிழைத் திறக்க முயல.. அவள் கைப் பற்றித் தடுத்தவன்.. சிமிழை வாங்கித் திறந்து.. குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியிலும்.. உச்சியிலும் இட்டான்.

அவன் கரம் நெற்றியில் பட்டதுமே கண்களை இறுக மூடிக் கொண்ட மதுமதி.. அவன் உச்சியிலும் இட்டுத் தன் கரத்தை விலக்கியதும்.. சிலிர்த்துப் போனாள்.. இதற்காக.. இதற்காக.. மட்டும் ஏழேழு ஜென்மத்திற்கும் இவனது மனைவியாகவே பிறவி எடுக்கலாமே.. இதைத் தவிர வேறு என்ன வேண்டும்..?, விழிகளில் தன்னாலேயே நீர் கோர்த்து விட.. அவனை நிமிர்ந்து நோக்கியவளை.. உணர்ச்சியற்ற விழிகளால் தானும் நோக்கியவன்.. அவள் கையைப் பற்றி அருகிலிழுத்துத் தன்னருகே நிறுத்திக் கொண்டான்.

பின் அன்னையின் காலில் பணியும் படி அவளுக்குச் சைகை செய்ய... இருவரும் குமரியின் கால்களில் பணிந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டனர். "மகிழ்ச்சியும்,சந்தோசமும் பெருகட்டும் தாயி.."எனக் கூறி உச்சி முகர்ந்தவர்.. மகனது கையை இறுகப் பற்றித் தனது மகிழ்ச்சியை வெளியிட்டார். அவரது விழியைச் சந்திக்காமல்.. எங்கெங்கோ பார்வையைச் செலுத்தியவன் கடைசியில் மண்டியிட்டு அமர்ந்திருந்த மதுமதியை நோக்கினான்.

குமரியின் காலில் பணிந்து நிமிர்கையில் முன் விழுந்த மாங்கல்யத்தை.. இரு கைகளாலும் ஏந்திக் கொண்டு.. அதையே பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தாள். அவளது பார்வையைத் தொடர்ந்துத் தானும் நோக்கிய ஆதித்யனுக்கு.. மாங்கல்யத்தைக் கண்டு உள்ளே ஏதோ செய்ய.. "அலுவலகத்திற்குக் கிளம்பிகிறேன்.."எனக் கூறிச் சென்று விட்டான்.

சக்தி-சிவத்தைத் தங்கத்தில் வார்த்து.. மஞ்சள் தோய்த்தக் கயிறில் கோர்த்து.. தங்கக் காசு,குண்டுகளையும் சேர்த்துக் கோர்த்து.. வடிவமைக்கப் பட்டிருந்த சக்தி வாய்ந்த திருமாங்கல்யம்..(எழுதும் போதே சிலிர்க்குது போங்க!).. செந்தமிழ் நாட்டில் காலம்,காலமாய்.. கட்டிக் காக்கப் பட்டு வரும்.. ஒரு அழகான.. சம்பிரதாயம்.. வாழ்வில் அதுவரை கண்டிராத சிலிர்ப்பையும்,கர்வத்தையும் அளிக்கக் கூடிய.. பொன் மஞ்சள் கயிறு.. முகத்திற்குப் புது சோபையையும்.. தனி அழகையும் கொடுத்து ஒரு பெண்ணை அவளது வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் ஏணிப்படி.. இதைக் கட்டியவன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும்.. சாகும் வரைத் தன் கழுத்திலேயே இது நிலைத்திருக்க வேண்டுமென ஒவ்வொரு பெண்ணும் வேண்டிக் கொள்ளும் உன்னதமான பொருள்.. முதல் நாள் ஆதித்யனின் கரங்கள் தன் கழுத்தில் உரசி.. இந்த மாங்கல்யத்தை அணிவித்த காட்சி மனக் கண்ணில் ஓடி.. சிலிர்ப்பை ஏற்படுத்தியது...

ஒரு சாதாரண மஞ்சள் கயிறுக்கு இப்படியொரு சக்தியா.. என்று வியந்தவளுக்குச் சுற்றுப் புறம் நினைவிற்கு வர.. "குமரிம்மா.. உங்களுக்குக் காலை உணவு கொண்டு வருகிறேன்.."என்று சமையலறைக்கு ஓடினாள். ஏதேதோ சிந்தனைகளுடன் சமையலை முடித்தவள்.. குமரியின் அறைக்கு எடுத்துச் சென்று அவருக்குப் புகட்டினாள்.. அவர் உண்டு முடித்ததும்.. அவரது காலடியில் அமர்ந்தவள்.. தயங்கியபடி....

"குமரிம்மா... நா.. நான் காலேஜ் செல்லட்டுமா..?,படிப்பைப் பாதியில் நிறுத்துவதில் எனக்கு இஷ்டமில்லை.. இன்னும் ஆறே மாதம் தான்.. நான் செல்லட்டுமா..?"என்றுத் தயங்கி தயங்கி அவள் வினவ.. "தாராளமாகச் செல் மதி.. நீ இடையில் படிப்பை நிறுத்துவதில் எனக்கும் இஷ்டம் இல்லை தான்.. ஆனால் ஆதியிடம் ஒரு வார்த்தைக் கூறி விடு.."என்று அவர் கூற.. சரியெனத்

தலையாட்டியவள்... அவர் சாப்பிட்டப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கீழே சென்றாள்.

டைனிங் ஹாலில் நின்று கொண்டு.. பிரெட்டின் மீது பட்டரைத் தடவி வாயில் அடைத்துக் கொண்டிருந்தான் ஆதித்யன். காலை டி்ஃபன் தான் தயாராகி விட்டதே,இதை ஏன் சாப்பிடுகிறான் என்றேண்ணியபடியே படியிறங்கியவள்.. தயங்கி நிற்க.. அவள் நிற்பதைக் கண்டவன் ப்ரெட்டை மென்றபடியே என்ன என்று புருவம் உயர்த்தினான்.

“வ..வந்து.. நான்.. எப்போதும் போல் காலேஜ் செல்லட்டுமா.. படிப்பைத் தொடர வேண்டுமென்று ஆசையாக உள்ளது...”என்று தரையைப் பார்த்த வண்ணம் கூறி முடிக்க.. நிதானமாக மென்று முழுங்கி விட்டுத் தண்ணீரைக் குடித்தவன்.. “இதையெல்லாம் ஏன் என்னிடம் கேட்கிறாய்..?,”என்று வினவினான்.

இவனிடம் கூறாமல் பக்கத்து வீட்டுக்காரனிடமா கூற முடியும்.. இவன் கட்டியத் தாலி அவளது கழுத்தில் தொங்கிக் கொண்டிருப்பது அவனுக்கு நினைவில்லை போலும்.. என்று நினைத்தவள் பதிலேதும் பேசாமல் அமைதியாக நிற்க.. வேக மூச்சுடன் அவள் புறம் வந்தவன்.. “இதோ பார் மதுமதி.. கல்லூரிக்குச் செல்வதும்,செல்லாததும் உன்னுடைய விருப்பம்.. ஒவ்வொரு விசயத்திலும் என்னுடைய அனுமதியை வேண்டி நிற்பதற்கு... நீ ஒன்றும் எனக்கு அடிமைப் பத்திரம் எழுதித் தரவில்லை புரிந்ததா..?,உன் இஷ்டப்படி நடப்பதற்கு உனக்கு இங்கே முழு சுதந்திரம் இருக்கிறது... இதை நான் கட்டி விட்டதால்.. உன் வாழ்வில் எதுவும் மாறி விடப் போவதில்லை.. எப்போதும் போல்.. நீ நீயாகயே இருக்கலாம்.. என்ன?” என்று வினவினான்.

அப்படி என்ன கேட்டு விட்டேனென்று இப்படிக் கோபப் படுகிறான் என்று புரியாவிட்டாலும்.. எப்படியோ அவள் கல்லூரிக்குச் செல்வதற்கு அவன் அனுமதித்து விட்டான் என்று தெரிந்ததும் அவளுக்கு நிம்மதியானது... அதனால் புரிந்ததா..? என்று அவன் குரலை உயர்த்தியதும்.. வேகமாகச் சரியெனத் தலையாட்டினாள். என்ன புரிந்ததோ என்ற முணுமுணுப்புடன் அவன் சென்று விட... விழித்துக் கொண்டு நின்றாள் மதுமதி.

அன்று இரவு உணவு முடிந்ததும்.. தனக்கென ஒதுக்கப்பட்ட அறையில் உறங்கத் தயாரான மதுமதி... மெத்தையிலிருந்த போர்வையையும்,தலையணையையும் எடுத்துக் கீழே விரித்துக் கொண்டு அதில் தலையசைத்தாள்.. ஏனோ அந்த ஆடம்பர மெத்தையில் படுத்து உறங்க அவளுக்கு மனம் வரவில்லை.. நேரம் செல்லச் செல்லத் தூக்கம் வராமல் போக.. விட்டத்தை வெறித்த வண்ணம் கொட்ட கொட்ட விழித்திருந்தாள்..

நினைவு தெரிந்த நாளிலிருந்து அவள் இது போல் தனியறையில் உறங்கியதேயில்லை. எப்போதும் தந்தை உடனிருப்பார். தந்தை உடனில்லாத வேளைகளில்.. மல்லியோ,பைரவியோ துணையிருப்பார்கள்.. தனித்து உறங்கிப் பழக்கமில்லாததால்.. அவளுக்குப் பயமாக வேறு இருந்தது. இரவு விளக்கின் ஒளியில் அந்தப் பெரிய அறையிலிருந்த அலங்காரச் சாமான்களின் நிழல்கள் வித்தியாச,,வித்தியாசமான வடிவங்களில் தோன்ற.. அவளுக்குப் பயம் கூடியது.. கண்களை இறுக மூடி அவள் ஸ்ரீ ராம ஜெயம் கூற எத்தனித்த வேளைக் கதவு திறக்கும் ஒலி கேட்டது..

எஸ்டேட்டிலிருந்துத் தாமதமாக வீடு திரும்பிய ஆதித்யன்.. இரவு உணவு முடிந்ததும்.. எப்போதும் போல்.. பால்கனியில் நின்றுக் கண் மூடி குளிர் காற்றைச் சுவாசித்தான்.. மூடிய விழிகளுக்குள்.. மதுமதியின் புன்னகை முகமும், அழுகை நிறைந்த முகமும் மாறி மாறி வந்து போனது. அவளை எண்ணியபடியே நின்று கொண்டிருந்தவன்.. பின் அவளது அறையை எட்டிப் பார்த்தான்.

திறந்திருந்த கதவின் வழியே மதுமதிக் கீழே படுத்திருந்த காட்சி தெரிய.. கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். அவளருகே சென்றவன்.. அவளது தோளைத் தொட்டு.. “மது..”என்று எழுப்ப.. பதறியடித்துக் கொண்டு.. விலுக்கென எழுந்தவள்.. அவனைக் கண்டதும்.. “நீங்கள் தானா..?”என்று மூச்சு விட்டாள்..

“நானல்லாமல் வேறு யார் உன் அறைக்குள்ளே வந்து விடப் போகிறார்கள்..?,நீ ஏன் கீழே படுத்திருக்கிறாய்..?,ஏன் இப்படி வியர்த்திருக்கிறது..?”என்று நெற்றியில் படிந்திருந்த அவளது கூந்தலை விலக்கியவன் என்னவென்று விசாரித்தான்.. “வ..வந்து..”என்று இழுத்தவள் தொடர்ந்து.. “ப..பயமாக இருக்கிறது.. அதனால் தான்..”என்று கூறினாள்...

“பயமாக இருக்கிறதா..?,ஏன்..?,ஓ தனியாகப் படுக்கப் பயமாக இருக்கிறதா..?, அம்மாவின் அறைக்குச் சென்று உறங்க வேண்டியது தானே மது..?”என்று வினவ.. “அ..அது..அது..”என மேலும் தயங்கினாள் அவள். அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்டவன்.. “சரி..எழுந்திரு.. என் அறையில் படுத்துக் கொள்.. வா..”என்று அவள் கைப்பற்றி எழுப்பினான்.. “இ..இல்லையில்லை.. உறங்கி விட்டால் பயம் தெரியாது.. நா..நான் சமாளித்துக் கொள்வேன்..”என்று அவசரமாகக் கூற.. நின்று அவளை முறைத்தான் ஆதித்யன். அவனது பார்வையில் அடங்கி.. அவனைப் பின் தொடர்ந்தாள் மதுமதி.

அவள் தன் அறைக்குள் நுழைந்ததும் கதவைத் தாழிட்டவன்.. இன்னும் அவள் நின்று கொண்டிருப்பதைக் கண்டு.. “போ.. படுத்துக் கொள்..”என்று மெத்தையைக் காட்டினான்.. இவனும் இதே மெத்தையில் தான் உறங்குவானா

என்கிற கேள்வி எழுந்தாலும்.. அவனிடம் கேட்கப் பயந்து மெல்ல நடந்து சென்று கட்டிலின் மறு ஓரத்தில்.. உடலைக் குறுக்கிப் படுத்துக் கொண்டாள்..

அவள் படுத்ததும்.. விடிவிளக்கைப் போட்டு விட்டு.. பால்கனிக்குச் சென்றவன்.. வெகு நேரம் கழித்துத் திரும்பினான்.. பால்கனியில் தெரிந்த அவனது உருவத்தைக் கண்டபடியே.. தனிமை பயமின்றி உறங்கிப் போனாள் மதுமதி. அறைக்குத் திரும்பி.. அவள் உறங்கி விட்டதைக் கண்டு விட்டுத் தானும் மெத்தையில் தலை சாய்த்தவன்.. ஒரு முறை புரண்டால் தரையில் விழுந்து விடுமளவிற்கு அந்தப் பெரியக் கட்டிலின் மறுகோடியில் படுத்திருந்தவளைக் கண்டு சத்தமில்லாமல் புன்னகைத்தான்.

பின் அவள் தோளைப் பற்றி தன்னருகே இழுத்தான். “என்னப்பா..?”என்ற சிணுங்கலுடன் தன் புறம் திரும்பிப் படுப்பவளை புன்னகை மாறாமல் நோக்கியவன்.. முன்னால் விழுந்த அவள் கூந்தலை ஒதுக்கி.. அவள் கன்னம் வருடினான்.. அவன் பார்த்த பெண்களில்.. அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு எனப் பெண்ணுக்கே உரித்தான அனைத்து அம்சங்களையும் ஒருசேரக் கொண்டிருப்பவள் மதுமதி ஒருத்தி மட்டுமே.. அதிலும் அச்சத்தை அதிகம் கொண்டவள்.. என்று சிரித்துக் கொண்டான்...

அன்பரசு இறந்த அன்றும்.. அந்த அடங்காப்பிடாரி லேகாவின் சுடு சொற்களைக் கேட்க நேர்ந்த அன்றும்.. மதுமதி வடித்த கண்ணீர நினைவிற்கு வந்து அவனை வருத்தம் கொள்ள வைத்தது.. அவனால் தானே.. அன்று அப்படியொரு அவமானம் மதுமதிக்கு.. அப்படியொரு கோலத்தில் அவளைக் கண்டதும்.. விரைந்து கதவைத்திறந்து கொண்டு வெளி வராமல்.. ஆடிப் போய் நின்று விட்டதால் தானே பிரச்சனை உண்டானது,.. ஒரு பாவமும் அறியாதவளின் மீதுப் பெரிய பழியைப் போட்டு விட்டுச் சென்று விட்டாள் படுபாவி.... இனி ஒரு போதும் உன்னை வருந்த விட மாட்டேன் மது.. எனத் தனக்குத் தானேக் கூறிக் கொண்டவன்.. அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றாமல்.... அவளதுத் தலையைக் கோதினான்.

இரவு விளக்கில் ஜொலித்த மூக்குத்தியின் பளபளப்பை மீறி.. உச்சியில் அவனிட்ட குங்குமம் பளீரிட்டது.. நீண்ட பின்னல்.. முன்னே விழுந்து.. அவளதுப் பாதிக் கன்னத்தை மறைத்திருக்க.. வில்லாக வளைந்திருந்த அந்தப் புருவங்களைத் தன் ஒற்றை விரலால் நீவினான்.. அதற்கு மேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல்.. குனிந்து அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டான்.. பின் தன் செயலை எண்ணி வெட்கியவனாகச் சட்டென வேறு புறம் திரும்பியவன்.. சிறு பெண்ணிடம் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறேனே.. என்றுத் தன்னையே கடிந்து கொண்டான்.. சிறிது நேரம் கண் மூடி உறங்க முயற்சித்தவன்.. உறக்கம் வாராமல் போக.. மீண்டும் மதுமதியின் புறம் திரும்பி அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் உறங்கிப் போனான்.

காலையில் விரைவிலேயே கண் விழித்து விட்ட மதுமதி.. தன்னருகே உறங்கிக் கொண்டிருந்த ஆதித்யனைக் கண்டு விழி விரித்தாள்.. சலனமற்று சீரான மூச்சுடன் கண் மூடியிருந்தவனைக் காண்கையில்.. மகிழ்ச்சியும், தயக்கமும் ஒரு சேர எழுந்தது அவளுக்கு.. அவனது பெரிய விழிகளுக்கும், கூரான நாசிக்கும்,அழகான சிரிப்பிற்கும் அறியாத வயதிலிருந்தே விசிறியான அவள்.. இன்று அவனை வெகு அருகில்.. அவனது படுக்கையில்.. கணவனாகக் கண்ட போது.. கர்வம் கொண்டது மனது...

தன் போக்கில்.. அவனது சிகைக்குள் கை நுழைத்து அவள் வருடத் துவங்க.. சில நிமிடங்களில் அவனது அறைக்கடிகாரம் ஆறு முறைக் கூவி.. அவளது மோன நிலையைக் களைத்தது. அவனும் புரண்டு படுக்கத் தொடங்கியதும்.. என்ன செய்து கொண்டிருக்கிறாய் மதி.. என்று தன்னையே திட்டியபடி.. வேகமாகப் படுக்கையை விட்டு எழுந்தாள் மதுமதி.

அன்று கல்லூரிக்குச் செல்வதென முடிவு செய்திருந்ததால்.. வேக வேகமாகப் புறப்பட்டாள்.. குமரிம்மாவின் தேவைகளைக் கவனித்து விட்டு.. பைரவியிடம் ஆயிரம் முறை.. அவருக்கு எந்த வேளைகளில்.. எந்தெந்த மருந்து கொடுக்க வேண்டும் என்பதையும் கூறி விட்டவள்.. வேக வேகமாகத் தன் பையில் புத்தகங்களைத் திணித்தாள்.

அவள் அதிவிரைவுடன் இங்கும் அங்கும் ஓடுவதைக் கண்டபடியே டைனிங் ஹாலில் வந்தமர்ந்த ஆதித்யன்.. தனக்குக் காலை உணவு பரிமாற வந்த பைரவியிடம்.. “அவள் சாப்பிட்டாளா..?”என்று விசாரித்தான்.. பைரவி பதில் சொல்லும் முன் முந்திக் கொண்டவள்.. “இ,,இல்லை... காலேஜ் பஸ் வந்து விடும்.. நேரமாகி விட்டது.. நா..நான் அங்கு சென்று ஏதேனும் சாப்பிட்டுக் கொள்வேன்..”என்று அவசரமாகக் கூறினாள்.

“நாள் முழுதும் நாம் உழைப்பதற்கான ஆற்றலை அளிப்பதேக் காலைச் சாப்பாடு தான்.. அதை நீ தவிர்ப்பாயா மது..?, வந்து அமரு.. அவளுக்கும் பரிமாறுங்கள் பைரவிக்கா.. காலேஜ் பஸ் போனால் போகட்டும்.. நான் உன்னை அழைத்துச் செல்கிறேன்.. வா..”என்று அவளை அமர வைத்து வற்புறுத்திச் சாப்பிட வைத்தான்..

அதன் பின் கல்லூரிக்குப் புறப்படத் தயாராகி குமரியின் அறைக்குள் நுழைந்தாள். “குமரிம்மா.. பைரவி அக்கா கொடுக்கும் மருந்துகளை மறக்காமல் சாப்பிட்டு விடுங்கள்.. நான் அக்காவிடம் எந்தெந்த மாத்திரைகளை எப்போது கொடுக்க வேண்டுமென்றுத் தெளிவாகக் கூறி விட்டேன்.. அதனால் பிரச்சனையில்லை.. நான் காலேஜ் கிளம்புகிறேன்.. வரட்டுமா?” என்று மூச்சு

விடாமல் பேசி முடித்தவளை சிரிப்புடன் நோக்கியவர்.. "நீ சாப்பிட்டாயா மதி..?"என்று விசாரித்தார்..

"ம்..சாப்பிட்டேன் குமரிம்மா.."என்று கூறியபடியே அறையை விட்டு வெளியே செல்பவளிடம்.. "உண்மையைச் சொல் மதி.. சாப்பிட்டாயா.. இல்லையா..?"என்று அவர் அதட்டிக் கேட்க.. நின்று அவரை நோக்கியவள்.. பின் கலகலவெனச் சிரித்து.. "நிஜமாகவே சாப்பிட்டேன் குமரிம்மா.. சத்தியம்.." என்று கூறத் தானும் முறுவலித்து அவளை வழியனுப்பினார்.

மதுமதியின் சிரிப்பைக் கேட்டபடியே படியிறங்கிய ஆதித்யனின் இதழ்களில் தன்னாலேயே முறுவல் பூத்தது.. தானும் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு மதுமதியை அழைத்துக் கொண்டு காரில் ஏறினான். அவன் புன்னகை மாறாத முகத்துடன் இருப்பதைக் கண்ட மதுமதி.. "மி..மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் போல.."என்று முணுமுணுத்தாள்.. அவளது முணுமுணுப்பைக் கேட்டு விட்டவன்.. அவள் புறம் நன்றாகத் திரும்பி.. "ஆம்.. மகிழ்ச்சி தான்.. வெகு நாளைக்குப் பிறகு நீ சிரிப்பதைக் கண்டு விட்டேனல்லவா..?,அதனால் விளைந்த மகிழ்ச்சி.."என்று கூறி முறுவலிக்க.. விழி விரித்து அவனை நோக்கிய அவளது பார்வையைக் கண்டு கொள்ளாமல்.. காரைச் செலுத்தினான் ஆதித்யன்.



# அத்தியாயம் – 15



**எங்கே மறைத்து வைத்திருந்தாய்..**
**இத்தனை அழகை..?**
**என்னை மயங்கச் செய்து..**
**என் வசமிழந்துத் தவிக்கச் செய்கிறதே!**

**க**ல்லூரியின் முன்பு காரை விட்டு இறங்கியதும்.. தயங்கியபடியே அவன் முகம் கண்டு “தேங்க்ஸ்..”என்ற மதுமதியிடம் சிரிப்புடன் தலையசைத்த ஆதித்யன்...பின் “மாலை உன்னை அழைத்துச் செல்ல நேரமிருந்தால் நான் வருகிறேன்.. அல்லது முத்து அண்ணாவிடம் கார் அனுப்பச் சொல்கிறேன்.. இனி நீ கல்லூரிப் பேருந்தில் செல்ல வேண்டாம்..”என்று கூறினான்.. உதட்டைக் கடித்த படி அமைதியாக நின்றிருந்தவள் “ஏ..ஏன்.. எப்போதும் போல்.. நான் கல்லூரிப் பேருந்திலேயே செல்கிறேனே..”என்று கூற.. அவள் மீது கோபப் பார்வையைச் செலுத்தியவன்.. “நான் சொல்வதைச் சரியென்று கேட்டுப் பழகு மதுமதி..”என்று அழுத்தத்துடன் கூறியதும்.. தலையை மட்டும் ஆட்டி விட்டு.. அவள் திரும்பி நடந்து செல்ல.. “மது நில்..”எனக் கூறி காரை விட்டிறங்கி அவளருகே வந்தான்...

சற்றுத் தயங்கியவன்.. பின் “ஒ..ஒரு முறை சிரித்து விட்டுப் போயேன்..”என்று கேட்க.. மார்போடு அணைத்திருந்த நோட்டை இன்னும் இறுகப் பற்றித் தலை குனிந்தவளுக்கு முகம் சிவந்து இதழ் புன்னகையில் விரிந்தது. அவனை நிமிர்ந்து பார்க்கும் துணிவின்றி அவள் ஓடிச் செல்ல.. அவள் செய்கையைக் கண்டு வாய் விட்டுச் சிரித்தபடிக் காரைச் செலுத்திக் கொண்டு எஸ்டேட்டிற்குச் சென்றான் ஆதித்யன்.

அன்று மாலை கல்லூரி முடிந்ததும் ஆதித்யனே வந்து அவளை அழைத்துச் செல்ல.. அதுவரை ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவியாகக் கல்லூரியில் பயின்று வந்தவள்.. இன்று காரில் வந்து செல்வதை அனைவரும் வாய் பிளந்து பார்ப்பதைக் கண்டு அவளுக்குத் தயக்கமும்,கூச்சமுமாய் இருந்தது. ஆனாலும்.. ஆதித்யனின் அருகாமையில் நேரம் கழிவதை உணர்ந்து பெருமகிழ்ச்சி கொண்டாள்.

இருவரும் அதிகம் பேசிக் கொள்ளாவிட்டாலும்.. ஏதோ ஒரு நிம்மதியும், சந்தோசமும் தங்களைச் சூழ்ந்திருப்பதை உணர்ந்து நிம்மதியுடன்

காணப்பட்டனர். புன்னகை முகத்துடன் வீட்டிற்குள் நுழைந்த இருவரையும் “வருக.. வருக.. புதுமண ஜோடியே.. வருக! ராஜாதி ராஜ... ராஜ குல திலக.. ஆதித்ய சக்கரவர்த்தியே வருக! .. எங்கள் ராஜகுலத் தோன்றலின் பட்ட மகரிஷி மதுமதி தேவியாரே வருக!”என்கிற கௌஷிக்கின் குரல் வரவேற்றது..

அவனது வரவேற்பைக் கண்டு ஆதித்யன் பலமாகச் சிரிக்க.. சிரிப்பை அடக்க முயன்று தோற்று.. மதுமதிக்கும் சிரிப்பு பீறிட்டது.. இதழோடு சேர்த்துக் கண்களும் சிரிக்கும் அவளது அழகைக் கண்டு ரசித்தபடி நின்றிருந்த ஆதித்யனை “ம்க்கும்..”என்று தொண்டையைச் செறுமி நடப்பிற்குக் கொண்டு வந்த கௌஷிக் “ஆதித்ய சக்கரவர்த்தி.. வாழ்த்துக்கள் டா.. மதுமதி தேவியாரே உங்களுக்கும் எனது திருமண வாழ்த்துக்கள்”என்று கூற.. சிரிப்பை நிறுத்தித் தலை குனிந்த மதுமதி.. “தேங்ஸ்..”எனக் கூறி விட்டு நகர்ந்து சென்றாள்.

அவள் செல்வதைக் கண்ட படியே நண்பனின் புறம் திரும்பியவன்.. “நீ எப்போதடா வந்தாய்..?”என்று வினவினான். “இப்போது தான்.. ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் வந்தேன்.. உன் திருமணத்திற்கு வரலாம் என்கிற திட்டத்துடன் தான் நான் சென்னை சென்றேன்.. ஆனால் எதிர்பாரா விதமாக.. அமெரிக்காவிலிருந்து உடனே வருமாறு கூறி திடீர் அழைப்பு வந்து விட்டது. உன்னிடம் கூறினால்.. திருமணத்திற்கு வரமாட்டாயா.. என்று கோபித்துக் கொள்வாயோ என்று பயந்து கொண்டு தான் உன்னிடம் கூறாமல் புறப்பட்டுச் சென்று விட்டேன்.. நேற்று தான் திரும்பினேன்.. உடனே ஃபோன் செய்தேன்.. பிறகு தான் நடந்தவைகள் அனைத்தும் வேலு அண்ணாவின் மூலம் தெரிந்து கொண்டேன்..”என்று நிறுத்தியவன்.. தொடர்ந்து..

“குமரிம்மாவை இப்படி ஒரு கோலத்தில் நான் எதிர்பார்க்கவேயில்லையடா.. எவ்வளவு பயங்கரமான விளைவுகளைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறாள் அந்த லேகா.. அவள் பூகம்பத்தை விட மோசமானவளடா.. ஏதுமறியாத ஒரு அப்பாவி ஜீவனின் மீது வீண் பழியை வேறு செலுத்தி விட்டுப் போயிருக்கிறாள்.., மதி மிகவும் பாவமடா.. தொடர்ந்து எத்தனை அதிர்ச்சிகள்.. அன்பரசு அங்கிளுக்கு இப்படி ஒரு இறப்பா..?,எதிர் பாராமல் பல விசயங்கள் நடந்து விட்டது.. ஆனால் ஒன்று மச்சி.. கெட்டதிலும் ஒரு நன்மையிருக்கும் என்பார்களே.. உங்கள் விசயத்தில்.. ஒன்றல்ல.. இரண்டு..”

“ஒன்று.. நீ அந்த வில்லி லேகாவைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் தப்பித்தது.. இன்னொன்று.. ஒரே சொந்தமானத் தந்தையையும் இழந்து.. எந்தத் தவறும் புரியாமல்.. ஊராரின் மத்தியில் கெட்டப் பெயருக்கு ஆளாகியிருக்கும் மதுமதிக்கு.. உன்னைப் போன்ற.. அருமையான கணவன் கிடைத்தது.. உன்னைத் தவிர வேறு யாருக்கும் அவளுக்குக் கணவனாக வரும் தகுதி கிடையாது என்று தான் நான் கூறுவேன்.. எளிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும்.. பல நல்ல குணங்களைக் கொண்ட அருமையான பெண்

மதுமதி.. ஊருக்கே நன்மை புரியும் உனது ராஜ வம்சத்திற்கு ஏற்ற மருமகள்..”என்று நீண்ட பேச்சை உதிர்த்து முறுவலித்தான் கௌஷிக்.
நண்பன் கூறியதைக் கேட்டு பெரு மூச்சை வெளியிட்ட ஆதித்யன்.. “என்னால்.. என்னால் தான் அவளுக்கு அந்தக் கெட்டப் பெயர்.. அவளுக்கு என்ன தலையெழுத்துடா.. அவளை விட பல வருடங்கள் மூத்த ஒருவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று..?, இருபது வயது கூட பூர்த்தியாகவில்லை அவளுக்கு.. இந்தச் சின்ன வயதில்.. கல்யாணம்,கருமாதி அது,இது என.. ச்ச.. என்னைத் திருமணம் செய்து கொண்டதால் தான் அவளது எதிர்காலம் பாழாகி விட்டது என்கிறேன் நான்..”என்று ஆதித்யன் கூற.. “முட்டாள்தனமாக உளறாதே ஆதி..”என்று கோபமாகக் கூறிய கௌஷிக்.. மதுமதி சிற்றுண்டியுடன் வருவதைக் கண்டு பேச்சை நிறுத்தி முறுவலித்தான்.

“வேலையெல்லாம் எப்படிப் போகிறது..?”என்று கௌஷிக்கிடம் விசாரித்தபடியே இருவருக்கும் சிற்றுண்டி அளித்தவள்.. உள்ளே செல்லப் பார்க்க.. “நீயும் அமரு மதி.. எங்களுடனே சாப்பிடு..”என்றான் கௌஷிக். அவள் தயங்கியபடி ஆதிதயனின் முகம் பார்க்க.. அவன் உட்கார் என்று கண்ணால் சைகை செய்தான்.. இதைக் கண்டு விட்ட கௌசிக்..

“அடேங்கப்பா.. கணவனின் விழிப்பார்வையை புரிந்து கொண்டு அதற்கேற்றார் போல் நடந்து கொள்ளும் மனைவி.. என்னே ஒரு புரிதல்!”என்று வியக்க.. “வாயை மூடு..”என்று அதட்டினான் ஆதித்யன்.. அடுத்த சில நிமிடங்கள்.. அமைதியாகச் செல்ல.. பின் மெல்ல நிமிர்ந்த கௌஷிக் மதுமதியிடம் “அங்கிள் பற்றிக் கேள்வி பட்டேன் மதி.. சா..சாரி.. எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை..”என்று அவன் தனது வருத்தத்தைத் தெரிவிக்கத் தந்தையின் நினைவில் கண் கலங்கியது மதுமதிக்கு.

ஆதித்யனும் இறுகிப் போய் அமர்ந்திருக்க.. “மதி.. மதி.. அழாதே.. இதற்காகத் தான் வந்ததும் அதைப் பற்றிப் பேசாமல்.. உங்கள் திருமணத்தைப் பற்றித் தொடங்கினேன்.. மதி.. அப்பா எப்போதும் உன்னுடனே.. உன்னைக் கவனித்துக் கொண்டே தான் இருப்பார்.. உனக்கு அருமையான கணவனும்,அழகான உறவுகளும் கிடைத்திருக்கிறார்கள் மதி.. அப்பா கடவுளாக இருந்து உன்னை நன்றாக வழி நடத்துவார்.. அழாதே..”என்று சமாதானப் படுத்த.. சிறிது நேரத்தில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள்.. தன் அறைக்குச் சென்றாள்..

அவள் சென்றதும் “ஆதி.. என்னடா நீயும் இறுகிப் போய் அமர்ந்து விடுகிறாய்..?, அவளுக்கு ஆறுதல் சொல்லி உடனிருக்க வேண்டியது நீ தானேடா..?,”என்றவனிடம் விரக்தியாக முறுவலித்தவன்... “அது.. நான் செல்ல வேண்டிய காரியமடா.. எனக்குத் திருமணம் என்பதால்.. தானே சென்று வருவதாகக் கூறிச் சென்றார் அங்கிள்... நல்ல மனிதரடா.. மதுமதிக்கு நடந்த

அத்தனை கெடுதல்களுக்கும் நான் தான் காரணமென்பதால்.. இந்தத் திருமணம் நன்மையா, தீமையா என்று கூட எனக்குப் புரியவில்லை.. பணத்தையும், பரம்பரையையும் விரும்புகிறவளல்ல மதுமதி.. அவளது மனதுக்குப் பிடித்தமான நல்ல கணவனாக அமைய வேண்டுமென நானே பிரார்த்தித்திருக்கிறேன்.. ஆனால்.. நா.. நான்.. அவளுக்கு நல்ல கணவனா என்கிற சந்தேகம் இருக்கிறதடா எனக்கு.. ஒரு தலைமுறை இடைவேளை உள்ள எங்களிருவருக்கும் எந்த வகையில் பொருத்தமிருக்கும் என்று நினைக்கிறாய்..?, அவளது வாழ்வையே நான் பாழாக்கி விட்டேனடா..”என்று அவன் புலம்பத் துவங்க..

“ஆதி... ஆதி..”என்று அவனது கையைப் பற்றியவன்.. “நீ தேவையில்லாமல் குழம்பிக் கொள்கிறாய்.. வயது வித்தியாசம் பெரிய விசயமே அல்ல.. எட்டே வருடங்கள் தானே.. இதிலென்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது..?, இதை ஒரு பிரச்சனையாக முன் வைக்கிறாயா நீ..?,முட்டாள்.. நீ கூறுவது போல்.. மதுமதி இருபது வயதைக் கூட முடித்திராத சிறு பெண் தான்.. அவள் படிப்பு முடிந்து வரும் வரை பொறுத்திரு.. அவளது ஆசைகளையும்,விருப்பங்களையும் ஒரு கணவனாக இருந்து நீ நிறைவேற்று..”என்று கூற.. மறுத்துத் தலையசைத்தான் ஆதித்யன்.

“நன்றாகப் படித்து அவள் முன்னேற வேண்டுமெனக் கூறிக் கொண்டிருந்த நானே.. அவளைத் திருமணம் செய்து கொண்டு அவளது முன்னேற்றத்துக்குத் தடையாகி விட்டேன்... அதனால் அவள் படிப்பு முடிந்ததும் எஸ்டேட் நிர்வாகம் பற்றி அவளுக்குக் கற்றுத் தர வேண்டும்..”என்று கூறியவனிடம் “அதன் பின்..?”என்று கௌஷிக் வினவ.. “அதன் பின்.. அதன் பின்...”என்று கூறியவனுக்கு மேலே கூற எதுவுமில்லாமல் போனது..

“அதன் பின் என்ன செய்யப் போகிறாய்..?,ம்..?,முட்டாள்தனமான எண்ணங்களுடன் அறிவீனமாக நடந்து கொள்கிறாய் ஆதி..”என்று கோபமாகக் கூறியவன் எழுந்து சென்று விட.. தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான் ஆதித்யன்.

அன்று இரவுத் தன் அறையில் உறங்க முயன்ற.. மதுமதிக்கு உறக்கம் வராமல் முந்தைய நாளைப் போல் தனி அறையில் உறங்குவது பயத்தைக் கொடுக்க.. நொடிக்கொருதரம்.. ஆதித்யன் வருகிறானா என்று வாசல் கதவை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெகு நேரமாகியும் அவன் வராததைக் கண்டு அறையை விட்டு வெளியே வந்து அவனது அறையை எட்டிப் பார்த்தாள்.

சரியாக அதே நேரத்தில்.. கௌஷிக்குடன் அரட்டையை முடித்து விட்ட அறைக்கதவை திறந்து கொண்டிருந்த ஆதித்யன் மதி அவளது அறை வாயிலில் நிற்பதைக் கண்டு “மது.. நீ உள்ளே உறங்கிக் கொண்டிருப்பாய்

என்று நினைத்துத் தானே நான் கதவை மெதுவாகத் திறந்தேன்..?,நீ இங்கே நின்று கொண்டிருக்கிறாய்.. உறங்கவில்லையா..?"என்று வினவினான்.
அவனது அறைக்குள்.. அவனுடைய அனுமதியில்லாமல் எப்படி நுழைவதாம் என்று மனதிற்குள் நினைத்த மதி.. பதிலேதும் கூறாமல் நிற்க.. "சரி உள்ளே வா.."என்றழைத்தவன் அவள் உள்ளே நுழைந்ததும்.. "மது.. இனி என் அனுமதிக்காகத் தூங்காமல் விழித்துக் கொண்டு நிற்காதே... சரியா..?, நான் வரத் தாமதமானாலும்.. நீ உள்ளே வந்து படுத்துக் கொள்.. என்ன..?"என்றவனிடம் தலையசைத்தவள்.. உறங்கச் சென்றாள்.

அவளோடு சேர்ந்துத் தானும் இரவு உடைக்கு மாறி கட்டிலில் படுத்தவன்.. விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த மதுமதியிடம்.. "இப்போது என்ன ஆராய்ச்சி.. அங்கே என்ன தெரிகிறது..?"என்று விசாரித்தபடி அவளருகே தலை சாய்த்தான். இயல்பாகத் தன்னருகே சாய்பவனை ஆச்சரியத்துடன் நோக்கிய மதி,, பின் "சு..சும்மா தான்.."எனக் கூறி விட்டு போர்வையால் முகத்தை மூடிக் கொண்டாள்.. சிரித்தபடி அவள் முகத்திலிருந்துப் போர்வையை விலக்கியவன்.. "என்ன..?"என்று மீண்டும் வினவினான்.. "ஒ..ஒன்றுமில்லையே.. விட்டத்தில் தெரியும் அலங்கார விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.."என்றவள் மறுபுறம் திரும்பிப் படுக்க.. சிரிப்புடன் விழி மூடினான் ஆதித்யன்.

மறு நாள் காலை கல்லூரிக்குச் செல்லும் அவசரத்தில் வேக வேகமாக டிஃபன் பாக்ஸில் சாப்பாட்டை அடைத்துக் கொண்டிருந்தவளிடம் "மது.. காலை எழுந்ததும் வேலை செய்யாதே என்று நானும் பலமுறை கூறி விட்டேன்.. பொறுமையாக வேலைகளை முடித்து விட்டு.. அவசர அவசரமாகக் காலேஜ் கிளம்பினால் என்ன அர்த்தம்..?"என்று ஆதித்யன் கடிந்து கொள்ள.. அதை நின்று கேட்கக் கூட நேரமற்று.. அங்குமிங்கும் ஓடியபடியே அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"மதுமதி.. இந்தப் புத்தகம் தானே.. நான் எடுத்து வைக்கிறேன்.. "என்றபடி கௌஷிக் அவளது புத்தகப் பையில் புத்தகங்களைத் திணிக்க.. சங்கடத்துடன் அவனை நோக்கியவள்.. "நீங்கள் எதற்காக எடுத்து வைக்கிறீர்கள்.. நான் செய்து கொள்ள மாட்டேனா..?"என்று வினவினாள்., "சின்ன உதவி தானே மதி.. எப்படியும் பிற்காலத்தில்.. என் மகனுக்கோ.. மகளுக்கோ.. செய்யத் தானே போகிறேன்.. அதற்கு இப்போதிருந்தே பிராக்டிஸ் செய்து கொள்கிறேன்.."என்று கூற.. "பொன்னு யாரு..?"என்று இருவரும் ஒரு சேர வினவினர்..

"இதற்கு மட்டும் புருஷனும்,பொண்டாட்டியும் கோரஸ் பாடுவீரகளே.. நான் பொதுவாகச் சொன்னேனடா.."என்றவன் தொடர்ந்து மதியிடம்.. "நீ போ.. சாப்பிடு.. அதற்கும் அவன் கத்தப் போகிறான்.."என்று கௌஷிக் கூற.. "நீங்களும் வாருங்கள்.."என்றழைத்துக் கொண்டே.. டைனிங் ஹாலுக்கு விரைந்தாள்.

மூவரும் சிரித்தபடி உணவைத் தொடர.. சிறிது நேரத்தில்.. "ஆதி.."என நண்பனை விளித்த கௌஷிக் "அப்புறம்.. ஹனிமூன் எப்போது செல்லப் போகிறீர்கள்..?,எங்கே செல்வதாகத் திட்டமிட்டிருக்கிறீர்கள்..?"என்று வினவ... ஆதித்யன் அவனை எரித்து விடுமளவிற்கு முறைத்தானென்றால் மதுமதிக்குப் புரையே ஏறி விட்டது.. எப்படியோ இருமிச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள்.. இருவரையும் சந்திக்க முடியாமல்... எழுந்து சென்று விட்டாள்.

அவள் சென்றதும் நண்பனிடம் கோபமாகத் திரும்பியவன்.. "டேய்.. அறிவிருக்கிறதா உனக்கு..?,சின்னப் பெண்ணின் முன்பு என்னப் பேச்சு பேசுகிறாய்..?"என்று வினவ.. "சின்னப் பெண்ணா..?"என்று வியந்த கௌஷிக்.. "சின்னப் பெண்ணோ.. பெரிய பெண்ணோ.. அவள் உன் மனைவி டா.. புதிதாக கல்யாணமான தம்பதியிடம் ஹனி மூன் எப்போது என்று கேட்பது தவறா..?, இது என்ன அநியாயமாக இருக்கிறது..?"என்று அவன் நொடித்துக் கொள்ள.. "அவள் பயந்து ஓடியே போய் விட்டாள்.. பாவி.. எல்லாம் உன்னால் தான்.."என்று ஆதி அவனிடம் மீண்டும் பாய.. "ஆதி.. அதை ஏன் பயந்து என்கிறாய்..?, அவள் வெட்கப்பட்டு ஓடி விட்டாளென்று கூடக் கூறலாமல்லவா..?"என்று அபிநயத்துடன் கூற.. சிரிப்பை அடக்க முயன்று தோற்று... நண்பனுடன் சேர்ந்து நகைத்தாலும்.. உள்ளுக்குள் அவன்.. மதுமதியின் வெட்கச் சிரிப்பைக் கற்பனை செய்து கொண்டு தான் இருந்தான்.

அதன்பின் குமரிம்மாவின் சிகிச்சைக்காக பிஸியோதெரபிஸ்ட் ஒருவரை ஆதித்யன் வீட்டிற்கு வரவழைத்திருக்க.. மதுமதியை வேலுவுடன் காரில் கல்லூரிக்கு அனுப்பி வைத்தவன்.. டாக்டருடன் அன்னையைக் காணச் சென்றான். சோதனை முடிந்ததும் டாக்டருடன் பேசியபடி அவன் நடந்து செல்ல.. குமரிம்மா.. கௌசிக்கை அருகில் அழைத்தார்...

"என்னடா.. ஏதேனும் முன்னேற்றம் தெரிகிறதா இருவருக்கிடையே..?"என்று விசாரித்தார். ஆம்! கௌஷிக்கிடம் இங்கே நடந்த பிரச்சைனைகள் அனைத்தையும் வேலுவின் மூலம் கூறீயதும்.. அவனை இங்கே வரவழைத்ததும் குமரிம்மாவின் திட்டம் தான்.. ஆதித்யனிடம் பேசி அவன் மனதில் என்ன இருக்கிறதென்பதை அறிந்து கொண்டு.. அவனை மாற்ற முயல்வதே இருவரது நோக்கமாயிருந்தது,

"எங்கே குமரிம்மா.. ஒரு அடி ஏறினால்.. நாலு அடி சறுக்குகிறது.. ஆதித்யன் மதுமதியை அவ்வப்போது ரசித்துப் பார்ப்பது போல் தான் தெரிகிறது... கேட்டால் மட்டும்.. அவள் சிறு பெண்.. இருபது வயது கூட முடியவில்லை.. அவளது வாழ்வை நானே கெடுத்து விட்டேன்.. அவள் படிப்பு முடிந்ததும் எஸ்டேட் நிர்வாகம் கற்றுத் தருவேன்.. சொத்தில் பாதியை எழுதித் தருவேனென்று வசனம் பேசுகிறான்.. ஆனால் ஒன்றும்ம்மா.. அவனுக்கு

மதுமதியின் மீது பாசமிருக்கிறது.. அது கூடிய சீக்கிரத்தில் நேசமாக மாறி விடுமென்று நம்புவோம்..”என்று கூறியவன் தொடர்ந்து.. “அவர்களது போக்கிலேயே செல்வோம் குமரிம்மா.. நல்லதை மட்டுமே நினைக்கும் உங்களுக்கு.. என்றைக்கும் நல்லது மட்டும் தான் நடக்கும்.. கவலையே படாதீர்கள் என்று..”அவர் கையை அழுத்தினான்.

அன்று மாலையே சென்னை புறப்பட்ட கௌஷிக் இருவருக்கும் திருமணப் பரிசாக இரண்டு மோதிரங்களை அளித்தான். “நீங்கள் தான் மோதிரம் மாற்றும் சம்பிரதாயத்தையெல்லாம் கடந்து வரவில்லையே.. அந்தக் குறையைப் போக்க வேண்டி நானே இருவருக்கும் மோதிரம் வாங்கி வந்து விட்டேன்..”எனக் கூறித் தன் பாக்கெட்டிலிருந்து இரண்டு டப்பாக்களை எடுத்து இருவரிடமும் நீட்டினான்.

“ஆதி.. இதை நீ மதுமதியின் விரலில் அணிவித்து விடு.. மதி.. நீயும் ஆதியின் விரலில் அணிவித்து விடு...”என்று கூற.. இருவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட டப்பாவைத் திறந்து மோதிரத்தைப் பார்த்தனர். ஆதியென எழுத்துக்களால் வடிவமைக்கப்பட்டிருந்த மோதிரத்தை மதுமதியின் புறம் திரும்பி அவளது வலது கையைப் பற்றி.. ஆதித்யன் அணிவித்து விட.. மதுமதி வழக்கம் போல்.. சற்றுத் தயக்கத்துடனே.. அவனது கையைப் பற்றாமல்.. மது என் பொறிக்கப்பட்டிருந்த மோதிரத்தை அவனது விரலில் அணிவித்து விட்டு.. கௌஷிக்கிடம் நன்றி கூறினாள்.

பழக்கமற்ற மோதிரம் விரலில் உறுத்த... யாருமறியாமல்.. மோதிரத்திலிருந்த ஆதியின் பெயரை வருடினாள் மதுமதி.. சிலிர்ப்பும்,தவிப்பும் ஒரு சேரத் தோன்ற... உள்ளத்தில் சந்தோசம் பொங்கியது. அதன் பின் கௌஷிக் புறப்பட்டதும் இருவரும் வாசல் வரை வந்து வழி அனுப்பி வைத்தனர். எப்போதும் போல் பாவாடை-சட்டையுடன் காட்சி தருபவளைக் கண்ட கௌஷிக்.. “மதி.. நீ என்ன இன்னும் சிறு குழந்தையா..?,திருமணமே முடிந்து விட்டது.. இன்னும் பாவாடை சட்டையில் திரிந்து கொண்டிருக்கிறாய்..?, இனியெல்லாம் சேலை கட்டிப் பழகிக் கொள்..”என்று கூறினான்.

சிரிப்பும்,வெட்கமுமாக மதுமதித் தலை குனிய.. நண்பனை முறைத்த ஆதித்யன் “டேய்.. அவளுக்கு பிடித்ததை அவள் அணிந்து கொண்டு இயல்பாக இருக்க வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன்.. நீ வேறு அவளை வற்புறுத்தாதே..”என்று கூற.. மதுமதியின் முகம் சுருங்கிப் போயிற்று.. மதுமதிக்குக் கேட்காத வண்ணம் நன்பனின் அருகே குனிந்த கௌஷிக்..

“அவளது இயல்பு என்னவென்று உனக்கு நன்றாகத் தெரியுமாக்கும்..?என்னடா..?, நான் சேலை கட்டிக் கொள் என்ற போது கூட.. மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.. ஆனால் நீ இப்படிக் கூறிய பின்பு தான் அவள்

முகம் மாறிப் போனதாக எனக்குத் தோன்றுகிறது.. நீ தான் தேவையில்லாமல் எதையெதையோ நினைத்துக் கொண்டுக் குழம்புவதாக நான் நினைக்கிறேன் ஆதி.. அவள் தெளிவாகத் தான் இருக்கிறாள்..”என்றவன் மேலே எதுவும் கூறாமல் விடைபெற்றுச் சென்றான். அவன் சென்ற பின் மனைவியை நோக்கிய ஆதிக்கும் அவன் கூறியது சரியென்றே பட்டது.

அவன் அணிவித்த மோதிரத்தைப் பார்த்த வண்ணம் படுக்கையில் சாய்ந்திருந்தவளைக் கண்டபடியே அருகே வந்த ஆதித்யன் பின் “பிடிக்கவில்லையென்றால் அதைக் கழட்டி வைத்து விடு மது..”என்று கூற அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. “எ..என்ன..?”என்று வினவினாள்.. “இல்லை.. கௌஷிக் பரிசளித்த அந்த மோதிரம் உனக்குப் பிடிக்கவில்லையென்றால் கழட்டி வைத்து விடு.. அவன் பரிசளித்ததற்காக நீ போட்டுக் கொண்டே ஆக வேண்டுமென்ற கட்டாயம் ஏதுமில்லை.. அதையே பார்த்துக் கொண்டிருந்தாயே அதனால் தான் கூறினேன்..”என்றான்.

பிடிக்கவில்லை என்றால் மட்டும் தான் அப்படிப் பார்ப்பார்களா..?, அதிகமாகப் பிடித்திருந்தாலும் கூட பார்ப்பார்களே.. இதை அவனுக்குப் புரிய வைக்க முடியுமா என்ன...?, எதுவும் கூறாமல் மறு புறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள் மதுமதி.

ஒரு வேளை.. அவள் பெயரிட்ட மோதிரத்தை அணிந்து கொள்வதில் அவனுக்கு விருப்பமில்லையோ! அதனால் தான் இப்படிக் கூறுகிறானா..?, என்றெண்ணியவளுக்கு.. உடனேயே அவனது கையில் அந்த மோதிரம் இருக்கிறதா.. இல்லையா என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் அதிகமானது. புரண்டு படுப்பவள் போலத் திரும்பியவள்.. மெல்ல கண் திறந்து அவன் கைகளை நோக்க.. அவனோ இரண்டு கைகளையும் மடித்துக் கண் மூடிச் சாய்ந்திருந்தான்.. என்ன செய்வது என்று அவசரமாகச் சிந்தித்தவளுக்கு.. ஒரு யோசனை தோன்ற..

“க்கும்..க்கும்..”என இருமல் வந்தவள் போல நடித்தவள்.. எழுந்து அமர.. உடனே கண் விழித்த ஆதித்யன்.. “மது.. என்னம்மா.. என்னவாயிற்று...?”என்று வினவியபடி எழுந்தமர்ந்தான். “இ..இல்லை.. கொ..கொஞ்சம் தண்ணீர் வேண்டும்..”என்று அவனுக்கருகே இருந்த கூஜாவைக் காட்ட.. அவன் அவளிடம் தண்ணீரை நீட்டினான். அவன் நீட்டிய வலது கை மோதிர விரலில்.. தான் அணீவித்த மோதிரம் இருப்பதைக் கண்டு திருப்தியுற்றவள்.. “தேங்க்ஸ்..”என்று கூறி விட்டு மகிழ்ச்சியுடனே உறங்கினாள்.

**வா**ழ்க்கை அதன் போக்கில் எவ்வித சலனமுமின்றி அமைதியாகப் பிரயாணித்துக் கொண்டிருந்தது. புயலுக்குப் பின் அமைதி என்பார்களே... அது போல்.. அவர்களது வாழ்வின் முற்பாதியில் பற்பல

அதிர்ச்சிகளையும்,துன்பங்களையும் தந்த கடவுள்.. இப்போது.. நிம்மதியையும், சந்தோசத்தையும் அள்ளி அள்ளித் தந்தார். ஆதித்யன் தன் அன்னைக்காக நியமித்திருந்த பிஸியோதெரபிஸ்ட் தினமும் வீட்டிற்கு வருகை தந்து குமரிம்மாவிற்கு சிறு சிறு உடற்பயிற்சிகளை சிகிச்சைகளாக அளித்துக் கொண்டிருந்ததால்.. அவரது உடல்நிலையில் சிறு முன்னேற்றம் காணப் பட்டது. ஆதி-மதுவின் திருமண உறவைப் பொறுத்தவரை எவ்வித முன்னேற்றமும் காணப்படா விட்டாலும்.. இருவருக்குமிடையே எப்போதும் இருக்கும் அடிப்படையான பாசம் நாளுக்கு நாள் பெருகியபடி தானிருந்தது.. மது அறியாத வண்ணம் ஆதித்யன் அவளை ரசிப்பதும்.. ஆதி அறியா வண்ணம் மது அவனை ரசிப்பதும் நடந்து கொண்டு தானிருந்தது..

அன்றும் அப்படித் தான்.. கல்லூரியில் ஏதோ விழா என்று தோழிகள் அனைவரும் புடவை அணிந்து வரத் திட்டமிட்டிருந்ததால்.. மதுமதி தன்னிடமிருந்த கைத்தறிச் சேலை ஒன்றை அணிந்திருந்தாள்.. உறவினர் ஒருவர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் வருடத்திற்கிருமுறை அவரிடமிருந்து கைத்தறிப் புடவைகளை வாங்கி வருவார் அன்பரசு.

பெரும்பாலும் மதுமதிப் பாவாடை,தாவணியும்,சுடிதாரும் அணிவதால் அவளிடம் புடவைகள் அதிகமாகக் கிடையாது. அதனால் தன்னிடமிருந்த கைத்தறிப் புடவைகளில் ஒன்றையே உடுத்திக் கொண்டாள்.. தலையில் கட்டியிருந்தத் துவாலை அப்படியே இருக்க.. ஈரக் கூந்தலைக் காய வைக்கக் கூடத் தோன்றாமல் குமரிம்மாவின் காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

ஆதியும்,குமரிம்மாவும் எத்தனையோ முறை நீ சமையலறையின் பக்கம் செல்லத் தேவையில்லை என்று கூறி விட்டார்கள் தான்.. ஆனால் மதிக்குத் தான் திடீரெனக் கிடைத்த சொகுசு வாழ்வை அனுபவித்துக் கொண்டு சோம்பியிருக்க மனம் வரவில்லை.. அவர்கள் வறுபுறுத்தினாலும் காதிலேயே வாங்காமல் தன் போக்கில் எப்போதும் செய்யும் வேலைகளைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள். அத்தோடு ஒன்றோடு ஒன்றாகப் பழகி விட்டிருந்த வேலையாட்களிடம்.. முதலாளித்துவத்தைக் காட்டி வேலை ஏவ விருப்பமில்லை அவளுக்கு. அதனால் எப்போதும் போல் அவர்களுடன் தனது வேலைகளைப் பகிர்ந்து கொண்டாள்.

“பைரவிக்கா.. 5 நிமிடம் அடுப்பைப் பார்த்துக் கொள்கிறீர்களா..?,நான் சென்று குமரிம்மாவிற்கு இந்தக் கஞ்சியைக் கொடுத்து வருகிறேன்..”என்று அவள் தட்டைத் தூக்கிக் கொண்டு வெளியேற.. “அப்படியே அந்த டாக்டருக்கும் காஃபி கொண்டு போ மதி..”என்றவரிடம் “ம்,எடுத்துக் கொண்டேன்..”என்றபடியே அடுக்கைளையை விட்டு வெளியே வந்தாள்.. பழக்கமற்ற சேலை வேறு

காலைத் தட்ட.தட்டைப் பார்த்தபடி கவனத்துடன் மாடிப்படியில் காலை வைத்தாள்...

வேக நடையுடன் இடது கையில் கடிகாரத்தைக் கட்டியபடியே படியிறங்கிக் கொண்டிருந்த ஆதித்யன் அவள் பூனை நடை நடந்து வருவதை அறியாமல் மோதப் பார்க்க.. அதற்குள் விலகி விட்ட மதி.. தட்டிலிருந்த பாத்திரங்களைக் கண்டு விட்டு... "நல்ல வேளை கா:.பி சிந்திவிடவில்லை.."என்று கூறியபடி ஆதித்யனை நிமிர்ந்து பார்க்க.. அவன் வியப்பில் விரிந்த விழிகளுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஈரத்துவாலையின் பின்னே மறைந்து கிடந்த கூந்தல்.. நெற்றியிலும்.. கழுத்தோரத்திலும்.. சிறு சிறு முடிகளாக வெளி வந்திருக்க.. உச்சியில் மட்டும் அவள் இட்டிருந்த குங்குமம்.. அவளது மூக்குத்தியோடு போட்டி போட்டுப் பளீரிட்டுக் கொண்டிருந்தது. நெற்றியில் வைரக் கற்களாக வியர்வைத் துளிகள் ஜொலித்துக் கொண்டிருக்க.. மையிட்ட அவளது கரு விழிகள் மீன்களைப் போல் அங்குமிங்கும் துள்ளிக் கொண்டிருந்தது. இழுத்துச் செருகியிருந்த அவளது சேலை வெளிப்படுத்திய மென் இடை கவர்ச்சியாகத் தோன்ற.. அவள் கட்டியிருந்த புடவையின் வழியாக வெளிப்பட்ட மொத்த அழகையும் இமைக்கக் கூடத் தோன்றாமல் மையலுடன் நோக்கிக் கொண்டிருந்தான் ஆதித்யன்.

இதையறியாத மதுமதி.. "வழி விடுகிறீர்களா..?,நான் மேலே செல்ல வேண்டும்.." என்று கூற.. பதில் கூற முடியாமல் தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டதைப் போல் தோன்ற.. வேகமாகத் தலையசைத்துச் சற்று விலகி அவளுக்கு வழி விட்டான். இந்த வழியில் எப்படிப் போவது என்று யோசித்த மதி.. ஓரக் கண்ணால் அவனைப் பார்த்த வண்ணம்.. அவனைக் கடந்து சென்றாள்..

மாடிப்படியின் கைப்பிடியில் சாய்ந்து அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவன்.. தன்னைக் கடந்து செல்கையில் அவள் தன்னை லேசாக உரசிச் சென்றதும்.. முழுதாகத் தன் வசமிழந்து போனான். அவளைத் தொடர்ந்து அறைக்குள் நுழைபவனை குமரிம்மாவும்,டாக்டரும் வரவேற்க.. அவர்களிடம் புன்னகைத்தாலும் அவனது கண்கள் மட்டும் மதுமதியையே சுற்றி வந்தது.


புன்னகை முகத்துடன் டாக்டரிடம் கா:.பியை நீட்டியவள்.. குமரிம்மாவிடம் சென்று.. அவரது கையை வருடி.. சில நிமிடங்கள் உரையாடி விட்டு.. உணவு புகட்டுவதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.. வியர்வையில் நனைந்திருந்த ஆடை வெளிப் படுத்திய அங்கங்கள் அவனை அதிகமாக இம்சிக்க கஷ்டப்பட்டுப் பார்வையை வேறு புறம் திருப்பினான்.

அதற்குள் அவனை டாக்டர் அழைக்க.. மனைவியிடமிருந்து பார்வையைப் பிரிக்க மனமற்று.. விலகிச் சென்றான்.. அவர்கள் சென்றதும் மதியிடம் திரும்பிய குமரிம்மா.. "மதி என்ன இன்று புடவை அணிந்திருக்கிறாய்..?, கல்லூரியில் ஏதேனும் விழாவா..?"என்று விசாரித்தார். "ஆமாம் குமரிம்மா.. அதனால் தான் தோழிகள் அனைவரும் சேலை கட்டச் சொல்லி வற்புறுத்தினார்கள்"என்று கூற.. "அப்படியா..?,வேறு நல்ல புடவை ஏதேனும் கட்டிச் செல்லலாமல்லவா மதி..?,இது மிகவும் எளிமையாக இருக்கிறதே." என்றவர் தொடர்ந்து "அந்த கபோர்டைத் திறந்து அதிலிருக்கும் புடவைகளில் உனக்குப் பிடித்ததை உடுத்திக் கொள்.."என்றார்.

"அய்யோ! வேண்டாம் குமரிம்மா.. நான்.. எனக்கு இதுவே போதும்.. இதுவே நன்றாகத் தானே இருக்கிறது..?"என்று பதற.. அவளை நிதானமாக நோக்கியவர் "இப்போது என்ன கூறி விட்டேனென்று இப்படிப் பதறுகிறாய் மதி..?, அதிலிருக்கும் சேலைகள் அனைத்தும் உனக்காக வாங்கியது தான்.. எப்படியும் நீ தான் அதை உடுத்தியாக வேண்டும்.. நான் சொல்வதைக் கேள் மதி.."என்று கூற சரியெனத் தலையாட்டியவள்.. அவர் கூறிய படி.. நீல நிறப் புடவையைக் கட்டிக் கொண்டு அவர் கொடுத்த சில எளிமையான நகைகளையும் அணிந்து கொண்டுத் தயாராகி வெளியே வந்தாள்..

அவளது அலங்காரத்தைக் கண்டு பைரவி அளித்த மல்லிகைச் சரத்தையும் வைத்துக் கொண்டு.. ஹாலில் டிவி பார்த்துக் கொண்டுத் தனக்காகக் காத்திருந்த ஆதித்யனின் முன்பு வந்து நின்றாள்.. "சா..சாரி.. கொஞ்சம் லேட் ஆகி விட்டது.. செல்லலாமா..?"என்று வினவியவளைத் தலை முதல் கால் வரை நோக்கியவன் அவள் காதோரக் கூந்தலை ஒதுக்கி.. "அந்தக் கைத்தறிச் சேலை தான் அழகாக இருந்தது.."என்று கூறி விட்டு காருக்குச் செல்ல.. மதுமதி குழம்பிப் போனாள்.

தன் பக்கக் கதவைத் திறந்து கொண்டு காரில் ஏறி அமர்ந்தவள்.. அவனிடம் திரும்பி "அப்படியானால்.. இந்தச் சேலை நன்றாக இல்லையா..?"என்று வினவினாள்.. அவள் புறம் திரும்பி அவள் கண்களை ஆழ நோக்கியவன்.. "அது வேறு விதத்தில் அழகாக இருந்தது மது.."என்று கூற.. அவள் மேலும் குழம்பி "எந்த விதத்தில்..?"என்று வினவினாள்.. அழகாகத் தலையசைத்துச் சிரித்தவன்.. "எந்தவிதத்தில் என்பதைக் கூறினால் நிச்சயம் அடிக்க வருவாய்..." என்று கூறி விட்டுக் காரைக் கல்லூரிக்குச் செலுத்தினான்.


HOSTED ON
Team-BHP.com
copyright respective owners

## அத்தியாயம் – 16



**உன் மீது நான் கொண்ட காதல்..**
**வான் மீது மண் கொண்ட காதல்..**
**உனக்கும் எனக்குமான நேசம்..**
**காற்றுக்கும் பூவுக்குமான நேசம்..**

**அ**ன்று காலை விரைவிலேயே எழுந்து விட்டதால் மதுமதிக்குக் காரில் சென்று கொண்டிருக்கையிலேயே தூக்கம் கண்ணைச் சுழட்டியது.. கண்களை மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டவள்.. அடுத்த சில நிமிடங்களில் உறங்கியும் போனாள்.. உறக்கத்தில் தன் மீது தலை சாய்ப்பவளை ஆதித்யன் சிரிப்புடன் நோக்கியபடி வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

கல்லூரியின் முன்பு வண்டியை நிறுத்திய பின்பும் அவள் எழாமல் போக.. தன் மேல் சாய்ந்திருந்தவளின் கன்னம் வருடி.. "மது.."என்றான். தலையணையில் சாய்திருப்பதாக எண்ணி.. இன்னமும் நன்றாக அவன் தோளில் சாய்ந்தவள் நிதானமாகக் கண் விழிக்க.. எதிரே தெரிந்த ஆதித்யனின் புன்னகை முகத்தைக் கண்டுத் திடுக்கிட்டாள்.. அவள் கன்னத்தை வருடிக் கொண்டிருந்த கைகளால் அவள் முகத்தைத் தாங்கியவன்.. "இப்படியே உன்னை என் தோளில் சாய்த்துக் கொண்டு நாள் முழுதையும் கழிக்க எனக்கும் ஆசை தான் பேபி.. ஆனால் உன் கல்லூரி வளாகத்தில் இருப்பவர்கள் தான் என்ன கூறுவார்களோ தெரியவில்லை.."என்று கூறச் சட்டென அவனை விட்டு விலகி அமர்ந்தாள்..

"சா..சாரி.. தூக்கம் வந்து விட்டது.. அதனால் தான்.."என்று அவள் தயங்கியபடிக் கூற.. "பரவாயில்லை.."என்றவன்.. களைந்திருந்த அவளது கூந்தலைக் கோதினான்.. அவனது பார்வையும்,செய்கையும் சிலிர்ப்பை ஏற்படுத்த.. முகம் சிவந்து தலை குனிந்தவள்.. "நா..நான் செல்கிறேன்.."எனக் கூறி விட்டு காரை விட்டு இறங்கிக் கல்லூரிக்குச் சென்றாள்.. அவள் உள்ளே செல்லும் வரைப் பார்த்துக் கொண்டே இருந்தவனுக்கு.. சட்டையில் வீசிய மனைவியின் மல்லிகை வாசம்... ஏனோ கிறக்கத்தைக் கொடுத்தது.

அதே உணர்வுடன்.. நாள் முழுதும் சிரிப்புடனே வலம் வந்தான். அன்று எஸ்டேட்டிலிருந்துப் புறப்படுவதற்கு நேரமாகிப் போனதால்.. இரவு தாமதாகத் தான் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். இரவு உணவை முடித்துக் கொண்டு

அறைக்குச் சென்றவன்.. கட்டிலில் படுத்து அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த மனைவியின் அருகே சென்றான்.

அவன் அழகாயிருக்கிறது என்று கூறிய காரணத்தினால் அதே கைத்தறிப்புடவையுடனே உறங்கிக் கொண்டிருந்தவளைக் கண்டுப் புன்னகை எழுந்தது அவனுக்கு.. திருமணமான புதிதில் அவள் முகத்தில் நிரந்தரமாகக் குடி கொண்டிருந்த பயமும்,நிம்மதியின்மையும் சுத்தமாக மறைந்து போய்.. புன்னகை முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்தவளின் கூந்தல் கோதியவன்.. குனிந்து அவளது நெற்றியில் அழுந்த முத்தமிட்டான். பின் அவளருகிலேயே அவளது தலையணையில் முகம் புதைத்து.. அவளது மூச்சுக் காற்றுத் தன் முகத்தில் மோதும் சுகத்திலேயே உறங்கிப் போனான்.

மறு நாள் காலை கண் விழித்த மதுமதி தனக்கு வெகு அருகில்.. தனது தலையணையிலேயே முகம் புதைத்து.. உறங்கிக் கொண்டிருப்பவனைக் கண்டுப் பதறி எழுந்தாள். தெரிந்து தான் படுத்திருக்கிறானா..?,அல்லது தூக்கத்தில் புரண்டு அருகே வந்து விட்டானா..?, என்று குழம்பியவள்... அவன் விழிப்பதற்குள் ஓடி விடலாமென்று எண்ணி.. கட்டிலை விட்டுக் கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

அவளுக்குப் பின் கண் விழித்த ஆதித்யன்.. ஜாகிங் முடித்ததும் நீண்ட நாட்களுக்குப் பின்.. ரோஜாத் தோட்டத்தில் வந்தமர்ந்தான். அந்த மார்கழி மாதக் காலைப் பனியில்.. அழகாய் மலர்ந்திருந்தப் பல வண்ண மலர்களைக் கண்டு களித்த வண்ணம் அமர்ந்திருந்தவனின் எண்ணங்கள் மதுமதியைச் சுற்றியே வலம் வந்தது.. எழுந்து சென்று மலர்களை வருடியவனுக்கு.. மதுமதியின் கன்னங்களின் மென்மை நினைவிற்கு வந்தது.. தனக்குள் சிரித்தபடித் திரும்பியவனை.. அதே புன்னகையுடன் எதிர்கொண்ட மதுமதி... அவனிடம் காஃபியை நீட்டினாள்..

விடாமல் எண்ணங்களில் அவள் வலம் வருவதால் தான்.. தனக்கு அவள் எதிரில் நிற்பது போல் தோன்றுகிறது போலும் என்றெண்ணியவன்.. அவள் கன்னம் பற்றித் தன்னருகே இழுக்க.. “அய்யோ காஃபி...”என்று பதறினாள் மதுமதி. அய்யோ! கனவில்லையா..?, நிஜம் தானா என்று நினைத்தவனுக்குச் சங்கடமாகிப் போனது..”சா..சாரி மது.. ரியலி சாரி..”என்றவன் காஃபியை எடுத்துக் கொண்டான்..

அவன் எடுத்துக் கொண்டதும் தட்டை பெஞ்சில் வைத்து விட்டுச் செடிகளின் பக்கம் சென்ற மதுமதி... பூக்களை வருட.. ஆதித்யனின் பார்வையோ மனைவியை வருடியது.. பின் அவளருகே எழுந்து சென்றவன்.. “மது.. உன்னிடம் கூறவில்லையே.. நமக்குப் பெரிய லாபம் அளிக்கக் கூடிய டீலர்ஷிப் ஒன்று கிடைத்திருக்கிறது.. அதனால் தான் நான் நேற்று இரவுத்

தாமதமாக வர நேர்ந்தது..”என்று கூற.. மகிழ்ச்சியுற்ற மதுமதி.. “வாழ்த்துக்கள்.. குமரிம்மாவிடம் கூறி விட்டீர்களா..?”என்று வினவினாள்..

“இல்லை.. இனிமேல் தான் கூற வேண்டும்..”என்று கூறியவனிடம் சரியென முறுவலித்த மதுமதிக்கு.. ஒரு யோசனை தோன்றியது.. பின் சிரிப்புடன் அவனை நோக்கியவள்.. “சந்தோசமான செய்தி கூறியிருக்கிறீர்கள்.. ஆனால் உங்களுக்குப் பரிசளிக்க என்னிடம் ஏதுமில்லையே..”எனக் கூறி யோசிப்பது போல் நடித்தவள்.. பின் அவனைக் கடந்து சென்று ஒரு சிகப்பு ரோஜாவைப் பறித்து அவனிடம் நீட்டி.. “இப்போதைக்கு இதை என்னுடைய பரிசாக வாங்கிக் கொள்ளுங்கள்.. டவுனுக்குச் செல்லும் போது.. நான் வேறு ஏதேனும் வாங்கி வருகிறேன்..”என்று.. அவள் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற போது.. அவன் கூறீய வசனங்களைக் கூறி.. அவனைப் போலவே ஒற்றை ரோஜாவை அவனிடம் நீட்டினாள்..

ஆச்சரியத்துடன் புருவம் உயர்த்திப் பலமாகச் சிரித்தவன்.. “நன்றி மேடம்..” எனக் கூறிப் பூவை வாங்கிக் கொண்டான். பின் விலகிச் செல்லப் பார்த்தவளிடம் “அவ்வளவு தானா..?”என்று அவன் வினவ.. நின்று அவனைத் திரும்பிப் பார்த்தவள்.. “வேறு என்ன வேண்டும்..?”என்று கேட்க.. அவளருகே வந்து விரல்களைப் பற்றி அருகிலிழுத்து நெற்றியில் முட்டியவன்.. “இப்போதைக்கு இந்தப் பூவே போதும்..”என்று கூற.. வெட்கத்தில் சிரித்தபடி ஓடிச் சென்றாள் மதுமதி.

வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக சென்று கொண்டிருப்பதாக இருவரும் நினைத்துக் கொண்டிருந்த வேளை.. அவர்களுக்கிடையேயான அன்பை அதிகரிக்கும் பொருட்டு அடுத்த சம்பவம் அன்றே நடைபெற்றது..

அன்று மதுமதியின் கல்லூரியில் மாணவர்கள் அனைவரும்.. கல்லூரிக் கட்டணத்தைக் குறைக்கச் சொல்லி.. நிர்வாகத்தை எதிர்த்து கல்லூரியின் முன்பு அமர்ந்து கோஷமிட்டபடி.. போராட்டத்தில் ஈடுபட்டு விட்டனர். அதனால் வகுப்புகள அனைத்தும் ரத்து செய்யப்பட்டு.. கல்லூரி இழுத்து மூடப்பட்டு விட்டது.. தொடக்கத்தில் வெறும் கூச்சல்களோடும்,கோஷங்களோடும் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம்.. நேரம் செல்லச் செல்ல வலுப்பெற்று.. கல்லூரியின் கண்ணாடி ஜன்னல்களை கல்லை விட்டு எறிவதிலும்.. கல்லூரிப் பேருந்தின் கண்ணாடியை உடைப்பதுமாக மாறி.. வன்முறையாகி விட்டது..

அதனால் கல்லூரியில் படிக்கும் பெண்களின் பெற்றோர்கள் அனைவரும் கல்லூரிக்குச் சென்றுத் தங்களதுப் பெண்களை அழைத்து வந்து கொண்டிருந்தனர்.. அன்று மாலை வழக்கம் போல்.. மதுமதியை அழைத்துச் செல்ல வந்த ஆதித்யன்.. கல்லூரியின் முன்பு கலவரம் நடப்பதைக் கண்டு அருகிலிருந்த கடைகளில் விசாரித்தான்... “காலை 11 மணியளவிலிருந்தே

இப்படித் தான் நடந்து கொண்டிருக்கிறது தம்பி.. பெண்களையெல்லாம் பெற்றொர்கள் வந்து அழைத்துச் சென்று விட்டனர் என்று தான் நினைக்கிறேன்..”என்று கடைக்காரர் கூறி விட.. மதுமதி என்ன ஆனாள் என்று பயம் வந்து விட்டது ஆதித்யனுக்கு..

எங்கே சென்று விட்டாள்.. ஒரு முறை ஃபோன் செய்து கூறியிருந்தால் உடனே வந்து அழைத்துச் சென்றிருப்பேனே... எதையேனும் கூறுகிறாளா.. முட்டாள்.. என்று மனதுக்குள் திட்டியவன்.. வீட்டிற்குச் சென்று விட்டாளா.. என்று ஃபோன் செய்து பார்த்தான்.. வீட்டில் எவரும் பதிலளிக்காமல் போக.. காரை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தான்.

முட்டாள் பெண்..! அவள் பாதுகாப்பாக சென்று வர வேண்டும் என்பதால் தானே.. கல்லூரிப் பேருந்தை நிறுத்தி விட்டு காரில் அழைத்துச் செல்கிறான் அவன்..?,இப்படி சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டாளே.. எங்கேயிருக்கிறாள்.. என்ன ஆனாள் என்பது புரியவில்லையே.. என்று புலம்பியவன்.. விடாமல் வீட்டிற்கு ஃபோன் செய்தபடியிருக்க.. எவரும் எடுக்கப்படாமல் போனது வேறு அவனது எரிச்சலை அதிகப்படுத்தியது..

வேகமாக வீட்டிற்குள் நுழைந்தவன்.. “மது...”என்றழைத்தபடியே சமையலறைக்குச் சென்றான்.. அவள் அங்கே இல்லாததைக் கண்டு அறைக்கு விரைந்தான். கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவன் அறைக்குள் அவள் இல்லாததைக் கண்டு பால்கனிக்குச் சென்றான்.. “ம்ஹ்ம்... ம்ஹ்ம்..ம்ஹ்ம்ம்..” என்று ஒரு சினிமாப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டுத் தலையைத் துவட்டியபடி நின்றிருந்தாள் மதுமதி..

கோபமாக வந்தவனுக்கு.. அவளது பாட்டைக் கேட்டு மேலும் எரிச்சலானது. “மதுமதி...”என்று அவன் கோபமாக அழைக்க.. திடுக்கிட்டுத் திரும்பியவள்.. அய்யோ பாட்டைக் கேட்டு விட்டானோ.. என்று அசடு வழிந்தபடி அவனது முகத்தை நோக்கினாள்.. அவளருகே வந்து நின்றவன் “எப்போது கல்லூரியிலிருந்து வந்தாய்..?”என்று வினவினான்.

“நான் அப்போதே வந்து விட்டேன்.. கல்லூரியில் இன்று ஸ்டிரைக்.. அதனால் வகுப்புகள் ரத்து செய்யப்பட்டு விட்டது.. என் தோழி ராதாவின் அப்பா அவளை அழைத்துச் செல்ல வந்தாரா.. நானும் அவளுடனே வந்து விட்டேன்..”என்று அவனது கோபத்தை அறியாமல் படபடவெனக் கூறி முடித்தாள் மதுமதி..

அவள் கூறியதைக் கேட்டு அவளை முறைத்தவன்... “கல்லூரியில் ஸ்டிரைக் என்று ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை..?,நான் வந்து அழைத்துச் சென்றிருக்க மாட்டேனா மது...?,யாரோ ஒருவருடன் வரத் துணிந்தவளுக்கு என்னிடம் தெரிவிக்க வேண்டுமென்று தோன்றவில்லையா..?, உன்

கல்லூரிக்குச் சென்று.. ஸ்டிரைக் என்று அறிந்து கொண்டதும்.. உன்னைக் காணாமல் எப்படி கலங்கிப் போனேன் தெரியுமா..?"என்றவன்.. அவள் துவாலையைத் திருகிக் கொண்டுத் தலை குனிந்தபடி நிற்பதைக் கண்டு.. அவள் கைப் பற்றித் தன் அருகிலிழுத்தான்.

அதுவரை திட்டித் தீர்த்தவன்.. திடீரெனக் கைப்பற்றி இழுப்பதைக் கண்டு அவள் விழி விரித்து அவனை நோக்க.. சட்டென அவளை இழுத்து இறுக அணைத்தான் அவன். இதைச் சற்றும் எதிர்பாராத மதுமதி முதலில் திகைத்துப் பின் அவன் அணைப்பில் ஒன்றிப் போக.. "ஸ்டிரைக் என்று தெரிந்ததும் உடனே எனக்கு ஃபோன் செய்திருக்கலாமல்லவா மது..?,"என்று வினவினான் அவன்.

எங்கே..?, அவன் அணைப்பை முழுதாக அனுபவித்துக் கொண்டிருந்த மதுமதிக்கு அவனது கேள்விக் காதில் விழவேயில்லை.. அவளைத் தன்னிடமிருந்து நிமிர்த்தியவன் "கேட்கிறேனே..?"என்று மீண்டும் வினவ.. நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்தவள்.. மீண்டும் அவன் தோளில் சாய்ந்து "இனி இப்படிச் செய்ய மாட்டேன்.. சா..சாரி"என்று முணுமுணுக்கத் தன்னோடு சேர்த்து மேலும் அவளை இறுக அணைத்தவன்.. அவளது ஈரக் கூந்தலில் முகம் புதைத்தான்.

சுற்றுப்புறம் மறந்து.. கால,நேரம் மறந்து.. தங்களையே மறந்து.. பூலோகத்தைத் தாண்டி வேறு ஒரு லோகத்தில் சஞ்சரிக்கத் துவங்கினர்.. நேரம் செல்லச் செல்ல அவளைத் தன்னுள்ளேயே புதைத்து விடுபவன் போன்றுத் தன் அணைப்பை இறுக்கினான் ஆதித்யன்.

சிறிது நேரத்தில் "மதிம்மா.."என்று பைரவியின் குரல் ஒலிக்கச் சட்டென விலகினர் இருவரும். தன் செயலை எண்ணித் திகைத்த ஆதித்யன்.. "சா..சாரி மது.."என்று கூற.. அவனுக்குப் பதிலளிக்காமல் தலை குனிந்தபடி நின்றிருந்த மதுமதியின் முகத்திலிருந்து எதையும் அறிந்து கொள்ள முடியாமல் போக.. தலையை அழுந்தக் கோதி.. வேறுபுறம் திரும்பினான். அவன் திரும்பியதும் கால் கொலுசு சலசலக்க அறையை விட்டு ஓடிச் சென்றாள் மதுமதி.

அறிவீனமாக இப்படி நடந்து கொண்டு விட்டேனே.. அவளது விருப்பத்தைக் கூட அறிந்து கொள்ளாமல்.. ச்ச.. இனி அவள் முகத்தில் எப்படி விழிப்பது.. என்றெண்ணியபடி.. சிகரெட்டை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தவனை.. சாப்பிட அழைப்பதற்காக வந்த மதுமதி.. "ம்க்கும்.."என்று தொண்டையைச் செறுமினாள்.. அவனிடமிருந்து பதிலற்றுப் போக.. மீண்டும் "சாப்பிட வாருங்கள்.."என்று கூறினாள்.. அதற்கும் அவனிடமிருந்து பதில் வராததைக் கண்டு.. அவன் தோளைப் பற்றினாள்.

அவள் கரம் தன் மீது பட்டதும் திடுக்கிட்டு எழுந்தவன் அவளை நிமிர்ந்து நோக்க.. "சாப்பிடச் செல்லலாமா..?"என்று வினவினாள். அவள் இயல்பாகத் தன்னிடம் உரையாடுவதை எண்ணி வியந்தபடி.. "வ..வருகிறேன்.."என்றவன் அவளைத் தொடர்ந்து சென்றான். அதன்பின் குமரிம்மாவிடம் பேசியபடியே அவள் உண்பதைக் கண்டபடியேத் தானும் உணவை முடித்தான் ஆதித்யன்.
அன்று இரவுத் தன் தலையணையின் மீது தலை சாய்த்தவனைத் திரும்பி நோக்கியவள்.. ஆச்சரியப் பார்வையைச் செலுத்த.. "என்ன..?"என்று புருவம் உயர்த்தினான் ஆதித்யன். ஒரு முறை விழியைத் தாழ்த்தி.. மீண்டும் அவனை அவள் நிமிர்ந்து நோக்க.. தன்னருகே கிடந்த அவள் கரத்தை இறுகப் பற்றியபடி விழி மூடினான்.

மறுநாள் விடுமுறை என்பதால்.. சற்றுத் தாமதமாகவேக் கண் விழித்த மதுமதி.. குளித்தபின்பு குமரிம்மாவின் அறைக்குச் சென்றாள். டாக்டரின் உதவியுடன் கையை அசைக்க முயன்று கொண்டிருந்தவரைக் கண்டபடியே அறை வாசலில் நின்றிருந்தவள்.. டாக்டர் நகர்ந்ததும் அவரருகே சென்றாள்..

"எப்படியிருக்கிறது குமரிம்மா..?"என்று வினவியபடியே அவரது கரத்தை வருடியவளிடம்.. "வலி உயிர் போகிறது மதி.."என்று அவர் கூற.. வருத்தமுற்றவள்.. "சரியாகி விடும் குமரிம்மா.."என்று அவரது காலடியில் அமர்ந்தாள். அன்றைய நாள் முழுதும் தன் போக்கில் சுற்றித் திரிபவளைக் கவனித்தவண்ணம் வலம் வந்து கொண்டிருந்த ஆதித்யன்.. மாலைச் சிற்றுண்டித் தயாரித்துக் கொண்டிருந்தவளின் அருகே சென்று.. "மது.. இன்று நானும் உனக்கு சமையலில் உதவி செய்கிறேன்.."என்று கூறினான்.

"சமையலில் உதவியா..?,நீங்களா..?"எனக் கூறிக் கலகலவெனச் சிரித்த மதி.. "எங்கே இந்த அஞ்சறைப் பெட்டியில் மிளகு எது என்று கூறுங்கள் பார்ப்போம்.."என்று கூற.. "அ..அது.. "என்று விழித்தவன்... "மது..அவ்வளவு கஷ்டமான வேலைகளெல்லாம் வேண்டாமே... என்னால் முடிந்த வேலை ஏதேனும் கூறேன்.."என்றான்.

மேலும் சிரித்த மது.. "நீங்கள் ஒன்றும் செய்யாமல் இருப்பதே எனக்குப் பெரிய உதவி தான்.."என்று கூற.. "ஏய்.. என்னை என்னவென்று நினைத்துக் கொண்டாய்..?,சமையலைப் பெற்று எதுவும் தெரியாதென்றா.?,சரி உனக்கும் எனக்கும் ஒரு போட்டி வைத்துக் கொள்ளலாம்.. உன்னோடு சேர்ந்து நானும் இந்த உருளைக் கிழங்கை நறுக்குகிறேன்.. யார் முதலில் முடிக்கிறார்களாலென்றுப் பார்ப்போமா..?"என்றவன் ஒரு உருளைக் கிழங்கை எடுத்து நறுக்கத் துவங்கினான்.

சீக்கிரம் முடிக்கிறேன் என்கிற பெயரில் அவன் வேக வேகமாக நறுக்குவதைக் கண்ட மதுமதி.. "பார்த்து.. மெதுவாக.."என்று கூற.. "எனக்கு இதெல்லாம்

சாதாரணம்..”என்றவன் அடுத்த நொடியே கையை நறுக்கிக் கொள்ளப் பார்க்க.. வேகமாக அவனது கையிலிருந்தக் கத்தியைப் பற்றினாள் மதுமதி.

“கையை நறுக்கியிருந்தால் என்னவாகியிருக்கும்..?,நீங்கள் வைத்த போட்டியெல்லாம் போதும்.. வெளியே செல்லுங்கள்..”என்று அவனது கரத்தைப் பற்றி வெளியே தள்ளினாள். “மது.. ஒரே ஒரு உருளைக் கிழங்கு மட்டும்.. ப்ளீஸ்..”என்று அடம் பிடித்தவனை “ம்ஹ்ம்.. வேண்டவே வேண்டாம்.. நீங்கள் நிச்சயம் கையை நறுக்கிக் கொள்வீர்கள்.. முதலில் வெளியே செல்லுங்கள்..”என்று அவன் தோளைப் பற்றி வெளியே அனுப்பினாள்.. “மது.. நான் போட்டியில் வென்று விடுவேன் என்று தானே இப்படி என்னை வெளியே தள்ளுகிறாய்..?”என்று அவன் கூற.. “இதோடா..”என்று இடுப்பில் கை வைத்து அவனை முறைத்தாள் மதுமதி.

அவன் கூறிய அன்றிலிருந்து புடவை மட்டுமே உடுத்தி வரும் மனைவியை அவன் பெருமையும்,மையலுமாய் நோக்க... அவன் பார்வையைக் கண்டு என்னவென்று வினவியவளின்.. இடையைப் பற்றித் தன்னருகே நிறுத்தியவன்... “நான் அழகாயிருப்பதாகக் கூறியதால் தானே.. சேலை உடுத்துகிறாய்..?”என்று வினவ.. இடையில் பதிந்த அவனது கரங்கள் ஏற்படுத்திய கூச்சத்தில்.. உடல் முழுதும் சிவந்து விட.. அவனது விழிகளைச் சந்திக்காமல்.. அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தியவளின் முகத்தைப் பற்றித் தன்புறம் திருப்பியவன்.. வெட்கத்தில் ரோஜா நிறம் கொண்டிருந்த அவள் கன்னங்களை வருடி.. அழுந்த முத்தமிட்டான்.

அவன் இதழ்கள் தன் கன்னத்தில் படிந்ததை நம்ப முடியாமல்.. அவள் தன் பெரிய விழிகளை அகல விரிக்க.. அவள் முகத்தை மேலும் அருகே இழுத்து கண்,கன்னங்களென மாறி மாறி முத்தமிட்டான். அவன் மேல் காதல் கொண்ட நாளிலிருந்து.. அவனது முத்தத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த மதுமதிக்கு.. இன்று அது நடந்தே விட்ட போது.. கண் மூடி அதை அனுபவித்து மயக்கத்திலேயே ஆழ்ந்து விடத் தோன்றியது.. மோன நிலைக்குச் சென்று விட்ட மனைவியைத் தன்னோடு சேர்த்து அவன் அணைத்துக் கொள்ள.. தன்னிலை மறந்து அவன் மேல் சாய்ந்து விட்டாள் மதுமதி.

கடிகாரம் கொடுத்த ஒலியில் சுயநினைவிற்கு வந்தவள்.. அவனை விட்டு விலகி ஓடிச் சென்று விட.. ஆதித்யனுக்குத் தான் தன்னை கட்டுப் படுத்திக் கொள்வது சிரமமாகிப் போனது.. இரவு உணவிற்குப் பின்னும் அறைக்கு வராதவளைச் சபித்தபடி.. ஆதித்யன் உறங்கிப் போக.. வெகு நேரம் கழித்து அறைக்குள் நுழைந்தவள்.. அவன் உறங்கி விட்டதைக் கண்டுத் துணிந்து அவனருகே குனிந்து அவன் கன்னத்தில் இதழ் பதித்து விட்டுப் பின்.. தான் செய்த செயலை எண்ணி... வெட்கம் கொண்டவளாக மகிழ்ச்சியுடனே உறங்கினாள்..

அறியாத வயதிலிருந்தே அவன் மீது கொண்டிருந்த நேசம்.. வயது வந்த பின் காதலாக உருவகம் பெற்ற அந்த நேசம்.. கை கூடி விட்டதாகவேத் தோன்றியது அவளுக்கு. ஆனால் அவளது மகிழ்ச்சியையும்,கர்வத்தையும் முறிக்குமளவிலான சம்பவம் அடுத்த இரண்டு நாட்களில் நடந்தது.

மறுநாள் காலைப் பரீட்சை என்பதால்.. ஆதித்யனுக்காகக் காத்திருக்காது... விரைவிலேயே தோழியுடன் கிளம்பி விட்டாள் மதுமதி. காலை கண் விழித்த ஆதித்யன் மதுமதியை அருகில் காணாததைக் கண்டுக் கீழே சென்றான். இன்று பரீட்சை இருப்பதால் அவள் கல்லூரிக்குக் கிளம்பி விட்டதாகவும்.. அவனிடம் கூறும் படிச் சொல்லியதாகவும் குமரி தெரிவிக்கக் கோபமாக வந்தது அவனுக்கு.. அவளைக் காணாமல் அலுவலகத்தில் வேலை எப்படி ஓடும் என்று சலித்துக் கொண்டவன்.. அலுவலகத்திற்குப் புறப்பட்டான்.

அன்று மாலை மனைவியை அழைப்பதற்காக கல்லூரிக்குச் சென்றவன்... காரை நிறுத்தி வைத்து விட்டு.. அவளுக்காகக் காத்திருந்தான்..



## அத்தியாயம்- 17



**அறிந்து கொண்டேன்..**
**உன் மீதான என் நேசத்தை..**
**என் உயிருள்ள வரைத் தொடரப் போகும்**
**நம் பந்தத்தை**..!

**கா**ருக்குள் காத்திருந்த ஆதித்யன்.. கல்லூரி வளாகத்தைப் பார்த்தபடி அமர்ந்திருக்க.. சிறிது நேரத்தில்.. அவனது காத்திருப்பிற்குப் பலனாக.. அவளது மனைவி காட்சி தந்து அவன் கண்களைக் குளிர்வித்தாள். புத்தகத்தை அணைத்தபடி வேக நடையுடன் வருபவளை அவன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்க... மதுமதியைத் தொடர்ந்து பின்னால் வந்த ஒரு இளைஞன் “மதுமதி..”என்றழைத்து அவளை நிறுத்தினான்.

யாரென்று திரும்பிப் பார்த்தவள்.. அந்த இளைஞனைக் கண்டதும் முகம் சுழிக்க.. அவனோ அதையெல்லாம் கண்டுகொள்ளாமல்.. “மதுமதி.. நான் உன்னை விரும்புவதாகக் கூறி இரண்டு வருடங்களாக உன் பின்னே அலைந்து வருகிறேன்.. நீ எனக்கு இதுவரை எவ்வித பதிலும் கூறவேயில்லை.. இப்போது நான் என் தந்தையின் எஸ்டேட்டை நிர்வாகம் செய்து கொண்டு ஒரு நல்ல நிலையில் இருக்கிறேன்.. என்னை ஏற்றுக் கொள்வாயா..?”என்று வினவினான்.

அவனை எரிச்சலுடன் நோக்கியவள்.. “என்ன உளறுகிறீர்கள் குமார்..?, எனக்குத் திருமணமாகி விட்டது.. நான் இப்போது வேறு ஒருவரின் மனைவி. என்னிடம் இப்படிக் கேட்பதற்கு வெட்கமாக இல்லை..?”என்று சற்றுக் கோபத்துடனே வினவ.. “அது ஒரு நெருக்கடியான் சூழ்நிலையில் நடந்த ஒரு கட்டாயத் திருமணம் தானே..?,நீ எதற்காக அப்படியொரு பந்தத்தில் சிக்கிக் கொண்டு அவதிப் பட வேண்டும் மதுமதி..?,?”என்று வினவ.. கோபமாக அவனை நோக்கியவள்.. “முட்டாள்தனமாக உளறிக் கொண்டிராமல் உன் வேலையைப் பார்.. இனியொரு முறை என் பின்னே சுற்றினாயானால் மரியாதை கெட்டு விடும்..”என்று கூறியவள் விறுவிறுவென நடந்து செல்ல.. “மதுமதி... நான் சொல்வதைக் கேள்.. நான் உன்னை விரும்புவதைத் தயவு செய்து புரிந்து கொள்..”என்றுக் கூவியபடியே ஓடி வந்தவன்.. மதுமதி காரின் அருகே செல்வதைக் கண்டுப் பேச்சை நிறுத்தினான்.

மதுமதியைக் கண்டு ஆர்வத்துடன் தலை நிமிர்த்திய ஆதித்யனின் காதுகளில்.. குமார் கூறிய கடைசி வார்த்தைகள் விழுந்து முகத்தைச் சுருக்க வைத்தது. யாரிவன்..? என்று அவன் யோசிக்கையில்.. மதுமதியும் காரில் வந்து ஏறி விட.. அவளைத் திரும்பி நோக்கினான். காலை விரைவிலேயே எழ நேர்ந்ததில்.. சோர்வாக இருக்க... காரில் ஏறியதும்.. கண்களை மூடிக் கொண்டாள் மதுமதி.. காலையிலிருந்து இவளது தரிசனத்திற்காகக் காத்திருக்கும் ஒருவனை சட்டை செய்யாமல்.. அவள் போக்கில் உறங்குகிறாள் என்று கோபம் வந்தாலும்... அவளை ஒரு முறை அழுத்தமாக நோக்கி விட்டு இறுகிய முகத்துடனே காரைச் செலுத்தினான். யார் அந்த இளைஞன் என்று அவனும் கேட்கவில்லை.. யாரவன் என்று அவளும் கூறவில்லை.

வீட்டிற்கு வந்த பின் “கா.ஃபி கொண்டு வரட்டுமா..?”என்றவளிடம் “வேண்டாம்..” என்ற ஒற்றைச் சொல்லோடு முடித்துக் கொண்டு அவன் சென்று விட.. அவன் குரலில் இருந்த வித்தியாசத்தை மதுமதி உணரவேயில்லை. ஒற்றை வார்த்தையில் அவன் பதில் கூறுவது ஒன்றும் புதிதல்லவே. அதனால் வேறுபாடாக ஏதும் தோன்றவில்லை அவளுக்கு. இந்தச் சில நாட்களாகவே.. அவளையே நினைத்து.. கனவிலும்,நனவிலும் அவளிடமே பேசி.. மனைவியுடன் நன்றாகவே நெருங்கி விட்ட ஆதித்யனுக்குத் தான் அவள் ஒரு வேளை பேசாமல் இருந்தது கூட மிகப் பெரியக் குற்றமாகத் தோன்றியது.

தன்னறைக்கு வந்து.. சாய்வு நாற்காலியில் அமர்ந்தவனுக்கு.. மதுமதியிடம் என் காதலைப் புரிந்து கொள் என்று கெஞ்சிய இளைஞனின் முகமே வந்து போனது. யார் அவன்..?, திருமணமான ஒரு பெண்ணிடம் காதலிப்பதாகக் கூறுபவன்..?, ஒரு வேளை திருமணத்திற்கு முன்பிருந்தே அவளை நேசிப்பவனா..?, இருக்கலாம்!, அவர்களில் திருமணம் ஊரைக் கூட்டி.. அனைவரின் முன்பும் கோலகலமாக நடை பெற்ற ஒன்றல்லவே!

உனக்கு ஆதித்யனைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமா என்று அவளிடமோ.. மதுமதியைத் திருமணம் செய்து கொள்வதில் உனக்கு விருப்பமா என்று அவனிடமோ.. யாரும் வந்து கேட்கவில்லையே.. ஒரு நெருக்கடியான சூழ்நிலையில்.. பல பிரச்ச்னைகளுக்குத் தீர்வாக.. அவசர அவசரமாக நடைபெற்றத் திருமணம்.. அப்படியே இருவரில் ஒருவருக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லாது இருந்திருந்தாலும்.. அதை வெளிப் படுத்த முடியாத அளவிற்குக் கடினமான சூழ்நிலை...

ஒருவேளை.. ஒருவேளை.. மதுமதியும் அந்த இளைஞனை விரும்பியிருப்பாளோ..?, அவளது விருப்பமில்லாமல் நடைபெற்றத் திருமணமோ..? என்றெண்ணியவனுக்குத் தலை முதல் கால் வரை வேதனை பரவி.. அவனைத் தடுமாற வைத்தது.. இருக்காது! நிச்சயம் அப்படி இருக்காது!

மதுமதி யாரையும் விரும்பியிருக்க மாட்டாள்..! அப்படி விரும்பியிருந்தால் நிச்சயம் இந்தத் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பாள்..

ஆனால்.. அவளது விருப்பத்தைப் பற்றி அறிந்து கொள்ள யாரும் முயற்சித்தார்களா என்ன??, இந்தத் திருமணத்தில் உனக்கு சம்மதமா மதி என்று அவனேனும் அவளிடம் வினவினானா..?, இல்லை! அப்போதெல்லாம் கேட்காமல் விட்டு விட்டு.. இப்போது பதறுவதால் என்ன பயன்..?, என்று சிந்தித்தவனுக்கு.. மதுமதியின் மீதுக் கோபம் பொங்கியது. எப்பேர்ப்பட்ட சூழ்நிலையாய் இருந்தால் என்ன?,ஒருவனிடம் மனதை அளித்து விட்டவள்.. எப்படி வேறு ஒருவனுடனானத் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்தாள்..?

வெகு நேரமாக யோசனையில் ஆழ்ந்திருந்தவனை பைரவி வந்து சாப்பிட அழைக்க.... எழுந்து சென்றான். மதுமதிக்குப் பரீட்சை இருப்பதால் உணவு முடிந்ததும் அவள் படிக்கச் சென்று விட்டதாக அவர் கூற.. எதுவும் பேசாமல் உண்டு முடித்தான். உணவு முடிந்து மீண்டு வந்தமர்ந்தவனுக்கு.. மதுமதியின் மீதுத் தான் கொண்டக் கோபம் தவறென்று தோன்றியது.

அவள் நேசித்ததில் என்ன தவறிருக்கிறது..?, தந்தையையும் இழந்து.. ஆதரவற்று நிற்பவள்..எப்படித் தன் மனதிலிருப்பதை வெளிப் படுத்துவாள்..?, மதுமதி ஒன்றும் லேகாவைப் போல் துடிப்பானப் பெண்ணில்லையே..! இயல்பிலேயே அதிகம் பேசத் தெரியாதவள்.. அமைதியானவள்.. தன் மனதின் எண்ணங்களை இதுவரை அவளாக வாய் திறந்து கூறியதேயில்லை.. அப்படியிருக்கையில்... காதலித்தவனைப் பற்றித் திருமணத்தின் போது ஏன் கூறவில்லையென்று அவளிடம் கோபித்துக் கொள்வதில் நியாயமேயில்லை.

யாருமற்று அநாதையாகத் தனித்து நின்று விட்டவள்.. குமரிம்மா வற்புறுத்திய காரணத்தினால்.. மறு பேச்சின்றி ஒப்புக் கொண்டாள் போலும். இது தெரியாமல்.. அவன் அவளிடம் நெருங்கிப் பழகி.. மனைவி எங்கிற உரிமையை எடுத்துக் கொண்டு அவளை முத்தமிட்டு... ச்ச, அவளுக்கே பிடிக்காமல் போனதால் தான்.. அந்தச் சம்பவம் நடந்ததிலிருந்துத் தன் முகம் பார்க்காமல் ஒளிந்து கொள்கிறாள் போலும்!.. காலையில் அவன் முகம் பாராமல் அவள் கல்லூரிக்குச் சென்றது.. மாலை அவனிடம் ஒரு வார்த்தைப் பேசாமல் கண் மூடிக் கொண்டது.. உணவின் போது கூட அவள் முகம் காட்டாதது.. அனைத்தும் அவளுக்கு அவன் முகத்தில் விழிக்க விருப்பமில்லையென்பதைப் பட்டவர்த்தனமாகக் காட்டியது.

அவளது பாராமுகமும்,விலகலும் ஆதித்யனுக்கு வேதனையையும் மன உளைச்சலையும் தந்தது. ஆனால் தவறு அவன் மீது தான்.. சின்னப் பெண் அவள்.. அவளுடையை விருப்பத்தை அறிந்து அதற்கேற்றார் போல் வாழ வைப்பேனென்று நண்பனிடம் பெரிதாக வசனம் பேசியவன்.. அவளது

அழகிலும், மென்மையான நடத்தையிலும் மயங்கித் தன்னையே இழந்தது முட்டாள் தனம் தான்!

அவளை நன்றாகப் படிக்க வைத்து அவளது முன்னேற்றத்துக்கு வழி வகுப்பேன் என்றெல்லாம் கூறியவன்.. அவையனைத்தும் மறந்து.. அவளுடன் சல்லாபித்துக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்??, அவன் பெரிய குற்றமாகக் கருதிய வயது இடைவெளியையும் மறந்து போனானே..! ஏதுமறியாத சிறு பெண்ணிடம்.. தனது தாகத்தைத் தீர்த்துக் கொள்ளத் துணிந்திருக்கிறானே...

தான் தெய்வமாக மதிக்கும் தன் அன்னையின் முன்புத் தன் மனைவியாக அவளை ஏற்றுக் கொண்டு.. அவள் கழுத்தில் தான் கட்டியத் தாலியை மறந்து இப்படியெல்லாம் முட்டாள்தனமாகத் தன் போக்கில் எண்ணிக் கொண்டு ராத்தூக்கத்தை கெடுத்துக் கொண்ட ஆதித்யன் மறுநாள் மிகப்பெரிய அறிவீனமானக் காரியத்தைச் செய்தான்.

மறுநாள் மதுமதிக்கு முன்பாகவேக் கிளம்பிச் சென்று விட்ட ஆதித்யன்.. மதுமதியின் பின்னே சுற்றிக் கொண்டுத் திரிந்த அந்த இளைஞனைப் பற்றி விசாரித்தான். அவன் பெயர் குமார் என்றும்.. அவன் மதுமதியை விட இரண்டு ஆண்டுகள் மூத்தவன் என்றும்.. அந்த வட்டாரத்தில் தேயிலை எஸ்டேட் வைத்திருக்கும் பெரிய புள்ளி ஒருவரின் மகன் என்பதும் அவனுக்குத் தெரிய வந்தது..

சரி தான்! அவளை விட இரண்டே ஆண்டுகள் மூத்தவன்..! சரியான வயது இடைவேளை... மதுமதிக்கு எல்லா வகையிலும் ஏற்றவன் தான்.. படிப்பை முடித்து விட்டுத் தந்தையின் தொழிலைக் கவனித்து வருகிறான்.. நிச்சயம் அவனுடனான எதிர்காலம் மதுமதிக்கு நன்றாக அமையும். என்று நினைத்தான். மதுமதியின் இதைப் பற்றிப் பேச வேண்டும்.. தாலி கட்டி விட்ட ஒரு காரணத்தினால் அவள் அவளது ஆசைகளையும்,நேசத்தையும் களைந்தெறிந்து விட வேண்டிய அவசியமில்லையென்பதைக் கூற வேண்டும்..

அதன் பின்... அதன் பின்... அவள் விரும்பினால்.. குமாருடனே அவளைச் சேர்த்து வைத்து விட வேண்டும்.. என்று நினைத்தவனுக்கு இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது போல் வலித்தது. மதுமதி.. அவனுடைய மதுமதி.. அவனது மனைவி.. வேறு ஒருவனை விரும்பினால் என்பதையே அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.. அவளுக்காக.. அவளது விருப்பத்திற்காக மட்டுமே எந்தக் கணவனும் துணிந்திராத இப்படி ஒரு காரியத்தில் ஈடுபட்டிருக்கிறான்.

மதுமதியின் புன்னகை நிறைந்த முகம்.. கண் முன்னே வந்து சென்று அவனை இம்சித்தது.. இனி அவள் தனக்கு இல்லையென்பது போல் நினைத்துக்

கொண்டவனுக்குத் தன்னை மீறிக் கண்களில் நீர் சுரந்தது. இல்லையில்லை, பல வருடங்களாக அந்த வீட்டிற்குச் சேவை செய்து.. அவன் செல்ல வேண்டிய காரியத்திற்குத் தான் செல்கிறேன் என முன்னால் வந்துத் தன் உயிரையே பறி கொடுத்த அன்பரசுவிற்காகவும்.. தன்னால் ஒரு அவப் பெயரைச் சுமந்து கொண்டு.. தன் விருப்பத்தைக் கூட வெளிப் படுத்த முடியாமல் தவித்துக் கொண்டு திரியும் மதுமதிக்காகவும்.. இந்த முடிவைத் துணிந்து எடுத்து விட்டான் ஆதித்யன்.

தன் போக்கில் சிந்தித்துக் கொண்டு அலுவலகத்தில் அமர்ந்திருந்தவனை செல்ஃபோன் அழைக்க... எடுத்து "ஹலோ.."என்றான்.. "ஹலோ.. நான்.. நான் மதுமதி பேசுகிறேன்.. எனக்குப் பரீட்சை முடிந்து விட்டது.. வீட்டிற்குச் செல்ல வேண்டும்.. நீ..நீங்கள் வருகிறீர்களா..?"என்று மதுமதியின் குரல் தயங்கித் தயங்கி ஒலித்தது.. எப்போதும் போலல்லாது.. அன்று மனைவியின் குரல் அவன் உயிர் வரை ஊடுருவிச் சென்றது. பதிலற்றுக் கண் மூடி அதை அனுபவித்தவனை மதியின் குரல் நடப்பிற்கு அழைத்து வந்தது.

"இ..இன்னும் அரை மணி நேரத்தில் வருகிறேன்.."எனக் கூறி அழைப்பைத் துண்டித்தவன்.. இப்போதே அவளிடம் இதைப் பற்றிப் பேசி விட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு காரை எடுத்துக் கொண்டுப் புறப்பட்டான். கல்லூரி வாசலில் அவனுக்காகக் காத்திருந்த மதுமதி.. அவனைக் கண்டதும் புன்னகையுடன் அருகே வர.. மனைவியின் முகத்தைக் கண்டவனுக்கு.. அவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டுமென்கிற வேகம் பிறந்தது.

ஸ்டியரிங் வீலை இறுகப் பற்றித் தன்னை அடக்கியவன்.. பார்வையை வேறு புறம் திருப்பினான். அவனைக் கண்டதும் ஓடி வந்துக் காரில் ஏறியவள்.. அவன் புறம் திரும்பி.. "இன்று காலையிலேயே பரீட்சை முடிந்து விட்டது.. மதியம் விடுமுறை.. இனி இரண்டு நாட்களுக்கு விடுமுறை தான்.. நிம்மதியாக இருக்கலாம்.."எனக் கூறிச் சிரித்தாள். அவள் கூறியதற்கு.. அவனிடமிருந்து ஒரு சின்ன முறுவலைக் கூடக் காணவில்லயே என்றெண்ணியவள்.. ஏதேனும் கூறுவானா.. என்றுத் திரும்பித் திரும்பி அவன் முகத்தைப் பார்த்து விட்டுப் பின் பதிலற்றுப் போக.. அமைதியாகி விட்டாள்.

கார் சீராகத் தன் பாதையில் சென்று கொண்டிருக்க.. இடையில் ஏரியின் அருகில் வண்டியை நிறுத்தியவன்.. மதுமதியின் புறம் திரும்பி "உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும் மதுமதி.. இறங்குகிறாயா..?"என்றான். அவனது குரலும், தீட்சண்யமானப் பார்வையும் வயிற்றில் ஒரு பயப் பந்தையே உருவாக்கியது.. ஏன்.. எதைப் பற்றி.. என்று மனதினுள் தோன்றினாலும்.. வேறு வழியின்றி.. வண்டியை விட்டுக் கீழே இறங்கினாள்...

ஏரியின் அருகே குளிர்ந்தக் காற்று.. ஏற்கனவே சில்லிட்டுப் போயிருந்தவளை.. மேலும் நடுங்க வைக்க.. சேலையின் மீதுப் போர்த்தியிருந்த சால்வையை இறுகப் பற்றினாள்.. என்னவென்று குழம்பிப் போய்த் தன் முகம் பார்ப்பவளின் கண்களில் தெரிந்த அறியாமை.. அவனை மேலும் துன்பத்தில் ஆழ்த்த.. அவள் முகத்திலிருந்துப் பார்வையை வேறு புறம் திருப்பினான்.

பின் "ம்க்கும்.."என்றுத் தொண்டையைச் செறுமிக் கொண்டவன்.. "முழுச் சம்மதத்துடன் தான் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாயா மதுமதி...?" என்று வினவினான்.. ஏன் திடீரென்று இப்படியொருக் கேள்வியைக் கேட்கிறான்..?, என்று எண்ணமிட்டவள்.. புரியாமல் அவனை நிமிர்ந்து நோக்க.. அவளது பார்வையைக் கண்டு கொண்டவன்.. "ஹ்ம், நம் திருமணம் நம்முடைய விருப்பத்தைக் கேட்டா நடைபெற்றது.. என்று தானே யோசிக்கிறாய்..?,நான் இப்போது கேட்கிறேன் மதுமதி.. உனக்கு இந்தத் திருமணத்தில் சம்மதம் தானா..?"என்று வினவினான்.

அப்போதும் புரியாமல் குழம்பிய மதுமதி.. "ச..சம்மதம் தான்.. ஏ..ஏன் கேட்கிறீர்கள்..?"என்றுப் பாதி உள்ளே சென்று விட்டக் குரலில் வினவினாள்.. எங்கே எனக்கு இந்தத் திருமணத்தில் சம்மதமில்லை மதுமதி.. என்று கூறி விடுவானோ எனப் பயம் வந்து விட்டது அவளுக்கு.. இந்தச் சில நாட்களாகத் தானே.. மற்றதை மறந்து இருவரும் மகிழ்ச்சியாக வாழ்வதாக அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள்..!, காதல் வாழ்வுக் கை கூடி விட்டதாகவே எண்ணினாளே..! அவன் முத்தமிட்டதையும்,அவனது அணைப்பையும் எண்ணித் தானே அவள் தினமும் இரவு உறங்குவது! இப்போது போய்... முட்டாள்தனமாகப் பேசுகிறான்.. கோபம்,எரிச்சல் என்றால் என்னவென்று கூட அறியாத மதுமதி.. எரிச்சலுடன் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

"வேண்டாம் மதுமதி.. இதற்கு மேலும் நீ உண்மையை என்னிடம் மறைக்க வேண்டாம்.., என்னால் நீ இதுவரைப் பட்ட பாடும்,கஷ்டமும் போதும்... நீ விரும்பிய அந்தக் குமாருடனே உன் வாழ்வைத் தொடரலாம்.. இனியும் உன் எதிர்காலத்திற்குத் தடையாக இருக்க நான் விரும்பவில்லை..."என்று அவசரமாகக் கூற.. முற்றிலும் குழம்பிப் போய் நின்ற மதுமதி.. குமாரா..?, அவன் எங்கே வந்தான்..?, நான் எதற்காக அவனுடன் வாழ்வைத் தொடர வேண்டும்..? என்றெண்ணியவள்.. "என்ன கூறுகிறீர்கள்..?, எனக்குப் புரியவில்லை.."என்று கூறினாள் அவள்.

"நீ அந்தக் குமாரை நேசித்தாய் தானே..?, சந்தர்ப்ப சூழ்நிலையால் தானே நீங்கள் இருவரும் பிரிய நேர்ந்தது..?,இனியும் உனக்கு விருப்பமற்ற இந்தப் பந்தத்தை நாம் தொடர வேண்டாம் மதுமதி... நீ படிப்பை முடித்ததும் நானே உன்னை அவனுடன் சேர்த்து..."என்று அவன் அவனதுப் பேச்சை முடிப்பதற்குள்.. மதுமதியின் கரம் அவன் கன்னத்தைப் பதம் பார்த்திருந்தது.

ஏரியின் தண்ணீர் ஓசையும், காலை உரசிச் சென்ற சருகுகள் எழுப்பிய சத்தமும், விர்ரென்று வீசியக் காற்றின் ஒலியும் மட்டுமே அந்த இடத்தில் அந்த நிமிடம் ஒலித்துக் கொண்டிருந்தது. மதுமதித் தன்னை அடித்தாளா...?,என்ன நடந்தது இப்போது.. என்று உணர்ந்து கொள்ள முடியாத ஆதித்யன்.. நிமிர்ந்து அவளை நோக்க.. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதற்கேற்ப.. முழுக் கோபம் ஜொலிக்க.. அவனை உக்கிரத்துடன் நோக்கிக் கொண்டிருந்தாள் மதுமதி..

கன்னத்தில் கையை வைத்து அவன் வியப்புடன் அவளை நோக்க.. "கட்டிய மனைவியிடம் இப்படியொருக் கேள்வியைக் கேட்பதற்கு வெட்கமாக இல்லை உங்களுக்கு..?,நான்.. நான் அவனை நேசித்தேனா..?, யார் கூறினார்கள் உங்களிடம்..?, அவன் கூறினானா..?, அவன் கூறினால் நீங்கள் நம்பி விடுவீர்களா..?,என் மேல் சந்தேகப் பட எப்படி உங்களுக்கு மனம் வந்தது..?, நான்.. நான்.. விருப்பமில்லாமல் இந்தப் பந்தத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேனா..?, உங்களுக்கு வேண்டுமானால்.. இந்தத் தாலியின் மீது மதிப்பும்,மரியாதையும் இல்லாமலிருக்கலாம்.. என்னைப் பொறுத்தவரை.. யாருமற்ற அநாதையாகத் தவித்துக் கொண்டிருந்த எனக்கு மறுபிறவி அளித்ததே இந்தத் தாலி தான்.. என் உயிரை எனக்கு மீட்டுக் கொடுத்தப் புனிதம்.. இதை..இதைக் கழட்டியெறிந்து விட்டு.. நான் வேறு ஒருவனுடன் வாழ வேண்டுமா..?. மனசாட்சியற்று எப்படி இதைக் கேட்க முடிந்தது உங்களால்..?, உங்கள் வாழ்விற்கு நான் தடையாக இருப்பதாக நீங்கள் எண்ணினால்.. எப்போது வேண்டுமானாலும் உங்களைப் பிரிந்து செல்ல நான் தயாராக இருக்கிறேன்.. ஆனால்.. என்னைப் பற்றியோ.. நான் யாருடன் வாழ வேண்டும் என்பதைப் பற்றியோ.. முடிவு செய்யும் உரிமை உங்களுக்கு இல்லை..." என்று அவனது சட்டையைப் பற்றி உலுக்கிக் கண்ணீரும், கோபமுமாய்.. ஆங்காரத்தில் கூச்சலிட்டவள்.. அவனை விட்டு விலகி விறுவிறுவென நடந்து சென்றாள்..

சிறிது தூரம் சென்றதும் நின்றவள்.. அவன் புறம் திரும்பி... "என் உயிரான.. என் தந்தை.. என்னை விட்டுச் சென்ற போது கூட.. உங்கள் அருமை அத்தைப் பெண்.. என்னை அவமானப் படுத்தி அவப்பெயரை ஏற்படுத்திய போது கூட எனக்கி வலிக்கவில்லை.."என்றவள் தொடர்ந்து "ஆ.. ஆனால் இ..இப்போது..." என்றதோடு.. முடித்துக் கொண்டு கண்ணீருடன் ஓடிச் சென்றாள்..

அவள் சென்ற பின் அதிர்ந்து நின்று விட்ட ஆதித்யனுக்கு.. மகிழ்ச்சியும், வருத்தமும் ஒரு சேர எழுந்தது. மகிழ்ச்சி... அவனது மனைவி... முழுச் சம்மதத்துடன் மனமுவந்து தான் அந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தாள் என்பதும்.. அவளது மனதில் அவனைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை

என்பதற்காகவும்.. வருத்தம்.. தேவையில்லாமல்.. அறிவீனமாக நடந்து கொண்டு அவளைக் கஷ்டப்படுத்தி விட்டதற்காக...

ஆனாலும்.. மனதில் பொங்கி எழுந்த மகிழ்ச்சி ஊற்று.. அந்த வருத்தத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டது.. சிறுவன் போலத் துள்ளிக் குதித்து.. தனக்கருகே இருந்த மரத்தின் கிளைகளை ஆட்டிப் பூக்களை உதிர வைத்தவன்.. ஏரியின் படிக்கட்டில் சாய்ந்து விட்டான்..

அவனது மதுமதி.. அவனுக்கே தான் சொந்தம்.. மகிழ்ச்சியின் உச்சகட்டம்.. தன் மனதிலிருக்கும் நேசத்தைத் தான் நேசிப்பவரின் மனதில் காண்பது தான்.. நேசம்! ஆம்... ஆதித்யன் மதுமதியின் மீதுக் காதல் கொண்டுப் பல நாட்களாகி விட்டது.. சொல்லப் போனால்.. எப்போதுமே அவனுக்கு அவள் மீது தனிப் பாசமும்.. உரிமையும் இருந்திருக்கிறது.. அவள் மகிழ்ச்சியில், துக்கத்தில் பங்கு கொண்டு... அவளதுத் தேவைகளைக் கவனித்து.. எப்போதும் அவன் மனதில் அவளுக்கென ஒருத் தனியிடம் இருந்திருக்கிறது.. அப்போதெல்லாம்.. மதுமதியின் மீதுத் தனக்கிருப்பதுக் காதல் தான் என்று ஏன் அவனுக்குப் புரியவில்லை...?

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் சிறு பெண்.. தன்னை விடப் பல ஆண்டுகள் சிறியவள் என்பதால்.. அவளிடம் தன் அடி மனதிலிருந்த எண்ணங்களை அவன் வெளிப் படுத்தவில்லை போலும்.. எங்கே! அந்த எண்ணங்களையெல்லாம் அவனே உணர்ந்து கொண்டிராத போது எப்படி அவளிடம் வெளிப் படுத்துவது..?

இதற்கெல்லாம் தீர்வாக.. கௌஷிக்கின் வரவு.. மதுமதியின் மீது ஆதித்யன் வைத்திருந்த நேசத்தை, ஆசையை,காதலை தெள்ளத் தெளிவாக அவனுக்குக் காட்டியது... அதுவரை அவன் காணாத விதத்தில்.. புதிதாகத் தெரிந்த மதுமதியின் அழகு.. அவள் கௌஷிக்கிடம் உரிமையாகப் பேசுகையில் உண்டானக் கோபம்.. அனைத்தும்.. அனைத்துமே.. மதுமதியின் மீது அவனுக்கிருந்த நேசத்தை இடித்துரைக்கத் தான் செய்தது.

ஆனால்.. தன் பார்வையில் ஆளான சிறு பெண்ணிற்குத் தான் அவளை நேசத்துடன் நோக்குவதுத் தெரிந்தால்.. எப்படி எடுத்துக் கொள்வாளோ என்கிற பயமும்.. அவர்களுக்கிடையே இருந்த வயது வித்தியாசமும்.. அவனைத் தடுத்தது.. கனவிலும், நினைவிலும் மாறி மாறி இம்சித்தவளைப் பொருட்படுத்தாது அவன் திருமணத்திற்குத் தயாராக.. அதன் பின்பு நடந்ததோ திடீர்த் திருப்பம்.. ஆசையும்,நேசமும் இருந்தாலும்.. அவளைத் திருமணம் செய்து கொள்வதில் அவனுக்குத் தயக்கம் தான்..

தான் கட்டியத் தாலியுடன் அவளைக் காண்கையில் உள்ளே உண்டாகும் களிப்பு.. உரிமையுடன் தன் தாயைப் பாசமாகக் கவனித்துக் கொள்ளும் அவளது உன்னதமாம அன்பு.. அலட்டிக் கொள்ளாதப் பேரழகு.. எளிமை.. மென்மை.. என.. மதுமதியின் குணங்கள் அனைத்தும் எப்போதும் போல்.. அவனை வெகுவாக ஈர்த்தது..

திருமணமானதிலிருந்துத் தன் அறையில் தன்னருகில்.. அழகாகத் துயில் கொள்ளும் அந்த மானின் மீது அவனுக்கு எழுந்தத் தாபம் அவனை வியக்க வைத்தது.. ஏனெனில்.. வருங்கால மனைவியாக வலம் வந்த லேகா அவனருகே வந்து முத்தமிட்டிருக்கிறாள்.. திருப்பி அணைக்க வேண்டுமென்று இயல்பாக எழ வேண்டிய உணர்வு ஏன் எழ மாட்டேன் என்கிறது எனப் பலமுறை அவன் யோசித்திருக்கிறான்.. ஆனால்.. அவனை விட்டுப் பத்தடி தள்ளி நின்றாலும்.. அள்ளி அணைக்கத் தூண்டும் மனைவியின் செழுமை.. அவனை மேலும் போதை கொள்ள வைத்தது..

மொத்தத்தில்.. சிறு குழந்தையாக அந்த வீட்டிற்கு வந்து.. இங்கேயே வளர்ந்து ஆளாகி விட்டவளின் மீது அவனுக்கு இயல்பாக இருந்த அந்நியோன்யம்.. நெருங்கிய உறவெங்கிற பாசம்.. ஒரு கட்டத்தில் அவனுக்கேத் தெரியாமல் காதலாக மாறி விட்டது.. ஆக.. எதிர்பார்ப்பு,பொறாமை,ஏக்கம்,தவிப்பு,தேடல்,ஊடல்,பாசம்,காதல்,காமம் என அனைத்தும் கலந்த ஒரு அக்மார்க் நேசம் ஆதித்யனுடையது...

வெகு நேரம் ஏரியில் அமர்ந்து.. மதுமதியுடனானத் தன் பந்தத்தை.. சிறு வயதிலிருந்து இருவருக்குமிடையே நடந்த சம்பவங்களை.. அதன் பின்னே ஒளிந்து கிடந்தத் தன் காதலை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவன்.. இருட்டத் தொடங்கியதும்.. வீட்டிற்குச் சென்றான்.

அவனிடம் கோபமாகப் பேசி விட்டு.. அழுதபடியே வீடு வந்து சேர்ந்த மதுமதி.. யாரிடமும் எதுவும் பேசாமல்.. நேராகத் தன் அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தாள்.. எப்படிப் பேசி விட்டான்.. பாவி.. பெரியத் தியாகி என்று நினைப்பு.. எவனோ ஒருவனுடன் என்னைச் சேர்த்து வைப்பானாம்.. வயது வந்த நாளிலிருந்து உன் ஒருவனை மட்டும் தான் நினைத்துக் கொண்டிருக்கிறேனடா முட்டாள் என எப்படிக் கூறுவது அவனிடம்...

தாலி கட்டிச் சொந்தமாக்கிக் கொண்ட மனைவியை வேறு ஒருவனுக்குக் கொடுப்பானா..?, எப்படி மனம் வந்தது அவனுக்கு..?, அப்படியானால்.. அவனுக்கு அவள் மீது எவ்வித நேசமும்,பாசமும் இல்லையென்று தானே அர்த்தம்..?, இன்னும் அவன் அந்த லேகாவை மறக்கவில்லை போலும்! என்றெண்ணியவளுக்குத் துக்கம் பொங்க.. கண்ணீரைச் சிந்தி அழுது தீர்த்தாள்.. இந்தச் சில நாட்களாகத் தானே.. அவளது வாழ்வு மகிழ்ச்சியாகச் சென்று

கொண்டிருக்கிறது...?, அது கடவுளுக்கே பொறுக்கவில்லை போலும்.. அதனால் இப்படி அழ வைக்கிறார்.. என்று தன்னிரக்கத்தில் புலம்பியபடிக் கண் மூடிப் படுக்கையில் சாய்ந்தாள்.

வீட்டிற்கு வந்த ஆதித்யன்.. நேராக மனைவியைக் காண எண்ணித் தன் அறைக்குச் சென்றான்.. அவள் அங்கே இல்லாததைக் கண்டுப் புருவம் நெறித்தவன்.. அவளது அறையில் எட்டிப் பார்த்தான். திருமணமான இரண்டாவது நாளிலிருந்து இருவரும் ஒரே அறையில் தான் உறங்கி வருகிறார்கள்.. அவளது அருகாமைத் தந்த நிம்மதியில் தான் அவன் இரவுகளைக் கழித்துக் கொண்டிருப்பதே.. ஆனால் இன்று அவன் அறையை விடுத்து.. அவள் அவளது அறையில் படுத்திருப்பதைக் கண்டு வருத்தமானது அவனுக்கு. அவள் தன் மீது எவ்வளவு கோபமாக இருக்கிறாள் என்பதும் புரிந்தது..

பின்னே?, அவன் செய்த முட்டாள்தனமானக் காரியத்திற்கு.. அவள் ஒரு அடியோடு நிறுத்திக் கொண்டாளே என்று நிச்சயம் பெருமைப் படத் தான் வேண்டும்.. சற்றுத் தயங்கிப் பின் அவளது அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்... வலது கையை மடக்கி நெற்றியில் வைத்துக் கண்களை மறைத்தபடி.. உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.. அழுதிருக்கிறாள் என்பது.. அவள் கன்னத்திலிருந்தக் கண்ணீர்க் கோடுகளை வைத்துப் புரிந்தது அவனுக்கு..

“ஐ ம் சாரி பேபி...”என்று முணுமுணுத்தபடி அவளருகே வந்தவன்.. அவளையே பார்த்தவண்ணம் நின்று விட்டான்.. அவள் அணிந்திருந்த சிகப்பு நிறச் சேலைக் காற்றிலாடி.. அவளது மென்னிடையை வெளிப்படுத்த.. அவளருகே சென்று கட்டிலில் அமர்ந்தவன்.. அவள் வயிற்றில் முகம் புதைத்து.. அவள் இடையை இறுக்கிக் கொண்டான்.

உறக்கத்திலிருந்த மதுமதி இதைச் சில நிமிடங்கள் உணரவேயில்லை.. பின் வயிற்றில் ஏதோ பாரத்தை உணர்ந்துக் கண் விழித்தவள்.. கணவனைச் சற்றும் எதிர்பாராததால்.. திகைத்து விழித்தாள். அவளிடம் அசைவை உணர்ந்துத் தலை நிமிர்த்தியவன்.. வியப்பில் விரிந்த அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்துச் சில நிமிடம் பேச்சின்றி அவளையே நோக்கினான்..

பின் அவள் வயிற்றிலிருந்து மெல்ல முன்னேறி.... அவள் மார்பில் முகம் புதைத்தான்.. ஜிவ்வென்று உடல் முழுதும் சூடாகி.. அனலேற்ற.. மெத்தை விரிப்பை இறுகப் பற்றியவளின்.. கைகளைப் பிரித்துத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டவன்.. சுகமாக உறங்கிப் போனான்.. மனைவியின் நேசம் தனக்கே என்பதைக் கண்டு கொண்டதில்... அவன் மனதின் ஆசைகளை, மதுமதியின் மீது அவனுக்கிருந்த நேசத்தைப் புரிந்து கொண்டதில்... வெகு நாட்களுக்குப் பிறகு.. திருப்தியாக.. நிம்மதியாக உறங்கினான்...


88Reviews

## அத்தியாயம்- 18



**சிறு குழந்தையாக உன்னை**
**என் கையில் ஏந்திய போது..**
**நான் அறிந்திருக்கவில்லை..**
**உன் மீது காதல் கொண்டு..**
**பித்தனாக அலைவேன் என்று!!**

**ம**றுநாள் காலைக் கண் விழித்த மதுமதிக்கு நேற்று இரவு நடந்த சம்பவங்கள் அனைத்தும் நினைவிற்கு வந்தது. அவனது அருகாமைக்காக.. அவனது காதலுக்காக.. அவனது தீண்டலுக்காக.. ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த அவளது நெஞ்சம்.. அவள் மீது சாய்ந்து அவன் துயில் கொண்டதை ரசிக்கத்தான் செய்தது. எப்படி அவள் குமாரை விரும்புவதாக அவன் கற்பனை செய்து கொள்ளலாம் என்று கோபம் வந்தாலும் மனம் அவன் புறம் சாய்வதைத் தவிர்க்க முடியவில்லை அவளால்.

கூடாது! எவ்வளவு பெரிய குற்றம் செய்ய முனைந்தான்..?, தாலி கட்டிய மனைவியை.. தன்னில் பாதியை வேறு ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கத் துணிந்தான்..?,பாவி! கழுத்தில் கிடந்தத் தாலியைக் கையில் எடுத்துப் பார்த்தவளுக்கு.. இதைச் சிறிதும் மதிக்காமல் போய் விட்டானே..! இழந்த வாழ்வை மீட்டுக் கொடுத்துத் தனக்கு மறுபிறவி அளித்த இந்தத் தாலிக்கு எப்படி அவன் மதிப்பளிக்காமல் போகலாம்..?

தியாகம் செய்வதாக நினைத்து வாய்க்கு வந்தபடி அவன் கூறிய வார்த்தைகள் அனைத்தும் நினைவிற்கு வர.. எரிச்சலும், கோபமும் அதிகமானது அவளுக்கு. பேசுவதையெல்லாம் பேசி விட்டு.. அவன் அவளை அணைத்தது இப்போது மேலும் கோபத்தை அதிகப்படுத்தியது. எந்த தைரியத்தில் வந்து அணைக்கிறான்..?, இன்னொரு முறை அவன் அருகே வந்தால்.. நிச்சயம் அவனை எதிர்த்தாக வேண்டும் என முடிவு செய்துக் காலை வேலைகளை முடித்தாள்.

அறையை விட்டு வெளியே சென்றால் நிச்சயம் அவனைச் சந்திக்க நேரிடும்.. விரைவாகவே எழுந்து விட்டவன்,எஸ்டேட்டிற்குச் சென்றிருக்கவும்

வாய்ப்பிருக்கிறது என்றெண்ணியபடி கட்டிலின் மறுகோடியில்.. நகம் கடித்தபடி அமர்ந்திருந்தவள்.. கதவு திறக்கும் ஓசை கேட்டு நிமிர்ந்தாள்.

கதவைத் தாழிட்டு விட்டுத் திரும்பிய ஆதித்யன்.. மனைவியின் அழுத்தமான பார்வையை உணர்ந்து.. அவ்வளவு நேரமாக முகத்தில் தேக்கி வைத்திருந்த சிரிப்பை அடக்கித் தானும் அவள் பார்வையைத் தாங்கியபடி.. அழுத்தமான காலடிகளுடன் அவளருகே சென்றான்.

தன்னை நெருங்கி வருபவனை மதுமதி மேலும் முறைக்க.. ஆதித்யனுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. எப்போதும் புன்னகையுடனும்,அமைதியான பார்வையுடனும் சாதுவாக வலம் வருபவள்.. கோபம் கொண்டு முறைப்பது அவனுக்கு நகைச்சுவையாக இருந்தது. தன் பெரிய விழிகளால் அவனை உறுத்து விழித்துக் கொண்டிருப்பவளைக் கண்டு மென்னகை பூத்தவன்.. கட்டிலின் விளிம்பை இறுகப் பற்றியிருந்தவளின் கைகளைப் பற்றி முத்தமிட்டான்.

அவன் முத்தமிட்டதும்.. விசுக்கெனக் கையை இழுத்துக் கொள்ளப் பார்த்தவளின் இடையை மேலும் இறுகப் பற்றித் தன்னருகில் இழுத்துக் கொண்டவன்.. அவள் கன்னம் வருடி.. கழுத்தில் இதழ் பதித்து.. தோளில் முகம் புதைத்தான்.

அவனை விலக்கித் தள்ள நினைத்துத் தன் கையை இழுத்துக் கொள்ள முயன்ற மதுமதி.. அவனது அடுத்தடுத்தத் தாக்குதல்களில் திணறித் தான் போனாள்.. என்ன செய்வாள் பாவம்..?, நடுங்கும் கைகளை மறைக்க முயல்வாளா..? அவன் முகம் உரசியதில் கூசிச் சிலிர்த்தெழுந்த கழுத்து ரோமங்களை அடக்க முயல்வாளா..? அல்லது.. உடல் முழுதும் அனலேற்றி.. அவன் சிகையைக் கோதத் துடிக்கும் விரல்களுக்குக் கடிவாளமிடுவாளா..?

என்ன செய்வதென்று புரியாமல் விழித்து.. அவனைத் தடுக்கவும் தோன்றாமல்.. சிலையென நின்று விட்டவள்.. பின் அவனது தோளைப் பற்றி நிமிர்த்தினாள். தன் தோளில் பதிந்த அவள் கரங்களைப் பற்றியபடி அவள் விழிகளைச் சந்தித்தவன்.. தன் பார்வையை அங்கேயே பதித்து விட்டான்.. அவள் விழிகளோடு காதல் கதை பேசிக் கொண்டிருக்கும்.. அவன் பார்வையில் ஒரு நிமிடம் மயங்கிப் போனவளின் முகம் நோக்கிக் குனிந்தவன்.. தன் உதடுகளால் அவள் கன்னத்தில் கோலமிட்டான்.

இதற்கு மேல் தாங்க முடியாது என்று முடிவு செய்த மதுமதி.. அவனை விட்டு விலகி நின்று.. வேறு புறம் திரும்பி.. “நேற்று.. என்னென்னவோ வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசி விட்டு.. இ..இப்போது.. ஏ..ஏன் இப்படியெல்லாம் நடந்து

கொள்கிறீர்கள்..?"என்று திக்கித் திணறித் தன் மனதிலிருந்த கேள்வியை அவனிடம் கேட்டு விட்டாள்.

அவளது நீண்ட கூந்தலைப் பற்றித் தன் புறம் திருப்பி.. அவள் கண்களை ஆராய்ந்தவன்.. பின்.. அவள் கழுத்திலிருந்தத் தாலியைத் தூக்கி அவளிடம் காட்டி.. "ஏனென்றால்... நீ என் மனைவி.. எனக்கே எனக்கானவள்... உன்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ள எனக்கு முழு உரிமையும் இருப்பதாக இது கூறுகிறதே...."என்று கூறியவன்.. விழி விரித்து அவனையே நோக்கிக் கொண்டிருப்பவளின்.. முகம் பற்றி அருகிலிழுத்து அவள் இதழ்களில் தன் இதழ்களைப் பதித்தான்..

வெகு நேரம் தொடர்ந்த முத்தத்தில்.. தன்னை முழுதாக இழந்து விட்ட மதுமதி.. அவன் மீதே சாய்ந்து விட.. "முக்கியமாக.. இந்த உரிமை.."என்று அவள் காதில் முணுமுணுத்தான் ஆதித்யன். வெட்கமும்,கோபமுமாய் அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. அவனை விட்டு விலகி ஓடிச் சென்றாள்.

தடதடவென படிகளில் ஓடி வருபவளை "மதி..."என்றழைத்து நிறுத்திய குமரி.. "ஏன் இப்படி ஓடி வருகிறாய்..?,கால் தடுக்கி விழுந்து விட்டால் என்ன ஆவது..?,இன்னும் நீ சிறு குழந்தையா மதி..?"என்று கடிந்து கொள்ள.. "அ..அது வந்து.. வந்து..."எனக் கையைப் பிசைந்த படி விழித்துக் கொண்டு நின்றவளைக் கண்டு சிரித்தபடியே படியிறங்கி வந்த ஆதித்யன்.. சாவகாசமாக நடந்து வந்து அவள் தோளில் தன் கைகளைப் போட்டுக் கொண்டு.. "பசிக்கிறது என்றேனா.. அதனால் தான் எனக்கு சாப்பாடு எடுத்து வைக்க வந்திருக்கிறாள்.. இல்லையா மது..?"என்று அவளது தோளை அழுத்த.. "ஆமாமாம்.. ஹி...ஹி.."என்று சிரித்தபடியே குமரிம்மா அறியாமல் அவன் கையை அகற்றினாள். ஆனால் அவனோ.. அவள் தோளிலிருந்து கைகளை இறக்கி அவள் இடையைப் பற்ற.. "எ..என்ன செய்கிறீர்கள்..?"என்று நெளியத் துவங்கினாள்.

சிறிது நேரம் அவளைத் தவிக்க விட்டப் பின்.. "வா மது.. சாப்பிடச் செல்லலாம்.."என்று அவள் இடையைப் பற்றியபடி அவன் அழைத்துச் செல்ல.. மதுமதியின் கன்னங்களில் மையம் கொண்டிருந்த சிவப்பையும், ,ஆதித்யனின் முகத்திலிருந்தத் தெளிவையும் கண்டு திருப்தியுடன் புன்னகைத்தார் குமரி.

குமரிம்மாவின் பார்வையிலிருந்து அகன்றதும் அவன் கைகளைத் தட்டி விட்டு அவனை முறைத்தவள்.. விறுவிறுவென சமையலறையைத் தாண்டி நடந்து செல்ல.. "மது.. நில்.. நில் என்கிறேனே.."என்றபடியே அவளைத் தொடர்ந்து சென்றவன்.. கிணற்றடியில் நின்று விட்டவளின் அருகே செல்ல முயல.. வேகமாக அவனைத் தடுத்தவள்.. "அங்கேயே நில்லுங்கள்.. அருகில்.. அருகில் வராதீர்கள்.."என்று நடுங்கும் குரலில் வேகமாகக் கூற.. அவளது குரலிலிருந்த நடுக்கத்தை உணர்ந்தவன்.. "ஏன்..?"என்று வினவினான்.

“வராதீர்கள் என்றால் வராதீர்கள்..”என்று கூறியவளிடம் “ஏன்..?, நான் உன்னருகே வருவது உனக்குப் பிடிக்கவில்லையா மது..?”என்று அவன் வினவ.. பதில் கூறாமல் உதட்டைக் கடித்தபடி அமைதியானவள்.. பின் “எவனோ ஒருவனை நான் நேசிப்பதாக நேற்று என்னிடம் மனசாட்சியற்று கேள்வி கேட்டீர்களே..?,அது என்னவாயிற்று..?,சந்தேகம் தீர்ந்து விட்டதா இப்போது..?, அவனோடு என்னைச் சேர்த்து வைப்பதாகச் சபதம் கூட எடுத்துக் கொண்டீர்கள் போலும்..”என்று நக்கலாக வினவ..

தலை குனிந்து ஒரு நிமிடம் அமைதியானவன்.. பின் “மது.. மது ப்ளீஸ்.. நான் அப்படிக் கேட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதைப் புரிந்து கொண்டேன்.. தயவு செய்து என்னைத் தண்டித்து விடாதே.. உன் விருப்பத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமென்று தான் நான் அவ்வாறு வினவினேன்.. மன்னித்து விடு மது..”என்று கூற.. “என் விருப்பமா..?,என் விருப்பம் என்னவென்பதை மிக நன்றாக அறிந்தவரோ நீங்கள்..?”என்றவளிடம்..

“நா..நான் சொல்வதைக் கேள் மது.. ஒரு அவசரத்தில்.. நடந்து கொண்டிருந்த பிரச்சனைகளுக்குத் தீர்வாக.. உன் விருப்பத்தைக் கூட அறிந்து கொள்ளாமல் நடந்தது தானே இந்தத் திருமணம்..?,குமார் உன்னிடம் பேசியதைக் கேட்டதும்.. ஒரு வேளை.. ஒரு வேளை உனக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லையோ என்று தான் அப்படிக் கேட்டேன்... ஆனால்.. நீ அவனை விரும்புவதாக நானே கற்பனை செய்து கொண்டது தவறு தான்..”என்று தான் செய்த தவறை உணர்ந்து அவளிடம் கெஞ்சத் துவங்கினான் ஆதித்யன்..

“மனதில் ஒருவனை நினைத்து விட்டு.. வேறு ஒருவனைத் திருமணம் செய்யுமளவிற்கு நான் கேவலமானவளா..?,என்னைப் பற்றி இவ்வளவு கேவலமான எண்ணமா உங்களுக்கு..?,”என்று கோபமாக வினவியவளிடம்.. “நான் அப்படிக் கூறவில்லை மது.. வேறு வழியில்லாமல்.. மனதிலிருப்பதை மறைத்துத் தான் இந்தத் திருமணத்திற்கு சம்மதித்தாயோ என்று நினைத்தேன் நான்.. அம்மாவின் கட்டாயத்திற்காக... அடுத்தடுத்து நடந்த துர்சம்பவங்களால் உன் விருப்பத்தைக் கூட தெரிவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டதால் தான் நீ ஒப்புக் கொண்டாயோ என்றெண்ணினேன்.. நீ என்னிடமிருந்து இரண்டு நாட்களாக விலகிச் சென்றது வேறு என் எண்ணத்தை உறுதிப் படுத்தியது.. ஒரு வேளை.. நான் முத்தமிட்டது பிடிக்காமல் தான் நீ விலகிச் செல்வதாக நினைத்தேன் நான்..”என்றவனிடம் ஆத்திரத்துடன் பாய்ந்தவள்..

“உங்களது ஒரு பார்வைக்காக இத்தனை வருடங்களாக ஏங்கிக் கிடந்த நான்.. நீங்கள் தீண்டியதும் விலகிச் செல்வேனா...?, என் விருப்பம்,என் இஷ்டம் என்று பெரிதாகப் பேசுகிறீர்களே.. அன்றிலிருந்து இன்று வரை என் மனதிலிருப்பது..

நீங்கள் தான்.. நீங்கள் மட்டும் தான்.. “என்று அவன் சட்டையைப் பற்றி உலுக்கிக் கூற சிலையென உறைந்து விட்டான் ஆதித்யன்.

“விவரம் புரிய ஆரம்பித்த வயதிலிருந்து.. நீங்கள் ஒருவர் மட்டுமே உலகத்தில் ஒரே ஆண்மகனாக என் கண்ணிற்குத் தெரிந்தீர்கள்.. உங்கள் அக்கறையை.. அன்பை.. மதிப்பும்,மரியாதையுமாக அனைவரையும் நீங்கள் நடத்தும் விதத்தை.. உங்கள் அன்னையிடம் நீங்கள் காட்டும் பாசத்தை... இந்த ஊரின் மீது நீங்கள் வைத்திருக்கும் நேசத்தை.. அனைத்தையும்,அனைத்தையும் ரசித்தேன்.. என் எண்ணம்,செயல் என அனைத்திலும் நீங்கள் மட்டுமே நிறைந்தீர்கள்..”

“உங்களிடம் பேசும் போது உள்ளே எழும் படபடப்பு.. உங்கள் அருகாமையில் எனக்குள் தோன்றும் தவிப்பு.. உங்கள் கண்களை சந்திக்கையில்.. மரத்துப் போகும் என் மூளை.. இவையெல்லாம் எதற்காக நிகழ்கிறதென நான் குழம்பிப் போயிருந்த வேளை.. என் காதலை.. உங்கள் மீதான என் நேசத்தை.. நீங்கள் அளித்த ஒரு ரோஜாப் பூ எனக்கு உணர்த்தியது.. அதன் பின்.. நீங்கள் என் மீது காட்டிய அக்கறையிலும்,பாசத்திலும் நெகிழ்ந்து.. நாளுக்கு நாள் என் நேசம் கூடிக் கொண்டே தான் சென்றது... உங்களுக்கும்,எனக்கும் இடையேயான அந்தஸ்து வேறுபாட்டை நான் உணர்ந்ததேயில்லை.. அந்த அளவிற்கு நீங்களும், குமரிம்மாவும் என்னை அன்புடன் நடத்தினீர்கள்..”

“உங்கள் அத்தை மகளுடன் உங்களது திருமணம் நிச்சயமான போது.. நான் பட்டத் துன்பத்திற்கு அளவேயில்லை.. செத்து விடலாம் என்று தான் அன்று அருவிக்குச் சென்றேன். ஆனால் என் தந்தைக்காகவேனும் உயிர் வாழ வேண்டுமென்று முடிவு செய்துத் திரும்பிய போது பாறைத் தடுக்கித் தண்ணீரில் விழுந்தேன்.. அதிலிருந்தும் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள்.. ஆனால் உங்கள் அத்தைப் பெண்ணுடன் நீங்கள் வலம் வரும் போது.. ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள் என்று நான் வருத்தப்பட்டுப் புலம்பியிருக்கிறேன்.. கடைசியாக அவள் என்னை அவமதித்துச் சென்ற நாள்.. என் தந்தை என்னை விட்டுச் சென்ற நாள்.. அனைத்தும் என்னை நடைபிணமாக மாற்றிய போது... உங்களைத் திருமணம் செய்து கொள்ளும் படி குமரிம்மா என்னை வற்புறுத்தினார்..”

“என் வாழ்வில் அடுத்தடுத்து அவலங்களைச் சந்தித்து நொந்து போயிருந்த போது கூட.. உங்களைத் திருமணம் செய்து கொண்டதை நான் வரமாகத் தான் எண்ணினேன்.. மனைவியென உங்களிடமிருந்து எவ்வித உரிமையையும் நான் எதிர்பார்க்கவில்லை.. நீங்கள் கட்டியத் தாலியைக் கண்டு பூரித்தே நான் என் வாழ்வை நிம்மதியாகக் கழித்துக் கொண்டிருந்தேன்.. என் தந்தை எனக்கு நன்மை செய்து கொண்டிருப்பதாகவே எண்ணினேன்.. நீங்கள் என்னை அணைத்த போது.. முத்தமிட்ட போது.. என்னுடைய நேசம் கை

கூடிவிட்டதாகவே எண்ணினேன்.. நீங்கள் நான் எவனையோ நேசிப்பதாக நேற்று பிதற்றும் வரை..”என்று அவள் கோபமும்,ஆத்திரமுமாகக் கூறி முடிக்கையில் ஆடிப் போய் நின்று விட்டான் ஆதித்யன்.

பத்தாம் வகுப்பில் சாதராணமாக அவன் அளித்தப் பூவைத் தன் நேசத்தின் அடையாளமாக இன்று வரை பூஜித்துக் கொண்டிருப்பவளை அறிந்து கொள்ளாமல் முட்டாள்தனமாக பேசி வைத்திருக்கிறானே..?,

எப்போதும் மதுமதியென்றால்.. தனி கவனத்துடனும்,அக்கறையுடனும், அன்புடனும் தான் நடந்து கொள்வதை நினைத்துப் பார்த்து.. அது காதல் தான் என்று அவன் உணர்ந்து கொண்ட வேளை.. மனைவியும் தன்னைப் போலவே அவன் மீது நேசம் கொண்டிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்ட போது.. அவனுக்கு கொடைக்கானல் மலை உச்சியில் மேகத்துடன் கலந்து விட்டதாகவே தோன்றியது.. உடல் லேசாகி.. உள்ளம் குளிர்ந்து.. சந்தோசத்தில் நெகிழ்ந்து போனான்..

வார்த்தைகளற்று அவன் வாய் மூடி நின்று விட்டதைக் கண்டு விட்டு.. குழப்பமான பார்வையுடன்.. அவனைக் கடந்து செல்லப் பார்த்தவளின் கைகளைப் பற்றி.. நின்ற நிலையிலேயே.. “ஐ லவ் யூ மது..”என்றான்.. அவன் மறுபுறம் திரும்பி நின்றதால் அவனது முகத்தைக் காண முடியாது போனாலும்.. அவன் குரலில் இருந்த உணர்ச்சியைக் கண்ட மதுமதிக்கு.. அவன் கூறிய வார்த்தைகள்.. உயிர் வரை ஊடுருவிச் சென்று.. நிற்க முடியாமல் தள்ளாட வைத்தது.

திகைத்த விழிகளுடன் சில்லிட்டுப் போய் நின்று விட்டவளின் கன்னங்களைத் தன் இரு கைகளிலும் ஏந்திக் கொண்டவன்.. “ஐ லவ் யூ மது.. நான்.. நான் உன்னை விரும்புகிறேன்.. என் உயிரினும் மேலாக.. என் அன்னைக்கு நிகராக.. உன்னை நேசிக்கிறேன்.. என்று நீ சிறு குழந்தையாக என் வீட்டிற்குள் நுழைந்தாயோ அப்போதிருந்தே எனக்கும்,உனக்குமான.. உயிர் உள்ள வரை நீளக் கூடிய நம் பந்தம் தொடங்கியிருக்க வேண்டும்... நான் உன்னை வேற்று ஆளாகப் பார்த்ததேயில்லை மது.. நீ என் வீட்டில் நடை பயில ஆரம்பித்த போதும்.. குமரியாக மாறி ஓடித் திரியும் போதும்.. உன் கொலுசொலி எனக்கு விவரிக்க முடியாத நிம்மதியைக் கொடுத்திருக்கிறது.. ஒரு நாள் உன்னைக் காணாவிடில்.. உன் சிரிப்பொலியைக் கேட்காவிடில் வீடே நிசப்தமாகிப் போனதாக உணர்ந்திருக்கிறேன்.. உன் நலத்தை,உன் நன்மையை எப்போதும் நாடியிருக்கிறேன்.. உன் சிரிப்பைக் கண்டு மகிழ்ந்து.. நீ அழுவதைக் கண்டு வருத்தம் கொண்டு.. உன் உணர்வுகளை நான் பிரதிபலித்திருக்கிறேன்..”

“அவையெல்லாம் ஏனென்று நான் அப்போது உணரவில்லை மதுமதி.. என்னை விடச் சிறிய பெண்.. இங்கேயே வளர்ந்ததால் உன் மீது இயல்பாக ஏற்பட்டப்

பாசம் என்று தான் நினைத்தேன்.. ஆனால் அடிமனதில் உன் மீது எனக்கிருந்த நேசத்தை கௌஷிக்கின் வரவு தான் தெளிவு படுத்தியது. அதன் பின்.. என் பார்வையே மாறிப் போனது.. நீ ஒருத்தி தான் இந்த உலகத்தில் பெண்ணாகத் தெரிந்தாய்.. என்னிடம் விலகி.. நீ கௌஷிக்கிடம் பேசுவதைக் காண்கையில் எனக்குப் பொறாமை பிறந்தது.. நிச்சயக்கப்பட்டப் பெண்ணிடம் தோன்றாத உணர்வுகளெல்லாம் உன்னிடம் தோன்றியது.. உன் அருகாமை நிம்மதி அளித்தது.. உன் புன்னகையும்,விழிகளும் என்னை இம்சித்தது.. அன்று பூட்டிய அறையில் உன்னைக் காண்கையில் என் உணர்வுகளை அடக்க முடியாமல் திணறினேன்..”

“உடன் வளர்ந்த ஒரு பெண்ணிடம் இப்படி உணர்வுகள் எழுவது தவறு என்று தான் எண்ணினேன்.. என்னை விடப் பல ஆண்டுகள் சிறியவளான உன்னிடம் நான் நேசத்தை வளர்த்துக் கொள்வது தவறு என்றெண்ணினேன்.. அதன் பின் பல சம்பவங்கள் நடைபெற்று அனைத்தும் தடம் மாறியது.. உன்னைத் திருமணம் செய்து கொண்டது மகிழ்ச்சியைக் கொட்டிக் கொடுத்தாலும்.. உனக்கு நடந்த துர்சம்பவங்கள் அனைத்திற்கும் நானே காரணம் என்று எண்ணினேன்.. உனக்குத் தீங்கு விளைவித்து விட்டதான் வருந்தினேன்.. ஆனால் உனக்குள் தோன்றிய மாற்றம்.. நீ என் மனைவியென்கிற உரிமை.. என் ஆழ் மனதில் புதைந்திருந்த ஆசைகள் அனைத்தும் என்னை மாற்றியது.. உன்னிடம் நெருங்கினேன்.. அனைத்தும் சுபமாகச் சென்று கொண்டிருந்த வேளை.. குமாருடன் உன்னைக் கல்லூரியில் சந்திக்க நேர்ந்தது.. நான் முத்தமிட்டதும் நீ விலகியது வேறு.. என்னை உறுத்திக் கொண்டே இருந்தது, ஒரு வேளை உன் விருப்பத்தை அறிந்து கொள்ளாமல் நான் முன்னேறியது தவறென்று நினைத்தேன்.. இதில் அவனது சந்திப்பு வேறு சேர்ந்து கொள்ள.. நானே ஏதேதோ எண்ணிக் குழம்பிக் கடைசியில் நீ அவனை விரும்புவதாகக் கற்பனை செய்து கொண்டு.. உன்னிடம் உளறி.. அடியையும் வாங்கிக் கொண்டேன்..”

“நான்.. உன் மீது வைத்திருக்கும் நேசம் உண்மை மது.. ஒருவரையொருவர் நன்கு அறிந்து.. பல வருடங்களாக உடன் வளர்ந்து.. அடிப்படையான பாசத்தை, நேசத்தை பலமாகக் கொண்டவர்கள் நாமிருவரும்.. உன் நேசம் உன்னதமானது மது.. அதனால் தான் நம் இருவரையும் அது சேர்த்து வைத்திருக்கிறது.. நான் உணர்ந்து கொண்டேன்.. புரிந்து கொண்டேன் மது.. எத்தனை முறை வேண்டுமானாலும் என்னை அடித்துக் கொள்.. ஆனால் விலகிச் சென்று மட்டும் என்னைத் தண்டித்து விடாதே.. ப்ளீஸ்.. என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.. ப்ளீஸ் பேபி.. “என்று அவள் கையைப் பிடித்துக் கொஞ்சலுடன் வினவ.. கோபம் மாறி மனதுக்குள் புன்னகைத்துக் கொண்டாள் மதுமதி..

அறியாத வயதிலிருந்து அவனது செய்கைகளை ரசித்து... புரிந்து கொண்ட போது அது காதலாக மாறி.. அவன் ஒருவனது முகத்தை மட்டுமேக் கனவிலும், நினைவிலும் கண்டு வருபவளுக்கு.. இன்று அவளை விடப் பல மடங்கு அவளை அவன் விரும்புகிறான் என்பதை அறிந்து கொண்ட போது.. உள்ளே எழுந்த மகிழ்ச்சி ஊற்றுக்கு அளவேயில்லாமல் போனது.. ஆனாலும் எதையும் வெளிக் காட்டிக் கொள்ளாமல்.. அவனை முறைத்தவாறே.. அவனது கைகளை விலக்கியவள்.. முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்து சென்றாள்.

“ஏய்.. என்னடி எதுவுமே சொல்லாமல் போகிறாய்..?,இதற்காகத் தான் பக்கம், பக்கமாக வசனம் பேசினேனா..?, பேபி ப்ளீஸ்..”என்று அவன் பின்னேயே ஓடி வர.. எழுந்த சிரிப்பை அடக்கி விறுவிறுவென நடந்து சென்று விட்டாள்.

அதன் பின் நாள் முழுதையும் குமரிம்மாவுடனே கழித்தவளை முறைத்தபடியே ஆதித்யன் உலா வர.. இருவரையும் கண்டு நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தார் குமரி. ஆனாலும் பொறுக்காமல்.. மாலையானதும்.. “மது.. எனக்கு ஒரு கப் கா..ஃபி கொண்டு வாயேன்.. நம் அறைக்கு..”என்று கூறி விட்டுச் சென்றான் ஆதித்யன்.

நடு வீட்டில் வேலையாட்கள் புடை சூழ குமரிம்மாவுடன் அமர்ந்திருப்பவளிடம் அவன் கூறி விட.. வேறு வழியில்லாமல் எழுந்து சென்றவள்.. மல்லியை அழைத்து.. “இந்தக் காபியை அவரிடம் கொடுத்து விடு மல்லி..”என்று அனுப்பி வைத்தாள்.. மதுமதியை எதிர்பார்த்துக் காத்திருந்த ஆதித்யன் மல்லியைக் கண்டதும் கோபம் கொண்டு “அவள் எங்கே..?”என்றான்.. “அக்கா குமரிம்மாவுடன் இருக்கிறார்கள்..”என்று மல்லி கூற எரிச்சலானது அவனுக்கு.

என்ன தான் செய்வது இவளை..?, என்று சிந்தித்தவன்.. தன் கைப்பேசியில் கௌஷிக்கை அழைத்தான். இவன் ஹலோ என்பதற்குள்.. அவன் மறுமுனையில் “கங்க்ராட்ஸ் மச்சி.. நீ அப்பாவாகப் போகிறாயாமே..?”என்று கூற.. குடித்துக் கொண்டிருந்த காபி புரையேறுமளவிற்குப் பதறிப் போன ஆதித்யன்.. “என்னடா உளறுகிறாய்..?”என்று வினவினான்.

“இல்லையா பின்னே..?, ஒரே ரொமான்ஸ் தானாமே.. நீயும்,மதியும் இந்த உலகத்திலேயே இல்லை என்று எனக்கு செய்தி வந்ததே.. இருவரும் செல்லும் வேகத்தைப் பார்த்துத் தான் நீ அப்பாவாகி விட்டாயா என்று நான் கேட்டேன்..” என்றவனிடம் “எங்கே..?,அவள் அதற்கெல்லாம் அனுமதித்தால் தானே..?, வில்லத்தனம் பண்ணுகிறாள் மச்சி.. அறைக்குக் கூட வர மாட்டேன் என்கிறாள்..”என்று கோபித்துக் கொண்டவனைக் கண்டு கலகலவெனச் சிரித்த கௌஷிக்.. “ஊடலா..?,மிக மிக சந்தோசம்டா ஆதி.. நீயும் மதியும், ஒன்று சேர வேண்டுமென்று பிரார்த்திக் கொண்டிருந்த ஜீவங்களில் நானும் ஒருவன்.. வயது வித்தியாசம் அதுஇதுவெனப் பிதற்றிக் கொண்டிருந்தாயே.. எப்போது

மாறப் போகிறாயோ என்று பயந்து கொண்டிருந்தேன்.. நானும்,குமரிம்மாவும் உங்கள் இருவரையும் ஒன்று சேர்க்க அரும்பாடி பட்டுக் கொண்டிருந்தோம்.. ரொம்ப சந்தோசம் டா..”என்றவனிடம் முறுவலித்த ஆதித்யன்.. நடந்தவை அனைத்தையும் கூறினான்.

“சூப்பர் டா.. மதுமதிக்குள் ஒரு ஜாக்குவார் தங்கம் இருக்கிறாரென்று நான் அறியாமல் போனேனே.. ஒரு அடியோடு விட்டு விட்டாளா..?,பார்த்தாயா என்னே ஒரு கருணை..”என்று கேலி செய்ய.. “நான் அடி வாங்கியது உனக்குச் சிரிப்பாக இருக்கிறதா..?”என்று கத்தத் துவங்கிய ஆதி.. இப்போதைய நிலைமையையும் எடுத்துக் கூறினான்.

“ஹ்ம்ம்.. நீ செய்து வைத்திருக்கும் காரியத்திற்கு.. மதுமதி 10வருடங்களுக்கு உன்னிடம் பேசாமல் இருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்ல..”என்றவனிடம் “டேய்..”என்று ஆதித்யன் குரலை உயர்த்த.. “ச்ச,ச்ச மதுமதி நல்ல பெண் மச்சி.. அப்படியெல்லாம் செய்ய மாட்டாள்.. ஆனால் நீ ஒன்று செய்யேன்.. நேராகச் சென்று அவள் காலில் விழுந்து விடு.. எப்படி என் ஐடியா..?”என்று கூற.. “டேய்.. ஃபோனில் என்னால் அடிக்க முடியாதென்று நினைக்கிறாயா..?,ஏண்டா நீ வேறு என்னைப் படுத்துகிறாய்..?” என்று பாய.. அவனைச் சமாதானப் படுத்தியவன்.. பின் யோசித்து,..

“இது நான் ஏற்கனவே கூறியது தான் மச்சி.. பேசாமல் உன் மனைவியை அழைத்துக் கொண்டு... ஹனிமூன் சென்று வா..”என்று அவன் கூற.. “ஹனிமூனா..?”என்று சிந்தித்தவன்.. “அது சரி வராது... வெளியூருக்கு அழைத்தால் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று மறுத்து விடுவாள்..”என்று கூற.. “சரி.. வெளியூருக்குச் செல்ல வேண்டாம்.. உன் எஸ்டேட் பங்களாவிற்கு அழைத்துச் செல்.. 1 வாரம் அவளுடன் கழித்து விட்டு வா..”என்றான்.

“வெரி நைஸ் ஐடியா மச்சி.. மிக மிக நன்றி.. நாளையே இதைச் செயல் படுத்துகிறேன்..”என்றவன் மேலும் சிறிது நேரம் பேசி விட்டு அழைப்பைத் துண்டித்தான். “அங்கே எப்படி என்னிடமிருந்து தப்பிப்பாய் என்று பார்க்கிறேன் பேபி..!”என்று சிரித்துக் கொண்டவன்.. மறு நாளே அன்னையிடமும், மனைவியிடமும்.. இதைப் பற்றிப் பேசி விட்டான்.



## அத்தியாயம்- 19



**பெண்ணே..**
**உன்னைத் தீண்டுகையில்**
**தோன்றும் பேரின்பம்..**
**என்னைச் சொர்க்கம் வரை அழைத்துச் செல்லும்..**
**மாயத்தை நீ அறிவாயா..?**

**அ**ன்று காலை உணவின் போது.. அன்னையை அழைத்த ஆதித்யன் “அம்மா.. நான் மதியுடன் நம் எஸ்டேட் பங்களாவில் ஒரு வாரம் தங்கி வரலாமென திட்டமிட்டிருக்கிறேன்.. திருமணமானதிலிருந்து இது வரை நான் அவளை எங்கேயும் அழைத்துச் சென்றதில்லை.. அதனால் தான்.. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்..?”என்று வினவினான். அதற்கு குமரி பதில் கூறும் முன் முந்திக் கொண்ட மதுமதி.. “இல்லை.. எனக்குக் காலேஜ் இருக்கிறது..”என்று கூற அவளைச் சிறிதும் சட்டை செய்யாமல் அன்னையின் முகத்தை நோக்கினான் ஆதித்யன்.

இருவருக்குள்ளும் ஏதோ உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட குமரிம்மா சிரித்தபடி.. “சந்தோசமாகப் போய் வாருங்கள்.. நானே உன்னிடம் கூற வேண்டுமென்றிருந்தேன்.. ஒரு வாரம் என்ன..?, பத்து நாட்கள் கூடத் தங்கி வா.., ஆனால் வெளியூர் எங்கேனும் அழைத்துச் செல்லலாமல்லவா..?”என்று வினவ... “ஆமாம், இங்கேயிருக்கும் நம் பங்களாவிற்குச் செல்ல வேண்டுமென்றதற்கே.. வர மாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறாள்... இவளாவது.. வெளியூருக்கு வருவதாவது..”என்று அவன் சலித்துக் கொள்ள.. சிரிப்பு பீறிட்டது மதுமதிக்கு. வாய் மூடி நகைத்தவளை முறைத்தவன்.. “சிரிக்கிறாயா..?,ராட்சசி..!”என்ற படி.. அவள் இடையைக் கிள்ளினான்.

துள்ளி விலகியவள்.. குமரிம்மா மல்லியின் உதவியுடன் அறைக்குச் செல்வதைக் கவனித்து விட்டு.... அவனிடம் “நான் எங்கேயும் வர மாட்டேன்.. எனக்குப் படிக்க வேண்டும்..”என்று கூற.. “கல்லூரிக்கெல்லாம் உன் தோழி ராதாவிடம் கூறி விடுமுறை சொல்லியாயிற்று.. நாம் இருவரும் இன்றே கிளம்புகிறோம்.. ஒரு வாரத்திற்கு உனக்குத் தேவையானவற்றையெல்லாம்

எடுத்து வைத்துக் கொள்.. நாம் ஹனிமூன் செல்கிறோம் டார்லிங்..”என்று அவள் இடையைப் பற்றி அருகிலிழுத்தான்..
“ஹனிமூனா..?”என்று வாயைப் பிளந்த மதி “அதற்கெல்லாம் நான் வர மாட்டேன்.. என் அனுமதியில்லாமல் நீங்கள் எப்படி அழைத்துச் செல்லலாம்..?, எனக்கு விருப்பமில்லை நான் வர மாட்டேன்..”என்று திரும்பிக் கொள்ள.. “நீ வரவில்லையென்றால் உன்னைத் தூக்கிக் கொண்டேனும் நான் சென்று விடுவேன்.. இங்கே தப்பிப்பது போல் என்னிடமிருந்து அங்கே தப்ப முடியாது கண்ணே..”என்று அவள் கன்னத்தை உரசியவனை விலக்கியவள்.. அவனை முறைத்தபடியே ஓடிச் சென்றாள். அன்று மாலையே இருவரும் தங்களது பண்ணை வீட்டை அடைந்தனர்.

மார்கழி மாதத்திற்கே உரிய காலைப் பனி அந்த வீட்டைச் சுற்றிலும் மூடியிருக்க.. அணிந்திருந்த ஸ்வெட்டரையும்,சால்வையையும் தாண்டி ஊசி போலக் குளிர் தாக்கியது மதுமதிக்கு.. பால்கனியில் நின்று பனிப் போர்வையை பிரம்மித்து நோக்கிக் கொண்டிருந்தாள்.. அந்த வெண் பஞ்சுப் பொதியில் கலந்து கரைந்து போய் விட வேண்டுமென்று தோன்றியது அவளுக்கு.. கடுங்குளிரையும்,காற்றையும் தாங்கிக் கொள்ள முடியாமல்.. பற்களும்,கைகளும் தன்னாலே நடுங்கத் துவங்கினாலும்.. இயற்கையின் எழிலில் மயங்கி.. நின்று கொண்டிருந்தவள்.. பின் வாயைக் குவித்து ஊதினாள்.. காற்று கிளம்பி வெண் புகையாகப் பிரிய.. அதில் மேலும் குதூகலமாகிப் போனவள்.. மீண்டும் ஊதினாள்..

படுக்கையிலிருந்தபடிக் கண் விழித்து மனைவியின் செய்கையைக் கவனித்த ஆதித்யனுக்கு புன்னகை உண்டானது... மெல்ல எழுந்து சென்று அவள் முன்னால் நின்றவன்.. கண் மூடி ஊத எத்தனித்தவளின்.. முகம் பற்றி.. அவள் இதழ்களைத் தன் இதழ்களால் மூடினான்.. திகைத்துத் தன் பெரிய விழிகளை மேலும் விரித்த மதுமதி.. பின்னால் சாய.. சுவரில் மோதி நின்றவளுடன் தானும் சாய்ந்தவன்.. மீண்டும் மீண்டும் மனைவியின் இதழ்களை நாடினான்..

கடும்பனியில் சில்லிட்டுப் போயிருந்த கைகள்.. அவனது செய்கையில் சூடாக மாற.. அவனது இறுகிய அணைப்பில் கட்டுண்டு.. குளிரிலும்,வெட்கத்திலும் சிவந்து போயிருந்த கன்னத்தை அவன் மார்பிலேயே புதைத்தாள்.. தன் சட்டைக் காலரை இறுகப் பற்றியிருந்தவளின் கையை அழுத்தியவன்.. அவள் உச்சியில் கன்னம் சாய்த்து.. “நீ என்னைப் பைத்தியமாக்கி அலையச் செய்கிறாய் மது.. ஐ லவ் யூ.. ஐ நீட் யூ டெர்ரிப்ளி..”என்றவன் அவள் இடையில் கரம் பதித்துத் தன்னோடு மேலும் இறுக்க.. அவனது முத்தங்களில் உடல் முழுதும் சிவந்து நின்று விட்ட மதுமதி.. அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு மேலும் சிவந்து.. அவன் மார்பிலேயே புதைந்து விடுபவள் போல ஒன்றியவள்.. கண்களை இறுக மூடிக் கொண்டாள்..

உள்ளத்தில் உவகை பொங்க.. தன்னை மறந்து கண்வனின் தோளில் சாய்ந்து விட்டவளுக்கு.. என்றுமில்லா... நிம்மதியும்,சந்தோசமும் மனதை நிறைத்தது.. இதற்காக.. இதற்காகத் தானே.. பல இன்னல்களையும்,துன்பங்களையும் சந்தித்தாள்..?,இவன் ஒருவனுக்காகத் தானே.. எண்ணங்களையும்,ஆசைகளையும் சேர்த்து வைத்தாள்..?,அவனது தீண்டலுக்காகவும்,முத்தத்திற்காகவும் தானே ஏங்கினாள்..?, அவனது காதலுக்காகத் தானே.. உயிரைக் கூட விட்டு விடத் துணிந்தாள்..?, இருபது வருடங்களாக அவள் வாழ்க்கை முழுதிலும் நிறைந்திருந்தவன்.. ஆதித்யன் மட்டுமே தானே..?, இன்று அவனது அன்பும்,காதலும்,பாசமும் தனக்கே கிட்டி விட்டதென்பதை நினைக்கையில் அவளுக்கு பனியில் கரைந்து போனது போல்.. உள்ளத்தில் நிம்மதி நிறைந்து உடல் லேசாகிப் போனது.. இப்படியே.. காலம் முழுதிற்கும் நின்று விடலாமென்று தோன்றியது..

தன்னைப் போலவே.. அவனும் எண்ணுகிறானா.. என்பதை அறிய.. அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள்.. களைந்திருந்த அவனது சிகையும்,மயக்கமேறியிருந்த விழிகளும்.. மெலிதானப் புன்னகையைத் தாங்கியிருந்த இதழ்களும்.. அவளை ஏதோ செய்ய.. மெல்லக் கைகளைத் தூக்கி.. அவன் கன்னம் வருட.. மனைவியின் செய்கையில்.. சிலிர்த்துப் போன ஆதித்யன்.. கண் மூடி அதை அனுபவித்துப் பின் அவளிடம் “கிஸ் மீ பேபி..” என்றான்.. சிவந்து குனிந்தவளின் கைகளை அவன் அழுத்த.. சற்று எம்பி.. அவன் நெற்றியில்.. கன்னத்தில் தன் முத்தங்களைத் தொடர்ந்தாள் மதுமதி..

மனைவியின் முத்தங்களில் தன்னை முழுதாக இழந்து விட்ட ஆதித்யன்.. அவளைத் தன்னோடு சேர்த்துத் தூக்கினான். சற்றுத் தடுமாறிப் பின் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டவளின் காதருகே குனிந்தவன்.. “இதற்கு மேல் நிச்சயம் என்னால் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது கண்மணி.. இனியும் நீ மறுக்க மாட்டாய் தானே..?, அதனால்.. வித் யுவர் பெர்மிஷன்..” என்று அவன் படுக்கையை நோக்கி நகர.. முற்றிலும் சிவந்து அவன் கழுத்தில் முகம் புதைத்தாள் மதுமதி..

வாழ்வில் இதுவரை காணாத சுகத்தை அள்ளி அள்ளிக் கொடுத்த அந்த நாள்.. இருவரது வாழ்விலும் மறக்க முடியாத நாளாகப் போவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.. தன் பெண்மையைக் களவாடியவனின் மீது செல்லமாகக் கோபம் கொண்டு.. வெட்கத்தையும்,கூச்சத்தையும் இயல்பாக உடைத்துச் சென்றவனிடம் தன்னையே இழந்து.. உடல் முழுதும் பரவசம் பரவித் தன்னையே புதிதாக உணர வைத்த.. அந்த நிமிடம்.. சொர்க்கத்தை அடைந்து விட்டதாகவே உணர்ந்தாள் மதுமதி..

அதன் பின்.. சேர்ந்தே நீராடி.. சேர்ந்தே உணவு உண்டு.. அவனை ஒட்டிக் கொண்டே திரிந்த நேரங்கள் அனைத்தும்.. தேவ வினாடிகளாகிப் போனது அவளுக்கு.. உணவு முடிந்ததும்.. அவளை அழைத்துத் தன் மடியில் அமர்த்திக் கொண்டவன்.. அருகிலிருந்தப் பையிலிருந்து சில பத்திரங்களை எடுத்து அவளிடம் நீட்டினான்.. என்னவென்று வாங்கிப் பார்த்தவள்.. புரியாமல் அவனை நோக்க.. “நம் சொத்துப் பத்திரம்.. அது கூறுவது என்னவென்றால்.. என் பெயரிலிருக்கும் அனைத்து சொத்துகளிலும் உனக்கும் பாதி உரிமை இருக்கிறதென்று கூறுகிறது.. ஆம் பேபி.. சொத்துகளில் பாதியை உனக்கு எழுதி விட்டேன்..”என்று கூறத் திகைத்து அவனையும்,பத்திரத்தையும் மாறி மாறிப் பார்த்தவள்.. “எ..எதற்காக இப்படிச் செய்தீர்கள்..?,இந்த சொத்துகளில் எனக்கு என்ன உரிமை இருக்கிறதென்று எனக்கு எழுதி வைத்திருக்கிறீர்கள்..?, இது உங்களது உழைப்பு.. உங்கள் பெயரில் தான் இருக்க வேண்டும்.. உடனே மாற்றுங்கள்..”என்று அவசரமாகக் கூறினாள்..

சிரித்தபடியே மறுத்துத் தலையசைத்தவன்.. “நமக்குள் அந்தஸ்து வேறுபாடு இருப்பதாக முட்டாள்தனமாக நீ ஓர் நினைப்பு வைத்திருக்கிறாயே.. அது மாற வேண்டாமா..?, நீயும்,நானும் சமம் என்று உனக்குத் தோன்ற வேண்டாமா..?, அதற்காகத் தான் இந்த ஏற்பாடு.. நம் இருவரது அன்பை இந்தப் பத்திரங்களோ.. அசையும்,அசையா சொத்துக்களோ தீர்மானிக்கப் போவதில்லை மது.. ஆனால்.. சித்ரலேகாவைப் போல் இனி எந்த விஷக்கிருமியும் உள்ளே நுழைந்து எதையும் குழப்பி விடக் கூடாது பார்.. அதற்காகத் தான்.. என்னுடைய திருப்திக்காக பேபி.. ப்ளீஸ்.. ப்ளீஸ்..”என்று கெஞ்ச.. எதுவும் கூறாமல் அமைதியாகி விட்டாள் மதுமதி..

“பேபி.. இங்கே பார்.. என்னைப் பார்..”என்று அவளைப் பற்றித் தன் மடியில் அமர வைத்தவன்.. “யாரும் இழிவாக உன்னை நினைத்து விடக் கூடாது என்பதற்காகத் தான் அப்படிச் செய்தேன் பேபி.. மற்றபடி.. என்னுடைய பெரிய சொத்தே நீ தான்..”என்றவனிடம் கலகலவென புன்னகைத்தவள்.. அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.. “பார்த்தாயா.. நீ தான் என் மூடை மாற்றுகிறாய்..”என்றவன் அவள் கழுத்தில் முகம் புதைத்து வாசம் பிடிக்க.. கூசிச் சிலிர்த்து விலகினாள்..

மாலையானதும்.. ஊதல் காற்றுத் தாக்கத் துவங்க.. பால்கனியில் நின்றிருந்தவளின் அருகே சென்று நின்றவன்.. அவள் தோளில் கரம் பதித்து.. அவள் தலையைத் தன் மீதுச் சாய்த்தவன்.. அவள் கூந்தலை வருடி.. “சந்தோசமாக இருக்கிறாயா பேபி...?”என்று வினவினான். சிரித்தபடி அவன் தோளில் தலையை அழுத்தியவள்.. “மிக.. மிகச் சந்தோசமாக இருக்கிறேன்..” என்றாள்.

“என் மீது கோபம் இல்லையே..?”என்று அவன் தலை சரித்து வினவ.. அவன் தலை முடியைக் களைத்து “கோபம் தான்.. ஆனால் இப்போது கொஞ்சமே கொஞ்சம் கம்மியாகி விட்டது..”என்று சிரிக்க.. அவள் சிரிப்பில் தன்னைத் தொலைத்தவன்.. “நீ இப்படியே எப்போதும்,.. சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும் பேபி.. உன் மகிழ்ச்சியும்,நிம்மதியும் தான் எனக்கு முக்கியம்.. எப்போது உன்னை நேசிக்கத் துவங்கினேன் என்பதை நான் அறியேன்.. ஆனால்.. நீ தான் எப்போதும் என் உள் மனதில் என் நேசத்திற்குரியவளாகப் பதிந்திருக்கிறாய்.. அதனால் தான்.. நீ என்னை விட்டு விலகி நின்றாலும்.. என் எண்ணங்களிலும்,செயலிலும் நிறைந்திருக்கிறாய்.. நான் உன்னை அதிகமாக நேசிக்கிறேன் மது... என் உயிர் உள்ள வரை நேசிப்பேன்..”என்றவனிடம் நெகிழ்ந்து.. அவன் விரல் பற்றியவள்.. “உங்கள் ஒருவரை மட்டுமே மனதில் கொண்டு.. இத்தனை வருடங்களைக் கழித்திருக்கிறேன்.. நான் ஆசை கொண்டவனே எனக்குக் கணவனாகக் கிடைத்து விட்ட மகிழ்ச்சியிலிருந்தே நான் இன்னும் மீளவில்லை.. இதில்.. நீங்களும் என்னைப் போலவே.. இல்லை என்னை விடப் பல மடங்கு என்னை விரும்புகிறீர்கள் என்பதை நினைக்கையில்... எனக்கு இந்த நொடியே இறந்து போனாலும் பரவாயில்லை என்று தோன்றுகிறது..”என்று கூற..

அவள் நெற்றியில் இடித்து.. அவள் கூறியதை மறுத்தவன்.. “மகிழ்ச்சியாக இருக்கும் தருணத்தில் இறப்பைப் பற்றி என்னப் பேச்சு மது..?,இப்போது தான் வாழத் துவங்கியிருக்கிறோம்.. இனி நமக்குப் பிள்ளைகள் பிறக்க வேண்டும்.. அவர்களை நன்றாக வளர்க்க வேண்டும்.. படிக்க வைக்க வேண்டும்.. அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்.. அதன் பின் நாம் பாட்டி தாத்தாவாக வேண்டும்..”என்று அடுக்கிக் கொண்டே செல்ல.. “அய்யோ.. போதும்.. போதும்..”என்று அவனை நிறுத்தியவள்..

அவன் முகத்தை ஆசையாக வருடி.. “என் தந்தை காலமானதும் என் வாழ்வையே இழந்து விட்டதாகத் தான் நான் எண்ணினேன்.. அனாதையாகி விட்டதாகக் கூட உணர்ந்தேன்.. ஆனால்.. எனக்கு சர்வ பலத்தையும் அளிக்குமளவிற்கு.. நீங்கள் என் கணவனாக அமைந்தது நிச்சயம் நான் செய்த பாக்கியம்.. குமரிம்மா எனக்காக.. என் எதிர்காலத்திற்காக.. அந்தஸ்து வேறுபாட்டைக் கூடப் பார்க்காமல்.. என்னை உங்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்.. என் காலம் முடியும் வரை உங்களிருவருக்கும் சேவகம் புரிவேன்..” என்று உணர்ச்சி நிறைந்த குரலில் கூறியவளிடம்..

“பேபி.. பேபி.. உன் சிரிப்பும்,மகிழ்ச்சியும் தான் எங்களிருவரையும் நிம்மதியுறச் செய்யும் ஒரே விசயம்.. அதனால் தயவு செய்து.. தினமும் சிரித்து.. எங்களுக்கு பூஸ்ட் கொடுப்பாயாம்.. ஆனால் எனக்கு மட்டும் இன்னும் ஸ்பெஷலாக.. அழகான சிரிப்பை உதிர்க்கும் இந்த இதழ்களும் வேண்டும்..”என்று இதழ்களை

வருடியவனைக் காதலுடன் நோக்கியவள்.. “நான் ஒன்று கூறட்டுமா..?”என்று வினவினாள்..

புருவம் சுருக்கி அவளை நோக்கியவன்... “ம்,சொல்..”என்று கூற.. ஒரு நொடி முகம் சிவந்து தலை குனிந்தவள்.. பின் நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்து.. “ஐ லவ் யூ ஆதி..”என்றாள்.. அவளையே இமைக்காமல் நோக்குபவனின் கண்களை அவள் கை கொண்டு மூட.. “நானும்.. லவ் யூ பேபி..”என்றான்..

மௌனமாகக் கரைந்த சில நிமிடங்களுக்குப் பின் மனைவியின் அருகே வந்தவன்... “கட்டிக் கொள்ளட்டுமா..?”என்று வினவ.. தன் பெரிய விழிகளை மேலும் விரித்து.. அவனை நோக்கியவள்.. சிரிப்புடன் சரியெனத் தலையசைக்க.. அவள் இடையை வளைத்து.. தன்னருகே நிறுத்திக் கொண்டவன்... விரிந்திருந்த அவளது கார்கூந்தலையும்,சிப்பி விழிகளையும், சிவந்த கன்னங்களையும்,துடிக்கும் இதழ்களையும் ரசித்தபடி.. அந்த மார்கழி இரவில்.. கொட்டும் பனியில்.. கொடைக்கானல் மலையில்.. தன் அழகான வீட்டில்.. வானில் தெரியும் முழு நிலவை விட அழகானத் தன் மதுமதியின் முகத்தைத் தன் கைகளில் ஆசையுடன் ஏந்தி.. தன்னோடு சேர்த்து இறுக அணைத்தான் ஆதித்யன்.

****************************************************** முற்றும் ***********************************************************

